விலை: 30
பக்கங்கள்: 56

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 175 வைகாசி 06ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 20 மே 2018 வள்ளுவர் ஆண்டு 2049

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK -550/=
Germany -650/=
France -700/=
Canada -850/=
Australia -800/=
திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா
Hotline - 077 755 4528

# போர்க் குற்றங்கள் என்று எதுவுமே நடக்கவில்லை!

## பன்னாட்டுப் புலி ஆதரவாளர்கள் கூறுவது அடிப்படையற்றவை என்கிறார் மைத்திரி

கொழும்பு, மே 20

போர்க்குற்றம் என்ற ஒன்று நடக்கவேயில்லை. கடலுக்கு அப்பால் உள்ள புலி ஆதரவாளர்களால் முன்வைக்கப்படும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளே போர்க் குற்றச்சாட்டு. இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான வேறுபாட்டை அரசியல்வாதிகளால்கூட சரிவரப் புரிந்து கொள்ள முடியாதுள்ளது.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இராணுவத்தினரை நினைவு கூரும் தேசிய இராணுவ நினைவு தின » 53



# தமிழரின் விடுதலை கனவு நனவாகும்

## 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' உணர்வெழுச்சி எடுத்துக் காட்டுகின்றது என்று சம்பந்தன் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 20

விடுதலைக் கனவுடன் ஆயிரமாயிரம் வேங்கைகளும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் தங்களின் உயிர்களை முள்ளி வாய்க்கால் மண்ணில் ஆகுதியாக்கியுள்ளார்கள். அவர்களின் கனவு என்றோ ஒரு நாள் நன » 53

## கட்சிச் செயலர் மீது ரி.ஐ.டி விசாரணை

முல்லைத்தீவு, மே 20

முன்னாள் போராளிகளான ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் எனப்படும் ரா. கிருபாகரனை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர். கடிதம் மூலமாக இவ் » 53



## 20 கிலோ கஞ்சாவுடன் பளையில் ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 20

20 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகப் பளைப் பொலிஸார் » 53

## டிப்பர் தடம்புரண்டபோது உயிரைப் பறித்தது மண்



முல்லைத்தீவு, மே 20

மண் ஏற்றிச் சென்ற டிப்பர் தடம்புரண்ட போது தூக்கி வீசப்பட்ட சாரதியின் மீது மணல் குவிந்ததால் அவர் மூச்சுத்திணறி உயிரிழந்தார். அவருடன் பயணித்தவர் காயமடைந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. முள்ளிய » 53

## பெற்றோலின் துணையுடன் உயிரெடுத்தது பீடி மூட்டிய தீ

யாழ்ப்பாணம், மே 20

பீடி மூட்டிவிட்டு வீசிய தீக்குச்சி பெற்றோல் போத்தலுக்கருகே வீழ்ந்து தீ பற்றியதால் குடும்பத் தலைவர் உயிரிழந்தார்.

சம்பவம் சுழிபுரம் மேற்கில் இடம்பெற்றது. அதே இடத்தைச் » 53

வடக்கு மாகாணத்தில்

## விகாரை அமைப்பதை தடுக்கவே முடியாது

### அமைச்சர் சஜித் கூறுகிறார்

வவுனியா, மே 20

வடக்கில் விகாரைகள் அமைத்தாலும் சரி தெற்கில் இந்துக் கோவில்கள் அமைத்தாலும் சரி அதனை தடுத்து நிறுத்துவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது என்று வீடமைப்பு அமைச்சர் சஜித் » 08

## வதிவிடப் பிரதிநிதியும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரும் பேச்சு

கொழும்பு, மே 20

ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அசீஸ், ஐ.நா மனித உரிமைகள் சபை » 08

# பிரபாகரன் இறந்து விட்டார்

## தமிழ்க் காங்கிரஸின் தலைவரைத் தொடர்ந்து வடக்கு முதலமைச்சர் விக்கியும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்று, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

'அவர் (தலைவர் பிரபாகரன்) இறந்ததன் பின்னர் அதனைக் கொண்டு நடத்துவதற்கான ஆள்களை அவர் அதற்கேற்றமாதிரி வைத்திருந்தாரோ அது எனக்குத் தெரியவில்லை' என்று விக்னேஸ்வரன் » 53

## தமிழர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறாது

### சிவசக்தி எம்.பி. கூறுகிறார்

வவுனியா, மே 20

தேசிய அரசுக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளைப் பார்க்கும் போது தமிழ் மக்கள் » 52

## மீண்டும் இருண்ட யுகத்துக்கு பயணிக்க வேண்டி வரலாம்

### கடுந்தொனியில் கூறுகிறார் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச

வவுனியா, மே 20

வடக்குக்கு மாகாணசபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் எதையுமே செய்யாவிடின் மக்கள் இன்னும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலைமை ஏற்படும். மீண்டும் ஒரு இருண்ட யுகத்துக்கு நாம் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு உயர்கல்வி மற்றும் கலாசார » 08

## வீழ்ந்தது வானூர்தி 100 பேர் உயிரிழப்பு

» 08

## தவில் வித்துவான் யமுனா ஏரியில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணத்திலுள்ள யமுனா ஏரியில் தவில் வித்துவான் சடலமாக மீட்கப்பட்டார். செம்மணி வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராமையா ஜெயராசா (வயது - 65) » 53

## படையினரின் உயிர்த் தியாகம் காட்டிக் கொடுக்கப்படுகின்றது

### நாட்டைக் காக்க மீண்டும் ஒன்றிணையுங்கள் என்று அறைகூவல் விடுக்கிறார் மகிந்த

கொழும்பு, மே 20

நாட்டைப் புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பதற்காகப் படையினர் செய்த உயிர் தியாகங்கள் இன்று காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. நாட்டைப் பாதுகாக்க மீண்டும் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக் » 53

## புதுக்குடியிருப்பில் மழை காற்றால் வீடுகள் சேதம்

முல்லைத்தீவு, மே 20

புதுக்குடியிருப்பில் நேற்றுக் காற்றுடன் பெய்த மழைகாரணமாக தற்காலிக வீடுகள் பல சேதமடைந்தன. பயன்தரு மரங்கள் பல முறிந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. » 52

## பல்கலைகளுக்கு வன்னி மாணவரை அதிகம் உள்வாங்கவும்

### மஸ்தான் எம்.பி. கோரிக்கை

வவுனியா, மே 20

போரால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வன்னி மாணவர்களை அதிகளவில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்க வேண்டும் என்று உயர்கல்வி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

வவுனியாவில் பாரம்பரிய உற்பத் » 08



# தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இராணுவத்தை ஒப்பிட முடியாது

## கூறுகின்றார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

**கொழும்பு,மே.20**

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை இராணுவத்தை ஒப்பிட முடியாது. இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

கொழும்பில் இராணுவ வீரர்கள் நினைவு நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

விடுதலைப் புலிகளுக்கு ஒப்பாக எமது இராணுவத்தைக் குற்றம் சுமத்த இடமளிக்க முடியாது. வலுக்கட்டாயமாக பொதுமக்களை போருக்கு அனுப்பியமை பன்னாட்டு உடன்படிக்கைக்கு அமைய போர் குற்றமாகும். அவ்வாறான போர்க் குற்றத்தை விடுதலைப் புலிகள் முன்னெடுத்தனர்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, போரை முடிவுக்கு கொண்டு வந்தனர் எமது பாதுகாப்புப் படையினர். வடக்கில் மீண்டும் ஆயுத மோதல் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் இருட்டில் தள்ள ஒரு சிறு குழுவினர் முயற்சித்து வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது - என்றார்.

(ந,ரி4)



## தமிழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

புதுடில்லி, மே20

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரில் உயிரிழந்த மக்களுக்காகத் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இராமேஸ்வரத்தில் நேற்று தமிழர் நலம் பேரியக்கம் மற்றும் தமிழர் ஒன்று கூடல் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் உருவப்படத்தைத் தாங்கிய படகொன்று தயாரிக்கப்பட்டு இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கரையில் சுடரேற்றப்பட்டு முள்ளிவாய்க்கால் நோக்கி மிதக்க விடப்பட்டது.

அங்கு கூடிய மக்கள் வானத்தை நோக்கித் தமது கைத்தொலைபேசியில் விளக்குகளை ஒளிரவிட்டு அகவணக்கம் செலுத்தியதுடன் கடலில் பூக்களைத் தூவியும் மெழுகுவர்த்தி ஏற்றியும் அஞ்சலி செய்தனர்.

(ந-ரி5)



மாவிட்டபுரம் அம்பாள் வீதி நேற்று முன்தினம் வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனால் திறக்கப்பட்டது. (ந,ரி4,63)

## கௌ்ளையில் ஈடுபட்டவர்களுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,மே.20

ஆரையம்பதி பகுதியில் தங்க நகைகளை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு மாணவர்கள் உட்பட ஐவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப் படுத்திய போது எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி ஆரையம்பதியிலுள்ள வீடொனறில் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டது எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அந்த வீட்டில் பணிபுரிந்ததாகச் சொல்லப்படும் இளைஞர் ஒருவர் மற்றும் இரு மாணவர்கள் உட்பட ஐவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து பதினெட்டரை பவுண் நகைகள் மீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்தே இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ந,ரி4)

## யமுனா ஏரியில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,மே.20

யாழ். நல்லூர் யமுனா ஏரியில் இருந்து சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

யாழ்.செம்மணி வீதியைச் சேர்ந்த பிரபல தவில் வித்துவானாகிய 66 வயதுடைய இராமையா ஜெயராசா என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

5 பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த 17 ஆம் திகதி காணாமல் போயுள்ளார். குடும்பத்தினரால் தேடப்பட்டு வந்த நிலையில் இவரது மனைவி நேற்று யமுனா ஏரிக்கு தண்ணீர் அள்ளச் சென்றுள்ளார். அங்கு துர்நாற்றம் வீசியுள்ளது. இது தொடர்பில் கிராம அலுவலருக்கு அறிவித்துள்ளார்.

கிராம அலுவலர் மூலம் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

யமுனா ஏரி தண்ணீரை அந்தப் பிரதேச மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அங்கு பாதுகாப்பு வேலி இல்லாதால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. யமுனா ஏரி நீரை பாதுகாப்பதற்குரிய பாதுகாப்பு வேலியை அமைத்து தருமாறு பலதரப்பினரிடமு ம் கோரிக்கை விடுத்த நிலையில் எவரும் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கவில்லை என்றும் அந்தப் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர். (ந,ரி4,106)

## வவு. புளியங்குளத்தில் புதிய மாதிரிகிராமம்

வவுனியா,மே.20

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட புளியங்குளம் பாரதி கோட்டம் மாதிரி வீட்டுத்திட்டம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸாவினால் திறக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரிகிராம திட்டத்துக்கமைவாக இந்த வருடத்துக்கான வவுனியா மாவட்டத்தின் முதலாவது மாதிரி கிராமம் வவுனியா புளியங்குளம் தெற்கு பாரதிகோட்டத்தில் நேற்றுத் திறக்கப்பட்டது.

இதில் காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. தெரிவுசெய்யபட்டவர்களுக்கு வீடமைப்புக் கடன்களாக 2 இலட்சம் ரூபாவும் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி உதவியாக 37 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. அத்துடன் திறமையாக கடமையாற்றிய அரச அதிகாரிகாரிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன 23 வீடுகளை கொண்ட அந்த மாதிரிக் கிராமத்தில் வீடமைப்பு அதிகார சபையால் ஒருகோடியே 15 இலட்சம் ரூபா செலவிலும் பயனாளிகளின் பங்களிப்பாக 8 இலட்சம் ரூபா செலவிலும் வீடுகள் அமைக்கப்பட்டன. அத்துடன் ஏனைய உட்கட்டுமான வசதிகள் அனைத்துக்கும் சேர்த்து மொத்தமாக இரண்டுகோடியே 14 லட்சத்து 18 ஆயிரம் ரூபா அந்தக் கிராமத்துக்காக செலவழிக்கபட்டது. நாடளாவிய ரீதியில் அந்தக் கிராமம் 68 ஆவது மாதிரிக் கிராமமாக உள்ளமை குறிப்பிட தக்கது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன், காதர் மஸ்தான், மாகாணசபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, றிப்கான் பதியூதீன், வுவுனியா மாவட்டச் செயலர் தி. திரேஸ்குமார், வவுனியா வடக்கு பிரதேச சபை தலைவர் இ.தணிகாசலம், ஐக்கிய தேசிய கட்சி வவுனியா அமைப்பாளர் கருணாதாச, வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் க.பரந்தாமன், பிரதேசபை உறுப்பினர்கள், மதகுருமார்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ந,ரி4,110)



## தொடருந்துடன் மோதி நபர் சாவு

கொழும்பு,மே.20

கண்டிகபுவர்னயில் தொடருந்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தொடருந்துடன் மோதியதிலேயே இவர் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

இதேவேளை காலி தெவவயில் வாகனம் ஒன்றுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமட பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந,ரி4)

## 1 லட்சத்துக்கு மேற்பட்டோரை கொன்று குவித்த மகிந்த அரசு

### நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு

எருவில்,மே.20

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தின்போது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பொதுமக்களை கொடூரமாகக் கொன்று குவித்த நாள்தான் 2009 மே 18 ஆம் நாளாகும். இவ்வாறு முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் சுட்டிக்காட்டினார்.

அம்பாறை நாவிதன்வெளியில் இலங்கை தமிழரசுக் கட்சி மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழர் தாயகத்தில் உள்ள எமது இனம் 9 வருடங்களை தாண்டி 10ஆவது ஆண்டில் காலடியெடுத்து வைத்தபோதும் எமது தமிழ் மக்கள் பட்ட துன்பதுயரங்களுக்கும், வேதனைகளுக்கும் எந்தவிதமான விமோசனமும் இதுவரை கிடைத்தபாடில்லை இதனை பன்னாடும் பார்த்துக்கொண்டுதான் வருகின்றது.

யார் அந்த இனப்படுகொலையை செய்தார்களோ, யார் காரணகர்த்தாவாக இருந்தார்களோ அவர்களே குளிர்பானம் தரும் நிகழ்வாக முள்ளிவாய்க்கால் நிகழ்வு மாறியிருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் கொலைசெய்யப்பட்டவர்கள் அனைவரும் அரசியல் விடுதலைப்பயணத்தில் ஆகுதியானவர்கள் வெறுமனே அவர்கள் அபிவிருத்திக்காகவே, வாழ்வாதாரத்துக்காகவோ படுகொலை செய்யப்படவில்லை அரசியல் விடுதலைக்காகவே படுகொலைசெய்யப்பட்டார்கள் - என்றார். (ந,ரி4)

## கஞ்சாவுடன் இருவர் கைது

தொண்டமானாறு,மே.20
வடமராட்சிப் பகுதியில்கஞ்சாவுடன்இருவர்கைதுசெய்யப்பட்டனர்.
இரகசியத் தகவலையடுத்து தொண்டமானாறு பகுதியில், இருவேறு இடங்களில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டனர். அதேபகுதியைச் சேர்ந்த27,29வயதுடையவர்களே காங்கேசன்துறைசிறப்புக் குற்றத் தடுப்பு பிரிவினரால்கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து, 12 மற்றும் 8 கிராம் நிறை கொண்ட கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் கைதான இவர்கள் இருவரும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2,26)

## கசிப்புடன் கைதானவர் விளக்கமறியலில்

பருத்தித்துறை,மே.20
கசிப்புடன் கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார்.
துன்னாலையைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரையே 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
காங்கேசன்துறை சிறப்புக் குற்றத் தடுப்புபிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து துன்னாலைப் பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபரிடமிருந்து, 5 லீற்றர் கசிப்பும், கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. (ற.ரி2.26)

# நல்லிணக்கம் என்ற போர்வையில் அரசு பக்கச்சார்பாக நடக்கக் கூடாது

### திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு,மே.20
**"தேசிய அரசாங்கம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறி ஒரு தரப்பினருக்கு மாத்திரமே சார்பாகச் செயற்படுகின்றது. துக்கதினத்தை வட கிழக்கு மக்கள் மாத்திரம் கடைப்பிடிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ள அரசு தெற்கில் உயிர்த் தியாகம் செய்த இராணுவத்தினரின் தியாகங்களை மறந்துவிட்டது." இவ்வாறு லங்காசமசமாஜக் கட்சி தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

இறுதிப்போரின்போது, உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து மே 18 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்ட துக்க தினம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை குறிப்பிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,
போரின்போது, உயிரிழந்தவர்களை நினைவுபடுத்த மே18 துக்க நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தெற்கில் போரினால் உயிரிழந்தவர்களை நினைவுபடுத்த அரசு எவ்வித ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் மே 18 தினத்தை தேசிய துக்க தினமாக அரசு பிரகடனப்படுத்த வேண்டும்.
போரில், உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதில் தவறில்லை, அதனை அரசியல் மயப்படுத்தித் தடை செய்யவும் முடியாது என அமைச்சரவையின் இணைப்பேச்சாளர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்ட கருத்துக்கு தற்போது தென்னிலங்கை அரசியல்வாதிகள் கடும் கண்டனங்களையும், எதிர்ப்புக்களையும் தெரிவித்து வருகின்றனர். இவ் விடயத்தை எதிர்ப்பவர்கள் சற்று சிந்தித்தே செயற்பட வேண்டும். தெற்கில் தற்போது தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையே நல்லிணக்கம் காணப்பட்டு வருகின்றது.
இவ்வாறான எதிர்ப்பு கருத்துக்களால் மீண்டும் தெற்கில் இனப்பிரச்சினைகள் தோற்றம்பெறும். எதிர்ப்பவர்கள் தாம் எதிர்ப்பதற்கான முறையான காரணத்தை பொது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.
2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின்சிவில்போர்முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் இன்றும் உலகில் பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் அழுத்தங்கள் காரணமாகவேஜ.நாமனிதஉரிமை ஆணையகம் இலங்கை தொடர்பில்தொடர்ந்துபோர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.
இலங்கையில்முற்றாகஅழிக்கப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவுகள் எதிர்கால சந்ததியினர் மத்தியில்எதிர்விளைவுகளைதோற்றுவிக்கும்என்பதாலேயேதென்னிலங்கைஅரசியல்வாதிகள்மே18 தினத்தை எதிர்க்கின்றார்கள்.
இதில் தேசிய பாதுகாப்பே முதன்மைப்படுத்தப்பட வேண்டும். இதனைவடக்குகிழக்கில்வாழும் தமிழ் மக்கள் உட்பட அனைத்து தமிழ் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும், 30வருடபோர்தோற்றம்பெறுவதற்குஅக்காலக்கட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசே காரணம்தமிழ்மக்களை அரசில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்றுலங்காசமசமாஜகட்சிஎடுத்துரைத்தது.
ஆனால்அரசு அதனைப்பொருட்படுத்தாமல்தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டது அதன் பெறுபேறே 30 வருட கால கொடிய போர் - என்றார். (ற.ரி2)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

பளைப்பகுதியில்ஒருதொகைகஞ்சாவுடன் கைதானவரைவிளக்கமறியலில்வைக்குமாறுகிளிநொச்சிநீதிவான்உத்தரவிட்டார்.
கிளிநொச்சிமாவட்டசிறப்புஅதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்துசந்தேகநபர்சோரன்பற்றுப்பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
மாமுனைப் பகுதியிலிருந்து, புதுக்காட்டுப் பகுதிக்குக் கஞ்சா கடத்தி வரப்படுவதாக கிடைக்கப்பெற்றதகவலின்அடிப்படையில் 20கிலோ கஞ்சாவுடன்சந்தேகநபர்கைதானார் எனத் தெரிவிக்கப்பட்டது.
பளைபொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று முன்னதினம் கிளிநொச்சிநீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
சந்தேகநபரை எதிர்வரும்1ஆம்திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறுகிளிநொச்சி மாவட்டநீதிவான்உத்தரவிட்டார். (ற.ரி2.6)

## புதையல் தோண்டிய ஐவர் கைது

வவுனியாப் பகுதியில் புதையல் தோண்டிய ஐவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
தேக்கவத்தை, மதவுவைத்தகுளம், சாந்தசோலைபகுதிகளைச்சேர்ந்த42,44,27,30, 29 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டனர். வாரிக்குட்டியூர், சங்கராபுரம் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் ஐவரடங்கிய குழுவினர்புதையல்தோண்டும்நடவடிக்கையில்ஈடுபட்டுவருவதாகத்தெரிவிக்கப்பட்டது.
இந்த தகவல் தொடர்பில், பூவரசம்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதேசந்தேகநபர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டதாகப்பொலிஸார்தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசன் குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2,110)



## பாரம்பரிய விற்பனை நிலையம் திறந்து வைப்பு

வவுனியா,மே.20
வவுனியாவில் பாரம்பரிய உற்பத்திகளின் விற்பனை நிலையமான"அறம்"உயர்கல்விமற்றும்கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்சவினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வவுனியா மாவட்டச் செயலர் சோமரத்தின விதானபத்திரன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், உதவி மாவட்டச்செயலர்ந.கமலதாஸ், பிரதேசசெயலர்க.உதயராசா, சர்வமதக் குழுவினர், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இந்த விற்பனை நிலயம் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள்அமைச்சினால்பாரம்பரியஉற்பத்திகைத்தொழில் மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா நகரத்தில் அமைக்கப்பட்டது. (ற.ரி2,110)

## இராணுவத்தினருக்கு பிரித் புண்ணிய நிகழ்வு

கொழும்பு,மே.20
உயிரிழந்தஇராணுவத்தினருக்காகஇலங்கை மகாவலிஅதிகாரசபையினால்ஏற்பாடுசெய்யப்பட்ட பிரித் புண்ணிய நிகழ்வு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்குபற்றலில் நேற்று மகாவலிநிலையத்தில் இடம்பெற்றது.
இவ்வாறு ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,
அமரபுரமகாநிக்காயவின் ஊவ உடகிந்த மகாநாயக்கதேரரும் கலவுடஸ்ரீதம்மநிக்கியேத்தன பிரிவெனாவின் கலாநிதி வண. பொக்கன் ஒருவே ஜினானந்த நாயக்க தேரரும்சமயநிகழ்வுகளை நிகழ்த்திய துடன், ராமஞ்ஞமகாநிக்காயவின் தென்னிலங்கை பிரதான சங்கநாயக்கர்வண. ஓமல்பே சோபித்த நாயக்க தேரரினால் ஆசிஉரைநிகழ்த்தப்பட்டது. அமெரிக்காவில் வசித்து வரும் பூஜிய பாத கலாநிதி பொக்கன்ஒருவே தேவானந்த நாயக்க தேரரினால் பாளி மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட பௌத்த புத்தகத் தொகுதிகளை அரச தலைவர் மகாவலிவலயங்களில்உள்ளவிகாரைகளுக்கு வழங்கினார். (ற.ரி2)




# வான் பள்ளத்தில் பாய்ந்ததில் மூவர் படுகாயம்

பதுளை,மே.20
வான் ஒன்று பள்ளத்தில் பாய்ந்ததில் மூவர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் நேற்று அதிகாலை, பதுளை, பகுதியில் இடம்பெற்றது. வெலிமடை பிரதான வீதியில்சென்றுகொண்டிருந்த வான் வீதியை விட்டு விலகி80அடிபள்ளத்தில்பாய்ந்துவிபத்துக்குள்ளாகியது. அதில்பயணஞ்செய்தமூவர்படுகாயமடைந்தநிலையில்,



பதுளை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பு பகுதியிலிருந்துநுவரெலியா, பசறைபகுதியில் மரணசடங்குவீடுஒன்றுக்குசென்றுகொண்டிருந்த வான் ஒன்றே விபத்துக்குள்ளாகியது
வாகன சாரதிக்கு வாகனத்தைக் கட்டுப்படுத்தமுடியாததன்காரணமாகஇவ்விபத்துஇடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி2)

**B+ or B- or O+ or O- குருதி வகை சிறுநீரகம் உடனடியாகத் தேவை.**

55 வயதுடைய ஆண் ஒருவருக்கு B+ or B- or O+ or O- குருதி வகை சிறுநீரகம் உடனடியாகத் தேவை. வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(25 - 35) வயதிற்கு உட்பட்ட ஆண் / பெண் ஆகியோரின் சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு - 077 108 0875, 077 0811 624, 075 4949 839**

**"SANEYA HERBALS"** -இல.262 Chemmany Road, Nayanmarkaddu.

Ayurvedic Hospital, Nallur, Jaffna ESTD - 1838

**180 ஆண்டுகள் பழைமை வாய்ந்த எம் வைத்தியசாலையில் பாரம்பரிய வைத்தியமான முறிவு, நெறிவு உட்பட அனைத்து சேவைகளையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.**

*எம் பிரசித்தி பெற்ற கருமைநிற நீக்கம் உட்பட முகப்பருக்கள், கரும்புள்ளிகள், சுருக்கங்கள், கருவளையம், உதடுகருமை நீக்கம், மூக்கோரக் கொழுப்புப்படிவுகள் உட்பட அனைத்து சரும பிரச்சினைக்குமான சிகிச்சைகள்.

*உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல் மற்றும் மிதமிஞ்சிய கொழுப்புப்படிவிற்கான "Buring Fat" சிகிச்சைகள்

*முடி உதிர்வு, இளநரை, பொடுகு, பேன் உட்பட அனைத்து முடிசார் சிகிச்சைகள்

*சிவந்த பொன்னிற மேனிக்கான " Golden Skin Theraphy" சிகிச்சைகள்

முற்பதிவு அவசியம் - **0777 351 954** பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை.

Visit Our Page FB : Saneya herbals, Like page : " Saneya Herbals"

யாவும் வைத்திய மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது.

## மணி விழா வாழ்த்துக்கள்



தன்னம்பிக்கை, விடாமுயற்சி, நட்புணர்வு, நகைச்சுவை உங்கள் சொந்தமன்றோ!

உயர்திரு

**நவரத்தினம் ஜெயகுமாரன்**

(SLPS I)

(ஓய்வுநிலை அதிபர் - யா/ டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி)

**வாழ்க வளமுடன்**

**வாழ்த்துவோர்**

| | | |
|---|---|---|
| கா.கந்தசாமி | - அதிபர் | - யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம் |
| கா.குணசிங்கம் | - அதிபர் | - யா/ கச்சாய் அ.த.க.பாடசாலை |
| க.சண்முகதாஸ் | - அதிபர் | - கிளி/ வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை |
| யோ.ஜெயகாந்தன் | - அதிபர் | - யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியலயம் |
| க.எழிலழகன் | - அதிபர் | - யா/ மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் |
| கு.இரவீந்திரன் | - அதிபர் | - யா/ போக்கட்டி றோ.க.த.க பாடசாலை. |

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 09.12.1993 இறப்பு 21.02.2018

கடந்த 21.02.2018 இறைபாதமடைந்த

அமரர்

**பாலசிங்கம் டனுசன்**

**(கண்ணன்)**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (21.05,2018) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி : **40, ஐயனார்புரம், வன்னேரிக்குளம்.**
தற்போதைய முகவரி : **21, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.**

**குடும்பத்தினர்.**
**077 526 9198**

(AKN. 499/05/17)

## செய்தியாளர்கள் தேவை!

யாழ்.மாவட்டத்தின் பின்வரும் இடங்களில் இருந்து செய்திகளைத் தருபவர்களும் தகவல்களைச் சேகரித்துத் தருபவர்களும் தேவை

| | |
|---|---|
| நல்லூர் | |
| கோப்பாய் | மல்லாகம் |
| கொக்குவில் | இளவாலை |
| ஏழாலை | பண்டத்தரிப்பு |
| உரும்பிராய் | மானிப்பாய் |
| அச்செழு | அராலி |
| சிறுப்பிட்டி | சுன்னாகம் |
| மயிலிட்டி | சண்டிலிப்பாய் |
| இடைக்காடு | வட்டுக்கோட்டை |
| வல்லிபுரம் | சங்கானை |
| கொடிகாமம் | காரைநகர் |
| அரியாலை | வேலணை |
| நாவற்குழி | ஊர்காவற்றுறை |
| மருதங்கேணி | நயினாதீவு |
| மறவன்புலவு | அனலைதீவு |
| அல்வாய் | நெடுந்தீவு |
| வசாவிளான் | புங்குடுதீவு |

ஆர்வமும் துடிப்பும் செயல்திறனும் உள்ளவர்கள் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தபால்மூலமாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். அல்லது 021-4927424 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் விண்ணப்பிக்கலாம்.

## மகோற்சவம்

நீராவியடி யாழ்ப்பாணம் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயமஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 27 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 28ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமைகாலை10மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடி இறக்கமும் இடம்பெறும் என பொறுப்பாளர் வை.இரகுநாதமுதலியார் தெரிவித்துள்ளார்.

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம் நீராவியடி வீரகத்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 20 தினங்கள் இடம்பெறவுள்ளது.

28ஆம்திகதிதிங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

பெருந் திருவிழாக் கிரியைகள் ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ ச.சந்திரகுமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,மே 20

ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர்பாடசாலையின் விளையாட்டு விழா இன்றுஞாயிற்றுக்கிழமை தலைவர் சதீஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

பி.ப2.30மணிக்குசிறுவர்உலகமுன்பள்ளிமைதானத்தில் வடக்குமாகாணக்கல்வித்திணைக்களஓய்வுபெற்றஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் ந.இ.இராஜேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (21.113)

## மின்சாரம் தாக்கி இளைஞன் காயம்

ஆலயப்பெருந்திருவிழாவுக்காகஆலயவளாகத்தில் மின்விளக்கு கள் பொருத்தும் பணியில் ஈடுபட்ட இளைஞர் மின்சாரம் தாக்கி எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா மருத்தவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நுணாவில் மேற்கு மருதடி விளைவேலிவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது.

இன்று ஆலயப்பெருந்திருவிழா ஆரம்பிக்கப்படவுள்ளதையடுத்து ஆலய வீதிகளில் மின்கம்பங்கள்நட்டு மின்விளக்குகள்பொருத்திவிட்டுஅவற்றுக்குஇணைப்புக்கொடுக்க முற்பட்ட வேளையில் மின்சாரம் தாக்கியதெனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் மடத்தடியைச் சேர்ந்த சிவநாதன்ஹரிசன்(வயது-22)என்னும்இளைஞன் எரிகாயங்களுக்குஇலக்கானநிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (21,9)

## குருதிக் கொடை

முள்ளிவாய்க்கால் 9ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி குருதிக் கொடை நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் இன்றுகாலை8.30ஆரம்பமாகும்என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது. (4)

## வீட்டுக்கு வேலையாள் தேவை

யாழ். நகரத்தை அண்டிய பகுதியில் வசிக்கும் சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்வதற்கு நடுத்தரவயதுடைய பெண் தேவை.

**தொடர்பு - 076 120 2765**

## தொழில்சார் கற்கைள் நிறுவனம்

**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**B.Sc in Nursing**

**தாதியில் தொடர்பான பட்டதாரி நிகழ்ச்சிதிட்டம்**

ஆரம்பம் - 29.05.2018 செவ்வாய்க்கிழமை

காலம் - 2 வருடங்கள் (பயிற்சி உட்பட)

குறிப்பு -

01) Diploma கற்ற தாதிய மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ள நிகழ்ச்சிதிட்டம்

02) க.பொ.த Bio Stream உட்பட ஏனைய துறை மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

03) வைத்தியசாலை பயிற்சி திட்டம்

**மேலதிக விவரங்களுக்கு தொடர்புகளுக்கு :**

திரு. S.சிவபாலன் இயக்குநர்
கலாநிதி N.தணிகாசலம்பிள்ளை
(முகாமைத்துவ நிர்வாக சபை சார்பாக)

இணைப்பாளர் தாதியியல் பிரிவு
021 450 8489,
077 770 3907

## பொங்கல் விழாவும் தீ மிதிப்பு நிகழ்வும்

அளவெட்டி, மே 20

மல்லாகம் அருள்மிகு பெரியநாயகி பெரிய தம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நேற்று சனிக்கிழமைவிளக்குவைப்புடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து இன்று ஞாயிற்றுக்கிழமைபொங்கல்நிகழ்வும்தீமிதிப்புவைபவமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (63)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3032 திகதி:19.05.2018 சனிக்கிழமை
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
23 44 58 72 O | 21 | 43,043,010/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 255
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.05.19
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 66,656,330/-
வெற்றி இலக்கங்கள்
23 24 34 69 J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கரத்தினம் பத்மநாதன்

(ரகுநாதன் பதிப்பக உரிமையாளர்)



அன்னைமடியில் 13.06.1935 — ஆண்டவன் அடியில் 11.05.2018

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் பத்மநாதன் கடந்த 11.05.2018 காலமானார்.

அன்னார் சின்னத்துரை - ஆச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கந்தப்பு - சின்னா தம்பதிகளின் மருமகளும் கொழும்பு, விவேகானந்தா ஸ்ரோர்,கொள்ளுப்பிட்டி,விவேகானந்த பவான், ரகுநாதன் பதிப்பகம் ஆகியவற்றின் உரிமையாளரும் வெள்ளவத்தை இந்து மகா சபையின் அங்கத்தவருமாகிய காலஞ்சென்ற கந்தப்பு பத்மநாதனின் அன்பு மனைவியும் திருமதி பத்மாவதி (தேவி), திருமதி பத்மலோசனி (பொம்மி), காலஞ்சென்ற ராங்கநாதன் மற்றும் ரகுநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சற்குணராஜன் (குணம்), துரைரட்ணம் (ராசா) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சின்னத்துரை, துரைசிங்கம், திருநாவுக்கரசு, விஜயரட்ணம், யோகரட்ணம் மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பையா, அன்னம்மா, பாலசுந்தரம், லட்சுமி, துரைசிங்கம், கனகாம்பிகைஈஸ்வரி (சந்திரா), ராஜேஸ்வரி, பாமா, சிவானந்தம் ஆகியோரின் மைத்துனியும் ஸ்ரீவிக்னேஸ்வரராஜ், சர்மிளா, மகாலக்சுமி, ராஜீவ், சுசீலா, ஜனனி, அலெக்ஸ், புரூனோ, சிறிலி ஆகியோரின் பேர்த்தியும் மாயா, டக்சிகா, டக்சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் (22.05.2018) செவ்வாய்க்கிழமை பிரான்ஸ் நாட்டில் ஐரோப்பிய நேரம் 14.30 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கண்ணன் (ஜேர்மனி) 0049 157 314 62852, ராசா (பரிஸ்) 0033 6648 356 38,**
**ரவி (பரிஸ்) 0033 610 969 232, சிவா (பரிஸ்) 0033 768 855 799,**
**ரமணி (பரிஸ்) 0033 623 080 482, ஜெயந்தி (பரிஸ்) 0033 651 501 212**

(C6816/15/17)



### முத்துலிங்கம் சிவானந்தன் (ஆனந்தி)

மயிலுவீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 49, பொன்னையா ஒழுங்கை, ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் சிவானந்தன் நேற்று (19.05.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் (சபாஷ் ஸ்ரூடியோ) - இராசாத்தியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் சிவராசா - யோகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் சிவகெளரியின் அன்புக் கணவரும் யோகண்யா (மாணவி - தரம் 4, யா/ இந்து ஆரம்பப் பாடசாலை) யின் அன்புத் தந்தையும் ஸ்ரீமதி, ஸ்ரீதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, காலஞ்சென்ற அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலச்சந்திரன், காலஞ்சென்றவர்களான ஞானலட்சுமி, அமிர்தகடேஸ்வரன் (செல்வம்சாமி) மற்றும் அம்சாயினி, சசிதரன், முரளிதரன், கார்த்திகாயினி ஆகியோரின் மைத்துனரும் சிலோசனாதேவி, செல்வராணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**49, பொன்னையா ஒழுங்கை,**
**ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.**

(CS 16790/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## விற்பனைக்கு

யாழ். K.K.S.வீதியில் பண்டிக்கோட்டு பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 4 பரப்பு வெற்றுக்காணியும் யாழ். தட்டாதெரு சந்திக்கு அண்மையில் சீனியர் ஒழுங்கையில் 4 பரப்பு வெற்றுக்காணியும் யாழ். மணல்தறை ஒழுங்கையில் 2 பரப்பும் 14 குளி வெற்றுக் காணியும் யாழ். நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி, முகப்புடன் 5 பரப்பு காணியும் யாழ். மாநகரசபை முன் வீதியில் (குறுக்கு வீதியில்), 5 பரப்பில் அமைந்த வீடும் காணியும் யாழ். சிவன் கோவிலுக்கு அண்மையில் 4 பரப்பில் அமைந்த இரு மாடி புதிய வீடும் யாழ். அன்னசத்திர ஒழுங்கையில் 2 1/2 பரப்பில் அமைந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 723 2535**
**356, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.**

(CS 16791/15/17)

உத்தியோகபூர்வ முடிவுகள்
සංවර්ධන වාසනාව
Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 144
சீட்டிழுப்பு திகதி 19.05.2018 இளஞ்சிவப்பு
வெற்றி இலக்கங்கள் | சுப்பர் இலக்கம் | அதிர்ஷ்ட மாதம்
15 32 58 64 | 06 | ஓகஸ்ட்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 13,057,100/= | அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 41,54,534/= | அடுத்த ஜக்பொட் ரூ. 22,94,612/=
2018.05.24 ஆம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

18.05.2018



**சின்னத்துரை கனகசபை**
(ஓய்வு நிலை இராணுவ அதிகாரி)



**விசாலாட்சி சிதம்பரப்பிள்ளை**

காலத்தால் அழியாத காவிய நாயகர்கள் நீங்கள்....

**ஈஸ்வரி இல்லம், மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலினி ஜனகன்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலினி ஜனகன் நேற்று (19.05.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஜனகனின் அன்பு மனைவியும் சுந்தரமூர்த்தி காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் அருளாநந்தம் - புஸ்பராணிதேவி தம்பதிகளின் மருமகளும் றம்மியாவின் அன்புத் தாயாரும் மாலினியின் (டென்மார்க்) அன்புச் சகோதரியும் அருள்நாதரின் (டென்மார்க்) மைத்துனியும் றொசான், லக்சன் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2018) திங்கட்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பண்ணாகம், சுழிபுரம்.**
**077 629 5262**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மாபெரும் விளையாட்டுப் போட்டி

**வடமராட்சி கடலோடிகள் ஐக்கிய சமூக சேவைகள் அமைப்பின் முதலாம் ஆண்டை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப் போட்டி ஆவணி மாதம் 12.08.2018 ஆம் திகதி தொடக்கம் 19.08.2018 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.**

- படகு ஓட்டம் பீலிஸ் போட் 17 ½ அடி. 25 **H.P** இயந்திரம்
- படகு ஓட்டம் பீலிஸ் போட் 17 ½ அடி. 9.9 **H.P** இயந்திரம்
- துவிச்சக்கரவண்டி ஓட்டம் 25 **KM** - ஆண்கள்
- கட்டுமரம் வலித்தல். 7 முழம் மரம்
- நீச்சல் ஆண்கள்
- மரதன் ஓட்டம் 10 **KM** - ஆண்கள்.
- கடல் பந்தாட்டம் - ஆண்கள்.
- உதை பந்தாட்டம் - ஆண்கள்
- கிளித்தட்டு - பெண்கள்
- கயிறு இறுத்தல் - பெண்கள்

படகு ஓட்டத்தில் முதலிடம் எடுப்பவர்களுக்கு தாங்கப்பதக்கமும். துவிச் சக்கர வண்டி ஓட்டத்தில் முதலிடம் எடுப்பவருக்கு ஒரு துவிச்சக்கர வண்டியும் மற்றைய விளையாட்டுக்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில் களும் வழங்கப்படும். விளையாட்டுக்களில் பங்குபற்ற விரும்புகின்ற நபர்களோ. விளையாட்டுக் கழகங்களோ பங்குபற்ற முடியும். 20.05.2018 ஆம் திகதி தொடக்கம் 31.05.2018 வரை விண்ணப்பங் களை சுப்பர்மடம் பருத்தித்துறையில் இருக்கின்ற வடமராட்சி கடலோடிகள் ஐக்கிய சமூக சேவைகள் அமைப்பின் அலுவலகத்தில் நேரடியாக ஒப்படைக்கலாம். இறுதித்திகதிக்குப் பிந்திவரும் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எல்லா விடயங்களிலும் அமைப்புக்கே இறுதிமுடிவெடுக்கும் உரிமை உண்டு.

(CS/16716)(11,17)



## Dr.சிவகுமார் Ph.D.,
**Aura Science Expert**

கேரளா கொல்லூர்
ஸ்ரீ மூகாம்பிகை தேவி உபாசகர்



**பிறவிப் பலன்களை துல்லியமாக கூறி தோஷங்களுக்கான தீர்வுகளை, பிரபல ஆன்மீக அறிவியல் வழிமுறைகளின் மூலம் கணித்து கூறுகிறார்.**

**Art of Spiritual Science பயிற்சி வகுப்புகள், பிரத்யங்கிரா ஹோமம், சண்டி ஹோமம், சர்ப்ப காயத்ரீ ஹோமம் மற்றும் பல முக்கிய ஹோமங்களை நடத்தித் தருகிறார்.**

**மே மாதம் 25ம் திகதி இலங்கை வருகிறார்**
**முன்பதிவு அவசியம்:**
# 0778616396

# உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா? - ஊளைச் சதையா?
- உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- வயிற்று கோளாறா? - வயிறு.மார்பு குறைக்க வேண்டுமா.
- உடல் எடை குறைகிறதேயில்லை என்ற கவலையா?

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா. குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

**(விலை - 3500, 5500, 9000)**

**பதிவு இல: 16168**
**077 210 6155** **221, நாவலர் றோட், யாழ்.**

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- தலைமுடி வளர வேண்டுமா? - பேன். பொடுகு தொல்லையா?
- முடி கொட்டுகிறதா? - இளநரையா? - தலையிடியா?
- முடி அடர்த்தி இல்லையா? - புதிதாக முடி முளைக்க வேண்டுமா?

பொன்னாங்காணி. கரிசலாங்காணி. இலாமிச்சைவேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் 100% ஆயுள்வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணையைப் பாவித்து பலனடைய.

**பதிவு இல: 16168**
**077 263 9037** **221, நாவலர் றோட், யாழ்.**

## உடல் எடை இலகுவாகக் கூட வேண்டுமா?

- எடை கூட வேண்டுமா? - கணச்சூடா? - பலகீனமா?
- ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?
- மார்பு கூட்ட வேண்டுமா? - உடல் குறைபாடுகளா?

**விலை 5500/= - 9000/=**

100% பக்கவிளைவுகளற்ற ஆயுள்வேத ஔடதம் உங்கள் அழகிய தோற்றத்தைப் பெற

**பதிவு இல: 16168**
**077 314 9386** (IN/)(11,17) **221, நாவலர் றோட், யாழ்.**

# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி **ஜ.சியாமளா**
அவர்களின் அன்புச் சகோதரன்
**கோபாலபிள்ளை குகன்**
அவர்களின் மரணச் செய்தி கேட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்**

(CS.16747) (13.17)

# பணி நிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் முன்னணி உற்பத்தி நிறுவனத் திற்கு உதவி கணக்காளர். கணக்கு பதிவாளர் தரத்தில் பணியாளர் கள் வேண்டப்படுகிறார்கள். தகுதியானவர்கள் தங்கள் சுயவிவரத்-துடன் தகைமைச் சான்று பிரதிகளையும் இணைத்து கீழ் குறிப்பிடப் படும் முகவரிக்கு தபால் மூலம் 05.06.2018 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

**முகவரி: ஆளணி முகாமையாளர்**
**இல: 29,31 C.பொன்னம்பலம் வீதி,**
**3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

(IN 6809)(14,17)

# யாழ்.வணிகர் கழகம் வருடாந்த பொதுக்கூட்டம்

2018ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது.

பிரேரணைகள் **31.05.2018** ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**திகதி :- 09.06.2018 சனிக்கிழமை**
**நேரம் :- காலை 9.30 மணி**
**இடம் :- யாழ்.வணிகர் கழகப் பணிமனை,**
**165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(C/6808)(11,17)

# பதவி வெற்றிடம்

**நிர்வாக உதவியாளர்/ அலுவலக உதவியாளர்**

எமது திருச்சபையின் அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட பணிநிலைக்கான வெற்றிடம் ஒன்று உள்ளது.

தகுதியானவர்கள் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தங்களது சுயவிவரக் கோவையினை 31.05.2018 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

தகுதியான விண்ணப்பதாரிகளில் ஒருவர் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்.

The President
Church of the American Ceylon Mission
Asia House
Maruthanarmadam - Chunakam

Email: rev.thevanesan@gmail.com
077 666 0562

(IN 6764)(14,17)

# பிற்போடல் தொடர்பானது

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் (வன்னேரிக்குளம்) ஆலயத்தின் அதிஸ்ட லாபச் சீட்டின் முடிவுகள் 20.05.2018 தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியிட முடியாது எனவும் முடிவுகள் எதிர்வரும் 08.06.2018 அன்று வெளியிடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**ஆலயத்தின்**
**தலைவர்**
**பொருளாளர்**
**செயலாளர்**

(IN 6764)(14,17)

# பதவி வெற்றிடம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் கீழ்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்கீட்டு உதவியாளர்**
**(Accounts Assistant)**

01. க.பொ.த. (உ/த) (A/L) இல் வர்த்தகப் பிரிவில் 3 பாட சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
02. மேலதிக தகைமை (Partly Qualified - HNDA, AAT, ICASL, ACMA)
03. ஒருவருட துறைசார் அனுபவம்
04. கணினி பற்றிய அறிவு
05. வயதெல்லை 21 - 35 வரை

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

இது தொடர்பான விண்ணப்பங்களை **25.05.2018** இற்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (jaffnabeo@red-cross.lk) அல்லது நேரடியாகவோ உங்களது விண்ணப்பங்களை கீழ் வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**இல.67, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

(IN/6798)(11,17)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 30 • 10 • 1985
இறப்பு 18 • 05 • 2018

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றி கடமை நிமித்தம் சென்றவேளை எம்மைவிட்டுப் பிரிந்த

**கோபாலபிள்ளை குகன்**

அவர்களின் பிரிவால் பரிதவித்து நிற்கும் குடும்பத்தினரது துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

**நலன்புரி சங்கம்**
**பிரதிப் பிரதம செயலாளர் செயலகம், நிர்வாகம்,**
**வடமாகாணம்.**

(CS/10054)(11,17)

## கடைகள் வாடகைக்கு

யாழ்.நகரை அண்மித்த இடத்தில் நான்கு தொடர் கடைகள் வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனை. களஞ்சிய வசதிக்கு உகந்தது.

**077 559 4179** (CS 16773)(14,17)

## விற்பனைக்கு

பண்டம் கோழிக்குஞ்சுகள், முட்டை இடுகின்ற கோழிகள், ஊர்க் கோழிக்குஞ்சுகள், 1வாரம், 3வாரம், 1மாத குஞ்சுகள், கப்பல் வாழைக்குட்டிகள், அன்னாசி உறிஞ்சிகள் (கன்றுகள்) காடை, காடைக்குஞ்சுகள் அனைத்து பயன்தரு மரங்களும் விற்பனைக்கு

**பவிசாறு பூங்கனிச்சோலை**
**021 222 8199/ 077 397 6203**

## தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பத்துடன் தங்கியிருந்து வேலை செய்யப் பணிப்பெண் தேவை.

**077 249 7292** (ACO/235)(11,17)

## வீடு வாடகைக்கு

யாழ். கச்சேரிக்கு அருகில் சாலை. படுக்கையறை சமையலறை. தொடர்குளியலறையுடன். வீடு உடன் வாடகைக்குண்டு. இருவருக்குப் பொருந்தும்.

**072 356 4109**

## தேவை

**உணவகம் ஒன்றுக்கு....**

உணவகம். சமையலறைக்குத் தேவையான தளபாடங்கள். உபகரணங்கள் தேவை.

**077 442 4240** (CS/16760)(11,17)

## மணமகள் தேவை

கப்பலில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றும் 35 வயதுடைய மணமகனுக்குத் தகுந்த. மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றார்.

**077 430 2691** (CS/16761)(11,17)

## வீடு வாடகைக்கு உண்டு

இல.72, மாட்டீன் றோட்டில் வாகன தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**076 833 1234**

## கார் விற்பனைக்கு

AXIO **கார். 2007 உற்பத்தி**
W.p-XXXX **இலக்கம்**
**கொண்ட கார் விற்பனைக்குண்டு.**

077 813 1023

## உடனடி வேலைவாய்ப்பு

O/L, A/L முடித்த மற்றும் பகுதிநேர வேலை செய்ய ஆர்வமுள்ள அனைவருக்கும் EPF/ETF உடனான நிரந்தர வேலைவாய்ப்பு

**077 241 7007**

## பணியாளர்கள் வேண்டுகை

- முகாமையாளர்
- வரவேற்பாளர்கள்
- கணினி வடிவமைப்பாளர்கள்
- புத்தகம் கட்டுநர்கள்
- அலுவலக உதவியாளர்கள் (ஆண்கள்)

**சாம்பவி பதிப்பகம்**
**265, 267, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 616 1125, 021 222 4143**

## மணமகள் தேவை

1988 இல் பிறந்த பூரம் நட்சத்திரம் 8இல் செவ்வாய் கி.பா 103 உடைய சொந்தமாக நகைத் தொழில் செய்யும் மணமகனிற்கு பொருத்தமான மணமகள் தேவை.

**இடம் : யாழ்ப்பாணம்**

**077 986 3089/ 071 085 7114** (CS 16760)(14,17)

## வீடு, காணி தேவை

யாழ். பல்கலைக்கழக அண்மித்த சூழலிலும், பலாலி வீதி, K.K.S வீதி ஆகிய பகுதிகளிலும் காணியுடன் கூடிய வீடு அல்லது தனிக் காணி தேவை.

(AC 501)(14,17)

தொடர்புகளுக்கு: **077 622 4038**
**075 922 4038**

## பணியாளர் தேவை

யாழ். நகரில் லொத்தர் விநியோக அலுவலகம் ஒன்றுக்கு கணினி. சிட்டை, கணக்கு போன்ற வேலைகளுக்கு பெண் பணியாளர் தேவை. யாழ்.நகரில் இருந்து 4Km தூரம் உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். (CS 16771)(14,17)

**077 516 4928**
**No.52,Hospital Road, Jaffna.**

## திருக்குறள் தேர்வு இன்று

யாழ்ப்பாணம், மே20
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் ஜி.சி.ஈ உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்காக நடத்தும் திருக்குறள் தேர்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபம், வணிகத் துறை மண்டபம், இரசாயனவியல் துறை மண்டபம், மருத்துவபீடப் பரீட்சை மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.
தேர்வில் 700க்கும் மேற்பட்ட உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.
தேர்வு தொடங்குவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னரேயே குறித்த நிலையத்துக்குச் சமூகமளிக்குமாறு தமிழ்ச்சங்கத்தினர் கேட்டுக் கொண்டனர். (21)

### சிறந்த பண்ணையாளர் என்று

# அமெரிக்க அரசின் பாராட்டை பெற்றார் முன்னாள் போராளி

**கொழும்பு, மே 20**
**முன்னாள்போராளிகளானநேசனும் அவரது மனைவி வசந்தியும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் புத்துக்குடியிருப்புப் பிரதேசத்தில் 10 க்கு மேற்பட்ட பால் மாடுகளுடன் பண்ணையை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.**




இவர்களது பண்ணை ஒரு சமூகப்பண்ணையாகும். தன்னலம் கருதாது சமூகசேவைகளையும் திறம்படச் செயற்படுத்தி வரும் இவர்கள்தாயகத்தில்சிறந்தமுன் மாதிரியாவார்கள் என்று தெரிவித்த அமெரிக்க அரசு அவர்களுக்கு மதிப்பளித்துப் பாராட்டியது.
அமெரிக்க அரசின் 14.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் ஆரம்பிக்கப்படவுள்ள கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டும் வகையில் சந்தையைஇலக்காககொண்டபால் உற்பத்தித் திட்ட ஆரம்ப நிகழ்வு கடந்தவியாழக்கிழமைகொழும்பில் இடம்பெற்றது.
இந்தநிகழ்வில்இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், இலங்கையின் தலைமை அமைச்சர் உள்ளிட்ட பல பிரபலங்களும் கலந்து கொண்டனர்.
அமெரிக்கநிதியுதவியுடன்இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலானகால்நடைவளர்ப்பாளர்களின்உள்ளூர்பால்உற்பத்தி அளவை இரண்டுமடங்காக்கும் நோக்கில்அமெரிக்கஅரசின்விவசாய நிறுவனம் இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி அளிக்கின்றது.
திட்டத்தின்மூலம் இலங்கையில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தரப் பண்ணையாளர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
நீண்ட காலத்தில் 400 வீதமாக பால் உற்பத்தியை அதிகரிக்க இலங்கை அரசு எண்ணியுள்ளது.
இந்த நிகழ்வில் உரையாற்றிய தலைமைஅமைச்சர் ரணில்விக்கிரமசிங்கசிறியமற்றும்நடுத்தர பண்ணையாளர்களுக்கு போதிய வசதிகளை வழங்கி, புதியதொழிநுட்பத்தைஅறிமுகப்படுத்துவதனூடாகபண்ணையாளர்களின் வருமானம் இரண்டு மடங்காக்கதிட்டமிடப்பட்டுள்ளது. என்றார்.
நிகழ்வில் முன்னாள்போராளிகளானநேசனும்அவரதுமனைவி வசந்தியும் மதிப்பளிக்கப்பட்டனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 10 க்கு மேற்பட்ட பால் மாடுகளுடன் பண்ணையை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.
அவர்களது பண்ணை ஒரு சமூகப்பண்ணையாகும். தன்னலம் கருதாது சமூக சேவைகளையும் திறம்படச் செயற்படுத்தி வரும் அவர்கள்தாயகத்தில்சிறந்தமுன் மாதிரியாவார்கள் என்று அவர்கள் பாராட்டைப் பெற்றனர்.
இலங்கையிலிருந்து குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட ஒரேயொரு பண்ணை முயற்சியாளரான முள்ளாள் போராரி இலங்கைப் பண்ணையாளர்கள் சார்பில் அங்கு நன்றியுரையைத் தெரிவித்தார். (21)

## தேங்காய்த் திருடர்கள் வரணியில் அட்டகாசம்

வரணி, மே 20
தென்னந்தோட்டங்களின்உரிமையாளர்களேசந்தையில்தேங்காய்வாங்குமளவுக்கு தேங்காய்த் திருடர்களின் அட்டகாசம்வரணிப்பகுதியில்அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
வரணிப் பகுதியில் ஆள்கள் இல்லாத காணிகளில் தேங்காய்கள் திருடுவது அண்மைக் காலமாக சர்வ சாதாரணமாக இடம்பெற்று வருகின்றது. தேங்காய்கள்திருடும்சமயங்களில்உரிமையாளர்கள் வந்தால் அவர்களைப் பார்த்துதிருடர்கள் கத்தியைத்தீட்டுவது போல பாசாங்கு செய்கின்றனர். தென்னந்தோப்புகளின் உரிமையாளர்கள் பயமுறுத்தப்படுகின்றனர். பின்னர் திருடர்கள் அங்கிருந்துசாவகாசமாவே ஓடித்தப்பி விடுகின்றனர்.
இவ்வாறுதேங்காய்த்திருடர்களின்அடாவடியால்தென்னந்தோப்புஉரிமையாளர்கள் பலர் தமது தேவைக்கு கொடிகாமம் சந்தைக்குச் சென்றே தேங்காய் வாங்கும்நிலைஏற்பட்டுள்ளது. எனவே இதுதொடர்பில்பொலிஸார்உரியநடவடிக்கைகளை மேற்கொண்டு திருடர்களைக் கையும் மெய்றுமாகப் பிடிக்க வேண்டும் - என்றனர். (21,122)

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 20
சாவகச்சேரி திருவருள்மிகு ஸ்ரீ மஹா முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறும்.
எதிர்வரும்28ஆம்திகதிதிங்கட்கிழமைதேர்த் திருவிழாவும் மறுநாள் 29 ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் இடம்பெறும்.
ஆனி மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை 9.30 மணிக்குமணவாளக்கோளசங்காபிசேகமும் இடம்பெறும்.
அனைத்து அடியார்களையும் கலந்து கொள்ளுமாறுபரிபாலனசபைதெரிவித்தது. (21,113)

☆ ☆ ☆ ☆

வரணி, மே 20
வரணி வடக்கு கும்பிட்டான் புலம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவம் இடம்பெற்று எதிர்வரும் திங்கட்கிழமை இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர்தெரிவித்துள்ளனர். (21,122)

☆ ☆ ☆ ☆

வடமராட்சி, மே 20
வல்வெட்டி வேவில் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி தேவஸ்தான மஹோற்சவவிஞ்ஞாபனம்இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து இடம்பெறும் மஹோற்சவத்தில் 25ஆம் திகதி வெள்ளி க்கிழமைமாலை 6 மணிக்கு வன்னிச்சியம்மன் ஆலயத்தில் வேட்டைத்திருவிழா இடம்பெறவுள்ளது.
27ஆம் திகதி ஞாயிறு இரவு 07 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 09.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்தல் 11.30 மணிக்கு சுவாமி தேரால் அவரோகணித்தல் என்பனவும் இடம்பெற்று29ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு வசந்தமண்டப பூசை, காலை8.30மணிக்குவல்லைஊறணி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

# மூளாய் குடியேற்றத்திட்ட மக்களுடன் சரவணபவன் எம்.பி கலந்துரையாடல்

### பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 20
27வருடங்களின்பின்னர்மீளக்குடியமர்ந்துள்ள பொன்னாலை மூளாய்க் குடியேற்றத்திட்ட மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் நேற்று கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். அந்தக் கலந்துரையாடலில் மக்களுடைய பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் அவர் ஆராய்ந்தார்.
கலந்துரையாடல்நேற்றுக்காலை10மணியளவில்மூளாய்க்குடியேற்றத்திட்டத்தலைவர் பிரான்சிஸ் நவரட்ணம் இல்லத்தில் இடம்பெற்றது.
மூளாயில்தேசியவீடமைப்புஅதிகாரசபையால் 65 வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. த்லா 5 இலட்சம் ரூபா பெறுமதி அந்த வீடுகளைஅமைப்பதற்குமக்களுக்குவழங்கப்பட்டிருந்தது. மக்கள் வீடுகளை அமைப்பதற்கு அந்த நிதி போதாதிருந்தது. இது தொடர்பில்அவர்கள்அதிகாரிகள், அரசியல் தலைவர்களிடம் தெரிவித்திருந்தனர்.
எனினும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மேலதிகமாகக் கடன்பட்டுமக்கள்வீடுகளைஅமைத்தனர். சிலர்கடன்பட்டும்வீட்டைமுழுமைப்படுத்த முடியாது திண்டாடுகின்றனர். கடன் பட்டவர்கள்தற்போதுஅதைஅமைக்கமுடியாது தவிக்கின்றனர்.
இந்தநிலையில்மக்களுடையகுறித்தபிரச்சினை தொடர்பில் கேட்டறிவதற்கே நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று அங்கு சென்றிருந்தார்.
மக்கள் அவரிடம் பல குறைபாடுகளைத் தெரிவித்தனர். தங்களுடைய கடனை அடைப்பதற்குரிய வழிகளைப் பெற்றுத் தருமாறு கோரினர். சுயதொழில் வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான உதவிகளைவழங்குமாறுகோரினர். குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதிகளை உடன் பெற்றுத் தருமாறு கேட்டனர். மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இது தொடர்பில் உரியவர்களுடன் பேசுவதாகத் தெரிவித்தார். முதன்மைப் பிரச்சினையாக உள்ள கடன் சுமையை ஒழிப்பதற்கு தன்னாலான ஏற்பாடுகளை முழு மனதுடன் செய்து தருவேன் என்று உறுதியளித்தார். அத்துடன் பொது அமைப்பு ஒன்றைஉருவாக்கிஅதன்மூலம்சுயதொழில் ஊக்குவிப்புக்களை மேற்கொள்ள முடியும்எனவும். அமைப்பைஉருவாக்கிய பின்னர் அது தொடர்பில் உதவிகளைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார். குடிதண்ணீர்த் தேவைகள் தொடர்பான ஆராய்வுகளின் இறுதியில் அதற்கான ஏற்பாடுகளை விரைந்து தருவதாகத் தெரிவித்த அவர்இரண்டுவாரங்களில்குடியேற்றத்திட்டத்துக்கு குடிதண்ணீர் வழங்கப்படும்அதற்கானஏற்பாடுகளைவலி. மேற்குப் பிரதேச சபை மேற்கொள்ளும் - என்றார்.
இந்தச்சந்திப்புசுமார்இரண்டரைமணிநேரம் இடம்பெற்றது. மூளாள் ஜே/171 கிராம அலுவலர் உள்ளிட்ட குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த பலர் இதில் கலந்து கொண்டனர்.



அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்ற பதில்களைவழங்கியநாடாளுமன்றஉறுப்பினர் அவற்றை செயலிலும் காட்டுவார் என்று நம்புவதாக அந்த மக்கள் நன்றியுரையில் தெரிவித்தனர். (21)

# உயிர்நீத்த போர் வீரர்கள் மற்றும் உறவினர்களை மக்களுடன் இணைந்து இராணுவமும் அஞ்சலித்ததாம்

## இணையத்தளங்களில் இராணுவம் பரப்புரை


இராணுவத்தால் பதிவேற்றப்பட்ட ஒளிப்படம்

**கிளிநொச்சி, மே 20**

**30 ஆண்டு காலப் போரின் பின் தமிழ் மக்களும் இராணுவத்தினரும் இணைந்து உயிர்நீத்த போர் வீரர்கள் மற்றும் உறவினர்களைக் கிளிநொச்சியில் நினைவு கூர்ந்ததாக சமூக ஊடகங்களில் இராணுவத்தினர் பரப்புரை செய்து வருகின்றனர்.**

இராணுவத்தினரின் பதிவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அத்துல் கேசாப்பும் பகிர்ந்துள்ளார். அந்தப் பதிவுஇணையத்தளங்களில்செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ளஆலயமொன்றில் நேற்று இடம்பெற்றதிருவிழாவழிபாட்டில்தமிழ்மக்களுடன்இராணுவத்தினரும் பங்கேற்றுள்ளனர். அதில் எடுத்துக்கொண்ட ஒளிப்படத்தை சமூக ஊடகங்களில்இராணுவத்தினர்வெளியிட்டுள்ளனர். அந்தப் படத்துக்கான விளக்கத்தை அவர்கள் திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளனர். 30ஆண்டுகாலப் போரின் பின் இராணுவத்தினரும் பொது மக்களும் இணைந்து உயிர்நீத்தபோர்வீரர்கள்மற்றும்உறவினர்களை நினைவுகூர்ந்தனர் என்று ஒளிப்படத்துக்கான விளக்கத்தை இராணுவத்தினர் வழங்கியுள்ளனர். பன்னாடுகளுக்கும் காண்பிக்கவே இராணுவத்தினர் இவ்வாறான போலிப் பரப்புரைகளைமுன்னெடுக்கின்றனர் என்றுசுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (21)

## கலாசார மைய நிலையம் திறப்பு

உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் வரணி சுட்டிபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட தென்மராட்சி கலாசார மத்திய நிலையம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தநிகழ்வில்உயர்கல்விமற்றும்கலாசார அலுவல்கள்அமைச்சர்விஜயதாசராஜபக்ச முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டு கலாசார மத்திய நிலையக் கட்ட டத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (21,8)

## மீண்டும்...

அலுவல்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

வவுனியாவில் பாரம்பரிய உற்பத்திகள் விற்பனை நிலையம் ஒன்று நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவரது உரை கடுந் தொனியில் இருந்ததாகப் பலரும் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது.

**பிரபாகரனின் போர்ராட்டம் தெற்கு மக்களுக்கு எதிரானதல்ல**

கடந்த காலங்களில் பிரபாகரன் தலைமையில் கிளர்ச்சிகள் இடம்பெற்றன. அவற்றைத் தென்னிலங்கையில் இருந்தவர்களுக்கு எதிரான கிளர்ச்சியாகக்கூற விரும்பவில்லை. கிளர்ச்சிகள் இனவாதக் கிளர்ச்சியாக தோற்றம் பெறக் காரணம் அப்போதைய அரசியல் தலைமையாக இருந்த அமிர்தலிங்கத்தின் கருத்துக்களே. அப்போதைய அரசியல் தலைவர்கள் தங்களது சமூகத்துக்குப் பொறுப்புக் கூறுவதோடு தமது சமூகத்தின் சுபீட்சத்துக்கு வழிசமைப்பதை விடுத்து பயங்கரவாத தலைவரான பிரபாகரனிடம் இதன் தலையெழுத்தை மாற்றுவதற்கான பொறுப்பை வழங்கியிருந்தனர். அதனால்தான் 30 வருடங்களாக இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது.

அமிர்தலிங்கத்தின் ஆசீர்வாதத்தோடு துப்பாக்கியை கையில் எடுத்த பிராபகரன் பேராபத்து மிக்க தலைமைத்துவத்தின் ஊடாக வடக்கு கிழக்கில் இருந்த பல அரசியல்வாதிகளினுடைய உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தன. அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தன. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் தாம் அடைய வேண்டிய இலக்குகளைத் தவற விட்டிருந்தார்கள்.

நாட்டில் சமாதானம் நிலவுகின்ற காலப்பகுதியில் தாய், தந்தை இறந்தால் பிள்ளைகள் அவர்களது உடல்களை மயானத்துக்கு எடுத்துச்சென்றிருந்தார்கள். ஆனால் போர் நடைபெற்ற காலப்பகுதியில் தாய், தந்தையர் தங்களது பிள்ளைகளினது உடல்களை மயானங்களுக்கு எடுத்துச்செல்கின்ற துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது. இவ்வாறான நிலமையின் தாக்கம் தற்போதும் காணப்படுகிறது. இந்த நிலமையை நாம் 24 மணி நேரத்திற்குள் மாற்றியமைக்க முடியாது. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 9 வருடங்கள் கடந்திருக்கின்ற நிலையில், எங்கள் ஒவ்வொருவருக்கும் பல்வேறுபட்ட பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரச நிர்வாகிகளாகவும் அரச பிரமுகர்களாகவும், இராணுவ தரப்பினராகவோ, பாதுகாப்பு தரப்பினராகவோ இருக்கலாம். அனைவரிடமும் கொடுக்கப்பட்ட பொறுப்பு சமாதானம், சகவாழ்வு, சுபீட்சம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதாகும்.

**ஊடகங்கள்**

நாங்கள் சமாதானத்தையும் சக வாழ்வையும் ஏற்படுத்துகின்ற நிலைமையில் ஊடகங்கள் அரசியல் பிளவுகளை ஏற்படுத்துகின்ற கருத்துக்களை தாங்கி வருகின்றன.

**மாகாண சபைகள் என்ன செய்தன?**

கொழும்பில் மாத்திரம் அதிகாரங்கள் இருக்க கூடாது என்பதற்காகவே மாகாணசபைகளை உருவாக்கியிருந்தோம். இன்று மாகாண சபையில் இருக்கின்றவர்கள் இந்த இலக்குகளை அடையும் நோக்கோடு இருக்கின்றார்களா என்பது கேள்விக்குறி. போரில் இன்னல்களைச் சந்தித்த மாகாணமாக வடக்கு மாகாணம் உள்ளது. ஆனால் இந்த மக்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் அபிவிருத்திக்கும் என்ன செய்தார்கள் என்பதைத் தெளிவாக காண முடியாதுள்ளது.

**பதவிகளைத் தக்கவைக்க குறைகூறுகின்றனர்**

தமது பதவிகளைத் தக்கவைப்பதற்காக மற்றவர்களைக் குறை கூறிக்கொண்டு அதற்கான வழிவகைகளை செய்து கொண்டிருக்கிறார்களே தவிர மக்களின் மேம்பாட்டுக்காக என்ன செய்கிறார்கள் என்பதை காண முடியவில்லை. வடபுலத்தில் உள்ள இளையோர் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது. போதை பொருள், சிகரெட் என்பனவற்றுக்கு ஆட்கொள்ளப்பட்டவர்களாகவே காணுகின்றோம்.

வடமாகாண முதலமைச்சர் தலைமையில் ஒருநிகழ்வு இடம்பெற்றிருந்தது. அதைதமிழ் மக்கள் தினம் என்று செய்திருந்தார்கள். இதனால் தென்னிலங்கையில் உள்ள மக்கள் விசனத்துக்கு ஆளாகியுள்ளதோடு குழப்ப நிலையை அடைந்திருக்கிறார்கள். இந்த நடவடிக்கை காரணமாக இராணுத்தினருக்கோ பாதுகாப்புப் படையினருக்கோ சிங்கள மக்களுக்கோ பல தவறான எண்ணப்பாடுகளை விதைக்கின்ற செயலாகவே அந்த நிகழ்வு அமைந்திருக்கின்றது என்பதனை நாம் காண்கின்றோம். இறுதி யுத்தத்தின் போது வெள்ளா முள்ளிவாய்க்காலில் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்களை பலிக்கடாக்களாக வைத்துக்கொண்டு பிரபாகரன் யுத்தத்தை நடத்தியிருந்தார்.

ஒருகாலத்தில் வடபுலத்தில் வாழ்ந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் 24 மணித்தியாலத்துக்குள் வெளியேற்றப்பட்டார்கள். இன்றய நிலையில் இந்தப்பிரதேசத்திலே வாழ்ந்து வரும் தமிழ், சிங்கள,முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள் என்றால் அதற்கு முப்படையினரே காரணம் என்பதை யாவரும் அறிவர்.

ராணுவம் அகற்றப்படவேண்டும் என்பதே விக்னேஸ்வரனின் பிரச்சினையாக உள்ளது. ராணுவத்தைப் பொறுத்தமட்டில் அந்த பிரதேச மக்களோடு நல்லுணர்வைப் பேணுவதுடன் அவர்களுக்கான பாதுகாப்பையும் வழங்கி வருகிறார்கள். இறுதிப் போரில் கூட 3 இலட்சம் மக்களை முப்படையினர் பாதுகாப்பாக மீட்டிருந்தனர் அதனாலே இன்று சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இருண்ட யுகம் வரலாம்**

தென்பகுதியில் இருந்த விக்னேஸ்வரன் போர்பிரதேசத்தில் காலடி எடுத்துக்கூட வைக்கவில்லை. அப்பாவி மக்களுக்காக ஒரு வசனம் கூட பேசவில்லை. எனவே முதலமைச்சர் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். அல்லாதுவிடில் மீண்டும் ஒரு இருண்ட யுகத்துக்கு நாம் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

பிரபாகரன் பிறந்த தினத்தை வடக்கில் கொண்டாடினால் சிங்கள மக்கள் அவரின் மரணதினத்தை தென்பகுதியில் கொண்டாடும் நிலையும் இருக்கிறது. அவ்வாறு இருக்கும்போது நல்லிணக்கத்தை எவ்வாறு கட்டமைப்பது? - என்றார். (4,110)

## விகாரை...

பிரேமதாச தெரிவித்தார்.

வவுனியா புளியங்குளம் பகுதியில் உள்ள பாரதி கோட்டம் மாதிரி வீட்டுத்திட்டத்தை நேற்றுத் திறந்து வைத்துக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னுடைய அமைச்சு ஒரு வித்தியாசமானது. எடுத்த காரியத்தை மிகவும் வேகமாக செய்வதில் எனது அமைச்சில் வேலை செய்பவர்கள்மிகவும்அர்ப்பணிப்பானவர்கள். அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்துக்கு முன்பாக நாடு முழுவதும் 2 ஆயிரத்து 500 மாதிரி கிராமங்களுக்கான அடிக்கற்களை நட்டுவிடுவோம் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

நாம் வீடுகளை மாத்திரம் வழங்கவில்லை. குடிதண்ணீர், மின்சாரம், வீதி போன்ற உட்கட்டுமான வசதிகள் என்பனவற்றையும் சேர்த்தே வழங்குகிறோம். போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேச மக்கள் தமது உடைமைகளையும், உறைவிடங்களையும் இழந்து நிர்க்கதியாகி அநாதரவாகக் காணப்பட்டார்கள். தற்போதைய சமாதான சூழ்நிலையிலே கூட்டிணைந்த அரசின் ஊடாக வீடுகளை வழங்குகிறோம்.

அரசியல் என்று பார்க்கும் போது பல பிரிவுகள் காணப்படுகிறன. அதிலே மக்களுக்கு பல வசதிகளையும் வேலைத்திட்டங்களையும் செய்பவர்கள் ஒரு விதம், மறுபுறம் எதுவுமே செய்யாமல் சோம்பேறித் தனமாக வீட்டிலே நித்திரை கொண்டு அரசியல் நடத்துபவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் தான் இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும், குலங்களுக்கிடையிலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தி விட்டு அதனை பார்த்துச் சந்தோசமடைகிறார்கள். மக்கள் மத்தியில் பிரபலம் அடைபவர்களாகவும் அவர்கள் தான் காணப்படுகிறார்கள். பொய்ப் பரப்புரைகளை முன்வைத்து மக்களை ஏமாற்றுபவர்களின் வார்த்தைகளை நம்பி விடாதீர்கள். அரசியலில் சரியான வேலைத்திட்டத்தை யார் ஏற்படுத்துகிறார்களோ உங்களின் கண்ணெதிரே உள்ள துக்கத்தை யார் துடைக்கிறார்களோ, அவர்களை மட்டுமே நீங்கள் தெரிவுசெய்து கொள்ளவேண்டும்.

சிலர் சிந்திக்கிறார்கள் வடக்கில் விகாரைகள் அமைக்கக் கூடாது தெற்கிலே இந்து ஆலயங்கள் அமைக்கப்பட கூடாது என்று. இப்படியானவர்கள் எங்களுக்கிடையில் இன,மத, வேறுபாட்டை உருவாக்குவதன் மூலமாக அவர்கள் சுகபோகங்களை அனுபவிக்கிறார்கள். வடக்கில் விகாரைகள் அமைத்தாலும் சரி தெற்கில் இந்து கோவில்கள் அமைத்தாலும் சரி அதனை தடுத்து நிறுத்துவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது என்பதை கூறிக்கொள்கிறேன்.

நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள், ஒற்றுமையான சகோதரத்துவம் மிக்க இந்த பூமியிலே சக்திமிக்கவர்களாக மாறவேண்டும். இதுவே இலங்கை நாட்டினுடைய பலம். அதன் மூலமே நாம் புதிய அபிவிருத்திப் பாதையை நோக்கி நகர முடியும். பொய் கூறி அரசியல் நடத்துபவர்களை நீங்கள் இனங்காணவேண்டும்.

வடக்கு மக்களின் எதிர்பார்ப்பு என்னவென்று நான் அறியவேண்டும். 2025 ஆம் ஆண்டளவிலே அனைவரும் வீடுகளைப் பெற்று வாழும் சூழலை நான் ஏற்படுத்திக் கொடுப்பேன் - என்றார். (4,110)

## வதிவிடப்...

ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹூசைனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

சந்திப்பு நேற்று இடம்பெற்றதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பணிமனை தமது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கம், பாதுகாப்பு, மனித உரிமைகளை ஊக்குவித்தல், சட்டத்தின் ஆட்சி என்பனவற்றுடன், பிராந்திய அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக டுவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்த 9 ஆவது ஆண்டு நிறைவில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. போரில் இடம்பெற்ற மீறல்களை விசாரிக்கும் நம்பகமான கலப்பு விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (4,5)

## பல்கலைகளுக்கு...

திப் பொருள்களின் விற்பனை நிலையத்தை நேற்றுத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியில் வளர்ச்சி கண்டிருந்த வன்னி மாணவ சமூகம் போரால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது. அவர்களது கல்வியும் முற்றாக இழக்கப்பட்டுள்ளது. வன்னிமாவட்ட மாணவர்களின் கல்வி மேம்பாடடைய கடினமாக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பெற்றோரை இழந்து, உறவுகளை இழந்து வாழ்வாதாரத்துக்கான வழிவகைகள் ஏதுமின்றி துன்பச்சுமைகளுடனேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. நாம் எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டுமாக இருந்தால்,எமது பிரதேச மாணவர்களின் கல்வியிலே முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த விடயங்களைக் கவனத்திற்கொண்டு எமது பிரதேசத்தில் வதியும் மாணவ,மாணவிகளின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்த உயர்கல்வி அமைச்சர் அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என்று நம்புகிறேன் - என்றார். (4,110)

## வீழ்ந்தது...

ஹவானா, மே 20

கியூபாவின் ஹவானா நகரில் இருந்து புறப்பட்ட வானூர்தியொன்று நேற்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 104 பேர் உயிரிழந்தனர்.

வானூர்தி சுமார் 36 ஆண்டுகளாகப் பாவனையில் இருந்து வருகிறது. காலம் கடந்த பாவனையே விபத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)


அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
LG Life's Good
LG DUALCOOL
Inverter Air Conditioner
தோற்றம் ஒன்றானாலும்,
வேற்றுப் பிறப்பாகும்!
எந்தவொரு சூழலிலும் வழக்கமான இன்வெர்ட்டர் வளிச்சீராக்கிகளை போலில்லாமல் LG DUALCOOL இன்வெர்ட்டர் வளிச்சீராக்கிகள் 40% வரையான அதிக குளிரூட்டலும், 60% ஆற்றல் சேமிப்பையும் உறுதிசெய்கிறது. LG DUALCOOL இன்வெர்ட்டர் வளிச்சீராக்கிகளை அபான்ஸில் மட்டுமே உங்களுக்கு பெற்றிட முடியும்.
LG DUALCOOL
இன்வெர்டர்
ஏனைய
இன்வெர்டர்கள்
60% மின் சேமிப்பு
நிலையான வேகத்தையுடைய வளிச்சீராக்கிகளை விடவும் 40% வரை விரைவான குளிர்ச்சி
40% வரை சத்தத்தை குறைக்கிறது
பாதுகாப்பு, நீடித்த ஆயுள், துரு பிடிக்காத கொப்பர் கண்டென்சர் அபான்ஸில் மட்டுமே
வளிச்சீராக்கியை கொள்வனவு செய்யும் போது மினி குளிரூட்டி இலவசம்!

| Capacity | 12000btu | 18000btu | 24000btu |
| --- | --- | --- | --- |
| Model No. | JS-Q126EAP8 | JS-Q1865AP7 | JS-Q2465AP7 |
| Price | Rs.109,990/- | Rs.136,990/- | Rs.159,990/- |
| Cash Discount | Rs.15,000/- | Rs.17,000/- | Rs.17,000/- |

விலைகள் மற்றும் சலுகைகள் 2018 மே 31ம் திகதிவரை மாத்திரமே செல்லுபடியாகும்.
*நிபந்தனைகள் உண்டு. இலவச பரிசுகள் சாதாரண விலைகளில் பணம் மூலம் கொள்வனவு செய்யும் போது மாத்திரமே வழங்கப்படும்.
0115999000
Abans.com
நாடளாவிய அபான்ஸ் /அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
லோயல்டி அட்டைகளுக்கு இன்றே விண்ணப்பியுங்கள்
Abans


LG Life's Good | XBOOM
பாதங்கள் நாட்டியமாடும் நாதம்
ரூ.10,000/-
நம்பமுடியாத விசேட தள்ளுபடி
PMPO 6,500w
USB playback
DM5540
ரூ.52,999
விசேட விலை ரூ. 42,999
வட்டியில்லா 15 கொடுப்பனவு
PMPO 2,600w
Portable In
Bluetooth
DM5360
ரூ.32,999
விசேட விலை ரூ. 24,999
வட்டியில்லா 12 கொடுப்பனவு
PMPO 9,000w
USB playback
Portable In
5.1 செனல் FM ரேடியோ
DM7630
ரூ.71,999
விசேட விலை ரூ. 61,999
வட்டியில்லா 15 கொடுப்பனவு
PMPO 32,500w
Bluetooth பார்டி லிங்க்
DJ Loop DJ Effects Sampler Creator
பார்டி திரஸ்டர்
CJ88
ரூ.112,999
விசேட விலை ரூ. 91,999
வட்டியில்லா 12 கொடுப்பனவு
PMPO 39,000w
மனுவல் DJ effects
Bluetooth
Portable In CD/MP3 FM ரேடியோ
ஸ்மார்ட் மற்றும் ஓடோ DJ
CJ98
ரூ.119,999
விசேட விலை ரூ. 99,999
வட்டியில்லா 15 கொடுப்பனவு
நிபந்தனைகள் உண்டு
0115999000
Abans.com
அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெறலாம்.
லோயல்டி அட்டைகளுக்கு இன்றே விண்ணப்பியுங்கள்
Abans

# மையச் செயற் குழுக் கூட்டத்தை விட்டு வெளியேறினார் சந்திரிகா!

## மைத்திரியின் கருத்தால் முரண்பாடு

கொழும்பு, மே 20
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஏற்பட்ட கருத்து மோதலை அடுத்து முன்னாள் அரச தலைவர் சந்திரிகா சுதந்திரக் கட்சியின் மையச்செயற்குழுக் கூட்டத்தில் இருந்து எழுந்து சென்றுள்ளார்.



2020ஆம் ஆண்டுவரை கூட்டு அரசில் இருப்பதற்கான அவசியம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிலருக்கு உள்ள போதிலும், சிறிலங்காசுதந்திரக்கட்சிகரைந்துபோயுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். சிறிலங்காசுதந்திரகட்சியின்மையச் செயற்குழுக் கூட்டத்தில் அரச தலைவர் இவ்வாறு கூறியமையினால் முன்னாள் அரச தலைவர் அங்கிருந்து எழுந்து சென்றுள்ளார். கூட்டு அரசிலிருந்து விலகுவதாக? இல்லையா? என்பது தொடர்பில் தற்போது கூட்டு அரசில் உள்ள 23 அமைச்சர்கள் உடனடியாகத் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அரச தலைவர் இந்தக் கூட்டத்தின் போது குறிப்பிட்டார். கூட்டு அரசில் அதிக காலம் செயற்படுவது அரசியல் ரீதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இலாபமில்லை எனவும், அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து ஒரு தீர்மானத்துக்கு வருவது முக்கியமாகும் என்று அரச தலைவர் மைத்திரிபால சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மக்களுக்கு இடையில் கொண்டு செல்லும் வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் எனவும், இது தொடர்பில் கட்சிக்காரர்கள் அதிக அவதானத்துடன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

# ராணுவ வெற்றி விழா நிறுத்தப்பட்டதை தமிழர் தரப்பு புரிந்து கொள்ளவேண்டும்

## கோரிக்கை விடுக்கிறார் அமைச்சர் மனோ

கொழும்பு, மே 20
ஆண்டுதோறும் போர் நிறைவுக்கு வந்த மே மாதத்தில் நாடு முழுக்க பதட்ட நிலைமையை ஏற்படுத்தி அரசியல் செய்வதை முடிவுக்கு கொண்டு வர இரு தரப்பிலும் பொறுப்புள்ளோர் ஆவன செய்ய வேண்டும். இதன் முதற்கட்டமாகவே, தெற்குத் தீவிரவாதிகளின் எதிர்ப்பின் மத்தியிலும், அதிகாரபூர்வ இராணுவ வெற்றி விழாவை எமது அரசு நிறுத்தியுள்ளது என்ற உண்மை தமிழ்த்தரப்பால் புரிந்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

அவரது உத்தியோகபூர்வ முகநூலில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

கொடிய போரில் உயிரிழந்த என் தாய்நாட்டு உறவுகளுக்கு என் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இறந்தோரில் கணிசமானோர் தமிழ்ப்புலிகள் என்று சிங்களம் சொல்வதை ஒருவாதத்துக்கு உண்மை என்று சொன்னாலும் கூட, அவர்கள் முதலில் இலங்கையர்கள். அவர்களது அன்னையர், தந்தையர், மனைவியர், உறவினர்களுக்குத் தம் இறந்த உறவுகளை நினைவு கூற (மனித) உரிமை உண்டு.

அந்தப் போர் இரு நாடுகளுக்கு இடையில் நடந்த போர் அல்ல. அடுத்தது, புலிகள் ஆயுதம் தூக்க ஆரம்பித்தது, அரசியல் நோக்கங்களுக்காக என்பதும், அதே மாதிரியான அரசியற் காரணங்களாலேயே தெற்கில் ஜேவிபியும் ஆயுதம்தூக்கியது என்பதும் அடிப்படை உண்மைகள்.

இரண்டு இயக்கங்களும் சட்டப்படி தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசுக்கு எதிராகவே ஆயுதம் தூக்கின. தெற்கில் அது 'கிளர்ச்சி' என்றும், வடக்கில் அது 'பயங்கரவாதம்' என்றும் சொல்லப்பட்டது. இதன்மூலம் அப்போதே இந்த இரட்டை அளவுகோல் பாரபட்சம் ஆரம்பமாகியது.

இரண்டு இயக்கங்களின் போராட்டங்களுக்கு எதிராகவும் தெற்கிலும், வடக்கிலும் அரசபயங்கரவாதம் நாடு முழுக்க, போர்க் களத்துக்கு வெளியேயும் தலை தூக்கி ஆடியது. (அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டவன் என்ற முறையில் அது எனக்கு நன்கு தெரியும்) ஜேவிபி தடை செய்யப்பட்டு, இன்று தடை நீக்கப்பட்ட ஒரு இயக்கம். புலிகள் மீதான தடை இன்னமும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நீக்கப்படவில்லை.

ஜேவிபி தன் உயிரிழந்த தோழர்களை முன்னிறுத்தி, மாவீரர் தினங்களை வருடத்துக்கு இரண்டுமுறை கொண்டாடுகிறது. இதே உரிமைகளைத் தமிழரும், புலிகள் இயக்கமும் பெற வேண்டும். இதற்காகத் தமிழ்ச் சமூகமும், புலிகள் இயக்கமும் என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி அரசியல்ரீதியாக யோசிக்கப்படவேண்டும் என்று பதிவிட்டுள்ளார். (5)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 05 . 1962

மறைவு 10 . 06 . 2016

### திருமதி புவனேஸ்வரி லோகநாதன்

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், உயிரியல் விஞ்ஞானத்துறை, பிரயோக விஞ்ஞான பீடம், வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம்.)

எல்லையற்ற அன்பின் வடிவமாய் - என் அருகில் நீ இருந்தாய் அன்று துணைவியாக,
உன் கருவிழிப்பார்வைக்குள் என்னை அடக்கியவளே,
நீ மறைந்தாலும் என்றும் மறையாத அன்பைக் காட்டிச் சென்றுவிட்டாய்
வதனத்தில் புன்னகைக் கொண்டு என்னுள் இன்றும் வாழும் புவனமே!
அன்பின் சின்னமாய் என்னை அரவணைத்து அறவழிப் பாதையில் வழி நடத்தினாய்
ஈராண்டாகிறது-உன் நினைவுகளை மட்டும் எனக்காய் தந்து,
உச்ச நினைவுகளாய் என்றும் உயிராய் வாழ்பவளே உன் அன்புக்கு நிகரான ஓர் அன்பு
இவ்வுலகில் எங்குமில்லை எனக்கு. நீ மறைந்து சென்றாலும் - என்னுள்
நிறைந்து நிற்கிறாய் இன்றும். ஜென்மங்கள் பல எடுத்தாலும்
என் மனைவி நீதான், உன் கணவன் நான் தான், இதுவே என் ஏக வேண்டுகோள் ஈஸ்வரனிடம்,
உதிரும் பூக்கள் எல்லாம் சருகாகிப் போய்விடாது உன் நாமத்தை நினைவுகூறும்,
தமிழ் இன மக்களுக்கான எம் பணி ஒவ்வொரு கணப்பொழுதும் விஸ்தரிக்கப்படும் என் மூச்சுள்ளவரை.

நீங்காத நினைவுகளுடன் என்றும்
உன் அன்புக் கணவன்
இ.லோகநாதன்

## தமிழின அழிப்புக்கு எதிராக

# கூட்டு நிலைப்பாட்டை வலுவாக்கும் தமிழர்கள்



கொழும்பு, மே 20
ஈழத்தமிழர்கள் மீதான இனவழிப்பு மற்றும் ஈழத் தமிழர்கள் ஒருதேசிய இனம் என்பவற்றை முன்னிறுத்தி கனடாவின் ஒட்டாவா கால்ட்டன் பல்கலைக் கழகத்தில் இரண்டாவது பன்னாட்டு மாநாடு அண்மையில் நடைபெற்றது. புலம்பெயர் அமைப்புக்களின் கூட்டுமுயற்சியில் உலகின் பலநாடுகளிலிருந்தும் அறிவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களை அழைத்து இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாநாட்டின் தொகுப்புக்கள் மற்றும் தீர்மானங்களுடன் மூன்றாம் நாள் கனேடிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இறுதி நிகழ்வு நடைபெற்றது.

2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம், காத்திரமான நடைமுறைகள் இன்றி இழுத்தடிக்கப்பட்டுவருவதும் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல், சித்திரவதைகள் கொலைகள் இன்னமும் தொடரும் நிலையிலும் இவற்றிற்கான நியாயத்தைக் கோருகிறது.

இவை அனைத்துமே இலங்கையில் தமிழ் மக்களுக்கான நியாயம் என்பது தமிழ் மக்களைத் தனித்துவமான இனமாக அங்கீகரிப்பதில் அமைந்தாலேயொழிய மாற்று வழியில்லை என்பதை மீளவும் நிறுவியிருக்கின்றது. இந்தச் சூழலில், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை மற்றும் இலங்கையில் தமிழர்கள் ஒரு தேசம் என்பவை முன்னிறுத்தப்படல் வேண்டும் என்பதன் அவசியத்திலேயே இந்த மாநாடு நடைபெற்றது. இந்த நிலைப்பாடுகளை அறிவியல் தளத்தில் ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்தி பன்னாட்டுச் சமூகத்திடம் முன்வைப்பதாகவும் மாநாடு அமைந்தது.

மாநாட்டின் முதலாம் நாள் பங்கேற்ற கல்வியாளர்களின் தலைமையில் குழுநிலை விவாதங்கள் நடைபெற்றன. இரண்டாம் நாள் குழுநிலை விவாதங்களுடன் பல சமநேர அமர்வுகளும் இடம்பெற்றன. மாநாட்டில் தாயகத்திலிருந்து காணொலி ஊடாகக் கல்வியாளர்களுடன் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். மாநாட்டின் கருப்பொருளை மையப்படுத்திய ஆவணப்படம் உள்பட கண்காட்சியும் இடம் பெற்றிருந்தது.

இந்த மாநாட்டில் இனப்படுகொலைக்குப் பன்னாட்டு விசாரணை வேண்டும் மற்றும் அரசியல் தீர்வுக் கோரிக்கை உள்ளிட்ட 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. (5)




# ஒப்பற்ற பொறியியல்நுட்பத்துக்கு நிகரற்ற விலைகள்




Hyundai இன் நவீன முதல் தர வாகனமொன்றின் உரிமையாளராவது தற்போது மேலும் இலகுவாக்கப்பட்டுள்ளது. உங்கள் தேவைக்கு பொருத்தமான பல்வேறு வாகனத்தெரிவுகளிலிருந்து, உங்களுக்கு பொருத்தமானதை தெரிவு செய்யுங்கள். இதில் சிறிய EON மற்றும் Grand i10 முதல் புரட்சிகரமான Ioniq Hybrid அல்லது அதிகளவு சக்தி வாய்ந்த SUV ஆன Creta ஆகியன அடங்கியுள்ளன.

**விசேட லீசிங் கட்டணங்கள்**
உங்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான மாற்றியமைக்கப்பட்ட லீசிங் கட்டணங்களை அனுபவியுங்கள்.

**விசேட குறைந்த விலை**
குறித்த மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்கு விசேட குறைந்த விலையில் உங்கள் Hyundai வாகனத்தை கொள்வனவு செய்யுங்கள்.

**விசேட வாகன பரிமாற்றல் கட்டணங்கள்**
உங்கள் பழைய வாகனத்தை எம்மிடம் ஒப்படைத்து, புதிய வாகனத்தின் மீது விசேட லீசிங் கட்டணத்தை பெறுங்கள்.

**விநியோக வலையமைப்பு:**
கம்பஹா - கண்டி - குருநாகல் - அம்பாறை - மட்டக்களப்பு - நீர்கொழும்பு - இரத்தினபுரி - மாத்தறை - காலி
அனுராதபுரம் - யாழ்ப்பாணம் - கொழும்பு (யூனியன் பிளேஸ்)

**Hyundai லங்கா (பிரைவட்) லிமிட்டெட்,**
1035, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல, இலங்கை
மின்னஞ்சல்: hyundaiauto@hyundailanka.lk

எமது தலைமையகம் அல்லது அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களிடம் விஜயம் செய்து பிரத்தியேகமான டெஸ்ட் டிரைவ் அனுபவத்தை பெறுங்கள்.
வாரநாட்களில் : மு.ப. 8:30 - பி.ப. 5:30
சனிக்கிழமைகளில்: மு.ப. 8:30 - பி.ப. 1:30

HYUNDAI
COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**விற்பனை ஹொட்லைன்: 0715 866 866**

எம்மை பின்தொடர்வதற்கு:
www.facebook.com/HyundaiLanka
www.twitter.com/hyundai_lanka
www.instagram.com/hyundailanka

Hyundai Lanka Foundation
விற்பனையாகும் ஒவ்வொரு Hyundai வாகனத்துக்கும், Hyundai லங்கா மையத்தினூடாக, SOS சிறுவர் கிராமத்துக்கு ரூ. 10,000 நன்கொடையாக வழங்கப்படுகிறது.




# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்) விளம்பி வருஷ மஹோற்சவ சிறப்புமலர் - 20.05.2018

கொடியேற்றம் : 20.05.2018 | தேர்த்திருவிழா: 28.05.2018 | தீர்த்தத்திருவிழா: 29.05.2018

### பிரதம குருவின் ஆசியுரை

எல்லாம்வல்ல கஜவல்லி, மகா வல்லி சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி பாதார விந் தங்களை வணங்கி எம்பெருமானின் மஹோற்சவம் தொடர்பான சிறப்பிதழுக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்வடைகின் றேன்.

கொக்குவில் பதியில் பழமையும் புதுமை யும் வாய்ந்த முருகப்பெருமானாக வீற்றி ருந்து அடியவர் துயர் தீர்க்கும் தெய்வ மாக விளங்குகின்றார்.

எங்கள் சிவசுப்பிரமணியப் பெருமானின் அருள் கிடைக்கவும், மஹோற்சவத்தின் பயன்கள் அடியவர்களுக்குக் கிடைக்கவும் இறையருளை வேண்டி எல்லோரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாழ்த்தி எனது நல்லாசிகளை வழங்கு கின்றேன்.

சிவாகம கிரியா தத்துவநிதி
சிவாச்சார்ய மணி
சிவஸ்ரீ க. சிவதாசக் குருக்கள்
(ஆலய பிரதம குரு)

### கந்தபுராண கலாசாரம் பேணும் புதுக் கோயில்

கொக்குவில் வாழ் மக்களுக் கும், கல்லூரி மாணவர்களுக் கும் அருள்பாலித்து வரும் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் பாதக் கமலங்களை முதற்கண் வணங்குகின் றேன்.

எம்பெருமான் ஆலயத்தில் சிவாச்சாரிய ராக இருந்து பணியாற்றக் கிடைத்த பேற்றினை எண்ணி அகமிக மகிழ்கின் றேன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலந் தொட்டே மடாலயமாக விளங்கிப் பின்னர் ஆலயமாகத் திகழ்கின்றது. மேலும் யாழ்ப் பாண கலாசாரமான கந்தபுராண கலா சாரத்தினைப் பேணி வருகின்ற கீர்த்தியும் கொண்டது. 2018 விளம்பி வருஷ மஹோற்சவம் சிறக்கவும், மஹோற்சவ பலன்கள் நாட்டிற்குக் கிடைக்கவும் எம் பெருமானை வேண்டி ஆசி வழங்குகின் றேன்.

கிரியாரத்னம்
சிவஸ்ரீ சி. சிவசுப்பிரமணியக் குருக்கள்

### ஆலயத்தின் சமூகத் தொண்டு

இந்த மஹோற்சவ சிறப்பிதழுக்கு வாழ்த் துரை வழங்க வாய்ப்பு அளித்த ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமி யையும் பரிவார மூர்த்திகளையும் மனத்திருத்தி வணங்குகின்றேன்.

இவ் வாலயம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்து காணப்படு கின்றது. 1940 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொக்கு வில் இந்துக் கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் இன்றித் தவித்த வேளையில் இவ் ஆலய வீதியினை மாணவரின் உடற்பயிற்சித் தேவைகளுக்கு இவ் வாலயப் பரிபாலன சபையினர் வழங்கியிருந்தனர். இத்துடன் கல்லூரி மாணவர்களுக்கு வழிபாட்டுக் குரிய பொருத்தமான இடம் இல்லாத நிலையில் ஆலய உள் மண்டபத்தினை வழிபாட்டுக்கு வழி சமைத்துக் கொடுத்ததுடன் வெள்ளிக்கிழமை தோறும் மாணவர் களால் சிவபுராணமும் ஓதப் பட்டது. இத்தகு சிறப்பு வாய்ந்த ஆலயத்தின் மஹோற் சவம் சிறக்க இறையருள் வேண்டி வாழ்த்து கின்றேன்.

அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர்)
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,

### அருளமுதம் பெறுவோமாக

எமது கல்லூரியின் வடபகுதி, தென்பகுதி வகுப்பறைகளுக்கு நடுநாயகமாக வீற்றி ருந்து கலைக் கோயிலாகிய எமது கல்லூரிக்கு ஆன் மீகப் பொலிவினை பிரவகித்து நிற்கும் கொக்கூர்பதி அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளது அருளாசியின் பிரவாகமானது எமக்குக் கிடைத்த பேறாகக் கருதுகின்றோம். இன்று கொடியேற்றத்துடன் பெருந் திருவிழாக்காணும் அழகனின் தோற்றப் பொலிவும், அவன் வள்ளி, தெய்வானை சமேதரராக வீதியுலா வந்து அருள் கொடுக்கும் அழகும் அதனைக் கண்கோடி கண்டு மனமுருகிப் பரவசத்துடன் தொழுது நிற்கும் அடியவர்களது காட்சியும் எமது கிராமத்தின் முதுசொம்களில் ஒன்றாகும். ஆன்மீகம் என்கின்ற அடிநாதமும் அதில் மாணவர்கள் மூழ்கி முத்தெடுக்க கிடைத்த சந்தர்ப்பமும் கல்லூரிக் காலமதில் நினை வழியாப் பதிவுளாகும். திருவருளும் குருவருளும் கூடி ஆசித்து நிற்கும் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிர மணிய சுவாமிகளின் பெருந்திருவிழாக்காணத் திரண்டு வந்து அருளமுதம் பெறுவோமாக!

ம.ஞானசம்பந்தன் (அதிபர்)
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**சித்தா**
றெஜிபோம் டிசைன்
இல.49A, அச்சக லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
T.P: 075 544 5901

**V.இரகுநாத ஐயர்**
சகல அச்சகவேலைகளும்
செய்து கொடுக்கப்படும்.
சோதிட பிரகாச அச்சகம்
கொக்குவில்.

**சரஸ்வதி**
அரைக்கும் ஆலை
சரஸ்வதி தயாரிப்புக்கள்:
வறுத்த அரிசி மா, சத்து மா, மிளகாய்த் தூள், ஒடியல் மா, குரக்கன் மா, புழுக்கொடியல் மா, ஆட்டா மா, கோப்பித்தூள், மல்லிக் கோப்பி.
72, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.
தொ.பே: 021 222 3105

**செல்வா பலஸ்**
திருமண மண்டபம்
அனைத்து விசேட வைபவங்களுக்கும்
திருமணம்/ பிறந்தநாள்/ பூப்புனித நீராட்டு விழா/ ஒன்றுகூடல் மற்றும் அனைத்து வைபவங்களுக்குமான மண்டப வசதி
இல. 10, 12, பூநாரி மரத்தடி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8123 / 077 805 1823
Chelvapalace2017@gmail.com
www.chelvagroups.com

**Honey Bunny Tees**
அனைத்து விதமான ரீசேட்களுக்கும் மற்றும் அன்பளிப்பு பொருள்களுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்
Honey Bunny
தொடர்புகளுக்கு:
www.honeybunnytees.com
www.facebook.com/honeybunnytees
076 312 2030

**அபி**
பேக் கவுஸ்
205,
K.K.S.Road,
Kulapiddy.

சகலவிதமான பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள
**கணேசன்**
புத்தகசாலை
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி,
T.P: 021 222 2585

**அபி**
முறுக்கு
ABII Murukku
இல.7/2, கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

**SRI Kuganantha Bavan**
K.K.S.Road,
Kokuvil Junction,
Jaffna.
Tel: 077 906 3036/
021 320 7953

**பாக்யா**
காகிதாதிகள்
121, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
021 321 8382

தரமான பாதணிகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள..
**சந்தியா**
சூ பலஸ்
கொக்குவில் சந்தி,
K.K.S. றோட்.

**Family**
Medical Centre
Kokuvil Junction,
Kokuvil, Jaffna.

**தனு**
ஸ்ரூடியோ அன் வீடியோ
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி,
T.P: 075 727 8707,
077 6569 831

**ஷைலோ**
ஐஸ்கிறீம் தயாரிப்புக்கள்
விசேட வைபவங்களுக்குத் தேவையான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
077 979 8053

**பூப்பந்தல் சேவை**
பல வருடகால அனுபவம் வாய்ந்தவர்களினால் நடத்தப்படும் தரமான பூப்பந்தல் சேவைக்கு
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.
T.P: 077 8691 461

**சரஸ்வதி** திருமண மண்டபம் (ராஜா கிறீம் கவுஸ்)
- யாழ். நகரில் மிகப் பிரமாண்டமான மண்டபம்
- நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை
- இரண்டு விருந்துபசார மண்டப வசதி
- எல்லா மதத்தினருக்கும் விரும்பிய நிறத்திற்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரம்
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/c) வசதி



ஹம்சிகா மஹால்
(500பேர் இருக்கை வசதி)
புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம்

**ஹம்சிகா மஹால்**
ராஜா கிறீம் கவுஸ்
37, சேர் பொன் இராமநாதன் வீதி,
(நாச்சிமார் கோயிலுக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
தொ.பே:021 320 7369 / 077 923 4176

# Recharge TRAVELS
"The best way to see Sri Lanka!"

## உங்களை நாடி வரும் உறவுகளின் பாதுகாப்பான, சொகுசான பயணத்திற்கு நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்! ரீசார்ச் ட்ரவல்ஸ் மட்டுமே

# 07777 21 999

## யாழிலிருந்து கொழும்பிற்கு ஒருவழிக் கட்டணம்

CAR 15,000/=

KDH VAN 20,000/=

HIGH ROOF 25,000/=

MINI BUS 30,000/=



## பாதுகாப்பான சொகுசான பயணத்திற்கு நாடுங்கள்

sri lanka — SRI LANKA TOURISM APPROVED

2017 CERTIFICATE of EXCELLENCE tripadvisor

*Budget Taxi *City Transfer *Airport Transfer *Wedding Car *Jaffna Day Tour

இலங்கை அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

# 21 437 9999

24x7 Customer Support Hours

| HEAD OFFICE | 24 HRS BOOKING | OPERATION | BRANCH |
|---|---|---|---|
| 68, Lorenz Road, Bambalapitiya Colombo-04. | 103, W.A. Silva Mawatha, Wellawatte Colombo-06. | 825/1, Munidasa Kumaratunga Mw, Katunayake. | 1st floor, Cargills square Jaffna |




Ministry of Skills Development and Vocational Training

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

In cooperation with

# மாபெரும் தொழிற்சந்தை

## கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவகம் (SLGTI)

ஜேர்மனிய சர்வதேச கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்படும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் தொழிற்பயிற்சி (GIZ-VTN) எனும் செயற்திட்டமானது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் இளைஞர் யுவதிகளை தேசிய மற்றும் சர்வதேச வேலை வாய்ப்பு சந்தைகளில் நிலைநிறுத்தி கொள்வதற்கான திறன்களை பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. அது மட்டுமன்றி இளைஞர் யுவதிகளை தொழிற்சந்தையுடன் இணைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் மே மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவகத்தில் (SLGTI), ஒரு தொழிற்சந்தையானது இலங்கையிலுள்ள முதற்தர தனியார் கம்பனிகளுடன் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சந்தையில் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் கல்வி கற்ற மாணவர்கள் வருகை தந்து அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Implemented by giz

NATIONAL APPRENTICE AND INDUSTRIAL TRAINING ATHORITY

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

# பதவி வெற்றிடங்கள்

## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமமானது பெற்றோர்களை இழந்த, பெற்றோரால் கைவிடப்பட்ட, கைவிடப்படும் ஆபத்தான நிலையிலுள்ள சிறுவர்களை குடும்ப சூழலில் பூரண பாதுகாப்புடன் கூடிய பராமரிப்பு, கல்வி, மருத்துவ சேவைகளை வழங்கும் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் 134 நாடுகளிலுள்ள இலங்கையில் 36 வருடங்களாகவும் சேவையை வழங்கி வருகின்ற ஓர் சர்வதேச அரச, மத சார்பற்ற அமைப்பாகும்.

**பதவி வெற்றிடங்கள்**

**1. அன்னை (28 - 45 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம், நுவரெலியா**

**தகைமை**

- திருமணமாகாத, ஆகியிருப்பின் விதவையான/விவாகரத்து பெற்றிருப்பதோடு தனக்கென பிள்ளைகள் கொண்டிராதிருப்பதோடு குடும்பச்சுமைகள்/ பொறுப்புக்களற்றவராகவும், சிறுவர்களுக்கான அன்பு ஆதரவளித்து நல்வழி காட்டும் பொருட்டு நற்தேகாரோக்கியமும் நற்பண்புகளையும் கொண்டுள்ளவராகவும், எழுத்தறிவாற்றலுள்ளவராக இருத்தல்.

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர்/ இப்பதவிக்கு நீங்கள் பொருத்தமானவர் எனக் கருதும் பட்சத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2. முன் பள்ளி ஆசிரியை (30 வயதிற்கு உட்பட்ட பெண்) - யாழ்ப்பாணம்**

**தகைமை**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்தது முன்பள்ளிக்கற்கை நெறியில் Diploma சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

மேற்குறிப்பிட்டுள்ள பதவிக்கான விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 31.05.2018 வியாழக்கிழமைக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

*சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.*

தொடர்புகளுக்கு:
எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,
இல:219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பேசி: 021-2211101
077-3733711

SANGAMAM

# சங்கமம் வயலின் வாத்தியக் கலையகம் நடாத்தும்

# சங்கமம் 2018

பிரதம விருந்தினர்
வயலின் வித்துவான்
கலைமாமணி
V.R கிருஷ்ணன்

## 06ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இசை நிகழ்வும்

இடம் : கைலாசபதி கலையரங்கு - யாழ். பல்கலைக்கழகம்
காலம் : 26.05.2018 சனிக்கிழமை மாலை 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## கல்வி

**திவ்யா கலைக்கூடம் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கற்கைநெறி (டிப்ளோமா) நெறியை** தமிழ்மொழி மூலம் கற்க விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
(க.பொ.த. சா/தர) சித்தி உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**ஆரம்பம் - 26.05.2018**
**(கிழமை நாள்களில்)**

தொடர்பு:-
351 - 7A -1/1 Galle Road, Wellawatte,
Colombo - 06,
T.P: 011 250 4218, 077 941 5686,
234, K.K.S.Road, Chunnakam, Jaffna.
கொழும்பில் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படுகின்றது.

**ஆசிரியர் :- து. அருந்ததி**

## வீடு விற்பனைக்கு

யாழ்.கரணவாய் கிழக்கில், சிறந்த அமை விடத்தில், ஆறு அறைகளுடனான வீட்டுடனும், பயன்தரு மரங்களுடனும், நான்கு பரப்பு காணி உறுதியுடன் விற்பனைக்குண்டு. மேலும் சில காணிகளும் விற்பனைக்குண்டு.

**077 656 3871, 077 078 5654**

## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் வீதியில் வைத்தீஸ்வரா சந்தியில் கடையுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. (IN 6763) (14.17)

**077 146 7050**

## ஆடு விற்பனைக்கு

யமுனா பாரி, சணல் கிடாய், மறி ஆடுகள் மற்றும் வேப்பம் விறகும் விற்பனைக்குண்டு. (CS 16720) (14.17)

**076 840 4112/077 526 7844**

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் (சாரதியுடன்)**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சேவையாற்றும் பொருட்டு மாதாந்த வாடகை அடிப்படையில் பயணிகளையும், பொருள்களையும் ஏற்றிச் செல்வதற்காக இரட்டைவளிச் சீராக்கல் வசதிகளுடன் கூடிய 8 -10 இருக்கைகளைக் கொண்ட வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பணமாக ரூ.1000.00 இனையும், மீளளிக்கப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 500.00 இனையும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் 21.05.2018 முதல் 07.06.2018 பிற்பகல் 2.00 மணிவரை கொக்குவில், பிறவுண்வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் கேள்விமனுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுப் பத்திரம் இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விமனுப்பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மூலையில் "யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திற்கு போக்குவரத்து சேவையினை வழங்குவதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 2018.06.08 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகக் கிளை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நுகேகொட, நாவல இல் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பொதுநிர்வாகக் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்வி மனுப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் அன்றையதினம் பி.ப 2.00 மணிக்கு பதிவாளர் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி கலந்து கொள்ளலாம்.

**பதிவாளர்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**நாவல, நுகேகொட.**
**20.05.2018** (IN 6788) (14.17)

## வாடகை

நல்லூர் சூழலில் 3 அறைகள் (இணைந்த குளியலறை) வாகனத் தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு உண்டு.

**077 307 3605** (ACO/236) (11.17)

## வேலையாள்கள் தேவை

எரிபொருள் நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புநர் (ஆண்), கணக்குப் பதிவாளர் (பெண்) தேவை.

**075 918 7967** (CS/16736) (11.17)

## தேங்காய் மட்டை தேவை

தேங்காய் மட்டை (பொச்சு மட்டை) தேவை. உங்கள் இடத்திற்கு வந்துகொள்முதல் செய்யப்படும்.

**077 654 4428**

## Q.S.தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள இத்துறையில் சிறப்பு தேர்ச்சியுள்ள கணிய அளவையாளர் (Q.S) தேவை. தகைமை உடையோர் தொடர்புகொள்ளவும்.

076 316 5734 / 077 592 5371
Email - careers@decon.lk

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சுப்பிரமணிய வீதி, கொட்டடியில் 4 பரப்புக்காணி, கிணறு, சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.

**076 363 4887** (CS/16710) (11.17)

## SALE

Nissan Trad Sunny
A/W A/C 1989 P/S
Body 100% Engine 100%
Quick SALE DIESEL 64 (CS 16695) (14.17)

**076 664 4125**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1978, கிரகபாவம் 23, பூராட நட்சத்திரம், சொந்தமாக கடை நடத்தும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 383 4296**

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி ஸ்ரேசன் வீதியில் (பிரதேச சபை முன்) மூன்று கடைகள் வாடகைக்கு உண்டு. (CS 16741) (14.17)

**077 633 0288**

## காணி விற்பனைக்கு

கேணியடி ஒழுங்கை கொக்குவில் மேற்கில் நிலப்பரப்பு 2 குழி 16.80 அளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

**075 069 9599**

## தேவை

கடையில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தங்குமிட வசதி செய்து தரப்படும்.
தோட்ட வேலைக்கு ஆண்கள் தேவை. (CS/16750)(11.17)

**077 223 0950**

## சணல் ஆடுகள் விற்பனை

சணல் கிடாய்கள், மறி ஆடுகள் விற்பனைக்கு உண்டு.

**077 101 6407**

## தேவை

கொத்துமேக்கர்
கொத்து வேலை தெரிந்த சமையல்காரர் தேவை.
**கலிபோர்னியா ரெஸ்டோரண்ட்**
மருதனார் மடம்

**076 852 4004/ 075 034 1811**

## வீடு வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழக சூழலில் கந்தர்மடத்தில் சகல வசதிகளுடனும் கூடிய மூன்று அறைகளைக் . கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**077 646 6236, 077 376 9002**

## குடிநீர் விநியோகம்

போத்தலில் அடைத்த சுத்தமான குடிநீர் (**Nature Green**) உங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து நியாய விலையில் தரப்படும்.

**077 254 3253** (CS/16722) (11.17)

## மணமகன் தேவை

32 வயது RC பெண்ணுக்கு, BSc பட்டதாரி, விரிவுரையாளர் (ஆஸ்பத்திரி தாதிகளுக்கு) மணமகளுக்கு பட்டதாரி அரச உத்தியோகம் உள்ளூர் அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை.

**077 945 7183**

## காணி விற்பனைக்கு

உடுவில் பாடசாலைக்கு அருகில் உள்ள ஆர்க் ஒழுங்கையில் 1½ பரப்புக் காணி வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு.

**077 153 5762** (CS/16733) (11.17)

## தேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் ஓடும் லொறி ஒன்றுக்கு வாகன உதவியாளர் (Cleaner) தேவை.
வயதெல்லை (18 - 30)

**076 376 0022/ 076 690 8976**

## பணியாளர் தேவை

**சுஜித் எண்டப்பிரஸ்சஸ்**
நுணாவில், சாவகச்சேரி.
எமது நிறுவனத்தில் பணிபுரிய ஆண், பெண் அலுவலக உதவியாளர்கள் தேவை.

**077 904 1258, 021 227 0586**

## பாதுகாப்பு ஊழியர் தேவை

வவுனியா, கண்டிவீதியிலுள்ள பிரபல்யமான வங்கி ஒன்றுக்கு பாதுகாப்பு ஊழியர் (ஆண்) உடன் தேவை. வயது 30 -45 எதிர்வரும்
**24.05.2018 வியாழக்கிழமை**
முற்பகல் 10 - 12 மணிக்கு
**இலக்கம் 234 கண்டி வீதி,**
**வவுனியா**
எனும் முகவரிக்கு ஆவணங்களுடன் சமுகமளிக்கவும். (00340)(14.17)

செலிங்கோ லைஃப்
இடமிருந்து



30 நாட்களுக்குள் 30 வருடங்களுக்கான ஆறுதல்

உங்கள் ஓய்வு கால வாழ்க்கையை நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் கழித்திட, 30 நாட்களில் 30 வருடங்களுக்கான திட்டமொன்றை செலிங்கோ லைஃப் ஓய்வுகால திட்டம் மூலம் வடிவமைத்துக்கொள்ளுங்கள்.

செலிங்கோ லைஃப் ஓய்வு கால திட்டத்தை கொள்வனவு செய்யும் காப்புறுதிதாரர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாக்கள், நட்சத்திர ஹோட்டலில் தங்கும் வசதிகள் மற்றும் சொகுசு கப்பல் சுற்றுலா ஆகிய நலன்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பை வெல்ல முடியும்.
**இத்திட்டத்தைப் பெற்று 1ம் வருடத்திலேயே அதற்குரிய பணப்பெறுமதியை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஓய்வுக்கால திட்டம் இதுவாகும்.**
நீங்களும் இன்றே செலிங்கோ லைஃப் ஓய்வு கால திட்டத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.
அழையுங்கள் 0112 461 461 அல்லது பிரவேசியுங்கள் www.ceylincolife.com.

தொடர்ச்சியாக 12 வருடங்களாக மக்கள் அபிமானம் பெற்ற காப்புறுதி நிறுவனம்
செலிங்கோ லைஃப் காப்புறுதி நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. (PB5183)

PHOENIX O&M



CEYLINCO LIFE®
வாழ்க்கைக்கான நிரந்தர உறவு™

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 03 . 1927

மறைவு 31 . 05 . 2017

## திருமதி மகேஸ்வரி சங்கரப்பிள்ளை

திதி - ஷஷ்டி (20.05.2018)

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அம்மாவே !
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு மறையாது அம்மா !
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் பாசமுடன் நினைவு உரும்

இல.160, பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்.

(CS16570) (4.17)

071 621 5902 / 021 221 3641

# கண்ணீர் அஞ்சலி



பிரதி பிரதம செயலாளர், நிர்வாகம் பணிமனையில்
தொழில்நுட்ப சேவை விடய முகாமைத்துவ
உதவியாளராகப் பணியாற்றிய

## கோபாலபிள்ளை குகன்

கடமையில் அகாலமரணம் அடைந்ததையிட்டு
துயருற்றிருப்போருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திகின்றோம்

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
வடமாகாணம்

(cs16785)(13.17)

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprinters@gmail.com
450/=

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05.10.1940

உதிர்வு 30.05.2017

## திருமதி தங்கரத்தினம் தியாகராஜா (மணி)

திதி: 20.05.2018

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எமைவிட்டு சென்றதேனோ
கருணை நிறைந்த உங்கள் முகம் காண கவலையுடன் தேடுகின்றோம்
இறையடி தொண்டு செய்தல் தானோ...!
இறைவன் தங்களை தன்னோடு கொண்டு சென்றான்
துயர் உற்ற வேளையில் எம்துயர் துடைத்தீர்கள்
இன்று எங்களை துயர் பகிர்வோடு எம்மோடு தாயே! நீங்கள் இல்லை......!
ஆண்டொன்று ஆனதம்மா உங்கள் அரவணைப்பை நாங்கள் இழந்து
அம்மா உங்கள் நீங்காத நினைவலைகளுடன் இறைவனைக் கேட்கின்றோம்
கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒருமுறை கருவறை தந்தால்
எம் அன்னையின் வயிற்றில் உதிக்கும் வரத்தை தந்திடுவாய்

18, கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(cs.16709) (13.17)

உங்கள் பிரிவால் துயருறும்
தியாகராஜா - குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 05 . 03 . 1954

இறைவன் அடியில் 17 . 05 . 2018

## கிருஷ்ணபிள்ளை சண்முகராஜா

(கண்டி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், தொழில் அதிபர், மாத்தளை)

வடமராட்சி, பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சண்முகராஜா 17.05.2018 வியாழக்கிழமை அகால மரணமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் இந்திராணி தம்பதியரின் அன்பு மருமகனும், வனஜாவின் பாசமிகு கணவரும், கஜாயினி, திருச்செந்தூரன், சரணியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி, செல்வநாதன், இலங்காவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜதுரை, புஸ்பநாதன், சுஜாதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிறைஞ்சன், ஸ்ரீபாஸ்கரன், நிரோஜன், ராகினி, அபிராமி ஆகியோரின் அன்பு மாமனும், அனிஷ்கா, அஷ்விகா, அஜிஷன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாத்தளை களுதாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வதிரிச் சந்தி
கரவெட்டி.

சண்முகம், சுப்பிரமணியம்
(மகான், மாமனார்)

(cs16590)(13.17)

077 023 7630

# மரண அறிவித்தல்



மண்ணில் 26 . 01 . 1947

விண்ணில் 18 . 05 . 2018

## திருமதி தியாகேஸ்வரி நித்தியானந்தன்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகேஸ்வரி நித்தியானந்தன் 18.05.2018 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நித்தியானந்தனின் அருமை மனைவியும் காலஞ்சென்ற அரியநாயகம் - மகேஸ்வரி தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்றவர்களான ஆனந்தநடராஜா, ஆனந்தலட்சுமி, தங்கரத்தினம், நடேசன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் கிர்த்திகா, சுஞ்சுதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சர்வினின் அம்மம்மாவும் சுதாகர், மயூறினி, இந்திரபகவான் ஆகியோரின் மாமியும் சுஜித்தாவின் சிறிய தாயாரும் குருபாலசிங்கம் நிர்மலா, ஜீவமலர், மகேஸ்வரலிங்கம், இராசரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் ஹேமதிவ்வியம், கோபிசன், லோகிசன், ஹேனுசா, டர்னிஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17/9, அம்மன் வீதி,
திருநெல்வேலி. 077 555 2998

தகவல்:
குடும்பத்தினர்.




# ரஷ்யாவில் ரம்மியமாக அரங்கேறுகிறது கால்பந்து உலகக்கிண்ணம்



விளையாட்டு

பிரகாஸ்



உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான பன்னாட்டு உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதி முதல் ஜூலை 15ஆம் திகதி வரை ரஷ்யாவில் நடைபெறுகிறது. 12 ஆண்டுகளுக்கு பிறகு ஐரோப்பிய கண்டத்தில் உலகக் கிண்ணத் தொடர் நடைபெறுகிறது. கடைசியாக 2006ஆம் ஆண்டு ஜெர்மனி உலகக் கிண்ணத் தொடரைச் சிறப்பாக நடத்தியிருந்தது. தற்போது முதன்முறையாக கிழக்கு ஐரோப்பியாவில் அமைக்கப்பட்டுள்ள மைதானங்களில் ஆட்டங்கள் நடத்தப்பட உள்ளன. அணிகளின் பயண நேரத்தைச் சமாளிக்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ரஷ்யாவில் முதல்தடவை**

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரை ரஷ்யா நடத்துவது இதுவே முதன்முறை. போட்டியை நடத்தும் உரிமை பெற்ற நாடு என்பதால் ரஷ்யா நேரடியாக உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது. மற்ற 31 அணிகளும் தகுதி சுற்றின் வாயிலாகவே தேர்வாகி உள்ளன. இந்த 32 அணிகளில் நடப்புச் சம்பியனான ஜெர்மனி உள்ளிட்ட 20 அணிகள் கடந்த 2014ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரிலும் மற்றும் அதற்கு முந்தைய தொடர்களிலும் களமிறங்கி உள்ளன. ஐஸ்லாந்து மற்றும் பனாமா அணிகள் முதன்முறையாக விளையாடத் தகுதி பெற்றுள்ளன. மொத்தம் 64 ஆட்டங்கள் 11 நகரங்களில் உள்ள 12 மைதானங்களில் நடைபெறவுள்ளன. இறுதியாட்டம் ஜூலை 15ஆம் திகதி மொஸ்கோவில் உள்ள லுஸ்னிக்கி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த மைதானத்தில் 81ஆயிரம் ரசிகர்கள் அமர்ந்திருக்கலாம். 2018ஆம் ஆண்டு உலக் கிண்ணத் தொடரை நடத்துவதற்கான உரிமையை வழங்குதற்கான நடைமுறைகளை 2009ஆம் ஆண்டு ஆண்டு ஜனவரியில் தொடங்கியது பன்னாட்டு கால்பந்து சம்மேளனம். இந்தத் திருவிழாவை நடத்துவதற்கான உரிமையை பெறுவதற்காக தொடக்கத்தில் 9 நாடுகள் போட்டியிட்டன. ஆனால் தொடக்க நிலையிலேயே மெக்சிக்கோ விலகிக் கொண்டது. தொடர்ந்து இந்தோனேசியாவின் விண்ணப்பத்தை பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனம் நிராகரித்தது.

உரிமம் வழங்குவற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் ஐரோப்பிய கால்பந்து சங்க கூட்டமைப்புகளை சேராத ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளும் பின்வாங்கின. இதனால் இறுதிகட்டத்தில் 4 நாடுகள் மட்டுமே இருந்தன. இதில் இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் தனித்தனியாக போட்டியை நடத்த உரிமம் கோரிய நிலையில் நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகள் இணைந்தும், போர்த்துக்கல் மற்றும் ஸ்பெய்ன் நாடுகள் இணைந்தும் போட்டியை நடத்த உரிமம் கோரின. இதைத் தொடர்ந்து 2010ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி சூரிச் நகரில் வாக்கெடுப்பு நடைபெற்றது. முதல் சுற்றில் 9 வாக்குகளும், 2ஆவது சுற்றில் 13 வாக்குகளும் பெற்ற ரஷ்யா போட்டியை நடத்தும் உரிமை பெற்றது. உலகக்கிண்ணத்தை நடத்தும் உரிமையை ரஷ்யா பெற்றதிலும் சர்ச்சை இல்லாமல் இல்லை. அந்த நாட்டுக்கு ஆதரவாக ஒட்டளிக்க செயற்குழுவில் உள்ள பிபா உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டதாக இங்கிலாந்து பகிரங்கமாக குற்றம் சாட்டியது. ரஷ்யாவுக்கு போட்டியை நடத்தும் உரிமையை வழங்குவது என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருந்ததாகவும் முறைப்பாடு தெரிவித்தது. ஆனால் இவை அனைத்துக்கும் எவ்வித ஆதாரமும் இல்லை என பின்னர் பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்தது.

**மைதானச் செலவுக்காக 80ஆயிரம் கோடி செலவு**

உலகக்கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் மொஸ்கோ லூஸ்னிக்கி, ஸ்பார்டக், செயின்ட் பீட்டர்ஸ்பர்க், சோச்சி, சமரா கோஸ்மோஸ், ரோஸ்டவ், நிஷ்னி நோவ்கோரோட், சரன்ஸ்க், யெகாடெரின்பர்க், கலினின்கிராட், வோல்கோகிராட், கசான் ஆகிய 12 மைதானங்களில் நடைபெறுகிறது. இதில் லூஸ்னிக்கி, யெகாடெரின்பர்க், சோச்சி ஆகிய மைதானங்கள் சீரமைக்கப்பட்டவையாகும். மற்ற 9 மைதானங்களும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. மைதான செலவுக்காக மட்டும் சுமார் ரூ.80 ஆயிரம் கோடியை ரஷ்யா செலவழித்துள்ளது. 64 ஆட்டங்கள் நடைபெறும் இந்த திருவிழாவின் முதல் ஆட்டத்தில் ஜூன் 14ஆம் திகதி தொடரை நடத்தும் ரஷ்யா, சவுதி அரேபியாவுடன் மோதுகிறது. இந்தத் தொடரின் மொத்த பரிசுத்தொகை சுமார் சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாவாகும்.

**முதன்முறையாக**

உலகக்கிண்ண வரலாற்றில் முதன்முறையாக இந்த முறைதான் பன்னாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனத்தில் உறுப்பினர்களாக உள்ள 209 நாடுகளும் தகுதி சுற்றில் பங்கேற்றன. ஆனால் சிம்பாப்வே, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் தங்களது முதல் ஆட்டத்துக்கு முன்னதாக தகுதியிழப்பு செய்யப்பட்டது. அதேவேளையில் கிப்ரால்டர், கொசோவா அணிகள் பங்குபற்றின.

**சிறிய நாடுகள்**

இந்த உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் சிறிய நாடுகளான ஐஸ்லாந்து மற்றும் பனாமா ஆகியவை உலகத்தின் பார்வையை தங்களது மீது குவியச் செய்துள்ளன. ஐஸ்லாந்து நாட்டின் மக்கள் தொகை சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம்தான். அதேவேளையில் பனாமா நாட்டின் மக்கள் தொகை 40 லட்சம்.

**28 வருடங்களுக்கு பிறகு**

எகிப்து அணி 28 வருடங்களுக்கு பிறகு இம்முறைதான் உலகக்கிண்ணத் தொடரில் விளையாட தகுதி பெற்றுள்ளது. அந்த அணி கடைசியாக 1990ஆம்; ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியிருந்தது. இதேபோல் மொராக்கோ அணி 1998ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போது களமிறங்குகிறது. பெரு அணி 36 வருட இடைவெளிக்கு பிறகு களத்தில் கால்பதிக்கிறது. அந்த அணி கடைசியாக 1982ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்றிருந்தது.

2002ஆம் ஆண்டு கால் இறுதி வரை முன்னேற்றம் கண்டிருந்த செனகல் அணி 2ஆவது முறையாக தற்போதுதான் தகுதி பெற்றுள்ளது. நார்டிக் நாடுகளை சேர்ந்த டென்மார்க், ஐஸ்லாந்து, சுவீடன் ஆகியவையும், அரபு நாடுகளான எகிப்து, சவுதி அரேபியா, துனிசியா, மொராக்கோ ஆகியவை கூட்டாக தகுதி பெற்றுள்ளமை இதுவே முதன்முறை.

**இத்தாலி இல்லை**

4 முறை சம்பியனான இத்தாலி இந்தத் தொடருக்கு தகுதி பெறாதமை ஒருவகையில் ஏமாற்றமே. அந்த அணி பங்கேற்ற 1958ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக உலகக் கிண்ணத் தொடரில் விளையாடி வந்த நிலையில் முதன்முறையாக தற்போதுதான் வெளியே இருந்து போட்டியை பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதேபோல் 3 முறை இரண்டாவது இடம் பிடித்த நெதர்லாந்து அணியும் தகுதி பெறவில்லை. கானா, ஐவரி கோஸ்ட் ஆகிய அணிகளும் இம்முறை தகுதி பெறாமல் போயின.

**32 நாடுகள்**

வழக்கம் போல் இம்முறையில் ஐரோப்பிய கண்டங்களை சேர்ந்த நாடுகளே அதிகளவில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளன. போட்டியை நடத்தும் ரஷ்யா, நடப்பு சம்பியனான ஜேர்மனி, பெல்ஜியம், குரோசியா, டென்மார்க், இங்கிலாந்து, பிரான்ஸ், ஐஸ்லாந்து, போலந்து, போர்த்துக்கல், செர்பியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய 14 நாடுகள் ஐரோப்பியாவில் இருந்து களமிறங்குகின்றன.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நாங்க வேற நாடு நீங்க வேறு நாடு

மே 18 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வுகளைப் பார்க்கும்போது, 'நாங்க வேற நாடையா; நீங்க வேறு நாடு' என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சி கீதம் தான் நினைவுக்கு வருகின்றது.

மனிதாபிமானப் போர் என்ற நாமத்தைச் சூட்டிக் கொண்டு தமிழினத்தைகூண்டோடு கொன்றொழித்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை, ஈழத் தமிழினம் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்தது. செங்குருதியில் தோய்ந்த முள்ளிவாய்க்கால் மண் உறவுகளின் கண்ணீரில் கரைந்தது.

தமிழர் தாயக தேசத்தில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடந்த எட்டாண்டுகளில் இல்லாததை விட இந்த ஆண்டு மக்களால் பெரும் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. தமிழினத்தின் மத்தியில் ஓர் ஓர்மம் உள்புகுந்திருப்பதை, நினைவேந்தல் நிகழ்வு எடுத்துக்காட்டியது.

உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் தங்கள் உள்ளக் குமுறல்களைக் கொட்டித் தீர்த்தனர். அழுகைகளும், கண்ணீரும் அவர்களின் வடுக்களுக்கு மெல்லிய ஒத்தடம் கொடுத்தன.

தமிழர் தாயகத்தில் இவ்வாறான நிலை இருக்க, தெற்கில் இதற்கு நேர் எதிர்மாறான நிலை தலைதூக்கியிருந்தது. மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் போர் வெற்றி விழா கடைப்பிடிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அது நிறுத்தப்பட்டிருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத வகையில் தெற்கில், நினைவேந்தலுக்கு எதிரான கொக்கரிப்பு பலமாகவே காணப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த அணியின் எழுச்சி இதன் பின்னால் இருந்திருக்கக் கூடும்.

கிரிபத்கொடவில் சில இளைஞர்கள், தமிழீழ தேசியக் கொடியை காலில் போட்டு மிதித்து அதனை எரியூட்டு, வீதியால் சென்று வருவோருக்கு பால் சோறு வழங்கினார்கள். தமிழர்களைத் தோற்கடித்து விட்டோம் என்று வெற்றி மமதையில் 2009 ஆம் ஆண்டு கொண்டாடியது போன்றே, இந்த மே 18 இலும் அவர்களது ஆட்டம் இருந்தது.

இது போதாது என்று, நாட்டின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தனது உத்தியோகபூர்வ கீச்சகத்தில் 'இலங்கையின் வெற்றி நாள்' என்று சாரப்பட பதிவிட்டிருந்தார். இந்த நாட்டின் பகுதியில் ஒரு மக்கள் கூட்டம், தனது உறவுகளை இழந்ததற்காக அழுகையில், அந்த நாளை நாட்டின் வெற்றி நாள் என்று அரசதலைவர் அறிவிக்கின்றார். அவரது பதிவுக்கு பலத்த எதிர்ப்புக்கள் எழுந்த பின்னர் 'இலங்கையின் வெற்றி நாள்' என்ற சர்ச்சைக்குரிய வார்த்தையை கீச்சகப் பதிவிலிருந்து நீக்கினார்.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் மக்கள் கூட்டம் என்று அவர் எண்ணவில்லை என்பதைதான் அவரது பதிவு வெளிப்படுத்திநிற்கின்றது. தமிழ்மக்களும் இலங்கை மக்களே என்பதை அவர் உள்ளத்தால் உணர்ந்திருந்தால், 'இலங்கையின் வெற்றி நாள்' என்று பதிவிட்டிருக்கமாட்டார்.

வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் உணர்வுகளினால் கூட பிரிகோடு இருக்கின்றது என்பதை இந்தச் சம்பவங்கள் எடுத்தியம்புகின்றன. வடக்கு ஒன்றைச் செய்தால், அதற்கு தெற்கு எப்போதும் எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கின்றது. இரண்டு தேசமும், எதிலும் இணையப்போவதில்லை.

# இயற்கைக்கு ஊறு விளைவித்தால் பாதிப்புக்கு உள்ளாவது மனிதர்களே!

அன்புராசா அடிகள்

கடவுள் ஒருநாள் ஒரு 'வாட்ஸ் ஆப்'' குரூப்'பை உருவாக்கினார். அதற்கு 'உலகம்' என்று தலைப்பிட்டார். முதலில், வானத்தையும், பூமியையும் அதில் 'அட்' பண்ணினார். அடுத்து, சூரியன், கடல், மழை, ஆறுகள், குளங்கள், மரங்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன என வரிசையாக 'அட்' பண்ணி மகிழ்ந்தார். இறுதியாக, மனிதனை 'அட்' பண்ணினார். மனிதனை 'அட்' பண்ணிய கடவுள், மிகவும் மன மகிழ்ந்து, 'இனி இந்த 'குரூப்'க்கு நான் தேவை இல்லை, மனிதனே இந்த 'குரூப்'பை நல்லபடியாக வழி நடத்திச் செல்வான்!' என்று எண்ணி, மனிதனை 'குரூப் அட்மின்' ஆக்கி விட்டு, விலகிச் சென்று விட்டார்.



கொஞ்ச நாள்கள் நன்றாகச் செயற்பட்ட மனிதன், காலப் போக்கில் தன் சுயதேவைகளுக்காகவும், சுய இலாபத்திற்காகவும், மரங்கள், குளங்கள், ஆறுகள் போன்றவற்றை அகற்றி விட்டு, அவற்றுக்குப் பதிலாக பொருள்களைக் கொள்வனவு செய்யும் மாடங்கள், மாடிக் குடியிருப்புக்கள், தொழிச்சாலைகள் போன்றவற்றை 'அட்' பண்ணினான். இதனால் கோபம் கொண்ட மழை தன் நண்பர்கள் இல்லாத இந்தக் 'குரூப்'பில் தானும் இருக்கமுடியாது என விலகிக் கொண்டது. ஆனால், சூரியன் விலகாமல், 'குரூப்'பில் இருந்தபடியே, தனது கோபத்தை மனிதன் மீது கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது!

### பகலவனின் பதில்!

'அன்பின் சூரியன், தயவுசெய்து உனது 'செற்றிங்ஸ்'க்குப் போய் உன்னுடைய 'பிறைற்நெஸ்' ஐக் குறைத்துக்கொள். இந்த நாள்களில் சரியான சூடாக இருக்கிறது!' என ஒருவன் சூரியனுக்கு மின்னஞ்சல் அனுப்பி வைத்தான். அதற்குப் பதில் அனுப்பிய சூரியன், 'அன்பின் நண்பரே, நான் என்னுடைய 'செற்றிங்ஸ்'இல் எந்தவிதமான மாற்றத்தையும் செய்யவில்லை. நீங்கள்தான் உங்கள் 'செற்றிங்ஸ்'சை மீள்பரீசிலனை செய்வது நல்லது! மேலும், 1.மரங்களை அதிகமாக நடுங்கள் 2. காபன் புகை அளவைக் கட்டுப்படுத்துங்கள் 3. கொங்கிறிற் கட்டுமானங்களைக் குறையுங்கள் 4.குளங்களின் எண்ணிக்கையை அதிகமாக்குங்கள். அடிப்படையில், 'ஓட்டமெற்றிக் மோட்டில் இருந்து மனிதாபிமான 'மோட்'க்கு வாருங்கள்!' எனப் பதில் எழுதி இருந்ததாம்!...

### இறைவன் படைத்த உலகு!

உலகம் எவ்வாறு தோன்றியது என்ற கேள்விக்கு, கடவுள் உலகத்தை உருவாக்கினார் என விவிலியம் சான்று பகர்கிறது. இந்தப் பிரபஞ்சத்தின் உருவாக்கம் பல முறைகளில், பல வடிவங்களில் நடந்திருக்கலாம்! ஆனால், அது கடவுள் என்ற மாபெரும் சக்தியினால் உண்டானது என்ற நம்பிக்கை அனைத்துச் சமயங்களிலும் வெளிப்பட்டு நிற்கிறது. அந்த வகையில் விவிலியம், உலகப் படைப்புக் குறித்து அதன் முதல் நூலாகிய தொடக்க நூலின் முதல் இரு அதிகாரங்களில் பின்வருமாறு விபரிக்கின்றது.

'ஒளி தோன்றுக' என்றார் கடவுள். ஒளியைக் கடவுள் நல்லதாகக் கண்டார். ஒளிக்கு 'பகல்' என்றும், இருளுக்கு 'இரவு' என்றும் பெயரிட்டார். மாலையும், காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.

'வானம் உண்டாகுக' என்றார் கடவுள். வானத்திற்குக் கீழுள்ள நீரையும், மேலுள்ள நீரையும் கடவுள் பிரிந்தார். வானத்திற்கு 'விண்ணகம்' எனப் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது.

'நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர, உலர்ந்த தரை தோன்றுக' என்றார் கடவுள். உலர்ந்த தரைக்கு 'நிலம்' என்றும், ஒன்றுசேர்ந்திருந்த நீருக்குக் 'கடல்' என்றும் பெயரிட்டார். புல்பூண்டுகளும், செடிகளும், பழமரங்களும், நிலத்தில் வளரவேண்டும் எனக் கட்டளையிட்டார். அதுவும் அவ்வாறே ஆயிற்று. மாலையும் காலையும் நிறைவுற்று மூன்றாம் நாளும்முடிந்தது.

பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும், காலங்களை வகைப்படுத்துவதற்கும், ஒளிப்பிழம்புகளை உண்டாக்கினார். கடவுள் அதனையும் நல்லது எனக் கண்டார். மாலையும் காலையும் நிறைவுற்று 04ஆம் நாள் முடிந்தது.

நீரில் நீந்தி வாழும் எல்லாவித உயிரினங்களையும், வானத்தில் பறக்கும் எல்லாவகைப் பறவைகளையும் உண்டாக்கினார். மாலையும் காலையும் நிறைவுற்று ஐந்தாம் நாளும் முடிந்தது.

கடவுள், கால்நடைகளையும், காட்டு விலங்குகளையும், ஊர்வன அனைத்தையும், அவ்வவ் இனத்தின்படி நிலத்தில் தோற்றுவித்தார். பின்னர் மனிதனைத் தமது உருவிலும், தமது சாயலிலும் உருவாக்கி தாம் உண்டாக்கிய அனைத்தையும் அவனுக்குக் கொடுத்து உலகை ஆளட்டும் என விரும்பினார். தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை அனைத்தும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாளும் முடிந்தது.

விண்ணுலகையும், மண்ணுலகையும், அவற்றுக்குத் தேவையான அனைத்தையும் உண்டாக்கி நிறைவுபெறச் செய்தபின்னர் கடவுள் ஏழாம் நாளும் ஓய்ந்திருந்தார்.

இதுவே கடவுள் படைத்த உலகின் ஒழுங்கு! கடவுள் படைத்த உலகின் அழகு! எவ்வளவு அழகான உலகை அவர் மானிடருக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை விவிலயம் மிகத் தெளிவாகக் காட்டி நிற்கிறது. இவ்வளவு அழகான உலகை மனிதன் விருத்தி செய்வது, வளர்த்தெடுப்பது, பாதுகாப்பது அவனது தலையான கடனாகும். இவ்வுலகைப் பண்படுத்தி, தானும் வாழ்ந்து, கடவுளை மகிமைப் படுத்துவது அவனது பெரும் கடமையாகவும், அழைப்பாகவும் இருக்கிறது.

### மனிதன் படைக்கும் உலகு!

ஆனால், கடவுள் கொடையாகக் கொடுத்த உலகை, மனிதன் எவ்வாறு மிக மோசமாகக் கையாளுகிறான் என்பதனைப் பின்வரும் அவதானிப்பு விபரிக்கின்றது. இந்த விபரணம் 'டெக்கிறியேசன்' என்ற ஆங்கிலக் கவிதையைப் பின்புலமாக வைத்து எழுதப்படுகிறது.

உலகம் படைக்கப்பட்டதும் கடவுள் ஓய்ந்திருந்தார். பூமி செழிப்பானதாகவும், அழகானதாகவும் இருந்தது. இப்போது மனிதன் தன் வேலையை ஆரம்பித்தான்!

முதல் நாளில் மனிதன் 'எங்களுக்கான குடியிருப்புக்களையும் நகரங்களையும் இந்த அழகான சூழலில் கட்டியெழுப்புவோம்!' என்றான். மனிதன் பென்னம்பெரிய நகரங்களையும், 'கொங்கிறிற்' அடுக்கு மாடிகளையும் எழுப்பினான். பசும் புற்தரைகளும் பச்சைக் காடுகளும் காணாமல் போயின. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.

இரண்டாம் நாளில், மனிதன் வெள்ளை வெள்ளேரென்று ஊடுருவிப் பார்க்கக்கூடிய நீரோடைகளில் இருந்துவரும் தண்ணீரையும், ஒளிர்கிற குளங்களையும், நீலநிறக் கடலையும் பார்த்தான். அவன், 'இந்தநீர் நிலைகளுக்குள் கழிவுகளையும் குப்பை

களையும் கொட்டி விடுவோம். இவ்வாறு எமது குப்பை கூளங்களை அகற்றிவிடலாம்!' என்றான். வெள்ளை வெள்ளேரென்ற பூமியின் தண்ணீர் அசுத்தமானதுடன், துர்நாற்றம் அடிக்கிற சாக்கடை நீராக மாறியது. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது.

மூன்றாம் நாளில், மனிதன் மிகவும் எழில்மயமான காடுகளையும் இன்சுவை மிக்க மரங்களையும் பார்த்தான். அவன், 'மரங்களை வெட்டிச் சரித்து காடுகளை வெளியாக்குவோம், வீடுகள் கட்டப் பலகைகளும் ஏனைய தளபாடங்களைச் செய்ய மரங்களும் எமக்குத் தேவை!' என்றான். அவன் நினைத்ததை நிறைவேற்றினான். காடுகள் பூமியில் இருந்து மறைந்து போயின. பூமி வெறுமையானது. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது.





நான்காம் நாளில், மனிதன் பூமியில் ஆயிரக்கணக்கான விலங்குகளைக் கண்டான். அவற்றின் குட்டிகளும் இளசுகளும் விளையாடிக்கொண்டும் குதூகலித்துக்கொண்டும் நின்றன. மனிதன், 'எம்மை மகிழ்விக்க விலங்குகளைப் பிடித்து அவற்றைக் கூடுகளில் அடைத்து வைப்பதோடு அவற்றை வேட்டையாடிக் கொன்று எமக்கு உணவாக்குவோம்' என்றான். அவ்வாறே அவன் செயலாற்றினான். விலங்குகள் பூமியில் இருந்து காணாமற்போயின. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று நான்காம் நாள் முடிந்தது.

ஐந்தாம் நாளில், மனிதன் வானமண்டலத்தில் உள்ள குளிரானதும், சுத்தமானதுமான காற்றை ஆழ்ந்து சுவாசித்தான். அவன், 'நஞ்சான வாயுக்களையும் வாகனங்களினதும் தொழிற்சாலைகளினதும் புகையையும் சுதந்திரமாக சூழலில் விடுவிப்போம். அதனைக் காற்று எடுத்துச் செல்லும்!' என்றான். மனிதன் அவ்வாறே செய்தான். காற்று அசுத்தமாகவும் தீமைகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் மாறியது. மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று ஐந்தாம் நாள் முடிந்தது.

ஆறாம் நாளில், மனிதன் சுற்றிப் பார்த்தபோது பூமியில் எல்லா வகை இனத்தவரையும் வெவ்வேறு நிறத்தவரையும், மொழிபேசுபவர்களையும், பண்பாடுடையவர்களையும் பார்த்தான். மனிதன், ஒருவரை ஒருவர் காண்பதில் பயப்படுவதோடு அடுத்தவரை வெறுக்கத் தொடங்கினான். அவன், 'மரணத்தை ஏற்படுத்தக்கூடிய எல்லா வகையான ஆயுதங்களையும் செய்வோம். மற்றவர்கள் எங்களை அழிப்பதற்கு முன், அவர்களை நாம் விரைவாகவே அழித்துவிடுவோம்!' என்றான். மனிதன் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய எல்லா வகையான விசித்திரமான ஆயுதங்களையும் செய்வித்தான். மனிதர்கள் ஒருவர் மற்றவருடன் போர்களைத் தொடுத்தார்கள். பூமியில் உள்ள மனிதர்கள் பெருமளவில் அழிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டார்கள். மனிதன், அது நல்லது எனக் கண்டான்! மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது.

ஏழாம் நாளில், தான் செய்த வேவைகளின் பொருட்டு மனிதன் ஓய்ந்திருந்தான். பூமி அமைதியாக இருந்தது, அங்கு அமைதி நிலவியது. ஆனால், அந்தப் பூமியில் இருந்த மனிதனும் இல்லாமல் போனான்! அதுவும் நல்லதாகவே இருந்தது!...

**பூமியின் அழிவுக்குக் காரணம் மனிதன்தான்!**

இந்தப் பூமியின் அழிவுக்குக் காரணம் மனிதன்தான் என்பதை மனிதர்களாகிய நாம் எப்போது எமது சிந்தனையில் ஏற்றிச் செயற்படுகிறோமோ, அப்போதுதான் நாங்கள் வாழும் பிரபஞ்சம் தப்பிப் பிழைக்கும்! இந்தப்பூமிப் பந்தில் மனிதன் தொடர்ந்து வாழ்வதும், வாழாது மாழ்வதும் மனிதர்களாகிய எமது கைகளில் தங்கியிருக்கிறது!

மனித வாழ்வுக்கு மிகவும் அடிப்படையான நீர், தற்போது பெரும் பிரச்சினையாகி வருகிறது. மூன்றாம் உலகப் போர் ஒன்று தொடங்குமாக இருந்தால், அது நீருக்கான, போராகத்தான் இருக்கும் எனப் பல அறிஞர்களும் எதிர்வுகூறி வருகிறார்கள். இந்நிலையில் நீருக்கான, குறிப்பாக குடிதண்ணீருக்கான தட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். குடிதண்ணீரைக்கூட காசு கொடுத்துக் கடையில் வாங்குவோம் என இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எம்மில் எவரும் நினைத்துக்கூட பார்த்ததில்லை. ஆனால், இன்று குடிதண்ணீரை விற்பதும் வாங்குவதும் ஒரு பெரும் வியாபாரமாகிவிட்டது.

**எச்செலவும், எப்பராமரிப்பும் இன்றி செய்யக்கூடிய ஒன்று!**

ஆகக் குறைந்தது நாம் வாழ்வதற்கு மிகவும் அடிப்படைத் தேவையான நீரை எப்படிச் சேமிக்கலாம்; எப்படிப் பாதுகாக்கலாம் என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டி உள்ளது. நிலத்தடி நீர் வற்றி வருகிறது என்கிறார்கள் புவியியல்சார் நிபுணர்கள். நிலத்தடி நீர் இல்லாது போனால் குடிதண்ணீருக்கான ஆபத்தும் விரைவில் ஏற்பட்டுவிடும்! ஆனால் இயற்கையைப் பேணினால் அது நம்மைக் காக்கும் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய ஓர் அவசரகாலம் தோன்றியிருக்கிறது. நிலத்தடி நீரைப்பேண பனைமரங்கள் பெரும் உதவி புரிகின்றன.

அந்த வகையில், பனம் விதைகளைச் சேகரித்து தரிசு நிலங்களில் வீசி விட்டால் அவை மழைபெய்யும் போது தானாகவே முளைத்துவிடும். எந்தவித பராமரிப்பும் அவற்றுக்குத் தேவையில்லை. கால்நடைகள் கடித்தாலும் அதன் வளர்ச்சியை அது பாதிக்காது. பனைமரத்தின் வேர்கள் ஏறக்குறைய ஐம்பது அடி ஆழம் வரை பூமிக்குள் செல்வதால் எவ்வளவு வறட்சியையும் அவை தாங்கக்கூடியவை. மழைக் காலங்களில் அவற்றின் வேர்கள் மழைநீரை ஐம்பது அடி ஆழத்திற்கு பூமிக்குள் கொண்டு சேர்க்கும் குழாய்களாகச் செயல்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக உயருமாம்! பனைமரங்கள் மண்ணரிப்பை அறவே தடுக்கின்றன.

குளக்கட்டு வீதி ஓரங்கள், தரிசு நிலங்கள், மலைப்பகுதிகள் போன்ற இடங்களில் பனம் விதைகளை வீசிவிட்டால்கூட அவை தழைத்துவரும். பனைமரங்களின் நன்மைகள் ஏராளம். பனைமரத்தின் ஒவ்வொரு பாகமும் பயன்பாட்டுக்கு உரியது. எங்காவது பனம் விதைகள் விதைக்கப்படாமல் பனைமரங்கள் தறிக்கப்படுகின்றன என்றால், அவ்விடம் அழியத் தொடங்குகிறது என்று அர்த்தம் எனப் புவியியல்சார் அறிஞர்கள் சான்று பகர்கிறார்கள். எமது பிரதேசங்களில் எவ்வித பராமரிப்பும் இன்றி, எத்தகைய பணச் செலவும் இன்றி எத்தனை எத்தனையோ பயன்களைத் தரவல்ல பனை வளத்தை ஏன் இன்னமும் நாம் பேணாமல் இருக்கிறோம் என்ற கேள்வியை ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்கவேண்டும்?

> இயற்கையைப் பேணுவதிலும், பராமரிப்பதிலும் இவ்வாறுதான் நடந்து கொள்கிறோம். அதனால் இயற்கையின் வெறுப்புக்கு ஆளாகியிருக்கிறோம். இயற்கையை இயற்கையாகச் செயற்பட விடுங்கள். அப்போது தான் அது எம்மை வாழ வைக்கும்!

**பழைய தலையான பாவங்கள்!**

கத்தோலிக்க திரு அவை, ஏறக்குறைய 1500ஆண்டுகளாக ஏழு தலையாய பாவங்களான ஆணவம், பேராசை, பொறாமை, கோபம், போசனப்பிரியம், சோம்பல் , அவதூறு ஆகியவற்றை பாவ அறிக்கைக்கும் ஆன்ம ஆய்வுக்கும் தந்திருந்தது. இந்த ஏழு தலையாய பாவங்களும் அதன் இயல்பில் தனி மனிதர்களின் மனச்சாட்சியைத் பரிசோதிப்பதாக இருப்பதை அவதானிக்கலாம். திரு அவையின் பாரம்பரிய இந்தப் படிப்பினையை வைத்துக் கொண்டு 2008இல் முன்னாள் திருத்தந்தை 16ஆவது பெனடிக்ற் ஏழு நவீன தலையான பாவங்களைக் குறிப்பிட்டு உலகின் மனச்சாட்சியைத் தட்டுகிறார். அந்த நவீன தலையான பாவங்கள் உலகமயமாக்கலின் விளைவாகத் தோன்றி நாம் வாழும் சூழலை மிக மோசமாகப் பாதிப்பதோடு, இறைவன் படைத்த அழகான உலகை மனிதன் தனது மிதமிஞ்சிய சுயநலப் போக்கினால் அழித்து வருகிறான் எனவும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

**நவீன தலையாய பாவங்கள்!**

அந்த நவீன தலையாய பாவங்கள் பின்வருமாறு:

1)சுற்றுச் சூழலை அழித்தல்: இயற்கை வளங்களை பணம்பெருக்கும் நோக்குடன் சுரண்டுதல்.

2)உயிராற்றலோடு விளையாடுதல்: மரபணு சோதனை மானிட மாண்பை அழித்துவிடக் கூடாது என்றும், 'குளோனிங்' முறையிலான குழந்தைப் பிரசவங்கள் பல தீமைகளுக்கும் பாவங்களுக்கும் இட்டுச் செல்லும் என்பதையும் கோடுட்டுக் காட்டுகிறார்.

3)அளவை மிஞ்சும் செல்வம்: நாடுகள், பன்னாட்டு நிறுவனங்கள், தனிநபர்கள் அளவுக்கு அதிமான சொத்துக்களைக் குவிப்பதனால் ஏற்படும் தீமையைச் சுட்டுகிறார்.

4)வறுமையை உருவாக்குதல்: திட்டமிட்டு வறுமையை உருவாக்கும் தொழில் கொள்கைகள், நிதி ஒதுக்கீடுகள் போன்றவற்றில் ஈடுபடுதல்.

5)போதைப்பொருள் விளைவித்தல், கடத்தல்.

6)அறநெறிக்கு எதிரான அறிவியல் ஆய்வுகள்: மனித மாண்பைச் சிதைக்கக்கூடிய ஆய்வுகளை மேற்கொள்ளல்.

7)அடிப்படை மனித உரிமைகளை மீறல்

ஆகிய மேற்குறிப்பிட்ட ஏழு வகையான தீமைகள் இன்று சமூதாயத்தை அழிவின் பாதையில் கொண்டு செல்வதைக் காணலாம். எனவே, இந்த நவீன தலையாய பாவங்களில் இருந்து மனித சமுதாயம் விடுபட்டு தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும் என திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் வேண்டுகோள் விடுக்கிறார்.

**'எப்படியிருந்த நாங்கள் இப்படி ஆகிவிட்டோம்!'**

எம்முடைய வாழ்க்கைமுறையில் ஏற்பட்டிருக்கும் ஒரு மாற்றத்தை இங்கு நோக்குவது எம்முடைய வாழ்வை மீண்டும் சீர்செய்ய ஒருவகையில் உதவும்! சுமார் பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு வீட்டைக் கூட்டுகிறபோது வீட்டைக்கூட்டி, பின் விறாந்தையைக் கூட்டி, அதன்பின் வீட்டைச் சுற்றி விளக்குமாற்றினால் கூட்டி, அதன்பின் முற்ற த்தைக் கூட்டி, வளவைக் கூட்டி, வீட்டுச் சுற்றுப்புறத்தைத் கூட்டி, வீட்டு வேலிகளோடு இருக்கும் ஒழுங்கைகளைக் கூட்டித் துப்பரவாக வைத்திருப்போம். இன்று இந்த நல்ல பழக்கத்துக்கு என்ன நடந்திருக்கிறது? என்ன நடக்கிறது? இதில் என்ன வளர்ச்சி கண்டிருக்கிறோம் என ஆராய்கிறபோது மண்வீடுகள் எல்லாம் 'கொங்கிறீற்' வீடுகள் ஆகிவிட்டன, அவற்றில் கொஞ்சம் மாடிவீடுகள் ஆகிவிட்டன! இப்போது இந்த வீடுகளுக்குள் இருந்துகொண்டு வீதிகளில் குப்பைகளைக் குவித்துவிட்டு நாம் வீடுகளுக்குள் சௌகரியமாக இருந்து கொள்கின்றோம்! இவ்வாறு இருந்து கொண்டு எமது சூழலை எவனோ ஒருவன் வந்து துப்பரவு செய்யவேண்டும் என எதிர்பார்த்து நிற்கிறோம்!

இயற்கையைப் பேணுவதிலும், பராமரிப்பதிலும் இவ்வாறுதான் நடந்து கொள்கிறோம். அதனால் இயற்கையின் வெறுப்புக்கு ஆளாகியிருக்கிறோம். இயற்கையை இயற்கையாகச் செயற்படவிடுங்கள். அப்போது தான் அது எம்மை வாழவைக்கும்! அப்படியில்லாமல் இயற்கையைச் செயற்கையாக மாற்றினீர்கள் என்றால் அது தனது வெறுப்பை வெளிப்படுத்தும்! இயற்கையை நேசிப்போம், இயற்கையைப் பாதுகாப்போம், இயற்கையைப் பராமரிப்போம்.



# நித்திய சுகம் 365

உடலே கோயில்

# உயர வளர்ச்சிக் குறைபாடு ஆலோசனைகளும் தீர்வுகளும்

ஆ.அரவிந்தன்

**பிள்ளைகள் உயர வளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பதற்கான காரணங்கள் யாவை?**


பிள்ளைகள் உயரம் குறைந்தவர்களாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக நீண்ட காலமாகப் போதுமானளவு சத்தான உணவுகளை உள்ளெடுக்காதவிடத்து (chronic Malnutrition) உயரம் மற்றும் உடல் நிறை என்பன சீரற்ற விதத்தில் அதிகரிக்காது விடுகின்றன. இதே போல் எந்தவொரு நீண்டகால நோய் (உதாரணம் சிறுநீரக பிரச்சினைகள், சமிபாட்டுத் தொகுதி நோய்கள், இருதய நோய்கள்) இருக்கும்போது சிறுவர்களின் உயரவளர்ச்சி பாதிப்படைய நேரிடுகின்றது. பெற்றோர் உயரம் குன்றி இருக்கும்போது பிள்ளைகளின் உயரமும் குறைவாகவே இருக்கும். சில சிறுவர்கள் ஆரம்பத்தில் உயரம் குறைவானவர்களாகக் காணப்பட்டுக் காலப் போக்கில் சாதாரண உயரத்தை அடைவார்கள். (constitiutomal delay) இறுதியாக அகஞ்சுரக்கும் தொகுதிப்பிரச்சினைகளும் (ஹோர்மோன்கள்) மிக அரிதாக இதற்குக் காரணமாக இருக்கலாம்.

**உயர வளர்ச்சி குறைவா என்பதை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?**

பிள்ளையொருவரின் உயர வளர்ச்சியானது அவரது ஆரோக்கிய பதிவேட்டு வரைவில் (child Health Record) குறைவாகக் காணப்படும் போது அதனைக் கண்டறிந்து கொள்வது மிக அவசியமாகும். ஏனெனில் எவ்வளவு விரைவாக உயர வளர்ச்சிக் குறைபாட்டை (short staure) கண்டறிகிறோமோ அதற்கேற்ப சிகிச்சை வழிமுறைகளை வழங்குவதன் மூலம் சிறுவர்கள் சாதாரண உயரத்தை அடைவதற்கு நாம் உதவ முடியும். எனவே பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பிள்ளைகளில் உயர வளர்ச்சிக் குறைபாடு இருக்கின்றதா என்பதை அவதானித்து தேவையேற்படின் அவர்கள் வைத்திய ஆலோசனை பெற உதவுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

**உயரவளர்ச்சிக் குறைபாடு இருக்கின்றதா என்பதை எவ்வாறு பரிசோதித்து அறிந்து கொள்ளமுடியும்?**

உயர வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் மேலதிகப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்காக குழந்தை நல மருத்துவ நிபுணர் (paediatyician) ஒருவரிடமோ அல்லது அகஞ்சுரக்கும் தொகுதி நிபுணர் (Endocrinologist) ஒருவரிடமோ அனுப்பி வைத்தல் அவசியமாகும். தேவைப்படுகின்ற வினாக்களை வினவுவதன் மூலமாக உடற்பயிற்சி சோதனைகள் மூலமும் (History Taking/ Examination) காரணத்தை ஓரளவுக்கு ஊகித்துக் கொள்ள முடியும். பெற்றோர்களின் உயரத்தை அளவிடுவதன் மூலம் (Mid parental height) பிள்ளையொருவரின் உயர வளர்ச்சி தொடர்பாக முடிவெடுத்துக் கொள்ள முடியும். இதே போல் தேவையான குருதி மற்றும் ஹோர்மோன் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் உயரம் குன்றி இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து கொள்ள முடியும். பிள்ளையொருவரின் எலும்பு வயதை (Bone age) கையில் மேற்கொள்ளப்படும் xray (Non Don Dominant Hand xray) பரிசோதனையின் மூலம் அறிந்து கொள்வதும் மிக அவசியமாகும்.




**உயரவளர்ச்சிக் குறைபாட்டுக்கான தீர்வுகள் மற்றும் சிகிச்சை வழிமுறைகள்**

உயர வளர்ச்சி குன்றியிருப்பதற்கான காரணத்துக்கேற்ப சிகிச்சை வழிமுறைகளும் வேறுபடுகின்றன. ஹோர்மோன்களில் ஏற்படும் குறைபாடுகளும் இதற்கு மிக அரிதாகக் காரணமாக அமைகின்றன. உதாரணமாக உயரவளர்ச்சி ஹோர்மோன் (Growth Hormone) குறைபாடு இருப்பது உறுதி செய்யப்பட்டால் அதற்கான சிகிச்சையாக உயர வளர்ச்சி ஹோர்மோனை வழங்குவது அவசியமாகும். இதனை ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளையில் ஊசி மூலம் வழங்குவதனால் உயர வளர்ச்சி அதிகரிப்பதற்கு உதவிட முடியும்.




**இறுதியாக**

எமது மக்கள் மத்தியில் உயர வளர்ச்சிக்குறைபாடு என்பது பற்றிய விழிப்பு ணர்வொன்றை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். குறிப்பாக பெற்றோர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கு இது சம்பந்தமான அறிவூட்டல் மிக அவசியமானதாகும். பிள்ளையொருவரின் உயர வளர்ச்சி குறைவாக இருப்பதை எவ்வளவு ஆரம்பத்தில் கண்டறிந்து கொள்கின்றோமோ அதற்கேற்ப தகுந்த சிகிச்சையை வழங்குவதன் மூலம் அந்தப் பிள்ளையானது சாதாரண உயர வளர்ச்சியை எதிர்காலத்தில் அடைந்திட உதவ முடியும்.

*கட்டுரையாளர்: மருத்துவர்*

உயர வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் மேலதிகப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்காக குழந்தை நல மருத்துவ நிபுணர் (paediatyician) ஒருவரிடமோ அல்லது அகஞ்சுரக்கும் தொகுதி நிபுணர் (Endocrinologist) ஒருவரிடமோ அனுப்பி வைத்தல் அவசியமாகும். தேவைப்படுகின்ற வினாக்களை வினவுவதன் மூலமாக உடற்பயிற்சி சோதனைகள் மூலமும் (History Taking/ Examination) காரணத்தை ஓரளவுக்கு ஊகித்துக் கொள்ள முடியும். பெற்றோர்களின் உயரத்தை அளவிடுவதன் மூலம் (Mid parental height) பிள்ளையொருவரின் உயர வளர்ச்சி தொடர்பாக முடிவெடுத்துக் கொள்ள முடியும். இதே போல் தேவையான குருதி மற்றும் ஹோர்மோன் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் உயரம் குன்றி இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து கொள்ள முடியும்.

சூரியகாந்தி
உதயன்



# போதையிலும் ஆண்களை வெல்ல வேண்டும்

கட்டுரை

பாமினி லோகேஸ்வரன்
சே. ஞானரூபி

சில தினங்களுக்கு முன்னர் இரவு. இருபாலைச் சந்தியில் இரண்டு இளம் பெண்பிள்ளைகள் மோட்டர் சைக்கிளில் செல்லும்போது விபத்துக்குள்ளாகி மீட்கப்பட்டார்கள். அப்போதுதான் தெரியவந்தது அவர்கள் குடித்துவிட்டு மோட்டார் சைக்கிள் ஓடியது. இதில் என்ன விசேஷம் என்றா கேட்கிறீர்கள்? இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் (ஏனைய இடங்களைப் பற்றிக் கதைக்க வரவில்லை) பெண்கள் எல்லா இடங்களிலும்... இடங்கள் என்றால்... பரீட்சையில் சித்தியடைவது... கோவில் திருவிழாக்களில் ஒன்றுகூடுவது..., அரச திணைக்களங்கள், அரச தனியார் வங்கிகளில் பணியாற்றுவது என்பது தொடங்கி எல்லா வற்றிலும் பெண்கள் முன்னிலை வகிக்கிறார்கள். அது ஒன்றும் தவறில்லை. தேவையும் அதுவே.

ஆனால், யாழ்ப்பாணத்தில் மது போதையில் மோட்டார் சைக்கிள் ஓடி வழக்குப் பதிவுசெய்யப்பட்ட முதலாவது பெண் என்ற பெருமையை அந்தப் பெண்களில் ஒருவர் பெற்றுக்கொண்டதாக அறியப்படுகிறது. இறுதியாகக் கிடைத்த தகவலின்படி நீதிமன்றுக்குச் சமூகமளிக்காத அந்தப் பெண்மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாக...



## பெண்கள் குடிக்கின்றார்களா...?

ஆண்கள் குடித்தால், பெண்கள் குடிப்பதில் என்ன பிழை என்ற கேள்விகள் பல முனைகளிலும் கேட்கப்படுகின்றன. பொது வெளியில் இது தொடர்பாக யாரும் அதிகம் கதைக்காவிட்டாலும், முகநூல்களிலும் சமூக வலைத்தளங்களிலும் கருத்துக்களை அள்ளிவீசும் பல சமூக ஆர்வலர்கள் இது தொடர்பாகக் கதைக்கத் தவறவில்லை.

பாரம்பரிய கிடுகு வேலிக் கலாசாரம் கொண்ட யாழ்ப்பாணத்தில் சைக்கிள்கூட ஓடப்பழகாத, ஓடத்தெரியாத ஒரு சூழலில் இருந்த யாழ்ப்பாணத்துப் பெண்கள், தாய், தகப்பன், சகோதரங்கள், பின்னர் கண்ணான கணவன் என்று அடிதொழுது வாழ்ந்து பழக்கப்பட்ட யாழ்ப்பாணத்துப் பெண்கள் இன்று ஆண்களுக்கு நிகராகக் குடித்துவிட்டு நீதிமன்ற வாசலில் நிற்கிறார்கள் என்றால் இது எவ்வளவு மேன்மையான விடயம்...?

நன்றாகக் குடியுங்கள்... குடித்துவிட்டு மோட்டார் சைக்கிள் ஓடாதீர்கள் அல்லது போதை இல்லாத ஒருவரை மோட்டார் சைக்கிளைச் செலுத்தவிடுங்கள் என்ற போதனைகள் வேறு செய்யப்படுகின்றன. போதையேறித் தெருவில் விழுந்த பெண்கள் தொடர்பாக ஏன் ஊடகங்களில் வெளியிட்டு அந்தப் பெண்களைச் சந்தி சிரிக்க வைக்கிறீர்கள்? அவர்களுக்கு நல்ல அறிவுரைகளைச் சொல்லிக்கொடுத்துத் திருத்துங்கள் என்று வேறு சிலரும் சொல்கிறார்கள்.

குடிப்பதைப் பிழையாகப் பார்க்காதீர்கள், நவீன உலகில் பியர் அடிப்பதோ விஸ்கி குடிப்பதோ மோசமான விடயம் அல்ல. ஒக்கேசனாக அடிப்பது ஒன்றும் தவறில்லை எனவும் சம காலத்துப் பின்நவீனத்துவ வாதிகள் கருத்துச் சொல்கிறார்கள்.

அன்றைய தினம் குடித்த பெண்கள் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு மது அருந்திப் பின்னர் புறப்பட்டதாக முகநூல் நண்பர்கள் தெரிவிக்கிறார்கள். அந்த இடத்தில் இந்தப் பெண்கள் மட்டும்தான் கலந்துகொண்டார்கள் என்று சொல்லமுடியாது. வேறு பல பெண்களும் கலந்துகொண்டிருப்பார்கள். எனவே இது ஒன்றும் மறைபொருளான விடயம் என்று கூறுவதற்கில்லை.

ஸ்கூட்டி ஓடும் பெண்கள் எல்லோரும் சாதாரண நிலையில் உள்ள பெண்களாக இங்கு இல்லை. சிறந்த கல்வியறிவும், ஆற்றலும் உள்ள இவர்களில் அநேகமானோர் நிரந்தரமான அரச, தனியார் வேலைகளில் உள்ளவர்கள்.

இந்தச் சமூகத்தில் நீண்ட பாரம்பரியங்களைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு குடியால் ஏற்படும் தீமைகளோ அல்லது அதன் பின்னணி தரும் சிக்கல்களோ தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. புத்தி கேட்டுத் திருந்தவேண்டிய நிலையில் அவர்களும் இல்லை. அவர்களுடைய அறிவும் இல்லை. உண்மையில் என்ன தான் நடக்கிறது?

மாலை வேளையில் மங்கிய இருளில் ஒன்றுசேரும் ஆண்கள் தண்ணி தண்ணியாக அடித்துச் சிலவேளைகளில் கஞ்சாபோன்ற போதைப் பொருள்களையும் பாவித்து வெறி ஏறி, ஒரு மோட்டார் சைக்கிளில் மூன்று பேராக உட்கார்ந்து கூச்சலிட்டவாறு வளைந்து வளைந்து காப்பெற் சாலையில் வேகமாக ஓடித் திறில் காட்டுவதும், சமயங்களில் சண்டைபிடிப்பதும், வாய்த்தர்க்கம் கைகலப்பாகி வாள்வெட்டு வரைபோவதும் அவர்களின் கதாநாயகத்தனமாகப் பார்க்கப்படுகிறது

அவ்வாறு எந்தக் கட்டுப்பெட்டித்தனமும் இல்லாமல் யாருக்கும் பயப்படாமல் சுதந்திரமாகச் செயற்படுவோம் எனத் தலைதூக்கும் சில பெண்களின் கதாநாயகித் தனங்களே இத்தகைய் விளையாட்டுக்களின் பின்னணியாகப் பார்க்கப்படுகிறது.

ஐஸ்கிறீம் கடையில் கேக் வெட்டி, றோல் சாப்பிட்டு, ஐஸ்கிறீம் குடித்துக் கொண்டாடப்பட்ட பிறந்த நாள்களை ஒத்த கொண்டாட்டங்கள் இன்று தண் ணியடித்துத் தலைகீழாகும் நிலைவரை வந்துள்ளதை இளம் தலைமுறையின் முன்னேற்றம் என்று சொல்ல முடியுமா?

எத்தகைய வசதிகள் இருந்தபோதும் உயர் பதவி நிலைகளில் இருந்தாலும் கட்டிய மனைவியை, அல்லது கணவனைவிட வேறு தொடுசல் வைத்திருப்பதை யாரும் மதிப்பதில்லை ஏற்றுக்கொள்வதில்லை. தனி மனித ஒழுக்கத்தை எவரும் தூக்கி எறிந்துவிட்டுப்போக முடியாது. இன்று பெண்கள் தண்ணியடிப்பது சரி என வாக்களத்து வாங்கும் எந்த ஆண்மகனும் அத்தகைய பின்னணி உள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முன்வருவானா?

சமகாலத்தில் நவீன தொழில்நுட்ப வசதிகள், வாழ்க்கை முறைகள் எல்லாம் மாறிவிட்ட பின்னணியில் குற்றஞ் சாட்டப்பட்ட அல்லது அவதூறு பரப்பப்பட்ட ஒரு பெண்ணை இந்தச் சமூகம் எந்தக் கேள்விக்கும் உட்படுத்தாமல் ஏற்றுக்கொள்கின்றதா?

திருமணம் என்று வந்தவுடன் சாதகம் பார்த்து, சாதி குலம் கோத்திரம் எல்லாம் விசாரித்து, ஆண் அல்லது பெண்ணின் சொந்த நடத்தை பற்றித் துப்பறிந்து இறுதியில்தானே திருமணங்கள் நிச்சயப்படுத்தப்படுகின்றன. ஒரு சில புறநடைகளைத் தவிர இவற்றுக்கு மாற்றீடுகளைக் கொண்டுவந்துவிட்டோமா?

பாட்டுப் பாட விரும்புவர்களை மேலும் மேலும் பாடுங்கள் என ஊககப்படுத்துகிறோம். ஓவியம் வரைபவர்கள், கதை கவிதைகள் எழுதுபவர்கள் அவர்கள் ஆண்களாக இருந்தால் என்ன பெண்களாக இருந்தால் என்ன அவர்களின் முன்னேற்றம் காண முயலுகின்றோம். அவ்வாறே குடிப்பழக்கத்தில் உள்ள ஓர் ஆணையோ பெண்ணையோ மேலும் மேலும் குடியுங்கள் என ஊக்கப்படுத்தலாமா? அல்லது ஊக்கம் கொடுக்கத்தான் முடியுமா?

சும்மா 'ஒக்கேஷனாத்தான் அடிக்கிறோம் ஒரு பெக் அடிப்பதால் ஒன்றும் பிரச்சினையில்லை. ஆக்களுக்கு முன்னால கொஞ்சமாவது குடிக்காமல் விடுவது சரியில்லை, என்று தாம் குடிப்பதற்கு நியாயம் கற்பிக்கும் அன்பர்களே குடியின் எல்லை எது? குடித்துக் குடித்து எல்லை தாண்டும்போது ஏற்படும் பிரச்சினைகளால்தானே குடிக்கு எதிரானகருத்துக்கள்முன்வைக்கப்படுகின்றன. குடியால் ஏற்படும் பக்கவிளைவுகளை சமூகத்தில் நாளும்பொழுதும் பார்த்துக்கொண்டுதான் எல்லை மீற மாட்டோம் என்று சொல்லிக்கொண்டு எல்லோருமாக குடிக்க ஆரம்பித்து எல்லோரும் எல்லை மீறுகின்றோம்.


அந்தப் பெண்கள்கூட பிறந்தநாள் விருந்துக்கு வெகு அட்டகாசமாக, அலங்காரமாக சிறந்த ஆடை அணிகளுடன் அலட்சியமாக வந்து முதல் றவுண்டில் கலகலப்பாக சிறிது சிறிதாகத் தண்ணியடிக்க ஆரம்பித்திருப்பார்கள்...? பின்னர் அதன் நீட்சிதான் இருபாலைச் சந்தியில் காப்பெற் றோட்டில், விபத்தாகி விழுந்து புரண்டு ஆடைகள் அழுக்காகும் வரை சென்றது

அது வேறு சூழலாக இருந்தால் போதையில் சுயமிழந்த பெண்களுக்கு நடக்கும் கொடுமைகளை அறியாதவர்களா? அந்தப் பெண்களும் அவர்களை ஒத்த பெண்கள் சமூகமும்போதை ஏற்றியே பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்தும் எத்தனையோ சம்பவங்கள் சமூகத்தில் நடப்பதை இவர்களும் இவர்களுக்கு வக்காலத்து வாங்குபவர்களும் அறிய மாட்டார்களா?

ஒரு புறத்தில் வீறுகொண்டு எழுந்த விடுதலைப்போராட்டத்தின் பின், அதைக் கட்டிக் காக்க முடியாமல் அதன் தொடர் பயன்களை அறுவடை செய்ய முடியாத எங்கள் தமிழ்த் தலைவர்கள் இன்று முள்ளி வாய்க்கால் நினைவு தினத்தை எப்படிக் கொண்டாடுவது என்ற பிரச்சினையில் நிற்கும் நிலையில் இதுபோன்ற சம்பவங்களைத்தவிர வேறு என்னதான் நடக்கும்? பண்பாடு மிக்க மக்கள் கூட்டமாக இருந்த எங்கள் மக்களும் அவர்களின் விடு தலைப்போராட்டமும் உச்சமாக இருந்த காலத்தில் விடுதலைப் போராளிகளாக ஆயுதம் ஏந்திப்போராடிய பெண்களும், அதற்கு ஏனைய உதவிகளைச் செய்த சமூக அமைப்பில் இருந்த பெண்கள் கூட்டமாகவும் இருந்த எங்கள் சூழல் இன்றைக்கு எந்தநிலையில்வந்து நிற்கிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

இதற்கு எங்கள் அரசியல் சமய சமூகத் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, பிரதேச சபை உறுப்பினர்கள்தான்பொறுப்பேற்க வேண்டும். இதுபற்றி இவர்கள் சிந்திக்க மாட்டார்களா?

குடித்த பெண்கள் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு மது அருந்திப் பின்னர் புறப்பட்டதாக முகநூல் நண்பர்கள் தெரிவிக்கிறார்கள். அந்த இடத்தில் இந்தப் பெண்கள் மட்டும்தான் கலந்துகொண்டார்கள் என்று சொல்லமுடியாது. வேறு பல பெண்களும் கலந்துகொண்டிருப்பார்கள். எனவே இது ஒன்றும் மறைபொருளான விடயம் என்று கூறுவதற்கில்லை.
ஸ்கூட்டி ஓடும் பெண்கள் எல்லோரும் சாதாரண நிலையில் உள்ள பெண்களாக இங்கு இல்லை. சிறந்த கல்வியறிவும், ஆற்றலும் உள்ள இவர்களில் அநேகமானோர் நிரந்தரமான அரச, தனியார் வேலைகளில் உள்ளவர்கள்.





# எபோலா என்னும் எமன்

ஆபிரிக்கா மீண்டுமொருமுறை பீதியில் உறைந்துள்ளது. கடந்த வருடம் கட்டுப்படுத்தப்பட்ட எபோலா மீண்டும் தலைதூக்குகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளமையே ஆபிரிக்கக் கண்டம் அச்சத்தில் உறைந்துள்ளமைக்கான முதன்மைக் காரணமாக அமைகிறது. மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் 2013ஆம் ஆண்டு 'எபோலா' நோய் பரவியது. முதலில் கினியா நாட்டில் பரவிய நோய் பின்னர் சியாரா லியோன், லைபிரியா, காங்கோ குடியரசு உள்ளிட்ட நாடுகளிலும் பரவியது. 2016ஆம் ஆண்டு வரை இந்த நோய் தொடர்ந்து பரவி வந்தது. இதில் 28 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 11 ஆயிரத்து 310 பேர் உயிரிழந்தனர். 2016ஆம் ஆண்டு பிற்பகுதியில் எபோலா ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆனால் தற்போது மீண்டும் தனது தாண்டவத்தை ஆரம்பித்துள்ளது எபோலா. காங்கோவில் அண்மையில் 36பேர் மர்மமான முறையில் உயிரிழந்தனர். உடற்கூற்றுப் பரிசோதனையில் எபோலா நோயாலயே அவர்கள் உயிரிழந்தனர் என்று தெரியவந்தது. இதையடுத்து எபோலா பரபரப்பு பன்னாட்டுச் சமூகத்தைக் கௌவிப் பிடித்துள்ளது.

எபோலாவைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் தற்போதே முன்வர வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆபிரிக்க நாடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்கும்படியும், அவ்வாறு செல்பவர்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கும்படியும் ஐரோப்பிய அரசுகள் எச்சரித்துள்ளன.

*'அழுகையின் கண்டம்தானோ ஆபிரிக்கா...!'*




ஹவாய் தீவில் உள்ள கிலியோவா எரிமலை கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக தொடர்ந்து வெடித்து வருகிறது. 37 வீடுகள் முழுவதுமாகத் தீக்கிரையாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரொஹிங்யர்களுக்கு புதிய தலைவலி!

மியன்மாரில் இருந்து பங்களாதேஷுக்குச் சென்று அங்கு அடைக்கலம் தேடியுள்ள ரொங்யர்கள் தற்போது அங்கும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க ஆரம்பித்துள்ளனர். இம்முறை இராணுவத்தால் அல்ல இயற்கையால். பௌத்தநாடான மியன்மாரின் இனச் சுத்திகரிப்பில் இருந்து தப்பித்து சுமார் 6 லட்சம் வரையிலான ரொயிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்று அடைக்கலம் தேடியுள்ளனர். ரொஹிங்யர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாமை அவ்வப்போது புயற்காற்று பதம் பார்த்து வருகிறது. தற்காலிகத் தங்குமிடங்கள்கூட காற்றில் அடித்துச் செல்லப்படும் சம்பவங்கள் அங்கு அதிகம் பதிவாகியுள்ளன.

'இறைவனுக்கும்
இரக்கமில்லை
இயற்கைக்கும்
இரக்கமில்லை...'





## கிம் - ட்ரம்ப் சந்திப்பு நடக்குமா இல்லையா?

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு நடக்குமா நடக்காதா என்பது தொடர்பில் தற்போது கருத்துப் பரிமாற்றங்கள் ஆரம்பமாகியுள்ளன.

கிம் ஜோங் உன் தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் இடையிலான சந்திப்பு கடந்த மாதம் இறுதிப் பகுதியில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பயிற்சியை தவிர்க்க இரண்டு நாடுகளின் தலைவர்களும் சம்மதித்தனர். இந்த ஒப்பந்தத்துக்கு முற்றிலும் முரணாகவே அமெரிக்கா, தென்கொரிய நாடுகளின் போர்ப் பயிற்சி பார்க்கப்படுகிறது. அதுவே உண்மையும்கூட.

அணுவாயுதங்களைக் கைவிடும் முடிவில் இருந்த வடகொரியாவுக்கு, தென்கொரியா மற்றும் அமெரிக்க இடையிலான கூட்டுப் போர்ப் பயிற்சி தற்போது பெரிய தலையிடியையும் உச்சக் கட்டக் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் சிங்கப்பூரில் அடுத்த மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த கிம் ஜோங் உன் ட்ரம்ப் இடையிலான சந்திப்பு கைவிடப்படவும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

வடகொரியாவின் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து துள்ளிக்குதித்து பொருளாதாரத் தடைகளை விதித்த அமெரிக்கா, தென்கொரிய என்பன வடகொரியா அணுவாயுதத்தைக் கைவிட எத்தனிக்கும்போது இவ்வாறான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதுவும் கொரியத் தீபகற்பத்தில் மேற்கொண்டால் அது தவறுதானே.

"இம்முறை வடகொரியாவில்
தவறில்லை..."

## யூதத்தின் ஆக்கிரமிப்பு

தொகுப்பு
பிரகாஸ்

### ரவுண்ட் த வேள்ட்

இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகம் ஜெருசலேமில் திறக்கப்பட்டது. காசா, ஜெருசலேம், மேற்குக் கரை உள்ளிட்ட இடங்களில் பல்லாயிரக் கணக்கான பலஸ்தீனர்கள் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த போதிலும் எதையும் கண்டு கொள்ளாமல் தனது சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்துள்ளது உலக வல்லரசு.

பரந்து விரிந்திருக்க பலஸ்தீனத்தை ஒவ்வொரு பகுதியாக படிப்படியாக ஆக்கிரமித்து வந்தது இஸ்ரேல். டெல் அவிவ், ஜெருசலேம் உள்ளிட்ட நகரங்கள்கூட ஆக்கிரமிப்பின் மூலமாகத்தான் இஸ்ரேலுக்குக் கிடைத்தன.

1948ஆம் ஆண்டு மே மாதம் இஸ்ரேலுக்கும் எகிப்து, ஜோர்தான், சிரியா உள்ளிட்ட அரபு நாடுகளுக்கும் இடையே நடந்த போரில் மேற்கு ஜெருசலேம் இஸ்ரேல் வசமும் கிழக்கு ஜெருசலேம் ஜோர்தானின் கட்டுப்பாட்டின் கீழும் வந்தன.

அதன்பிறகு 1967ஆம் ஆண்டில் நடந்த அரபு போரில் கிழக்கு ஜெருசலேமையும் இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றியது. பின்னர் ஒட்டுமொத்த ஜெருசலேமை இஸ்ரேல் தலைநகராக அந்த நாட்டு அரசு அறிவித்தது. எனினும் எந்த நாடும் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்கவில்லை.

சுமார் அரை நூற்றாண்டுக்குப் பின்னர் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்தார் ட்ரம்ப். இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகம் ஜெருசலேமுக்கு மாற்றப்படும் என்றும் அறிவித்தார். அதற்படியே அங்கு அமெரிக்கத் தூதரகம் அமைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை அது திறந்து வைக்கப்பட்டுள்ளது.




'யூத ஆக்கிரமிப்பின் உச்சக்கட்டம்...'

# என்றுதான் கிட்டும் இவர்களின் அவலத்துக்கு விடிவு?

கட்டுரை

ந.லோகதயாளன்


© EPA

தாயகத்தில் நிலவிய போர்ச் சூழலில் இருந்து தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில், மிகச் சிறிய படகுகளில் மன்னாரில் இருந்து புறப்பட்டுத் தமிழ் நாட்டில் தஞ்சமடைய ஆபத்தான பயணத்தை மேற்கொண்ட ஈழ அகதிகள், இன்று தமிழ்நாட்டு அகதி முகாம்களின் நெருக்கடி மற்றும் மத்திய, மாநில அரசுகளின் கண்டுகொள்ளாத் தன்மை என்பவற்றால் விரக்தியுற்று மீண்டும் அதே அவலப் பயணத்தின் மூலம் தாயகம் திரும்பி வருகின்றனர். நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக வடக்குக் கிழக்கைச் சேர்ந்த சுமார் 2இலட்சம் மக்கள் இந்தியாவுக்குத் தப்பியோடினர். இதில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் உள்ள 150க்கும் மேற்பட்ட முகாம்க ளில், கூடுகளில் அடைக்கப்பட்ட பறவைகள் போன்றே அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தாம் அனுபவிக்கும் அவலம் தொடர்பாகத் தெரிவிக்கும் செய்திகள் ஆயிரக்கணக்கில் நீண்டுகொண்டே செல்கின்றன.

**சில குடும்பங்களின் வருகைகள்...**

இந்த மாதம் 5ஆம் திகதி 12 அகதிகளும், 6ஆம் திகதி 4 அகதிகளும் தாயகம் திரும்பியிருந்தனர். இங்கிருந்து உயிரைக் காக்க தப்பியோடிய உறவுகள் அங்கும் உயிரைத் தவிர வேறு எதற்குமே உத்தரவாத மற்ற வாழ்வே வாழ்ந்ததாகப் பட்டியலிடுகின்றனர். கடந்த 5ஆம் திகதி தாயகம் திரும்பிய 12 பேரில், ஒன்பது மாதமேயான குழந்தை ஒன்று தாய் தந்தையின்றி உறவினர் ஒருவருடன் பயணித்துள்ளது. தாயகத்திலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற திருகோணமலையைச் சேர்ந்த அந்தக் குழந்தை உட்பட 12 பேர் அன்று படகு மூலம் தாயகம் திரும்பிய நிலையில் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

**குழந்தையை அழைத்துவர அனுமதிக்காத இந்தியச் சட்டம்**

திருகோணமலை, திருநகரில் இருந்து 2006ம் ஆண்டு போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்ற அவர்கள், இந்தியாவில் திருமணமாகி வாழ்ந்து வந்த நிலையில் முகாமை விட்டு வெளியே வசித்துள்ளனர். இதனால் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்புவதானால் விசாவின்றித் தங்கியிருந்தமைக்கான குற்றப்பணத்தைச் செலுத்தியே அனுமதி பெற்றுத் தாயகம் திரும்ப முடியும். அதற்கு அதிக பணம் செலவு ஏற்படும் என்பதாலும், இந்தியாவில் வாழ்வாதாரத்துக்கான வருமானம் அற்ற நிலையிலும், ஒரு முகவரின் ஊடாக படகுப் பயணத்துக்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா இந்தியப் பணத்தை வழங்கி கடந்த மாதம் 24ஆம் திகதி அங்கிருந்து இலங்கை திரும்புவதற்கான தமது பயணத்தை ஆரம்பித்தனர். புறப்பட்டவர்கள் இந்தியக் கரையை அண்மித்த பகுதியில் 8 நாள்கள் தங்கியிருந்து பின்னரான படகுப்பயணம் மூலம் காங்கேசன்துறையை அடைந்துள்ளனர். இவர்களை அழைத்து வந்த இரண்டு படகோட்டிகளும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இந்தப் 12 அகதிகளில் 3 பெண்கள் , 4 சிறுவர்கள் , 5 ஆண்களும் அடங்குகின்றதோடு அந்த 9 மாத கைக்குழந்தையும் அடங்குகிறது. இவ்வாறு காங்கேசன்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட அனைவரும் காங்கேசன்துறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றம் ஊடாக விடுவிக்கப்பட்டனர். குறித்த குழந்தையின் தாயார் கடந்த 24ம் திகதி உத்தியோக பூர்வமாக விமானம் மூலம் நாடு திரும்பிவிட்டார். இவர் யாழ்ப்பாணம் புத்தூர்ப் பகுதியைச் சேர்ந்தவர். அவருடன் குழந்தையை அழைத்துவருவதற்கு இந்தியச் சட்டங்கள் இடமளிக்காததாலேயே அந்தக் குழந்தை தனித்துக் கடல் வழியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**அகதிகளின் அவலப் பயணம் தொடர்கிறது...**

இதேநேரம் கடந்த 6ஆம் திகதி தாயகம் திரும்பிய 4 ஈழ அகதிகள் மாதகல் கடற் பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களும் திருகோணமலையில் இருந்து 2006ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மன்னார் வழியாகத் தமிழ்நாட்டுக்கு தப்பிச் சென்று மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களே. இவர்கள் விமானம் மூலம் தாயகம் திரும்புவதற்காக நீண்டகாலமாக விண்ணப்பித்திருந்துள்ளனர். இருப்பினும் அதற்கான செயல் வடிவங்கள் முற்று ப்பெறாமல்போகவே படகு மூலம் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில் ஒரு பெண் ஓர் ஆணுடன் இரண்டு சிறுவர்களும் அடங்குகின்றனர். சிறுவர்கள் இருவரும் 7 வயது மற்றும் 11 மாதங்களை உடையவர்கள். இவ்வாறு மண்டபம் முகாமில் இருந்து வேதாரணியம் வழியாக இந்திய மீனவர்களின் படகில் புறப்பட்டு நடுக் கடலில் இலங்கை மீனவர்களின் படகுக்கு மாற்றப்பட்ட நிலையில் கரைசேரும் நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்படும் வழக்கம் தொடர்கிறது.

**சந்திரலேகாவின் வாழ்க்கை சோகம் நிரம்பியது**

இப்போது தாயகம் திரும்பிய 30வயதுடைய சந்திரலேகாவின் வாழ்வு பெரும் சோகம் நிறைந்ததாகவே கானப்படுகின்றது. மண்டபம் முகாமில் 9855 இலக்கப் பதிவில் வாழ்ந்த சந்திரலேகாவுக்கு, இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து செல்லும்போது 17 வயது. அவரின் தாய் , தந்தை இருவருமே இறந்து விட்டனர். இந்த நிலையில் 2010ஆம் ஆண்டு திருமணம் செய்துள்ளார். சாதனா எனும் பெண் குழந்தை பிறந்துள்ளது. குறித்த சிறுமிக்குத் தற்போது 7 வயது. சந்திரலேகாவின் மண வாழ்க்கை நிலைக்கவில்லை. கணவர் பிரிந்து வாழ்ந்து பின்னர் தற்கொலை செய்து கொண்டார். சந்திரலேகாவின் தலையிலே குடும்பப் பாரம் வீழ்ந்தது.

முகாமில் இருந்த ஆரம்பகாலத்தில் இவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டபோதும் அண்மைக்காலமாக மாதம் ஒன்றுக்குக் குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாவும் அதை அடுத்த மூத்தவர்களுக்கு 750 ரூபாவும் சிறுவர்களுக்கு 500 ரூபாவும் மட்டுமே வழங்கப்பட்டு வந்துள்ளது. தாயும் பிள்ளையும் மாதம் ஆயிரத்து 500 ரூபா வருமாணத்தில் வாழும் அவலம் ஏற்பட்டது. இதனையடுத்து முகாம் வாழ்வின் மத்தியிலும் வேலை தேடினார். கிடைத்த வேலை காரணமாக மாதம் 2 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைத்தது. அதன் மூலம் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முனைந்த இவருக்குக் குடும்ப உறவுகள் கடும் வற்புறுத்தலின் பின்னர் மறுமணம் செய்து வைத்தனர். ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சந்திரலேகாவுக்கு இரண்டாவது திருமண வாழ்வும் நிலைக்கவில்லை. ஆனால் அந்த வாழ்வின் அடையாளமாக கிடைத்த ஆண்குழந்தை இன்று 11 மாதச் சிறுவனாகக் கையில் உள்ளான்.

**திரும்புவதற்கு ஏராளம் நெருக்கடிகள்...**

கடந்த 6ஆம் திகதி தாயகம் திரும்பியவர்கள் முகாமை விட்டு வெளியில் வசித்தமையால் தாயகம் திரும்ப ஆண்டு ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் செலுத்த அதிக பணம் தேவைப்பட்டமையால் சட்டபூர்வமற்ற விதத்தில் படகில் பயணித்திருந்தனர். நீங்கள்தான் முகாமில் வசித்தீர்களே

> **முகாமில் இருந்த ஆரம்பகாலத்தில் இவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டபோதும் தற்போது மாதம் ஒன்றுக்குக் குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாவும் அதை அடுத்த மூத்தவர்களுக்கு 750 ரூபாவும் சிறுவர்களுக்கு 500 ரூபாவும் மட்டுமே வழங்கப்படுகின்றது. தாயும் பிள்ளையும் மாதம் ஆயிரத்து 500 ரூபா வருமானத்தில் வாழும் அவலம் ஏற்பட்டது. இதனையடுத்து முகாம் வாழ்வின் மத்தியிலும் வேலை தேடினார்.**

விமானம் மூலம் யு.என்.எச்.சீ.ஆரில் பதிந்து தாயகம் திரும்பியிருக்கலாம் அல்லவா? என்ற வினாவை சந்திரலேகாவிடம் தொடுத்தோம்.

அவரின் அவலப் பட்டியல் மேலும் நீண்டது. அதாவது 7வயது மகளின் பிறப்புச் சான்றிதழ் 6 வருடங்கள் போராடியே பெற முடிந்த நிலையில் தற்போது 11 மாதமாக உள்ள இந்தப் பிள்ளைக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் போராடினால் பிறப்புச் சன்றிதழ் கிடைக்குமோ நான் அறியேன். அதன் காரணமாகவே உயிரே போனாலும் பரவாயில்லை என்ற நிலையில் நான் படகுப் பயணத்துக்கு முடிவெடுத்தேன். எனது பிள்ளையின் சான்றிதழுக்காகக் கடந்த 10 மாதங்களாகப் பல தடவைகள் முயன்றும் பயன் கிட்டவில்லை. இறுதியில் தாயகம் திரும்பவென கடந்த 2 ஆண்டுகளாக 3 தடவைகள் பதிவுகளை மேற்கொண்டோம். அதற்கும் பயனில்;லை . எனக்குத் தெரிய நான் இருந்த முகாமில் மட்டும் 530பேர் எம்மை உடனடியாகத் தாயகத்துக்கு அனுப்புங்கள் எனப் பதிவை மேற்கொண்டு காத்திருக்கிறார்கள்.

இவ்வாறு முகாம்களில் வாழ்ந்த எமக்கு அங்கு கட்டுப்பாடு என்னும் பெயரில் இடம்பெறும் கொடுமைகள் சொல்லமுடியாதவை. இதனால்தான் உயிரைக்கூட மதியாது எவ்வாறு சென்றோமோ அவ்வாறே சட்டபூர்வமற்ற விதத்தில் திரும்புகின்றோம். என்றார்.



இவ்வாறு உயிரைப் பணயம் வைத்து தாயகம் திரும்ப முற்பட்ட உறவுகள் இனி அதிகரிக்கலாம் என்றே எதிர்பார்க்கப்படுவதனால், அவர்களை ஏற்றிவரும் படகோட்டிகளை சிறைவைப்பதனால் மட்டும் இதற்கு தீர்வை எட்டமுடியாது. எனவே அரசும் அரசியல்வாதிகளும் உடனடியாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரை அணுகி இந்தியாவில் இருந்து தாயகம் திரும்ப விரும்பும் அகதிகள் அனைவரையும் சான்றிதழ் , குற்றப்பணம் என வதைக்காது கப்பல் மூலம் மன்னாருக்கு அழைத்து வருவது ஒன்றே இதற்குத் தீர்வாக அமையும். அல்லது இதற்குப் பின்பும் பொறுமை காத்தால் பாதுகாப்பற்ற பயணத்தில் ஏதாவது ஓர் அவலம் ஏற்பட்டு உயிரிழப்பை சந்தித்த பின்பு அந்தக் குடும்பங்களின் இல்லங்களுக்கு மலர் வளையத்துடன் பயணிப்பதில் மட்டும் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை.

## கதை 3

# காணாமல் ஆக்கப்பட்ட கதை....

வரப்பு வெட்டிவிட்டு
வாய்க்கல் தண்ணியில் முகம் கழுவி
பெருமூச்சுவிட்டு நிமிர்கையில் அழைத்தான் காலன்..
அஞ்சாறு கேள்விக்கு
அடுத்தடுத்துப் பதில் சொன்னேன்
அடுத்துக் கேட்ட கேள்விக்கு
அவனே பதில் சொன்னான்..

ஒற்றைப்புளியமரம்
என்னையும் தன்னடியில்
மண்டியிடவைத்துச் சிலிர்த்து நிற்க
எங்கோ நின்றவன் துப்பிய எச்சிலை
முகத்தில் வாங்கிக்கொண்டு
முன்னே நடக்கிறேன்


பின்னே வந்தவன் பிதற்றுகிறான் ஏதேதோ...

இன்று தலையாட்டி இல்லை..
அவர்கள் எல்லோரும் தலையாட்டிகளாய் நின்றார்கள்

நான்... நான்... நான்...?

அதோ!
யாரோ என்பெயரை
அரற்றிக்கொண்டிருக்கிறார்கள்...

அவர்களுக்குச் சொல்லிவிடுங்கள்
ஊரோரத்தில் இருக்கும் புளியமரத்திடம்
நான் வந்தவழி எதுவென்று கேட்கச் சொல்லி...




கவிதை
சி.சிவசேகரன்



கப்ரன் மலரவன்

# போர் உலா



"ஐயா, உங்கட தோட்டம் துறையளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோவன்."
"அதுகளைப் பற்றிச் சொல்லுறதெண்டா என்ர வாழ்க்கையைப் பற்றி சொல்லுறதுக்குச் சமன்."
"அப்ப ரெண்டையும் ஒன்றாத் தெரிஞ்சதாப்போகும்" நான் உற்சாகமூட்டினேன்.
"பொறு தம்பி வாறன். உவன் உந்தச் சுருட்டுக்கட்டை எங்க. வைச்சவன்?"தனக்குள் இழுத்தபடி மண் அறைக்குள் நுழைந்தார்.
கடப்புத்தடிகளை அகற்றியபடி இளைஞன் ஒருவன் வந்தான். தலைவாசலுக்குள் நுழைந்ததும் சிநேகிதமான ஒரு சிரிப்பை வீசியபடி "அப்பா" என்றபடி அறைக்குள் நுழைய "உந்தச் சுருட்டுக்கட்டு எங்கே மோனை?" என்றார் அப்பா.
சிறிது நேரத்திலை சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்து, அதை அணையவிடாது அடிக்கொரு தடவை இழுத்தபடி வெளியே வந்து, எதிர்க்குந்தில் அமர்ந்தார்.
"சுறுட்டுநல்லவிருப்பம்போல?"வாத்தியார் கூற, "ஆருக்கு உமக்கோ?" என மாஸ்ரைப் பார்த்து வாயில் விரலை வைத்து எச்சரித்தார். கிழவருக்குப், பழைய புராணங்க ளைப் புரட்டிப் பார்க்க இருவரும் அகப்பட்டோம்.
"எனக்குத் தம்பி இருபது இருபத்தைஞ்சு வயசிருக்கேக்க உந்தக் குளத்தை வெள்ளையனுகள் வந்து புதுசாப் பெரிப்பிச்சுக் கட்டினாங்கள். அப்ப நிறையத் தண்ணி நிக்கும். அவங்கள் சொன்னவங்கள் யாரும் காடுவெட்டி கமஞ்செய்தா ஒரு ஐந்து வருடத்தில் சொந்தமாக் காணி தருவம் எண்டவங்கள். எங்கட சனங்கள் எங்க ஒருத்தனும் மாட்டனெண்டுட்டாங்கள்"
"ஏனப்பு வசதியான நிலந்தானே?"
"இப்ப இப்படிச் சொல்லுவியள். அப்ப ஓர் ஆனைக்காடு, மனிச வாடையே காட்டேலாது. வெள்ளைக்காரனும் துவக்கோடதான் வருவான்".
"பிறகு நீங்கள் எப்படி....?"
"பொறன்" ஒரு தம் இழுத்து விட்டார்.
"வீட்டில ஆச்சியும் அப்புவும் அறுதியாச் சொல்லிப் போட்டினம், நீ போகாதையென்று. ஆனா எனக்கு மனம் கேக்கேல்ல. நைசா வெள்ளைக்காரங்களைப் பிடிச்சு ஒரு துவக்கு வாங்கிப்போட்டன். அதுக்கு அப்பு குதிச்ச குதி! ஆற்றா உன்னைத் துவக்கு வாங்கி வீட்டுக்கை கொண்டரச் சொன்னது, என்று திட்டிச்சுது மனுசன். நான் விடாமல் வந்து குளத்துக்கு நல்லா நீர் ஏறக்குடியதாய் காணியை வெட்டிப்போட்டான். ஒவ்வொரு வருஷமும் தண்ணி தட்டுப்பாடில்லாமல் பயிரெல்லாம் நல்லா வளர்ந்து வர, பிறகு மிருகமெல்லாம் பூந்து அழிச்சுப்போட்டுப் போடும்!"
"உங்களுக்குச் சலிக்கேல்லையே?"
"நான் விடேல்லை,தொடர்ந்து செய்து செய்துகொஞ்சம் கொஞ்சமாத் தேடினன். பிறகு கையோட ஒரு கலியாணம் செய்துகொண்டன்" புகையை நன்றாக உள்ளிளுத்து விட்ட பின் காறித்துப்பினார்.
"பிறகு தான் உவன் சிவலை மணியம், செல்லத்துரை, வேலன் ஆள்கள் வந்து குடியேறினவங்கள். எல்லாம் நான் இருக்கிற துணிவுதான்." கிழவர் புளுகத் தொடங்குவதைச் சுவாரசியமாகக் கேட்டோம். "ஒருநாள் இரவு உந்த மேட்டிலதான் அப்ப என்ரை குடிசை. வேலன் ஓடி வந்தான். "ஐயோ வெள்ளையம்மான். நாலைஞ்சு யானை என்ரை புலவுக்கை பூந்து தின்னுதுகள். வெடி போடப் போடப் போகுதுகளில்லை. நீங்கதான் ஒருக்கா வரவேணும்" என்று
என்னடா கரைச்சல் என்று போனா ஆனைகள் நிண்டினம். எனக்குத் தெரியேல்ல. கொஞ்ச வெறியுந்தான். அவன் வேலன் நின்றது எனக்குத் தெரியாது. இருந்தாப் போல மூசிவிட்டுது ஒரு ஆனை. பங்க போய் விழுந்தன். திரும்பிப் பார்த்தன். அஞ்சாறு கண்ணுகள் தெறித்துக் கொண்டு நின்றதுகள். ஓடவும் பாக்கியில்ல. கிடந்தபடி வைச்சன் வெடி. அதுவும் ஒரு கையாலதான். விழுந்ததில மற்றக்கை பிரண்டுபோச்சு. எல்லா ஆனையும் பார்த்துப் பார்த்து ஓடிச்சுது. அடுத்தநாள் காட்டுக்குள் ஒரு ஆனை கிடந்தது என்று சொன்னாங்கள். வெள்ளையனும் சிறீலங்கன்களும் எனக்குக் கையெல்லாம் கொடுத்தாங்கள். அதுவல்லலோ காலம்!"
"அப்ப நீங்கள் பொல்லாத வேட்டைக்காரன்தான்?"
"ஓ, வைச்சனென்றால் குறி தவறாது. ஞாயமாய் வேட்டையாடுவன்.பிறகு பிள்ளை குட்டிகள் பிறந்து வளர்ந்து இப்படியிருக்கிறன்."

**எனக்குத் தம்பி இருபது இருபத்தைஞ்சு வயசிருக்கேக்க உந்தக் குளத்தை வெள்ளையனுகள் வந்து புதுசாப் பெரிப்பிச்சுக் கட்டினாங்கள். அப்ப நிறையத் தண்ணி நிக்கும். அவங்கள் சொன்னவங்கள் யாரும் காடுவெட்டி கமஞ்செய்தா ஒரு ஐந்து வருடத்தில் சொந்தமாக் காணி தருவம் எண்டவங்கள். எங்கட சனங்கள் எங்க ஒருத்தனும் மாட்ட னெண்டுட்டாங்கள்.**

25

இம்... என அவர் இழுக்கவும் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகக் கேட்கவும் சரியாக இருந்தது. துரிதமாக எங்களது அணிகளை நிரைப்படுத்திச் சில போராளிகளைத் தேர்ந்தெடுத்த பின் ஏனைய போராளிகளைக் குழுக்களாக்கி எமது பீரங்கிகளைச் சூழ்ந்து வியூகமாகக் காவலில் ஈடுபடுத்த அனுப்பிய பின் விரைந்தோம். வோக்கிகளைச் சரியான அலைவரிசையில் இயக்கிய பின், கிட்டத்தட்ட சண்டை நடைபெறும் இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் நிறுத்திய பின் விரைந்து ஓடத் தொடங்கினோம். எமது வருகையைச் சண்டையில் ஈடுபட்டுள்ள எமது அணிகளுக்கு அறிவித்தபோது எமது தரப்பில் மாதவன் தலைமையேற்றுப் பொருதுவதாக அறிந்துகொண்டோம். புதுவிளான் குளத்திலிருந்து இருளில் பாதையை மாறிக் காட்டினூடு நடக்க முற்பட்ட எங்களைப் பின்னால் விரைந்து வந்த குரல் இடைநிறுத்தியது."என்ன நானும் வாறன். இப்ப எவ்விடத்துக்கு போக வேணும்? சொல்லுங்கோ" அருகில் வந்த பின்னர்தான் அவர் அந்த ஐயாவின் மகன் எனக் கண்டுகொண்டேன். கையில் வேட்டைத் துப்பாக்கி இருந்தது.
"அட நீங்களே, எப்படி? வாத்தியார் வீட்டையல்லோ நின்றனியள். எனக்குத் தெரியாமல் நீங்கள் போட்டியள். நான் சேட்டும் போடாமல் துவக்கையும் பத்து காட்ரட்சையும் கொண்டு வந்திட்டன். இப்ப எங்க போக வேணும்?"
சண்டை நடக்கும் இலக்கையும் அதில் நாம் எந்தப் புறமாகத் தாக்க வேண்டும் என்பதையும் கூற, "வாருங்கோ காட்டுறன்" என முன்பாக நடந்தார். நான் அவரைத் தொடர ஏனையோர் வியூகமாக வந்தனர். சறுக் சடார் எனக் காட்டுச் செடிகளை முறித்தபடி அவன் சென்ற வேகம் எம்மைத் திணற வைத்தது. அவர் விரைவாக நடக்கையில் நாம் அவருக்குச் சமமாக ஓடியே செல்ல வேண்டிருந்தது.
சிறிது தரித்து ஒரு கையால் காலில் ஏதோ எடுத்து எறிந்த பின் வேகமாய்ச் செல்ல,"என்ன அண்ணை செருப்புப் போடாமலே வந்தனியள்?" என, "ஓ இதெல்லாம் எங்களுக்கு பழக்கம்" என்றார். வேட்டைத் துவக்கைச் செடிகளில்படாமல் லாவகமாக அசைத்தபடி நடந்தார். இலக்கை அண்மித்தவுடன் எம்மவர்களை நிலையெடுக்கும்படி கூறிவிட்டு, வோக்கியில் நிலையை மாதவனிடம் கேட்க பிரச்சினைகளையும் எதிரியின் பலம், பலவீனத்தையும் எடுத்துச் சொன்னவுடன் இதற்குரிய கட்டளைகளை ஏனையோருக்குப் பிறப்பித்தபின் இருளை ஊடறுத்து முன்னே சென்றோம். (தொடரும்)

தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்

# நின்னைச் சரணடைந்தேன்

அத்தியாயம் 14

ரவி சங்கரும் ரமேஸ்பாபுவும் சேர்ந்து ஆரம்பித்த அமுதசுரபி என்ற புடவைக்கடைநன்குவளர்ச்சி பெற்று பிரபலமான ஒரு விற்பனை நிலையமாக விளங்குகிறது. பத்துக்கு மேற்பட்டவர்கள் அந்தக் கடையில் வேலை செய்கிறார்கள். நாணயமாகவும், நம்பிக்கையாகவும் இயங்கும் அந்தக் கடையில் பெண்களும் வேலை செய்கிறார்கள். நல்ல சம்பளம் மட்டுமல்லாமல் பொதுமக்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளது கடை. அங்கே வேலை செய்பவர்கள் ஒரே குடும்பத்த வர்கள் போல அன்போடும் பண்போடும் நடந்து கொள்கிறார்கள். சிறிதாக ஆரம்பித்து நகரின் மத்தியில் மாடிக்கட்டடத்தில் பலரையும் கவரும் வண்ணம் இயங்கிக் கொண்டிருக்கின்றது அமுதசுரபி.

தனது வீட்டில் நடைபெற்ற சண்முகம் குடும்பத்தின் கதையை ரவிசங்கர் சொல்லிக்கொண்டிருக்க ரமேஷ்பாபு உட்பட தொழிலாளர்கள் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"ஏன் ரவி மேல்மாடியிலை நாங்களும் ஒரு குடும்ப நீதிமன்றத்தை நடத்தினால் எங்களுக்கும் நிறையக் கேஸ் வருமில்லையா?"என்று கேட்டுச் சிரித்தார் பாபு.

''அண்ணே! ரவியண்ணாவையே. தலைவராகப் போடலாம் இல்லையா?" என்றான் ஒரு தொழிலாளி.

"போடலாம் ஊரில் உள்ள உதவாக்கரைகளெல்லாம் இங்கே வந்து உங்களையும் பழுதாக்கி விடுங்களே" என்று சிரித்தான் ரமேஷ்பாபு.

"நீங்கள் யாரும் இப்படி வராமலிருந்தால் போதுமடா சாமி"என்று கூறிச் சிரித்தான் ரவிசங்கர்.

முதலாளி, தொழிலாளி என்றல்லாமல் எல்லோரும் நல்ல அண்ணன் தம்பிகளாகப் பழகுவதால் அவர்களுக்குள் உயர்வு, தாழ்வு பேதம் இல்லாமல் நடந்து கொண்டார்கள்.

"ஏன் ரவி அடுத்த றோட்டில் உள்ள பான்ஸிக்கடையை அவன் மூடப் போறானாம். நாங்கள் அதை எடுத்து பிஸ்னஸ்ஸை டெவலப் பண்ணினால் என்ன?" என்றான் ரமேஸ்பாபு.

''பாபு! நல்ல யோசனைதான். அதை வாங்கி டெவலப் பண்ணுவதை விட மேலே மாடி சும்மா தானே கிடக்கு. அதையே ஷோரூமாக்கி டெவலப்பாக்கலாமே. மூன்று நான்கு பேருக்குத் தொழிலும் கிடைக்கும் அமுதசுரபி சுரந்து கொண்டிருக்கட்டுமே" என்றான் ரவி.

"அண்ணே! ரவி அண்ணா சொல்லுவது தான் சரி. அந்த பான்ஸிபலஸ் அதிகம் ராசியில்லாத இடம். மேலே ஷோரூம் ஆக்கினால் ஜென்ஸ் அயிற்றத்தை அங்க மாத்திவிடலாம்"என்றான் ஒரு தொழிலாளி. அதை எல்லோரும் வரவேற்றனர்.

"ரவி! நீ எங்கேயோ இருக்க வேண்டிய ஆள். இங்கே தோட்டம் துறவு எண்டும் பிஸ்னஸ் எண்டும் அலைஞ்சு கொண்டிருக்கின்றாய். உண்மையில் நானும் எப்போதோ இதைப் பூட்டி விட்டுப் போயிருப்பேன்"என்றான் பாபு.

"பாபு! என் தலை எழுத்துப்படிதான் எல்லாம் நடக்கும். இப்போது எனக்கு என்ன குறை? என்னைப்போல ஒருவன் ஆலோசனை வழங்கினாலும் செயற்படுத்துவது நீ தானே. அது மட்டுமா எங்களுக்கு கிடைத்த தொழிலாளிகளும் எங்களைப் போன்றிருப்பதால் தான் அமுதசுரபி அள்ள அள்ளக் குறையாது வளர்ந்து கொண்டிருக்கின்றது. நம்பிக்கையாகவும், நாணயமாகவும் நாங்கள் நடப்பதால் வாடிக்கையாளர்கள் எங்கள் கடையைத் தேடிவருகிறார்கள். இது போதாதா? பேராசைப்பட்டு அகலக்கால் வைத்தால் சில சமயம் தலை குப்புற விழ நேரிடலாம். இதுவே எங்களுக்கும் போதும்" என்றான்.

"ரவி! உன் மூளையை முதலில் இன்சுரன்ஸ் செய்ய வேணுமப்பா. எனக்கு இப்படி எல்லாம் தோணுதில்லையே. நம்பிக்கையாக, நாணயமாக பொய், புரளி இல்லாமல், நம்பிக்கைத் துரோகம் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற உறுதியுடனிருந்தாலும் புதிதாகச் சிந்தித்துச் செயற்பட முடியாமலிருக்கின்றது ஏன்?"

"பாபு! இந்த ஸ்தாபனத்தை தாங்கி நிற்கும் பொறுப்பு உனக்கிருக்கின்றது. வேறு சிந்தனைக்கு இடமிருக்க நியாயம் இல்லை. நல்ல நிலையிருக்கும் இந்த நிறுவனத்தை எப்படி நடத்த வேண்டும் என்ற சிந்தனையே தவிர மற்றவற்றைப் பற்றி நினைக்கத் தோன்றாது. எனக்கு அப்படியில்லை. வேறு விடயங்கள் பற்றிச் சிந்திக்க, படிக்க அவகாசமிருக்கின்றது. அதனால் பலதையும் சிந்திப்பேன். நீ கேட்பவற்றை சொல்வேன் அவ்வளவு தான்."

''சரி! நீ வந்து போவதால் எனக்கும் வேலைப்பழு குறைகின்றது. எல்லோருடனும் கலந்தாலோசிக்கவும் முடிகின்றது.



அதுசரி நீ புதிதாய் கல்யாணம் செய்தனி. நேர காலத்துக்கு வீட்டுக்குப் போ. அந்தப் பிள்ளை காத்துக்கொண்டிருக்கும்"

"பாபு. நாம் சம வயதுக்காரர். நீ நேர காலத்தில் திருமணம் செய்து கொண்டாய். நான் இப்போதான் திருமண வாழ்வில் புகுந்துள்ளேன். உங்களுக்கு ஒன்று சொல்லட்டுமா?"

"சொல்லு சொல்லு என்னென்று பார்ப்பம்??"

"பெண்கள் காத்திருந்தால் தான் எங்கள் அருமை தெரியும். நேரத்துக்குபோய் காவலிருந்தால் அவர்களின் கையோங்கி விடும். இந்த விடயத்தில் முதலே நாங்கள் விட்டுக் கொடுத்து நடந்தால் பின்பு சிரமப்பட நேரும்"

"நீ சொல்வதிலும் உண்மையிருக்கு ரவி. இருந்தாலும் விளையாட்டுத்தனமாய் இருக்காமல் நேரத்துக்குப் போய் அந்தப் பிள்ளையைச் சந்தோஷப்படுத்தும். ஏன் நானும் வைவ்வும். டொக்டரிடம் போய்ச் செக்கப் பண்ணிப் பார்த்து விட்டம். ஒரு பிரச்சினையும் இல்லை. குழந்தை வர வாய்ப்பு இருக்கு என்று சொல்லுறார்கள். இது எனக்குப் பெரும் பிரச்சினையாயிருக்குது. சிலர் இந்தியாவுக்குப் போய்... தெரியும் தானே அப்படிச் செய்தால் என்ன என்று வைவ் நச்சரிக்கிறாள். என்ன செய்யலாம் ரவி?"

"குழந்தை கிடைக்க வாய்ப்பிருக்கு என்று தெரியுது தானே. ஆண்டவனை நன்கு வேண்டிக் கொள்ளுங்கள். உங்கள் நல்ல மனதுக்கு நிச்சயம் குழந்தை கிடைக்கும்."

"நீதான்ரவிஎனக்கு ஆறுதலாகவார்த்தை கூறியிருக்கிறாய். நாம் என்ன முயற்சி செய்தாலும் அவன் விரும்பினாலன்றி எதுவும் நடக்காது இல்லையா?"

''பாபு! நல்லவர்களை ஆண்டவன் சோதிப்பான். கைவிடமாட்டான். உன் நல்ல மனதுக்கு நிச்சயமாய் நல்லது நடக்கும் மனதை அலைபாய விடாத"

"சரி! நீ சொன்னால் அந்த ஆண்டவனே சொன்ன மாதிரித்தான். போயிட்டு வா. நேரத்துக்கு வந்து நேரத்துக்கு வீட்டுக்குப் போ. கொஞ்ச நாளைக்குத்தான் பின்பு ஆறுதலாகப் போகலாம்'' என்று கூறி விடை கொடுத்தனிப்பினான்.

ரமேஷ், பாபு கூறியதுபோல அவன் வரவை எதிர்பார்த்துக் ஹோலில் காத்திருந்தாள் சுவேதா. அவனைப் பார்த்ததும் எழுந்து வந்து "அத்தை வந்திருந்தவா. ஆறுமணி வரைக்கும் பார்த்துக்கொண்டிருந்திட்டுப்போறா. கொஞ்சம் நேரத்துடன் வரலாமில்லையா?"என்றாள்.

"சரி மேடம் நாளை முதல் நேரத்துடன் வர முயற்சிக்கிறன். அம்மாட்டச் சொல்லிப்போட்டுத்தானே போனனான். இஞ்சவாறதப்பற்றி அவர் எனக்குச்சொல்லவில்லையே. சொல்லியிருந்தால் நேரத்துக்கு வந்திருப்பன். பாபு என்னைப் போகும் படி தான் சொன்னவர். நான் நேரத்துக்கு புறப்பட்டால் பெடியங்கள் கேலியாகச் சிரிப்பார்கள் எண்டு..."

"அங்கே வேலை செய்பவர்களா? அது சரி பெண்களும் நேரம் செல்லத்தான் போவார்களா?"

"அவர்களை ஐந்து மணிக்கே பாபு அனுப்பி விடுவார்"

''முகம் கழுவிவிட்டு வாங்கோ. நான் உங்களைப் பார்த்துக்கொண்டிருந்ததால் இன்னமும் தேனீர் குடிக்கவில்லை. உடுப்பை மாத்திக்கொண்டு கெதியாய் வாங்கோ"

"சுவேதா! ஒருசின்ன வேண்டுகோள்"

"சொல்லுங்கோ"

"ஐந்து நிமிடம் பொறுத்துக்கொள். மேலெல்லாம் ஒரே வியர்வை. சின்னதாய் ஒரு குளியல் போட்டிட்டு வாறன்"

"என்னவோ செய்யுங்கள். நான் சொன்னால் கேட்கவா போறீங்கள். பிளீஸ் கம் குவிக்".என்று கூறி விட்டு உள்ள சென்றரள்.

இருவரும் தேனீர் பருகிவிட்டு அன்றைய புதினங்கள் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர். விசாலியின் பிரச்சினையை அவள் சொல்லி முடித்துவிட்டு, ''என் காலில் விழாத குறையாக உங்களைப் பற்றிப் புகழ் பாடினாள். கடைசியாக மேடம் அவர் வந்தாலும் கண்ணூறுக்குத் துடைச்சுப் போடுங்கள்"என்று கூறினாள்.

"...யப்பா! அப்படியா சொன்னாள். அவளுடைய அம்மாவை புறெக்ரர் சிவநேசன் நல்லா பிறைன் வோஷ் பண்ணித் தான் கூட்டி வந்திருக்கிறார். பாவம் மனிசி அழத் தொடங்கிவிட்டுது. ஏதோ நல்ல படியாய் எல்லாம் முடிஞ்சுது. உனக்குத்தான் சுவேதா நல்ல பெயர். நீ இருந்திருக்க வேணும் மிஸ் பண்ணி விட்டாய்."

"பரவாயில்லை. உங்கள் உருவில் நானிருந்தேன். எனக்காகத் தானே நீங்கள் தலையிட்டீர்கள். போதாதா?'' என்று அவன் மடி மீது சாய்ந்து கொண்டாள்.

"அப்படியானால் விசாலி சொன்னதை உனக்குத் தான் செய்ய வேண்டும்'' என்று கூறி அவள் கன்னங்களை வருடி விட்டான்.

ஒரு பெண்ணுக்குத் தனது கணவனை மற்றவர்கள் புகழும்போது அவள் மனதில் அவன் மீது இருக்கும் அன்பும், அதனால் ஏற்படும் ஈர்ப்பும், உணர்வும் எழுத்தில் வர்ணிக்க முடியாத விடயங்கள். அவள் மனதில் கொந்தளிக்கும் இனிய உணர்வுகளுக்கு அவனுடைய வருடல் வீணையின் தந்திகளை மீட்டியதுபோன்ற சுகானந்தக் கிறக்கத்தை ஏற்படுத்தியது. உணர்வுகள் கிளர்ந்து எழும்பொழுது மொழி அங்கே மௌனித்து விடுகிறது. அந்த ஆனந்தத் தாலாட்டில் மெய் மறந்து கிடந்தாள்.

"சுவேதா தூங்கி விட்டீரா?" என்று அவள் கன்னத்தில் தட்டினான்.

"இல்லையே! இந்த அனுபவம் என்னை எங்கையோ அழைத்துச் சென்று விட்டது. விடியும் வரையும் உங்கள் மடிமீது தூங்க வேண்டும் போலிருக்கு ரவி"

"மணி ஒன்பதாகப் போகிறது. இன்னும் சாப்பிட வரேல்லை எண்டு அம்மா பாத்துக்கொண்டிருக்கப் போறா. பாவம் வயதான காலத்தில் அவாவின்ர தூக்கத்தைக் கெடுத்துக் காவலிருக்க வைக்கக் கூடாது"என்றான்.

இருவரும் எழுந்து சென்றனர். சுந்தரமூர்த்தி அப்பொழுது தான் இரவு உணவை முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போயிருந்தார். இவர்கள் உணவை முடித்துக்கொண்டு படுக்கையறைக்குச் சென்றனர். அவர்களின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்ததுபோல தொலைபேசி மணி ஒலித்தது. ரவிசங்கர் தொலைபேசியை எடுத்து "ஹலோ"என்றான்.

"ஹலோ! சுவேதா மேடம் நிற்கிறார்களா?"

"வெயிட் எ மினிற்" என்றவன் சுவேதாவிடம் தொலைபேசியைக் கொடுத்தான்.

"மேடம் நான் நவனீத கிருஸ்ணன் பேசுறன். மீஸ்டரிடம் விசயம் கூறினீங்களா?"

"வெறி சொறி கிருஸ்ணா. நான் மறந்திட்டன். அவரிடம் கேட்டு விட்டு நாளை காலையில் சொல்கிறேன் ஓ.கே" என்று கூறிவிட்டுத் தொலைபேசியை வைத்தாள். "என்ன சுவேதா ஏதுவும் பிரச்சினையா?"

"அது ஒரு விசயம் உங்களைக் கேட்டு விட்டுச் சொல்வதாகக் கூறினேன். மறந்து விட்டன்" என்று கூற ஆரம்பித்தாள்.

இன்றைய சமூகம் நாகரீகப் பாணியில் எதையும் அணுக முயற்சிக்கின்றது. புதுமணத் தம்பதிகளுக்கு வரவேற்பு உபசாரம் செய்ய வேண்டும் என்று சுவேதாவின் அலுவலக ஊழியர்கள் விரும்புவதாக நவநீத கிருஸ்ணன் வந்து கூறினான். சுவேதா எதற்கும் கணவனிடம் கதைத்து விட்டுக் கூறுவதாகக் கூறியிருந்தாள். இப்போது அதை ரவி சங்கரிடம் கூறினாள் சுவேதா.

''சுவேதா திருமணம் நடந்து இருபது நாள்களுக்கு மேலாகிவிட்டன. இதெல்லாம் தேவையில்லாத விசயம். எல்லோரும் திருமணத்தன்று வந்து கலந்து கொண்டவர்கள் தானே. அப்புறம் என்ன?" என்றான்.

''எனக்கும் விருப்பமில்லைத்தான் உடனே நான் சொன்னால் திமிர் பிடித்தவள் என்று நினைப்பார்கள். அதனால் உங்களுடன் கதைத்து விட்டுச் சொல்வதாகக் கூறினேன்"

"நன்றும் தீதும் பிறர் தரவாராது என்று மூத்தோர் கூறிய வாக்கியம் எவ்வளவு உண்மை என்பது புலனாகின்றது"

"புரியவில்லையே"

"விசாலியின் விடயம் சொன்னாய். உன்னுருவில் நானிருந்து தீர்த்து வைத்ததாய்ப் பெருமைப்பட்டாய். நல்ல விடயம். இப்ப நீர் கூறின விடயம் என்னை அவர்கள் திமிர் பிடித்தவன் என்றல்லவா நினைப்பார்கள். இந்த இரண்டும் நீர் தந்ததும் தரப்போறதும்'' என்று கூறிச் சிரித்தான்.

(தொடரும்)

# அதல பாதாளம்

எத்தனைவிதமான உணர்வுகள் வெள்ளை வெளேரென்ற மணிச்சோறு; அது முத்துச் சம்பாவில் ஆக்கப்பட்டது. வெதுவெதுப்பான சூடு; நகச் சூடு என்பார்களே அதைப் போல.

வட்ட்மான அந்த மேசையில் பத்துக்கும் மேற்பட்ட கோப்பைகள் பரப்பப்பட்டிருக்கின்றன.

முதலாவது தட்டு; அதிலே செங்குருதி நிறமான குளம்பு வெண்ணை திரளும் அழகே அழகு. இரண்டாவது தட்டு நெய்யிலே பொரிக்கப்பட்ட ஏதோ ஒரு கிழங்கு! மூன்றாவது தட்டு; கொலு வீற்றிருக்கும் அப்பளப் பொரியல்!

இப்படியே அத்தனை தட்டுக்களும் நிரப்பப்பட்டிருக்கின்றன. அத்தனை உணவுகளின் வாசனையும் ஒன்று சேர்ந்து கமகமவென்ற ஒரு புதுவிதமான வாடையைக் கிளப்புகின்றன. அது காற்றிலே மிதந்து கலைகிறது.

கணபதியின் கண்களிலே ஒளிதுள்ளுகிறது. இமைகளை அகல விரித்துப் பார்க்கிறான். நாவியைப் போல இமைகொட்டாது பார்க்கிறான். எதை முதலில் தொடுவது என்கின்ற பிரச்சினை? அவனது குரல்வளை மேலும்கீழுமாக அசைகிறது. அது தன்னைத்தானே முறித்துக்கொள்கிறது. அந்த ஓசை நன்றாகக் கேட்கிறது. மீண்டும் மீண்டும் அவன் பார்க்கிறான்.

புதுவண்ணங்கள் தீட்டப்பட்ட அழகிய தட்டு ஒன்று பெரியதாக இருக்கிறது. இசைத்தட்டைப்போல. பென்னம் பெரியதாக இருக்கும் அந்தத் தட்டு சற்றே கோலி, வெள்ளை வெளேரென்று இருக்கிறது. புத்தம் புதியதான பல வர்ணங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஓடி விளையாடும் சிறுவர் கூட்டத்தின் குதூகலிப்பு! பக்கத்தே ஒய்யாரமான மாடி வீடு, எத்தனை அடுக்குகள்!

மற்றப் புறத்தில் அழகிய நந்தவனம்; விதம் விதமான மலர்கள், மொட்டுக்கள், தளிர்கள், எரித்துவரும் நிலா வட்டம்.

மறுகோடியிலே, பனங்குருத்துப்போல எரித்து வரும் ஆதவனின் ஒளிக் கிரணங்கள். அதை நோக்கி அணிவகுத்துச் செல்லும் வாலிபர் கூட்டம். ஆண்களுடன் பெண்களும் கலந்தடித்துக்கொண்டு செல்கின்றனர். அவர்கள் சிலரது பட்டொளிவிட்டுப் பறக்கும் கொடிக் கம்பங்கள். வெறுமனே செல்பவர்கள் முஷ்டியை உயர்த்திக்கொண்டு விரைந்து செல்கிறார்கள். எப்படி எல்லாமோ கோஷமிடுகிறார்கள். எரித்துவரும் சூரியனைநோக்கி முன்னேறு கிறார்கள்.

இத்தனை காட்சிகளையும் கணபதி தொடர்ந்து பார்த்துக்கொண்டேயிருக்கிறான். அவன் பசியை மறந்துவிட்டான். அந்த உருவங்களுடன் அவன் ஒன்றிவிட்டான். ஏறு புருவங்களும் சரிந்த கண்களுள்ள அந்த உருவங்கள் அவனுடன் பேசுவதுபோலவும், ஒரு கைலாகு கொடுப்பது போலவும், கட்டித் தழுவுவது போலவும் பிரமை! நீண்டதொரு ஆரவாரம், சந்தோஷத்தின் எக்களிப்பு!

கடைசியில் அவன் சுயநிலைக்கு வந்துவிட்டான். உணவருந்த ஆரம்பித்து விட்டான்.

சாப்பிட்டாகி முடிந்தது. நீண்ட ஏப்பம் வருகிறது! 'உள்ளே போய்ச் சேர்ந்து விட்டேன்' என்று உணவு தரும் தகவல்!

பனிகொட்டுகிறது. அது உலகத்து உயிர்களை நடுங்க வைக்கிறது. பற்கள் ஒன்றுடன் ஒன்று முட்டி அடித்துக் கொள்கின்றன. கரடுமுரடான பாதையில் ஓடிச் செல்லும் மாட்டு வண்டியைப்போல அந்த ஓசை மண்டைக்குள்ளே கேட்கிறது. அப்பப்ப, என்ன குளிர்!

அழகான நீண்ட பீரோவைக் கணபதி திறக்கிறான். கைபட்டாலே அதன் அழகு குன்றிவிடும்; அது அத்தனை மினுமினுப்பு!

நான்கு அடுக்குகளில் உடை அடுக்கப்பட்டிருக்கிறது. அத்தனையும் விதவிதமான வர்ணங்கள்! எதை எடுப்பது அணிவது என்பது அவனுக்குப் பிரச்சினை.

"நேற்றுப் போட்டதை எடுக்கலாமா?" இப்படி மனம் கூறுகிறது. "சீ! அழுக்காய்விட்டது. இரண்டு நாள்களுக்கு ஓர் உடையை எப்படித்தான் போடுவது?" இப்படி மற்றொரு மனம் கூறுகிறது. அவனுக்குத் தடுமாற்றமாய் இக்கிறது. தலையைச் சொறிந்துகொண்டே அவன் நிற்கிறான். கூதல்! அப்பப்பா, அது வரவர அதிகரிக்கிறது. கைகளை ஆட்டவே முடியவில்லை. அதுபட்ட இடமெல்லாம் ஈயம் போலக் குளிர்கிறது. தெப்ப நனைந்துவிட்ட சிறு குழந்தையைப்போல கைகளை ஒடுக்கிக் கொண்டே அவன் நடுங்குகிறான்.

கடைசியில் ஓர் உடையை அவன் எடுத்து விட்டான். அதன் அழைகைத் தானாகவே ரசிக்கிறான். அது ஒரு நீண்டதான சுவெற்றர். அதிலே வெள்ளை வெளேரென்ற ஒரு லேபல் ஒட்டப்பட்டிருக்கிறது. அது புத்தம் புதியது. சிவப்பான எடுப்பான ஒரு வாலிபன் தொன்மையான ஓர் உடையை அணிந்துகொண்டு நெருப்பு நிறக்கொடி பறந்து கொண்டிருக்கும் ஒரு கம்பத்தை பனிப்படலத்தின் மேல் ஊன்றுகிறான். அது ஒரு பரந்த வெளி, பனிப் பாலைவனம்! அவன் கால்களிலே ஏதோ இணைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படத்திலிருந்தும் எழிலுடன் அவன் ஏதேதோ பேசுகிறான். புதிய விதமான ஒரு பாஷை! இருவரும் எப்படியோ பேசிக் கொள்கின்றனர். கைகூப்பி வணங்குகிறான். சிரிக்கிறான். தொடர்ந்து சிரித்துக்கொண்டே இருக்கிறான். புகை மண்டலத்தில் அந்த உருவம் மறைகிறது. அவன் தொலைவுக்குப் போய்விட்டான். முத்துப்போன்ற அவனது பல்வரிசை இன்னமும் தெரிகிறது.

■ ■ ■

வானத்தின் வெள்ளித்திவலைகளைக் கருமேகங்கள் திரையிட்டு மறைக்கின்றன. பாதிவனம் கண் சிமிட்டி நகைக்கிறது. மூடப்பட்ட பாதிவனம் மின்னுகிறது. கோபத்தால் சீறுகிறது.

கருமேகக் கூட்டங்கள் குளமற்றுக் கிடக்கின்றன. ஒன்றை ஒன்று நெருடித் தள்ளுகின்றன. மின்னலின் கீற்றுக் கோட்டிலே அதன் விளிம்புகள் புருவங்களாகப் புடைத்து நிற்கின்றன. நடுவானத்தை நோக்கி நகர்கின்றன. ஓடி ஒத்துள்ளிச் சிரிக்கும் மின்னலைக்கண்டு வானம் சீறுகிறது. முகில் மறைவிலே கிடந்து சீறுகிறது. தகர வீட்டிலே பொழியப்படும் கல்மாரியைப்போல பயங்கரமாய் இருக்கிறது.

மழை கொட்டுகிறது. துரிதமடைகிறது. துமிச் சத்தம் தழதழக்கிறது. ஆற்றோட்டம்போல வெள்ளம் வழி பிரிந்தோடுகிறது.

வெள்ளக் காட்டின்மேல் துமிச் சத்தம். அது தணிந்து கொண்டு முன்னேறுகிறது. தவளைகளின் முனகல் சத்தம் சிறிது சிறிதாக முன்னேறுகிறது. கடைசியில் உச்ச நிலைக்கு வந்து விட்டது. அது விதவிதமாகக் கேட்கிறது. அதில் எத்தனை இன்பம்.!

இலேசான காற்று இனம் மாறிவருகிறது. எங்கோ ஒரு கோணத்திலிருந்து அது சீறிக்கொண்டு வருகிறது. பயங்கரமான சூறாவளி! அப்பப்பா, எத்தனை கோபம்? உலகத்தையே ஒரு கணத்தில் அழித்து விடுவதுபோல. திறந்து கிடந்த ஜன்னல் கதவுகள் ஒன்றுடன் ஒன்று மோதியடித்துக் கொள்கின்றன.

கணபதி எழுந்து செல்லாமலே கைகளை மேலாகத் தூக்கி ஏதோ ஒரு முனையை அமுக்குகிறான். மறுகணம் அந்த அறை எங்கும் ஜெககஜோதியான வெளிச்சம். ஜன்னல்புறமாக தூவானம் மின்னிச் சிதறுகிறது. ஜன்னல் சீலைகள் விம்மிப் புடைக்கின்றன.

ஜன்னலைச் சாத்துகிறான். முன் கதவைத் திறந்து கொண்டு ஹோலுக்கு வருகிறான். இடதுபுறமாக எதையோ அழுத்துகிறாள். வெளிச்சம் பரவுகிறது.

"கண்ணம்மா, கண்ணம்மா!"

நித்திரையில் முறுகிக் கொண்டிருக்கும் சத்தம் கேட்கிறது. தொடர்ந்து "ஏனப்பா?" என்ற இனியகுரல் சற்றுக் கரகரப்புடன் கேட்கிறது.

"ஜன்னல்களைக் பூட்டிக் கொள் புயல் வீசுகிறது!"

"வலது புறமாக நகர்ந்து செல்கிறாள்"லட்சுமி லட்சுமி!"

"என்னாங்க?"

"காற்றடிக்கிறது ஜன்னல்களை மூடிக்கொள். குழந்தைகள் தூங்கிவிட்டனவா?"

"எல்லாம் பூட்டிவிட்டேன். குழந்தைகள் தூங்குகின்றன" அவள் மெதுவாக நகர்ந்து செல்கிறாள். படுக்கையில் புரண்டு கொள்கிறான். எல்லாம் இருள் மயம். கண்களை மூடிக்கொள்கிறாள்.

■ ■ ■

விடிந்து வெகு நேரமாகிவிட்டது. வர்ண உடைகளணிந்து கணபதியின் குழந்தைகள் வீட்டு வாசல் புறமாக நிற்கின்றனர். அவர்கள் எதையோ எதிர்பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். பால் வழியும் அந்த முகங்களில் மகிழ்ச்சி கூத்தாடுகிறது. எங்கோ ஏதோ இரைந்து கேட்கிறது. அது வடபுறமாகக் கேட்கிறது. கண்ணியிலே வர்ணப் பறவைகள் சிக்கிவிட்டதால் துள்ளிக் குதிக்கும் ஜிகாரியைப் போல் அவர்கள் துள்ளுகின்றனர். பென்னம் பெரியதான மோட்டார் விரைந்து வருகிறது. அது தொலைவில் வரும்போதே "கல்வி இலாகா" என்ற கொட்டை எழுத்துக்கள் அதன் முகப்பிலே ஆந்தை விழிபோல பிதுங்கி நிற்கின்றன. அது வீட்டுக்குப் பக்கத்தே வந்ததும் ஒரு தடவை குலுக்கிவிட்டு நிற்கிறது. உள்ளேயிருந்துஏகப்பட்ட ஆரவாரம்.! எல்லாம் மாணவர்கள் அவர்கள் சைகை செய்கின்றனர்.

லட்சுமி குழந்தைகளை வழியனுப்புகிறாள். அவர்கள் துள்ளியோடி வண்டிக்குள் ஏறிக்கொள்கின்றனர்.

"போய்விட்டு வருகிறோம் அம்மா"

இந்த வார்த்தையை அவர்கள் மிக அழகாகக் கணீரெனக் கூறிக் கைகூப்புகின்றனர். வண்டி நகர்கிறது.

"டாங் டாங்"

இப்படி மணியோசை எங்கிருந்தோ கேட்கிறது. கணபதி விரைவாக நடந்து செல்கிறான். மறுபடியும் மணிகேட்கிறது. அந்த டாங்காரங்களின் ஓசை காற்றினிலே முடிவதற்கிடையில் தொழிற்சாலையின் கதவு திறக்கப்படுகிறது. அது வானத்தை அழவி நிற்கும் உயர்ந்த ஆலை. அங்கே எத்தனை விதமான மனிதர்கள்.

நீண்ட ஓர் அறை. அது செக்கச் சிவந்திருக்கிறது. "குழந்தைப் பாதுகாப்பு விடுதி" இந்த வார்த்தைகள் வெள்ளை வெளேரென மிளிர்கின்றன.

குழந்தைகளை ஏற்றிவந்த தாய்மார்கள் வரிசையாகக் கிரமத்தின்படி உள்ளே போகிறார்கள். சற்றுவேளைக்குப்பின் வெளியே வருகிறார்கள். எங்கோ ஒரு மூலைக்குள் அவர்கள் போகிறார்கள். அங்கே எதை எதை எல்லாமோ செய்கிறார்கள்.

இயந்திரங்கள் ஓடுகின்றன. தடித்த பஞ்சுகள் தட்டையாக்கப்படுகின்றன. நூல்களாக வடிகின்றன. ரூட்டை போன்ற பலத்தில் சுற்றப்படுகின்றன. இழைகள் சேர்க்கப்படுகின்றன. அவைகள் முன்னும் பின்னுமாக ஆடுகின்றன. கணபதி உற்சாகமாக ஓடி ஓடி வேலை செய்கின்றான்.

அவனுக்கு எல்லாம் இன்பமாக இருக்கிறது.

மறுபடியும் மணியோசை, ஆனால் அது சிறிய ஓசையுடையது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் உள்ள இடத்துக்கு விரைகின்றனர். சற்று வேலைக்குப் பின் வருகின்றனர். மறுபடியும் சற்று வேலைக்குப் பின் மணியோசை! அவர்கள் போகின்றனர். இப்படியே பல தடவைகள்.

"டாங் டாங்...." இந்த ஓசை தொடர்ந்தாற்போல நீண்ட நேரம் கேட்கிறது. ஒழுக்கொறும்பு நிரையைப்போல எல்லோரும் தொழிற்சாலையை விட்டு வெளியேறுகின்றனர்.

கணபதி வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கிறான். அந்தச் சூரியனின் ஜோதிச் செக்கர் சிரிக்கிறது. வீட்டுப்படியைத் தாண்டுகிறான். குழந்தைகள் ஓடோடி வருகின்றன. தழுவுகின்றன.

சற்று வேளைக்குப் பின் அவள் நடந்து கொண்டிருக்கிறாள். இப்போது புதிய உடை!

" அரசினர் இலவச வாசிகசாலை" இப்படிப்பெயர் பொறிக்கப்பட்ட ஒரு மண்டபத்துள் அவள் நுழைகிறாள். தொழிற்சாலையில் அவனுடன் வேலை செய்த சகபாடிகளில் பலர் அங்கே இருக்கிறார்கள். அமைதியின் பிறப்பிடமாக அது இருக்கிறது.

சாரி சாரியாகப் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டியை அவள் அணுகுகிறாள். எத்தனை வர்ணப் படங்கள் தாங்கிய தமிழ் நூல்கள்! அப்பப்பா! அவள் தன் வாழ்விலேயே கண்டிராதவை.

வானம் நிர்மலமாகக் கிடக்கிறது. நிலாக்கட்டி சித்துப் பவனி வருகிறது. பஞ்சு மேகங்கள் ஓடிச் செல்கின்றன. வீதி ஓரமாக ஒரு திறந்த மண்டபம். அதை எட்டிப்பார்க்கிறாள். அது வாசிகசாலையின் அருகுப்புறமாக இருக்கிறது.

யார் யாரோ எதை எதையெல்லாமோ வைத்துப் படிக்கிறார்கள். அத்தனை பேர்களும் தொங்கு சதை உருவங்கள். அவைகள் படிக்கின்றன, எழுதுகின்றன, வெண்பா போன்ற பாடல்களைப் படிக்கின்றன.

இரு இளம் வாலிபர்கள் எதை எல்லாமோ அவர்களுக்குச் சொல்கின்றனர். அவர்கள் வார்த்தைகளுக்காக மலர்ந்த முகத்துடன் மற்றவர்கள் காத்துக்கொண்டேயிருக்கின்றனர். விடி நிலாவின் பால்சொரிவிலே உலகம் பட்டப்பகலாக இருக்கிறது. இலேசான தென்றல் குழு குழு வென வீசுகிறது. வானம்பாடிகள் கத்திச் செல்கின்றன. உலகம் விஸ்வாமித்திர மௌனத்தில் மூழ்கிக் கிடக்கிறது.

சிங்காரி கண்ணம்மா துள்ளிக்குதித்தோடுகிறாள். சோமுபின்னால் ஓடுகிறான். மரகதப் புல்தரையிலே அவர்கள் ஓடுகிறார்கள். சோமு கண்ணம்மாவின் பின்னலைப்பிடித்து நிறுத்துகிறான். நாணையத்தை இழுக்கும் போது கழுத்தை மேலாக உயர்த்தி வானத்தை முத்தமிடும் பந்தய மாட்டைப்போல கண்ணம்மா நிற்கிறாள்.

சோமுவின் பிடியிலே அவள் திமிறுகிறாள்

43

**கே.டானியல்** **புத்தாயம்**



1926ஆம் ஆண்டில் ஆனைக்கோட்டையில் பிறந்த கே.டானியல், ஈழத்தின் முதன்மையான நாவலாசிரியர். தலித் இலக்கியப் பிதாமகர். சுதந்திரன் நடத்திய சிறுகதைப் போட்டியில் அமரகாவியம் எனும் பரிசு பெற்ற கதைமூலம் எழுத்துலகில் புகுந்தவர். அடக்கியொடுக்கப்பட்ட மக்களையும், அவர்களது விடுதலை வேட்கையையும் கதைப்பொருளாகக் கொண்டவர். உறவும் நிழலும், வள்ளி, மரணநிழல் என்பவை டானியலின் சிறப்பான கதைகள், சிறுகதைத் தொகுதிகள்; டானியல் சிறுகதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன. நாவல்கள், பஞ்சமர், கானல் அடிமைகள், தண்ணீர்.



# நடிகையர் திலகம்

## நல்லதொரு பதிவு

தெலுங்கில் 'மகாநடி'யாகவும், தமிழில் 'நடிகையர் திலகம்' என்ற பெயரிலும் வெளிவந்திருக்கிறது நடிகை சாவித்திரியின் வாழ்க்கைப் பதிவுத் திரைப்படம்.

**கதைப்பார்வை**

கோமா நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார் பிரபல நடிகை சாவித்திரி. அவருக்கு என்ன ஆனது என்பது பற்றிய செய்தி சேகரிக்கும் பொறுப்பு பத்திரிகையாளரான மதுரவாணிக்கு வருகிறது. அதுவரை சாவித்திரியை ஒரு நடிகையாக மட்டுமே அறிந்த மதுரவாணிக்கு, அவரது கடந்தகால நிகழ்வுகள் ஒவ்வொன்றாகத் தெரியவந்து, பெரும் நெகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றன. சாவித்திரியின்சிறு வயது தொடங்கி, அவரது நாட்டியப் பயிற்சி, நாடக மேடை, சினிமா வாய்ப்பு, நடிகர் ஜெமினிகணேசனுடன் காதல், திருமண வாழ்க்கை, உதவி செய்யும் குணம், உடல்நலமின்மை என்று ஒவ்வொரு படிநிலைகளையும் ஆர்வமாகச் சேகரிக்கிறார். இதற்கிடையே, தன்னுடன் பணியாற்றும் ஒளிப்படக் கலைஞரான அன்ரனி மீதுகாதலில்விழுகிறார். ஒரு பக்கம் சாவித்திரியின் வாழ்க்கைப் பதிவு சேகரிப்பு, மற்றொரு புறம் காதல் என்று பயணிக்கும் மதுரவாணி, முடிவில் எதிர்கொள்ளும் நிகழ்வுகள் என்ன என்பதாகத் திரைக்கதையை நகர்த்தியிருக்கிறார் இயக்குநர் நாக் அஸ்வின்.





**கீர்த்தி சுரேஷின் பொருத்தப்பாடு**

பொதுவாக, வாழ்க்கை வரலாற்றைப் படமாக்கும்போது, திரைக்கதை ஆக்கம்போலவே, அந்தக் கதாபாத்திரத்தை ஏற்கப்போவது யார் என்பதும் முக்கியமானது. நடிகை சாவித்திரியாகக் கீர்த்தி சுரேஷ் கச்சிதமாகப் பொருந்துகிறார். நாட்டிய மேடையில் 14 வயதுச் சிறுமியாக, சினிமா வாழ்க்கையில் உச்சம் தொட்ட நடிகையாக, எல்லாவற்றையும் இழந்து மதுபோதைக்கு அடிமையான பெண்ணாக.. இப்படிப் பல கோணங்களையும் தனது நடிப்பில் கொண்டுவந்து சிலிர்க்க வைக்கிறார். சாவித்திரியின் மேனரிசம், நடிப்பு பா[illegible] ஆகியவற்றை நகல் எடுக்கவேண்டிய கட்டாயத்துடன், தனக்கே உரிய துடிப்படன் அந்தக் கதாபாத்திரத்துக்குள் நுழைத்திருக்கும் அவரது பங்களிப்பும் அருமை. இந்தக் கதாபாத்திரத்தைஏற்றுக்கொண்ட அவரது துணிவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

**துல்காரும் பொருந்துகிறார்**

ஜெமினிகணேசனாக வாழ்ந்திருக்கிறார் துல்கர். ஜெமினிபோலவே அவரது காதல் பேச்சும் மனதை நனைக்கிறது. உடல்மொழியில் இன்னும் சற்று முன்னேற்றம் தேவை.

**ஏனைய பாத்திர வார்ப்புக்கள்**

பத்திரிகையாளர் மதுரவாணியாகச் சமந்தா, அவரது காதலனாக விஜய் தேவரகொண்டா. சாவித்திரியின் காவிய வாழ்க்கையே படம் முழுவதும் வியாபித்து நிற்கும் நிலையில், இவர்கள் இருவரது கதாபாத்திரங்கள் திரைக்கதையில் இணைச் சரடாகவே வருகின்றன. ஆனால், இவர்களது பகுதிகள், கதையின் நகர்வைச் சோர்வடையவிடாமல் பார்த்துக்கொள்கின்றன. ராஜேந்திர பிரசாத், தனிக்கெல்லா பரணி, பானுப்ரியா, மாளவிகா நாயர், ஷாலினி பாண்டே, சிறப்புத் தோற்றங்களில் வரும் பிரகாஷ்ராஜ், மோகன் பாபு, நாக சைதன்யா உள்ளிட்டோரின் பங்களிப்பும் சிறப்பு. கலை இயக்குநர்கள் தோட்டா தரணி, அவிநாஸ் கொள்ளா இருவரின் திறமையை வெகு சிறப்பாக வெளிக்கொண்டுவந்து கறுப்பு - வெள்ளைக் கால கட்டத்தை அற்புதமாகக் கண்முன்னே கொண்டு வந்திருக்கிறார் புரடக்சன் டிசைனர் சிவம் ராவ். குறிப்பாக விஜயா - வாஹினிஸ்டூடியோவின் அரங்க அமைப்பு. மதன் கார்க்கியின் நறுக்குத் தெறித்த, அழகுணர்ச்சி மிக்க வசனம் முதுகெலும்பாக உதவி இருக்கிறது. ஒளிப்பதிவு இயக்குநர் டேனி சா லூ, பின்னணி இசையில் மிக்கி ஜெ மெயர் மிக அழகாகத் தங்களது பொறுப்புக்களைக் கவனித்திருக்கின்றனர். காட்சி ஆக்கம், உதட்டசைவு உள்ளிட்ட சிலவிடயங்கள் மட்டும் தெலுங்குப் படம் பார்ப்பதுபோன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

**தமிழ் இரசிகர்களுக்கு ஒரு குறை**

வாழ்க்கை வரலாற்றுப் படங்கள் சில சமயம், ஆவணப்பட சாயலில் சிக்கிக்கொள்ளும். அல்லது வரலாற்றை விடக் கற்பனை அதிகமாகிவிடும். அத்தகைய இரண்டு விபத்துகளுக்கும் இடமளிக்காமல் கொஞ்சமும் செயற்கைத்தனமின்றி, நேர்த்தியும், சுவாரசியமும் நிறைந்த படமாகப் படைத்திருக்கிறார் இயக்குநர். இருகரம் விரித்து வாரி அணைத்துக்கொள்ள வேண்டிய பொக்கிஷம் இந்தப் படைப்பு. ஆனாலும், தெலுங்கு இரசிகர்களை மட்டுமே கருத்தில்கொண்டு ,எடுக்கப்பட்ட படம், தமிழில் 'டப்' ஆகி வந்திருப்பதால், நமக்குச் சில இடைவெளிகள் தெரிகின்றன. சாவித்திரியின் தமிழ்த் திரைப்பட சாதனைகள் பெரிதாக எங்குமே காட்டப்படவில்லை குறிப்பாக, சிவாஜிகணேசன், பீம்சிங் போன்றவர்களின் பங்களிப்புக்கள் அவரது வாழ்க்கையில் எத்தகைய தாக்கங்களை உண்டாக்கின என்பது இல்லாததால், தமிழ் இரசிகர்கள் ஒரு குறையுடனேயே படத்தைப் பார்க்கவேண்டி இருக்கிறது.



# இரும்புத்திரை

## ஈர்க்கின்றது கதை

**கதை**

விஷால் சிறு வயதாக இருக்கும்போது, தந்தை டெல்லி கணேஷ் பலரிடம் கடன் வாங்குகிறார். இதனால் குடும்பமே அவமானப்பட்டு நிற்கிறது. மன வேதனையில் விஷாலின் அம்மா உயிரிழக்கிறார். இது விஷால் மனதில் ரணமாகப் பதிகிறது. பின்னர் இராணுவப் பள்ளியில் சேர்க்கப்பட்டுக் கண்டிப்புடன் வளர்ந்து, மேஜராகிறார். பிறகு தந்தை, தங்கையுடன் தொடர்பு இல்லாமல் சென்னையில் வசிக்கிறார். அப்போது ஒரு பிரச்சினையில், வங்கி ஊழியரைத் தாக்க, இராணுவத் துறை ரீதியான நடவடிக்கைக்கு உள்ளாகிறார். மனநலச் சான்று பெற மருத்துவர் சமந்தாவைச் சந்திக்கிறார். அவரது அறிவுறுத்தலால், சொந்த ஊருக்கு வந்து, தந்தை, தங்கையுடன் நாள்களைச் செலவிடுகிறார். இந்த நிலையில், தங்கையின் திருமணத்துக்காக வங்கிக் கடன் பெற முயற்சிக்கிறார். இராணுவ அதிகாரி என்பதால், வங்கிகள் கடன் கொடுக்க மறுக்கின்றன. இதையடுத்து, வியாபாரத்துக்கு என்று கூறி அவர் பெற்ற வங்கிக் கடன் உள்ளிட்ட ரூ.10 இலட்சம் தொகை, வங்கிக் கணக்கில் இருந்து மர்மமாகத் திருடப்படுகிறது. அந்தப் பணம் திரும்பக் கிடைத்ததா? தங்கை திருமணம் நடந்ததா? என்ற கேள்விகளுக்கு விடை காண்கிறது மீதிக் கதை.

**பாராட்டுக்குரிய சில நல்ல விடயங்கள்**

இந்தியா எவ்வளவு அலட்சியமாக இருக்கிறது என்பதை உணர்த்தும் திரைக்கதை. வங்கிக் கணக்கில் நாம் 'பத்திரமாக' போட்டு வைக்கும் பணத்தை, எங்கோ இருந்துகொண்டு யாரோ ஒருவர் அபகரிக்க முடியும் என்பதையும், சைபர் கிரைம்கள் பற்றி எதுவுமே தெரியாத சாதாரண மனிதர்களுக்கு இதுபோன்ற திட்டங்கள் எவ்வளவு பாதகமாக மாறுகின்றன என்பதையும் இயக்குநர் பி.எஸ்.மித்ரன் புத்திசாலித்தனமாக உணர்த்துகிறார். சாதாரண மனிதர்களை அரசு பொருளாதார ரீதியாக எப்படியெல்லாம் வதைக்கிறது என்பதைப் படம் சுவைபடச் சொல்கிறது. 'பிக் பாஸ்', ரஜினி அரசியல், ஆதார் கார்டு தகவல் திருட்டு போன்ற பல விடயங்களைப் போகிற போக்கில் நையாண்டியுடன் தொட்டுச் செல்வதால், 'லொஜிக்' மீறல்களையும் சகித்துக் கொள்ள முடிகிறது. கதையின் ஓட்டத்தில் காதல் பாடல், வெளி நாட்டுப் பாடல் போன்றவை திணிக்கப்படாதது பாராட்டுக்குரியது.

**பாத்திர வார்ப்பு**

விஷால், இராணுவ மேஜராக ஆரம்பத்தில் மிடுக்குக் காட்டுகிறார். சண்டைக் காட்சிகளில் நன்கு திறமையை வெளிப்படுத்துகிறார். சமந்தாவுடனான அவரது காட்சிகள் இயல்பாக இருக்கின்றன. மனநல ஆலோசகராக வரும் சமந்தாவுக்கு நடிக்கப் பெரிய வாய்ப்பு இல்லை. என்றாலும், வருகின்ற காட்சிகளில் தனது தோற்றத்தாலும், கண்ணியமான நடிப்பாலும் மனதைக் கவர்கிறார். சத்யமூர்த்தி என்ற ஒயிட் டெவில் வேடத்தில் கனகச்சிதமாக நடித்திருக்கிறார் அர்ஜுன். அவரது நடிப்பு கெத்தாக இருந்தாலும், 'தனி ஒருவன்' அரவிந்தசாமி அவ்வப்போது ஞாபகம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. கடைசியில் விஷால் அர்ஜுன் மோதும் காட்சிகளில் பொறி பறக்கும் என எதிர்பார்த்திருக்கும்போது, அர்ஜுன் கையில் விலங்கை மாட்டிவிடுகின்றனர். விஷாலின் தந்தை டெல்லி கணேஷ் பொருத்தமான தெரிவு. வெகுளியான தந்தை வேடத்தைத் தனது இயல்பான நடிப்பால் முழுமையாக்கி இருக்கிறார். திரு நெல்வேலிப் பேச்சுவழக்கில், ரோபோ சங்கருடன் சேர்ந்து தானியங்கி இயந்திரத்தில் பணம் எடுக்கும் காட்சி கலகலப்பு. தொழில்நுட்ப ரீதியாக அதலபாதாளத்தில் இருக்கும் சராசரி குடிம கனுக்குச் சரியான எடுத்துக்காட்டு அவர். விஷாலின் தங்கையாக வரும் பெண்ணும் கவனம் ஈர்க்கிறார். குறிப்பாகத் தாயின் பாசம் கிடைக்கா மல்போய், அண்ணனும் பாராமுகம் காட்டுவதை வெளிப்படுத் தும் காட்சியில் முத்திரை பதிக்கிறார்.

**இசை - ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

நீண்ட இடைவெளிக்குப் பிறகு யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள், பின்னணி இசை இரசிக்கும்படி இருக்கிறது. வசனங்களும், எடிட்டிங்கும் படத்தின் விறுவிறுப்புக்குப் பேருதவி புரிகின்றன.

**சற்றுப் புரியும்படி கூறியிருக்கலாம்**

வங்கியில் பணம் சேமிப்பவர்கள் மட்டுமல்ல. அனைவரும் பார்க்கவேண்டிய படம். ஆனால், சமூக வலைத்தளங்களில் பணமில்லா பரிமாற்றத்தால் நடக்கும் குற்றங்கள் மற்றும் மனிதர்களின் அந்தரங்கத் தகவல்களை 'ஹேக்கர்கள்' நவீன செயலிகள் மூலம் திருடுவதுபோன்ற டிஜிட்டல் கிரைம்களை இன்னும் சற்றுப் புரியும்படி கூறியிருக்கலாம். படத்தில் சைபர் குற்றங்களைக் கதாபாத்திரங்கள் விவரிக்கும்போது, பலரும் புரியாமல் விழிக்கின்றனர். டிஜிட்டல் இந்தியாவுக்கும் சாதாரண இந்தியருக்கும் இடையிலான தொழில்நுட்ப இடைவெளியை நன்கு காட்சிப்படுத்தி இருக்கிறது இரும்புத்திரை.

கவிதைகள்

## மிருனாளினி

### அர்த்தம்: தாமரைக் கூட்டம்

அக்கினியின் எதிரொலியாய்
கூக்குரல் இடும்
உன் அக்கரை விழிகள் இரண்டும்
என்னைக் கடல் தாண்டி அழைக்க
சாம்பலைக் குங்குமம் இடும்
சங்கீதத்தில் தாண்டவம் இடும்
சந்தியா வந்தனா
உயிர் 'நின் பதம் தாங்க'வே

பூத்ததோ மாசுவைத்
தானே கழுவிடும் தாமரை
துயரினைத் தானே நீக்கிடும்

என் விழிகளும்
ஒளியிலே வளர்வது செடிகளே
அகுது பிறந்தவை யாவுமே கடவுளே

பசுவினை வண்டியில் பூட்டியே
வதைப்பரோ
பரிதியைச் சுழற்றியே
அச்சிலே இட்ட தாழ் திறக்கவே

ஒரு காளையும் வந்ததே
மணக்கவே
பாசியாய் ஆசைகள் படர்ந்ததும்

தூசியில் சிலந்தி வலைகள் புனைந்ததும்
பனி உருகும் வரை
தாகத்தில் காத்துக்கிடந்ததும்
தடாகத்தில் மோதிய அலைகளில்
காமத்தை உணர்ந்ததும்
இரவினில்
யார் விளக்கைக் கொழுத்தி வைக்கின்றார்
இரவினில் பாடும் அந்தப் பறவை எது
என்று வியந்ததும்
மறுமுறை வாய்த்திடவே
வலி சுமந்து ஜெனிப்பாய் தாயே

கொடியினில் பனித்துளிபோல்
ஒற்றைக் கீற்றின் வழியினில்
விழுந்து கொண்டிருந்தது
ஒரு வண்ணத்துப்பூச்சி
அவ்வளவு தான் நான்

ஓஷோ சிறிரதி

## யாரோ இந் நேரம்?

மர இலைகளின் மேலே நடந்து
கிளைகள் தாவும்
கட்டெறும்பென நான்
பெரும் பொருள்போல்
உன் உலகு
அதில் ஓர் அணு ஓரம்
சிறுபொய் என நான்

மழைத்துளிகளில் துடித்திடும்
பட்டாம்பூச்சி
சிறு சிறகைப்போலே
உன் அழகினில் என் மனம்
திணறுதடி
உன் அருளினில் வான்வெளி
மலருதடி

படகோட்டி இன்றியே
நடுக்கடலில்
தவிக்க விடப்பட்ட படகென நான்

காற்றை நம்பியே
காத்திருக்கிறேன்
கரை சேர மூச்சையே
சேர்த்திருக்கிறேன்

இரவினில் நடுவீட்டில்
தனியே துடித்திடும்
பழம் மணிக்கூடு
நீ அன்றித் தனிவீட்டில்
கதறுது இதயக் காடு

யாரோ நடுச் சாமம்
கதவைத் தட்டும் பொழுது
பயமும் எதிர்பார்ப்பும்
விழிமுட்டும்
எது கடைசியில் எஞ்சும்
அதுவரை துயில் அஞ்சும்

கட்டுரை

ராஜேஸ்மணாளன்

# பிரமாண்ட விழாவில் பிரபல்ய நட்சத்திரங்கள்



ஆண்டுக்கு ஆண்டு பிரமாண்டமான அளவில் பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் என்ற இடத்தில் நடைபெறும் உலகத் திரைப்பட விழா, இந்த ஆண்டும் கோலாகலமாக நடைபெற்று வருகின்றது. இது 71ஆவது விழா. மே மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த இந்த விழா, மே 19, நேற்றைய தினம் நிறைவு பெறுவதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்திருந்தனர்.
அழைக்கப்பட்டவர்கள் மாத்திரமே பங்குபற்றலாம் என்ற கட்டுப்பாடுள்ள இந்த விழா, 1946ஆம் ஆண்டில்தான் முதற்தடவையாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த விழாவைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரான பியறி லெஸ்குவர் என்பவர், 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம், இந்த விழாவின் தலைவராகப் பொறுப்பெடுத்துள்ளார். இறுதியாக, அதாவது இதன் 70ஆவது விழா, 2017ஆம் ஆண்டு மே17 தொடக்கம் 29வரை இடம்பெற்றது. பொதுவாக இந்த விழா மே மாதத்திலேயே இடம்பெறுவதுண்டு.

**வெனிஸ்-கேன்ஸ்**

வெனிஸ் படவிழாவுக்கு இணையான ஒன்றைத் தமது மண்ணில் நடத்த வேண்டும் என்ற பிரான்ஸ் நாட்டவரின் முனைப்பில் தோன்றியதுதான் இந்த கேன்ஸ் படவிழா! வெனிஸ் விழா நடக்கும் சமயத்தில் இதை நடத்த வேண்டாம் என்ற முடிவில், கேன்ஸ் படவிழா 1951ஆம் ஆண்டில் வசந்த கால விழாவாக மாற்றப்பட்டது. வெனிஸ் நகர விழா கோடையிலேயே இடம்பெறுவதுண்டு. தற்போது நடந்து வரும் கேன்ஸ் விழாவில் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய். தனது மகள் ஆராத்யாவுடன் கலந்து கொண்டார். அழகுக்கு அழகு சேர்க்கும் விதமாக அவர் அணிந்துவந்த ஆடை பற்றித்தான் சமூக வலைத்தளங்களில் பேசப்படுகிறது.
இது ஐஸ்வர்யாராய் கலந்து கொள்ளும் 17ஆவது கேன்ஸ் திரைப்பட விழா. இதற்காகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பட்டாம்பூச்சிகள் வரிசைப்படுத்தப்பட்ட மெர்மெய்ட் கவுனில் மிகவும் அழகாகத் தோன்றினார் அவர். பொலிவூட் நடிகை தீபிகா படுகோனேவும் இந்தத் திரைப்பட விழாவில் கலந்துகொண்டார். அவர் அணிந்த சில உடைகள் நன்றாக இல்லை என்ற விமர்சனம் எழுந்துள்ளது.

**முதல் தடவையாகத் தனுஷ்**

பிரான்சில் நடைபெறும் கேன்ஸ் திரைப்பட விழாவில் இம்முறை தனுஷும் கலந்து கொண்டார். கேன்ஸ் பட விழாவில் இந்திய, பிரான்ஸ் திரைப்படங்கள், வர்த்தகம் சம்பந்தமாக நடைபெறும் கருத்தரங்குகளில் இவர் பங்கேற்றுப் பேசுகிறார். தனுஷ் முதற் தடவையாக இந்த விழாவில் பங்கேற்கிறார். ஒரு சிறு நடிகனாக ஆரம்பித்து, இந்த இளம் வயதில், இவ்வளவு பெரு வளர்ச்சியைச் சந்தித்துள்ள இவர் தனது சாதனைகளால் எம்மை வியப்பூட்டுகிறார். தனுஷ் ஹொலிவூட்டில் நடித்த முதல் படம் த எக்ஸ்ட்ராடினரி. இந்தத் திரைப்படம் கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. சென்ற வருட விழாவில் இந்தியத் தமிழ் திரைப்படங்களான வழக்கு எண் 18/9, பீட்ஸா ஆகிய இரண்டும் திரையிடப்பட்டிருந்தன.

**ஈழத் தமிழர் ஒருவரும் இந்த விழாவில்**

இந்தத் திரைப்பட விழாவில் ஈழத் தமிழரான பாலசிங்கம் தமிழ்ச்செல்வனின் பங்குபற்றல் குறிப்பிடத்தக்கது.
பிரபல பிரெஞ் இயக்குநர் ஒருவரின் திரைப்படத்தில் இவர் முதன்மைப் பாததிரங்களில் ஒன்றாக நடித்திருப்பது, தமிழர்களாகிய எமக்குப் பெருமை சேர்க்கும் ஒரு விடயம். இந்தப் படம் இந்த விழாவில் திரையிடப்படத் தெரிவாகி இருப்பதும், அந்தத் திரைப்படத்தில் நம்மவர் ஒருவர் நடிப்பதும் பாராட்டுக்குரியதே! இந்தத் தமிழ்ச்செல்வன் இசைத்துறையிலும் பெயர் பதித்தவர். பலரால் அறியப்பட்டவர். இவர் நடத்தி வரும் சுருதிலயா என்ற இசைக்கூடம் பிரான்ஸ்தமிழர்களிடையே பிரசித்தமானது.

ஐரோப்பியத் திரைப்படங்களைப் பொறுத்தமட்டில், இந்தத் திரைப்பட விழா, மிக முக்கியமான ஒன்றாகும்.
வர்த்தகரீதியில் இந்தப் படங்களை விமர்சிக்கவும், வர்த்தகரீதியிலான ஆர்வத்தை ஏற்படுத்தவும், இந்தத் திரைப்படங்களைச் சந்தைப்படுத்தவும், இந்தத் திரைப்பட விழா ஒரு முக்கிய களமாக அமைகின்றது என்று கருதுகிறார்கள். உலகப் புகழ்பெற்ற பேர்லின் திரைப்பட விழா, வெனிஸ் திரைப்பட விழா போன்று , இந்த விழாவும், ஒரு நாட்டின் பிம்பத்தை வெளிக்கொணரப் பெரிதும் உதவி வருகின்றது.

**அவமானப்படுத்திய நிகழ்வு...**

2015ஆம் ஆண்டில் இந்த விழாவில் இடம்பெற்ற ஒரு சம்பவம், பெண்களைச் சற்றே அவமானப்படுத்துவதாக அமைந்ததுடன் சர்ச்சைக்குரியதாகவும் மாறி யிருந்தது. இங்கு வரும் நடிகைகள் செங்கம்பள விரிப்பில் நடந்து வரும்போது, காலில் உயர் குதி கொண்ட கால ணிகளை அணியவில்லை என்பதற்காக, வாயிலில் தடுத்து நிறுத்தப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியிருந்தது. இதற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தப் பல நடிகைகள் வெறுங் கால்களுடன் விழாவுக்கு வந்திருந்தார்கள்.
விழாவுக்கு வரும் நடிகைகளுடன் தவறாக நடந்து தொல்லை கொடுப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன. வெனிஸ் நகர விழாவில் ஹார்வே வைன்ஸ்டைன் என்பவர் வன்புணர்வுக்கு ஆளானதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட விவகாரம், பத்திரிகைகளில் பெரிதாகப் பேசப்பட்டது. இதைத் தவிர்க்கும் முகமாக, இந்த ஆண்டு விழாவில், இப்படியான தொல்லைகள்ள உடனுக்குடன் தெரியப்படுத்த, சிறப்புத் தொலைபேசித் தொடர்புகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

**அசத்தல்களும் ஆச்சரியங்களும்**

கென்டால் ஜென்னர், இரீனா போன்ற ஹொலிவூட், ஆடைகளால் மட்டும் பார்வையாளர்களை அசத்தவில்லை. இந்த விழாவில், பன் மொழிகளில் எடுக்கப்பட்ட திரைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு, வெவ்வேறு நேரங்களில் தினமும் திரையிடப்பட்டு வந்தன. முதல் நாளன்று (மே8)'எல்லோருக்கும் தெரியும்' என்ற திரைப்படம் வெள்ளித் திரையை அலங்கரித்தது. தினமும் 2 அல்லது 3 திரைப்படங்கள் இங்கு திரையிடப்படும். இறுதி நாளன்று, அதாவது நேற்றைய தினம் 'டொன் குயிக்ஸ்டோட்டைக் கொன்றவன்' என்ற திரைப்படம் திரை யிடப்பட ஏற்பாடாகியிருந்தது. இறுதி நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட படங்களுக்கு விருதுகள் வழங்கப்படுவதோடு, இரவு விருந்துபசாரமும் விருந்தினர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பிரபல்யங்களும் பிரமாண்டமும் ஒன்றுகூடும்போது, சர்ச்சைகளுக்கும் பஞ்சம் இருப்பதில்லை என்பதற்கு இந்த விழாவும் விதிவிலக்காகிவிட வில்லை.



கட்டுரை

வி.அருணாசலம்




# மறைந்திருந்து பணிபுரிகின்ற 'மூளைசாலிகள்'

நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்துவிட்டுப் பின்னர், அதைச் சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி வைத்த அரச தலைவர், மைத்திரிபால சிறிசேன தனது சிறப்புக் கொள்கை விளக்க உரையில் புதிய அரசமைப்புக் குறித்தோ, அதற்கான செயன்முறைகளை மீள ஆரம்பிப்பது குறித்தோ எதுவும் குறிப்பிடவில்லை. இந்த விடயம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாட்டுக்கும் நிலைபேறுக்கும் இனிச் சந்திக்க இருக்கின்ற தேர்தல்களுக்கும் பேரிடியாக அமைந்திருக்கிறது.

அரச தலைவரின் உரைக்கு விளக்கம் கூறி உரை நிகழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் "தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கணப்படவில்லை என்றால், இந்த நாட்டில் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது" என்று கூறியிருந்தார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி புலிகள் அமைப்பை முடக்கிய மகிந்த ராஜபக்ச அடுத் ததாகத் தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைப்பார் அல்லது வைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறான எதுவும் நடக்கவில்லை. சிங்களவர் மத்தியில் ஒரு சிந்தனைக் குழாம் இருப்பதே இதற்குக் காரணமாகும். அதுவே நிர்வாகத் துறை அதிகாரிகள் குழு எனப்படுகிறது. இலங்கையின் அரச பொறிமுறையை இந்தக் குழுவினரே கையாண்டு வருகின்றனர். அநகாரிக தர்மபாலாவின் காலத்திலிருந்தே எதிர்காலத்தில் சிங்களவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்ற அட்டவணை ஒன்று போடப்பட்டுவிட்டது. இதுபற்றித் தமிழருக்கு வெளிப்படையாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.



## நிர்வாகத்துறையூடாகவே தலைவர்களின் செயற்பாடு

இதுவரை பதவியிலிருந்த, இருந்து வருகிற டி.எஸ்.சேனநாயாக்கா, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிறேமதாசா, மகிந்த ராஜபக்ச, ரணில்விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இந்த நிர்வாகத்துறை அதிகாரிகள் குழுவின் ஊடாகவே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இதில் போர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஜே.ஆர். ஜெயவர்தனவின் பங்களிப்பும், போர் முடிவில் மகிந்தராஜபக்சவின் பங்களிப்பும் சிங்கள மக்களைப் பொறுத்தவரை அதிஷ்டம் என்றே கூறவேண்டும். 1970ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் மூலம் தமிழர்கள் அதிகளவு பணக்காரர்களாக மாறினார். மூடிய பொருளாதார முறைமை நடமுறைப்படுத்தப்பட்டதால், தமிழர்கள் தமது விவசாய உற்பத்திப் பொருள்களை அதிக விலைக்கு விற்க முடிந்தது. சேமிப்பு, கல்வீடுகள், உழவு. இயந்திரங்கள் என முன்னேற்றமளித்த நடவடிக்கைகளை அவதானித்த நிர்வாகத் துறை அதிகாரிகள் குழு அவற்றை எவ்வாறு இல்லாது செய்வது என்பதில் அரசியல்வாதிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

1977ஆம் ஆண்டில் ஜே.ஆர் பதவிக்கு வந்ததும், உடனடியாகத் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். விவசாய உற்பத்திப் பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ததன் மூலம் தமிழ் விவசாயிகளைத் தேசிய பொருளாதாரத்தில் பங்கெடுக்க விடாது தடுத்தார்.

நிர்வாக அதிகாரிகள் குழு, இந்த அடிப்படையில் சகல விடயங்களையும் சிங்கள மக்களுக்குச் சாதகமான முறையில் சிந்தித்து முடிவுகளை எடுத்தது. இவ்வாறு தேசிய ரீதியில் தீர்மானம் எடுக்கும் குழுவில் தமிழரோ, முஸ்லிம்களோ இடம்பெறவில்லை.

## தமிழர்களின் தரவுகளைப் பேணாத தன்மை

இந்த நிர்வாகத்துறைக் குழுவிடம், சகலவிதமான தரவுகளும் உள்ளன. அந்தத் தரவுகளும் வெளியிடப்படுவதில்லை. திட்டமிடலுக்கு மட்டுமே அவை பயன்படுத்தப்படும். முள்ளிவாய்க்காலில் எத்தனை பேர் இறந்தார்கள், எவ்வாறு இறந்தார்கள் என்ற தரவுகளை அங்கிருந்து வெளியேறி முகாம்களில் தங்கியிருந்த மக்களிடம் சென்று நேரடியாகப் பெற்று வைத்திருக்கிறார்கள். தமிழர்களைப் பொறுத்தவரையில் நினைவேந்தலைக் கடைப்பிடிக்கத் துடிக்கும் எந்தத் தரப்பிடமும் (பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட) இந்தத் தரவுகள் இல்லை.

சம்பவம் நடந்து 9 வருடங்கள் கடந்த பின்பும் கூட, இவற்றைப் பேண முடியாத நிலையே காணப்படுகிறது.

## கலவரங்கள் கவனமாக நடத்தப்பட்டன...!

1977ஆம் ஆண்டில் இனக் கலவரம் விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் தமிழ் முதலாளிகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. நிக்கவ ரெட்டிய, நொச்சிகாமம், மதவாச்சி, அநுராதபுரம் போன்ற பகுதிகள் இதில் உள்ளடக்கப்பட்டன. இந்தக் கலவரத்தின் பின்னர் இந்தக் கொள்வனவுகள் சிங்கள முதலாளிகளின் கைகளுக்கு மாறின.

இதன் அடுத்த கட்டமே 1983ஆம் ஆண்டு இனக்கலவரம். இது கொழும்பை மையமாக வைத்துத் தமிழரின் வியாபார நடவடிக்கைகளையும் அரச உத்தியோகத்தர்களின் நிலைத் தன்மையையும் சீர்குலைப்பதில் கவனம் செலுத்தி மேற்கொள்ளப்பட்டது. இதுவும் எதிர்பார்த்த பலனைச் சிங்கள நிர்வாக அதிகாரிகளின் குழுவுக்குக் கொடுத்தது. இந்தக் கலவரத்தில் நிர்வாக அதிகாரிகள் குழு திட்டமிட்டதற்கு மேலதிகமாக ஒன்று நிகழ்ந்தது. அவர்கள் எதிர்பாராத வகையில் தமிழர்கள் தமது பூர்வீக நிலமான வடக்குக் கிழக்கை நோக்கி நகராமல் வெளிநாடுகளுக்கு ஓடுவதை அவதானித்தனர். இதை மையமாக வைத்துத் தொடர்ந்தும் தமிழர் நாட்டை விட்டு வெளியேறும் வகையில் பல நெருக்கடிகளை மேற்கொண்டனர். போர் முடிவுக்கு வந்த பின்னர் கூட அதிகமான தமிழர்கள் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குத் தப்பி ஓடுவதற்கான மறைமுக ஏற்பாட்டையும் செய்து கொடுத்தனர். வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்களின் நிலைபேறு இல்லாது செய்யப்பட்டால் போதுமானது என்பதே நிர்வாக அதிகாரிகள் குழுவின் முதல் நோக்கமாகும்.



## பல துறைகளிலும் பணியாற்றும் நிர்வாகிகள் குழு

குடிவரவு, குடியகல்வு தொடர்பான விடயங்களில் பணியாற்றும் நிர்வாக அதிகாரிகள் குழு, தமிழர்களில் எத்தனை பேர் கடவுச்சீட்டு எடுக்கிறார்கள். அவர்களில் மாதாந்தம் எத்தனை பேர் இலங்கையை விட்டு வெளியேறிச் செல்கின்றனர் என்ற கணிப்பீட்டைச் செய்து வருகின்றது.

மருத்துவத் துறைகளில் பணியாற்றும் இந்த நிர்வாகத் துறை அதிகாரிகள் குழு, தமிழர்களின் பிறப்பு வீதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை மிக நுணுக்கமாக ஆராய்ந்து வருகின்றது. சீதனப் பிரச்சினை, சாதிப்பிரச்சினை, பிரதேசப் பிரச்சினை, சமூக அந்தஸ்து போன்ற பிரச்சினைகளால் பெண்களின் திருமண வயது பிந்திப்போவதால் குழந்தைப்பேறு குறைவாகிறது. இதைவிடச் சிறிய இனத்தின் மத்தியில் போர் 30 வருடம் நீடித்தது என்பது அடுத்த சந்ததியை உருவாக்க கூடிய இளைஞர்களையும் யுவதிகளையும் கொன்று குவித்தது.

அதேவேளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் உள்ள நிர்வாக அதிகாரிகள் குழு தமிழ் மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்த பின் வெளிநாடுகள் செல்வதை அவதானித்து வருகின்றது. பல மருத்துவர்கள். பொறியலாளர்கள் இலங்கை மக்களின் பணத்தில் இலவசக் கல்வியைப் பெற்றுவிட்டு இங்கு பணியாற்றாது வெளியில் செல்வதாக இருந்தால் உயர்கல்விக்காக அரசு செலவிட்ட பணத்தை மீளச் செலுத்த வேண்டுமென்றோ, பல்கலைக்கழக படிப்பை முடித்தபின் குறிப்பிட்ட காலம் நாட்டை விட்டு வெளியேறாது இங்கு பணியாற்ற வேண்டும் என்றோ தடுக்கவில்லை. அவ்வாறு நாட்டை விட்டு வெளியேறிச் செல்பவர்கள் இனிமேல் இந்த நாட்டுக்குள் வரமாட்டார்கள் என்பதில் உறுதியாக உள்ளனர்.

குடியேற்றம், நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குவது, கைத்தொழில் மையங்களை உருவாக்குவது, சுற்றுச் சூழல்-வனபரிபாலனம், எல்லை நிர்ணயம், விளையாட்டுத் துறை, கனியவளம், வேலைவாய்ப்பு வழங்குவது போன்ற பல்வேறு விடயங்களில் இந்த நிர்வாக அதிகாரிகள் குழு காத்திரமான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றது.

## எந்தக் கட்சி, எந்தத் தலைவர் வரினும் இவர்கள் மாறார்...!

'வியத்மக' என்ற அறிஞர் குழாம் ஒன்றை அமைத்து 2030ஆம் ஆண்டு அளவில் உலகில் ஏற்படப் போகும் பொருளாதார மாற்றங்களுக்கு இலங்கை எவ்வாறு முகம்கொடுப்பது என்ற விடயங்களை ஆராய இருப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அண்மையில் குறிப்பிட்டு இருந்தார். இந்தக் குழுகூட ஒரு நிர்வாக அதிகாரிகள் குழாம் தான். இந்த நிர்வாக அதிகாரிகள் குழாமில் பொது நிர்வாக சேவைக்கான பரீட்சையில் தேறியவர்கள் மற்றும் துறை சார்ந்த விற்பனர்கள் எனப் பலர் சம்பந்தப் படுவதால் நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், எந்தத் தலைவர் ஆட்சிக்கு வந்தாலும் இந்த 'மூளைசாலிகள்' குழுவில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

## தமிழர்களால் முடியாது...

கல்வித் தரத்திலும், அனுபவத்திலும், நாட்டுப்பற்றிலும் உறுதியாக உள்ள சிங்களவர் மட்டுமே நிர்வாக துறை அதிகாரிகள் குழுவில் இடம் பெறுகின்றனர். இந்தக்குழுவில் ஏற்கனவே முக்கிய பணிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களும் ஆலோசகராகப் பெருமளவு சம்பளத்துடன் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இந்தக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் சிங்கள மக்கள்கூட அதிகம் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

வெளியுறுவுத்துறை, நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தங்களைத் தயாரிப்பது. சட்டரீதியான ஆலோசனை வழங்குவது போன்ற முக்கிய விடயங்களில் இனி வரும் 100ஆண்டுகளில் சிங்கள மக்கள் முகம்கொடுக்கக் கூடிய பிரச்சினைகளை முன்னறியக்கூடிய ஆற்றல் இந்தக் குழுவுக்கு உண்டு.


இவ்வாறான மூளை பலமுள்ள ஒரு குழு இலங்கையின் தலைவிதியைப்பற்றி இரவு பகலாகச் சிந்தித்துச் செயற்பட்டு கொண்டு இருக்கும்போது தமிழர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் தலைவர்களை மட்டும் நம்பி இருப்பது வேடிக்கையானது. தமிழர்கள் ஒரு சிறுபான்மை இனமாக இருப்பதால் தமக்கான நிர்வாக அதிகாரிகள் குழுவை உருவாக்கவோ, வைத்திருக்கவோ வாய்ப்பில்லை. இந்த விடயங்களில் ஆற்றலுள்ள தமிழர்கள் இருந்தாலும் செயற்படுவதற்கான ஒரு கட்டமைப்பு தமிழரிடம் இல்லை. அவற்றை இனிமேல் உருவாக்குவதற்கான சூழலும் இல்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இவ்வாறான திட்டமிடல்கள், இரகசிய வேலைகள் பற்றிய செயற்பாடுகள் இருந்தன. புலிகளின் பல்வேறுபட்ட பிரிவுகள் இப்படித் தரவுகள் சேகரிப்பதில் மிகவும் வினைத்திறனுடன் செயற்பட்டன.

தமிழ்த் தலைவர்களிடம் இன்றுவரை 'சிங்களவன் மூடன்' என்ற கருத்துருவாக்கமே இருந்து வருகிறது. சிங்களவர்கள் தம்மை மூடர்கள்போல பல சந்தர்ப்பங்களில் காட்டித் தமிழரைத் தந்திரமாக ஏமாற்றி இருக்கிறார்கள். இதை விளங்கிக் கொள்ளக்கூட முடியாத வர்களாக இருக்கிறார்கள் தமிழ்த் தலைவர்களும், பொதும்

# இற்றைப்படுத்தி கொள்வதில் ஆசிரியர்கள்

## இந்தவாரக் கருத்தாளர்



எம்.பி.நடராஜ்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
வவுனியா தமிழ்க் கோட்டம்)

நவீன மற்றும் பின்னவீனத்துவத்துக்கு ஏற்ப ஆசிரியர்கள்பல்வேறுவகிபாகங்களைஏற்கவேண்டியவர்களாக உள்ளனர். அதோடு மாறும் உலகுடன் தம்மைப்பொருத்திக்கொள்வதற்கும், காலத்தின்தேவைக்கேற்ப கல்வியை வழங்கி மாணவர்களின் விருத்திக்கு உதவக்கூடிய வகையிலும் தமது தொழில் வாண்மையை வளப்படுத்த வேண்டிய கட்டாயத் தேவையையும் ஆசிரியர்கள் எதிர்நோக்கி உள்ளனர். எனவே இந்தச் சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடியவகையில்தம்மைவலுப்படுத்திக்கொள்வதற்கு ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமானதாக உள்ளது.

நடைமுறையில் ஆசிரியர்களுக்கு எனப் பல்வேறு அடையாளங்களும், குறியீடுகளும், அடைமொழிகளும் உள்ளன. அந்த வகையில் ஆசிரியர்கள் அரிக்கன் விளக்குப் போன்றவர்கள் என்று கூறினால் அது மிகவும் பொருத்தமானதாகவே அமையும். ஏனெனில் ஏனைய விளக்குகளோடு ஒப்பிடுகையில் பல சிறப்புத் தன்மைகள் அரிக்கன் விளக்குக்கு உண்டு. இந்த விளக்கை எவ்விடத்துக்கும் இலகுவாகக் கொண்டு செல்ல முடியும். மழைக்கும், காற்றுக்கும் கூடத் தாக்குப் பிடிக்கக் கூடியவை. இவ்வகை விளக்கில் உள்ள தூண்டுகோலின் உதவியுடன் தேவைக்கேற்பவெளிச்சத்தைக்கூட்டிக்குறைத்துக்கொள்ளவும் வழியுண்டு. அதுபோலவே ஆசிரியர்களும் எவ்விடத்திலும் எத்தகைய மாணவர்களுக்கும் கற்பிக்கத் தயாராக இருப்பதுடன், எத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

அரிக்கன் விளக்கின் சிமினியில் படிந்து விடும் புகை மற்றும் படிவுகளைச் சுத்தம் செய்யும்போது அது வெளிப்படுத்தும் ஒளி பிரகாசமளிப்பதைப்போன்று ஆசிரியர்களும் தமது தொழில் சார் தகைமைகளை வளப்படுத்திக் கொள்ளும்போதே தம்மால் பிரகாசிக்க முடியும். அத்தோடு மாணவர்களின் இயலளவு தன்மைக்கேற்ப தமது கற்பித்தல் தந்திரோபாயங்களை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் ஆசிரியர்கள் தமது தொழிலில் பிரகாசமான ஒளிக்கீற்றைப் பரப்ப முடியும். ஆனால் ஆசிரியர்களாகிய எம்மில் பலர், மாணவரின் பலம், பலவீனம் என்பவற்றை ஆய்ந்தறிந்து அவருடைய இயலளவுக்கேற்ப கற்பிப்பதில் இன்னமும் முழுமை அடையவில்லை. நாம் மாணவர்களை ஆய்ந்தறிவதில்லை. தொழில் வாண்மையை இற்றைப்படுத்திக்கொள்வதில்லை. இதனால், மாணவர்கள் எம்மை வெறுத்து ஒதுக்குவதில்லை. இந்த நிலமையை நாம் சாதகமாகப் பயன்படுத்தியோ அல்லது மாணவர் மீது பழியைச்சுமத்திவிட்டோவிலகிக்கொள்ளமுடியாது. எமது எதிர்காலத் தொழில்வாண்மை விருத்திக்குத் தற்போதைய எமது நிலமை எந்தளவு தூரம் கைகொடுக்கும் என எம்மையே நாம் கேட்டுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு முன்னர் ஆசிரியர்கள் தம்மை எதிர்நோக்கியுள்ள இந்தச் சவால்களை வெற்றி கொள்ளவேண்டும். அப்பொழுது தான் தொழில் சார் வாண்மைத்துவத்தை ஆசிரியர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். இல்லாவிடில்கற்பித்தல்களம்போர்க்களமாகமாறிவிடும். நவீனத்துக்கு மாத்திரமின்றி பின் நவீனத்துக்கு ஏற்பவும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவதற்கு ஏற்ற வகையிலான தொழில் சார் அறிவை ஆசிரியர்கள் இற்றைப்படுத்திக் கொள்ளவேண்டும். தொடர்ந்து கற்பதுமாத்திரமன்றிஆய்ந்தறிதல்களிலும், களஆய்வுகளிலும், படைப்பாற்றல்களிலும் ஈடுபட வேண்டும்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தருக்குக் கற்றனைத்தூறும்அறிவு" என்றவள்ளுவவாக்குக்கு இணங்க 'கற்றலுக்கான கற்றல்' என்ற தேர்ச்சி மட்ட அடிப்படையிலும் ஆசிரியர் தம்மை இற்றைப்படுத்திக்கொள்ளும்போதே 'ஆசிரியம்' என்பது வாண்மையுடையதாக அமையும். இத்தகைய இற்றைப் படுத்தலுக்கும், ஆய்வுகளில் ஈடுபடுவதற்கும், ஆய்ந்தறி தலைமேற்கொள்வதற்கும்ஏற்றவசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது பாடசாலைத் தலைமைத்துவம், வலயக்கல்விப் பணிமனை, மாகாண, மத்திய கல்வி அமைச்சுக்கள், கல்வியியலாளர்கள் ஆகியபல தரப்புக்களினதும் பொறுப்பும் கடமையுமாகும். ஆசிரியர்களை இற்றைப்படுத்துவதில் இவர்களின் பங்களிப்பும் மிக அவசியமானது. ■

---

கட்டுரை

நிவேதிகன்

# மூடிய மண்டபங்களுக்குள் கலை, இலக்கியப் போட்டிகளா?

கலை மனித உணர்வுகளின் உற்பத்தி. மனிதர்கள் கூடுவதற்கும் கதையாடுவதற்கும் களங்கள் திறக்கப்பட்டபோது கலைகள்பிறப்புக்கொண்டன. கலைகள் மனிதர்களது இயங்கியலுக்குக் களம் ஏற்படுத்திக் கொடுத்ததுடன். உள விடுதலைக்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தின. ஆனால், இன்றைய சூழ்நிலையில் கலைச் செயற்பாடுகளைப்போட்டிகளும்பொறாமைகளும்மிளிர்ந்த வகையில் நடத்தி, ஒவ்வொரு கலைச்செயற்பாட்டாளர்களும் தாம் மேற்கொள்வது மாத்திரமே தரமான கலைச்செயற்பாடு எனும் வகையில் இயங்குகின்றனர். கலைகளில் ஈடுபடுகின்றபோது தலைமைத்துவம், விட்டுக்கொடுப்பு, கற்பனையாற்றல்போன்றபல்வேறுபண்புகள்வளர்த்தெடுக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் போட்டிகளுக்காகக் கலைச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றபோது தாம் மேற்கொள்கின்ற செயற்பாடுகள் மாத்திரமே சிறப்பானவை ஏனையவர்களதுசெயற்பாடுகள்மோசமானவைஎன்கின்றசிந்தனையை மாணவர்களது மனங்களில் விதைத்து விடுகிறார்கள்.

### போட்டி மனப்பாங்கு தவிர்க்கப்பட வேண்டும்

தாமே போட்டியில் வெற்றிபெறுவோம். தம்மை வெல்ல முடியாது. எனும் தற்பெருமை மனப்பாங்கை மேற்குறித்த கலை வளர்ப்பாளர்கள் மாணவர் மனங்களில் வளர்த்தெடுக்கிறார்கள். இவை அவர்களிடையே இயல்பாக உள்ள கற்பனை ஆற்றலையும், கூட்டுணர்வு மனப்பாங்கையும் இல்லாதொழித்து, குறுகிய மனப்பாங்குடைய மனிதர்களாக வளர்வதற்குத் துணைபோகின்றன. ஆனால், கலை வளர்ப்பாளர்கள்சிலரைப்பொறுத்தவரையில் இதுவே விசாலமான மனமாகக் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

கலைத்திறன் போட்டிகள் ஏன் நடத்தப்படுகின்றன எனும் அடிப்படை தகர்க்கப்பட்ட நிலையில்வெறுமனேபோட்டிகள்நடத்தப்பட்டால்போதும் என்கின்ற நிலையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கலைச்செயற்பாடுகளைத் தரநிர்ணயம் செய்கின்றவர்களாகப் பார்வையாளர்கள் இருக்கின்றவேளையில் பார்வையாளர்கள் இன்றியே போட்டிகள் நடத்தப்படுகின்றன. யார் வெற்றிபெறவேண்டும் என நினைக்கின்றார்களோ, போட்டிகளைமதிப்பீடு செய்வதற்காக அழைக்கப்படுகின்றவர்கள்அவர்களது அனுசரணையிலேஅழைக்கப்படுகிறார்கள். அழைக்கப்பட்டவர்கள் தமது விசுவாசத்துக்கு ஏற்றவகையில் செயற்படுகிறார்கள். இதனால், கலைத்துவம் மிக்க பலர் தோல்வியடையச்செய்யப்படுகிறார்கள். இங்கு வெற்றிபெற்றவன் திறன் படைத்தவனாகவும் வெற்றிபெறுவதில் இருந்து தூரமாக்கப்பட்டவன் திறன் அற்றவனாகவும் சித்தரிக்கப்படுகின்ற மனவியலைத் தோற்றுவித்து விடுகிறார்கள்.

### தளமாற்றம்... கேள்விக்குறி...

கலைச் செயற்பாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுகின்றவர்கள் மாணவர்கள் என்பதை மறந்து போட்டிகளை நடத்துகின்றவர்களும்ஏனையவர்களும்நடந்துகொள்கின்றார்கள். வசதி படைத்தவர்கள்சாதனையாளர்களாகவும், வசதியற்றவர்கள் சோதனையாளர்களாகவும், வேதனையை அனுபவிப்பவர்களாகவும் மாற்றமுறுகின்றனர்.

கலைச் செயற்பாடுகளது முதன்மை நோக்கம் தள மாற்றம் ஆகும். தளமாற்றம் எனும்போது ஏற்கனவே இருக்கின்ற நிலையில் இருந்து கலைச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்றபோது பெற்றுக்கொள்கின்ற அனுபவத் திரட்சியின் அடிப்படையில் நல்ல பண்புகளை உள்வாங்கிக்கொண்டு புதிய சிந்தனை, கருத்துக்களில் மாற்றம் பெறுகின்றவர்களாக மாறுகின்ற பண்பையே தளமாற்றம் என்கின்றனர் வல்லுநர்கள். ஆனால் சிலரது செயற்பாடுகளுக்காக எதிர்மறையான எண்ணங்கள் கலைச்செயற்பாட்டாளர்கள் மனங்களில் ஏற்படுகின்ற வகையில் போட்டிகளுக்கான தளங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சிறுவர்களுக்கான போட்டிகள் இடம்பெறுகின்றபோது அவர்களது உளநலன் மேம்பாட்டை அடிப்படையாகக் கொள்கிறவகையில்அவைஅமையவேண்டும். குதூகலமான மனப்பாங்குடையதாக வடிவமைக்கப்பட வேண்டும். ஆனால், பெரும்பாலான போட்டிகள் அவர்களிடையேபோட்டிமனப்பாங்கையும் பொறாமை உணர்வையும்வளர்த்தெடுக்கின்ற வகையிலானகளநிலவரங்களைக் கொண்டுஅமைந்துவிடுகின்றன.



### எதிரிடையான சிந்தனைகளை தவிர்க்க வேண்டும்

கலைச்செயற்பாடுகள் மூலம் வெற்றி, தோல்விகளைச் சமமாக மதித்து நடக்கப் பழக வேண்டும். போட்டிகளின் மூலம் நற்பண்புகளை வளர்த்தெடுக்கவேண்டும். சமூக நலச்சிந்தனை உடையவர்களாக மாற்றமடையவேண்டும். மாறாக இந்த நோக்கங்களுக்கு எதிரிடையாகப் போட்டிகள் முடிவடைந்து போகின்றமை பற்றி நுண்ணறிவுடன் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

எந்தவகைப் போட்டியாக இருந்தாலும், போட்டியாளர்களிடம் உள்ள சாதகமான விடயங்கள், அல்லது அவர்களிடையே உள்ள நல்ல விடயங்கள் சுட்டிக்காட்டப்பாடாமலேயே விடப்படுகிறது. மழுங்கடிக்கப்பட்ட மனநிலை உடையோரா போட்டியாளர்களை மாற்றி, அவர்களின் மனங்கள் மரத்துப்போவதற்குவழிசமைத்து, அத்தகைய ஒருசமூகத்தையேஉருவாக்கி விடுவதாகப் போட்டிகளின் செயற்பாடுகள் முடிவடைந்து போகின்றமை கவலைக்குரியதாகும். இவ்விடயங்கள் எவற்றையும் உணர்ந்துகொள்பவர்களாகப் போட்டி நடத்துநர்கள் காணப்படுவதில்லை.

அவர்களது நோக்கம் போட்டியை நடத்தி முடித்தால் போதும் என்பதே. போட்டியில்பங்குபற்றுகின்றவர்கள் ஏனைய போட்டிகளையும்கண்டுகொள்ளக்கூடியவாய்ப்புக்களைஏற்படுத்துகின்றபோது, அவர்கள் தமது தரத்தையும் மற்றவர்களது தரத்தையும், தமது பலம், பலவீனங்களையும், மற்றவர்களது பலம், பலவீனங்களையும் கற்றுணர்ந்து கொள்வர். தம்மைத் தாமே சுய விசாரணை செய்துகொள்வர்.

இதன் மூலம் தம்மிடையே ஓரளவுக்கேனும் கலை சார்ந்த புரிதல்களை ஏற்படுத்திக்கொள்ளமுடியும். இத்தகைய களவெளிகளைஏற்படுத்தும்பட்சத்தில்பங்குபற்றுபவர்களுக்கிடையே கலைசார்ந்த பரஸ்பர புரிந்துணர்வுச் செயற்பாடு உருவாகுவதற்கும் களம் ஏற்படும். இல்லையேல் குத்து வெட்டு மனப்பாங்கும், வன்முறைசார்ந்த உணர்வெழுச்சிகளும், ஏற்படுத்தப்பட்டு மனங்களில் வக்கிர உணர்வுகளும், எதிர் மனப்பாங்கும் ஏற்படுவது தவிர்க்கவியலாது ஆகிவிடும்.

மேலும் போட்டிகள் மாணவர்களுக்கானவையே தவிர பயிற்றுனர்களுக்குரியதல்ல எனும் மனப்பக்குவத்தை நடத்துநர் குழுமம் புரிந்து கொள்ள வேண்டும். வெற்றியடைந்தவர்களைக்கொண்டாடுகின்றநடத்துநர்கள், தோல்வியடைந்தவர்களது மனநிலையில் இருந்து அவர்களைத் தரிசனம் கொள்வதில்லை. அத்தகையபோக்கும்பல்வேறுதோல்விகளுக்குக் களங்களைத் திறந்து விடுகின்றது.

மூடியமண்டபங்களுக்குள்மட்டும்போட்டிகளைநடத்திமுடிக்க வேண்டும் எனும் மனப்பாங்கில் போட்டிகளை நடத்தி கலைச் செயற்பாட்டாளர்களது மனங்களையும் மூடிக்கொள்ளப் போகின் றோமா? இல்லையேல் திறந்த மனப்பாங்குடன் நடந்துகொண்டு விரிசிந்தனையை உருவாக்கிக்கொள்ளப் போகின்றோமா? என்பதுஒவ்வொருவரும்சிந்தித்துக்கொள்ள வேண்டிய விடயமாகும்.

கட்டுரை

தி.இராஜநாயகி

# கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

# காண்பியல் மொழியின் அவசியம்

**கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தருவது வழமை. அவ்வகையில் இது 'படப்பெட்டி'யில் (2011 இதழ் 5) வெளிவந்த ஓவியர் ட்ராஸ்கி மருதுவின் கட்டுரை இங்கே தரப்படுகிறது.**

தமிழ் நாட்டில் தொடர்ந்து பல காலமாகக் காண்பியல் ரீதியாக மாணவர்களுக்குக் கற்பிப்பதில் மிகப்பெரிய பின்னடைவை நாம் சந்தித்து வந்திருக்கிறோம். நாற்பது, ஐம்பது ஆண்டுகளில் பள்ளிக்கூடங்களில் கலை சம்பந்தப்பட்ட பயிற்சிகள் கடைசிப் பாடமாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. ஓவியம் குறித்த பாடங்களில் வெறும் சட்டி, பானை வரைகிற அளவில்தான் மாணவர்களைத் தயார்ப்படுத்தி வைத்திருக்கிறோம்.

எப்படி ஒரு படத்தைப் பார்க்கவேண்டும், படிக்க வேண்டும், இயல்பாக வெளியின் காட்சிகளைப் பார்ப்பதற்கும், ஒரு சட்டத்துக்குள் அகப்பட்ட காட்சியைப் பார்ப்பதற்குமான வேறுபாடுகள் என்ன, பிறகு, அந்தக் காட்சியில் கொம்போசிசன் எப்படியிருக்க வேண்டும். அது பார்ப்பவரின் ஒவ்வொரு பார்வைக்கும் எப்படி வித்தியாசப்படுகிறது, அந்தக் காட்சியில் உள்ள பொருள்கள் எங்கு இருக்க வேண்டும், காட்சியில் இருக்கும் கதாபாத்திரங்களின் உடல் மொழி, மற்றும் அதில் எந்தப் பாத்திரம் முதன்மையானதாகத் தெரிய வேண்டும் போன்றவற்றையெல்லாம் உள்ளடக்கித்தான் ஒரு நல்ல சினிமா உருவாகிறது. ஆனால் இத்தகைய அடிப்படைப் பயிற்சிகள் எல்லாம் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படாததால்தான் காண்பியல் மொழியில் நம்மிடம் ஒரு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

சமகாலத்தில் அகிரா குரோசோவாவைப் பேசுகிறவர்கள், சத்யஜித் ரேவைப் பற்றிப் பேசுபவர்கள் யாவரும் கதையின் உள்ளடக்கத்தை மட்டுமே பேசுகிறார்களே ஒழிய அகிரா குரோசவாவின் படங்களின் காட்சிகள் எப்படிக் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன, அதில் அசையாத காட்சிகளில்கூட படத்தின் பிம்பம் எவ்வாறு ஓர் ஓவியத்தின் கூறுகளோடு கட்டமைக்கப்ட்டிருக்கிறது என்பது குறித்து யாரும் பேசுவதில்லை. அவருடைய படங்களில் காட்சிகளில் பொருளோ, பாத்திரமோ எந்த விதமாக லைட் அண்ட் ஷடோவில் காட்டப்படுகின்றது, அது எவ்வாறு அசைகிறது என்பதில்கூட மகத்தான பல நுணுக்கங்கள் அமைந்துள்ளன. அது எத்தனை செகண்டில் கட் பண்ணப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அது இன்னும் மேன்மையடைகிறது. குரோசவாவின் படங்கள் யாவும் ஓர் அசையும் ஓவியத் திரைதான்!


■ ■ ■

ஒரு திரைப்படம் என்பது மாயவசப்படுத்துவது போன்ற ஒளிநிழல் ஆட்டம்தான். படத்தில் நேரடியாகத் தெரிகிற உருவங்களைத் தாண்டிப் படத்தை நீங்கள் பார்த்தால் அத ஓர் அசையும் அரூப ஓவியம்தான். பிறகு அடுத்தடுத்த நிலைகளில்தான் அது கதையாகவும், மற்றது மாகவும் மாறுகிறது. கனடா நாட்டின் நார்மன் மெக்லரன் படத்தை நீங்கள் பார்த்தால், அதில் கதையில்லை. ஆனால் மறைமுகமாக அதில் ஒரு கதையிருக்கிறது. அது கதையைச் சொல்கிறது.




இதற்குப் பிறகு நீங்கள் ஓர் ஒளிப்படம், ஓவியத்தை எப்படிப் பார்க்க வேண்டும், ஒரு திரைப்படத்தின் பேனருக்கும் ஓவியர் ரெம்ப்ராண்டின் ஓவியத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன, ஓர் அரசியல் கார்ட்டூனுக்கும், கோட்டு ஓவியமாக வரையப்படும் நகைச்சுவைத் துணுக்குக்கு மான வேறுபாடு என்ன, இதில் அரசியல் கார்ட்டூன் என்ன விதமாகச் செய்ல்படுகிறது, ஓர் அலங்கார டிசைன் எவ்வாறு இயங்குகிறது, கொமிக்ஸ் புத்தகங்களில் கட்டம் கட்டமாக, பேனல் பை பேனலாக வரையப்படும் ஓவியங்கள் என்ன சொல்கின்றன என்பது பற்றியெல்லாம் விவாதிக்கவோ, பேசுவதற்கான சூழலோ இங்கு இல்லை.

இயக்குநர் பாலு மகேந்திரா தன்னுடைய 'வீடு' படத்தைத் திரையிட்டுக் காட்டியபோதுதான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத சந்திப்பும் அதுதான். பதினைந்து வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் அவர் என்னிடம், "ஓவியம், ஒளிப்படம் குறித்து விரிவாக அறிந்து கொள்ளக்கூடிய அல்லது அவற்றைக் குறித்த அடிப்படையானவற்றைப் பேசும் எந்த நூலும் தமிழகத்தில் இல்லை..." என்று குறிப்பிட்டார். அப்போதெல்லாம் இப்படியான நூல்களை நாம் படிக்க வேண்டும் என்றால், ஆங்கிலத்தில் வெளியான நூல்களை மட்டுமே தேடிச் செல்லவேண்டும். இப்போதும் ஒரு சில புத்தகங்கள்தான் வெளிவந்துள்ளன. இன்னும் முழுமையாக ஓவியம், ஒளிப்படம் குறித்த தமிழ் நூல்கள் உருவாகாமல்தான் இருக்கின்றன. இன்னும் நாம் ஆங்கில நூல்களைத் தேடிச் சென்று படிக்கிற நிலைதான் நீடிக்கின்றது. எனக்கு ஓவியம், அனிமேஷன், கொமிக்ஸ் போன்ற புத்தகங்கள் மீதிருந்த ஈடுபாட்டால்தான் சென்னை கவின்க்லைக் கல்லூரியில் படித்தேன்.


ட்ராஸ்கி மருது

டென் கமாண்ட்மென்ட்ஸ், பென்ஹார் போன்ற படங்களை நான் சிறுவயதில் பார்க்கும்போது அந்தப் படங்களின் சில உட்புறக் காட்சிகளில் க்தாபாத்திரத்தின் பின்னால் உள்ள பகுதிகளில் பாதி ஷெட்டாகவும், மீதி இடங்கள் வரையப்பட்டும் இருப்பதை உணர்ந்தேன். அந்தக் காட்சிகள் ஐந்து அல்லது ஆறு செக்கண்டுக்குள் நகர்ந்து விட்டாலும் அவையாவும் பெயிண்டிங்தான் என்பதை என்னால் யூகிக்க முடிந்தது. கோட்டையின் ஒரு பகுதி வரை உண்மையானதாகவும், அதன் மீதிப் பகுதிகள் வரையப்பட்டிருப்பதையும் உணர்ந்தேன். அது உண்மையானதாகவும் இருந்தது. எனக்கு அந்தக் காட்சி புரிவதற்குள் அந்தக் காட்சி நகர்ந்துபோய்விடும். மீண்டும் அந்தக் காட்சி திரும்பி வராது. அப்படிப் பார்க்க வேண்டுமானால், மீண்டும் படத்தை முதலிருந்தே பார்க்க வேண்டும். இப்படியாகத் திரைப்படத்தில் நேரடியாக ஓவியர் பங்குபெறும் அனிமேஷன் மற்றும் ஸ்பெஷல் எபெக்ட்ஸ் பகுதிகள் மீது ஆர்வம் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாகக் கவின்கலைக் கல்லூரியில் பயிலும்போது சென்னை, கன்னிமரா நூலகத்தில் ரஷ்யாவின் புகழ்பெற்ற படங்களில் ஒன்றான பிரான்ஸ் லிர்ஸ்மென் படத்தின் ஸ்ரோறிபோர்ட் ஒன்றைப் பார்த்தேன். அதன் மூலம் வால்ட் டிஸ்னியின் படங்களின் ஸ்ரோறிபோர்ட் மூலமும் பலவற்றைக் கற்றேன்.

மேலை நாடுகளிடம் திரைப்படம் சார்ந்த ஒரு கூற்று உண்டு. without story board means lof of money என்பதுதான் அது.

நான் ஓர் இயக்குநராக இருக்கும்பட்சத்தில், நான் எதை யோசிக்கிறேனோ அதேபோலவே என்னுடைய ஒளிப்பதிவாளர், கலை இயக்குநரும், நடிகர், நடிகையரும், மற்றும் ஒட்டுமொத்தப் படக்குழுவும் யோசிக்கவேண்டும். அதற்கு எல்லோரும் காண்பியல் மொழிரீதியாக இணைந்திருக்கும் பட்சத்தில்தான் நினைத்தது திரையில் வரும். அப்படியான ஒரு புரிதல் தமிழ் சினிமாவில் இல்லாத காரணத்தால்தான் இன்று கதையாசிரியர்கள் படத்தின் கதையை வார்த்தைகளாலேயே நடத்த முயற்சிக்கி றார்கள். அதனால் தமிழ் சினிமா வெறும் வச னங்களாகவே உருவாக்கப்படுகிறது. படிமங்களாலேயே நடத்தப்படும் காட்சிகளின் ஊடே அவசியத்தின்போது அல்லது தேவையானபோது வருகிற வசனங்கள் இருக்கும்படி திரைப்படத்தை உருவாக்குகிற இயக்குநர்கள்தான் நல்ல சினிமாவை முன்பு எடுத்திருப்பதாக நான் நினைக்கிறேன்.

என்னுடைய தாத்தா எம்.எஸ்.சோலை மலை தமிழ் சினிமாவின் பிரபல கதாசிரியர். இயக்குநர் பிம்சிங்கோடு சேர்ந்து பாகப்பிரிவினை, பாவமன்னிப்பு, பதி பக்தி உள்ளிட்ட பல வெற்றிப்படங்களுக்கு வசனம் எழுதியவர். அவரிடம் ஏன் தாத்தா நீங்கள் படம் இயக்கவில்லை என்று கேட்டபோது, "வீட்டில் இருந்து எழுதிக்கொடுத்தாலே காசு கொடுத்திர்றாங்க... எதுக்குடா படப்பிடிப்புக்கு எல்லாம் போய்க் கஷ்டப் படணும் என்று நினைச்சு இருந்து விட்டன் அன்று. இப்போதுதான் அதன் அவசியம் தெரிகிறது" என்று கூறி வருத்தப்பட்டார். உண்மையில் அவருக்கு மட்டுமில்லை. பெரும்பாலான கதாசிரியர்களுக்குச் சினிமாவில் தொழில்நுட்பம் தெரியவில்லை என்பதால்தான் அவர்கள் படம் இயக்கவில்லை என்று பின்னாள்களில் உணர்ந்து கொண்டேன்.

டபிள்யூ.ஆர்.சுப்ராவ் எனும் மாபெரும் ஒளிப்பதிவாளரை என்னுடைய பதினெட்டாவது வயதில் சென்னை கவின்கலைக் கல்லூரியில் ஓவியப் பிரிவில் சேர்வதற்காக வந்திருந்தபோது அவரைத் தாத்தாவுடன் சந்தித்திருக்கிறேன். அப்போது அவர் நானும் ஒரு ஆர்ட்டிஸ்தான்பா என்று என்னிடம் கூறினார். அத்தோடு அவர் வரைந்த ஓவியத்தையும் என்னிடம் காட்டினார். அப்போதே ஆப்டிகல் பிறிண்டரை ஒரு லேத் மேனை வைத்துக்கொண்டு அவரே உருவாக்கினார் என்பதை அறிந்தபோது நான் அவரின் தொழில்நுட்ப அறிவைப் பார்த்து வியந்து போனேன். அவர் உருவாக்கிய ஆப்டிகல் மிஷினை பிறகு, நானே பயன்படுத்தும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. ஆனால், இதுபோன்ற அவருடைய மேதமை குறித்த தமிழ்நாட்டுச் செய்திகளை நாம் பதிவு செய்யாமல் தவறவிட்டுக்கொண்டிருக்கிறோம்.

தமிழ் சினிமாவில் போஸ்ரர்கள் குறித்த எந்தப் பதிவும் இல்லை. முப்பதுகளில் வெளியான போஸ்ரர்கள் ஒரு விசயத்தைப் பதிவு செய்திருக்கின்றன. ஆரம்பகாலத்தமிழ் சினிமாவில் போஸ்ரர்கள் வரைய ஆள்களே தனியாக இல்லாத நிலையும் இருந்திருக்கிறது. தமிழ் சினிமாவில் பெரும்பாலும் பேக்ரவுண்டை கே.மாதவன்தான் வரைந்திருக்கிறார். இதுபோன்ற விசயங்களை எல்லாம் தமிழ்ச் சூழலில் பதிவுசெய்யப்படாமலேயே பேய்விட்டது. அதையெல்லாம் தேடித் தொகுக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். என்னுடைய மாணவர்களுக்கு நான் அடிக்கடி சொல்வதுண்டு. தினசரிப் பேப்பர்களுக்காக ஒரு பத்திரிகை ஒளிப்படக் கலைஞரால் எடுக்கப்படும் ஒளிப்படங்களுக்குப் பின்னால், மிகப் பெரிய கதை இருக்கிறது. அதேபோன்று ஒவ்வொரு விஷுவலுக்குப் பின்னால் இருக்கும் மற்றக் கோணங்களையும் நாம் பார்க்கவேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களில் பத்திரிகையாளர்களால் எடுக்கப்படும் ஒளிப்படங்கள் கவினிக்க வேண்டியவை.

பத்துப் பத்திரிகை ஒளிப்படக் கலைஞர்கள் ஒரு குறிப்பிட்ட விழாவை எடுக்கும்போது அவர்கள் எந்தெந்த இடத்திலிருந்து அந்த விழாவின் காட்சிகளைப் பதிவு செய்கிறார்கள். அந்தப் பத்துப் பத்திரிகைகளிலும் வெளியாகும் ஒளிப்படங்கள் பத்து விதமான கோணத்தைச் சொல்லும். அதில் பதிவு செய்யப்பட்டிருக்கும் விடயங்களும் மாறுபட்டு இருக்கும். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை, குறிப்பிட்ட செக்கண்டில் எடுக்கிறார்கள். அந்தப் பத்திரிகைகளில் வெளியாகும் படங்கள் பல முறை பல காரணங்களுக்காக எடிட் செய்யப்பட்டுத்தான் நமக்கு வருகின்றன. அந்தப் படத்தில் இருக்கும் நபர்களில் எத்தனைபேர் வரவேண்டும், எந்தப் பகுதி தெரிய வேண்டும், இடம், முக்கியத்துவம் போன்றவையெல்லாம் முடிவு செய்யப்பட்டுத்தான் அது வெளி வருகிறது. ஆகவே, அத்தகைய படங்களுக்குப் பின்னால் சொல்லப்படாத பல கதைகளும் இருக்கின்றன என்பதை விழிப்போடு இருந்து பார்வையாளன் அறியவேண்டியிருக்கிறது.

தமிழ் சினிமாவில் கண்டுகொள்ளப்படாத பல துணைக் கலைகள் சார்ந்த பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளெல்லாம் அடையாளம் காணப்பட்டு, அதில் உள்ள பங்களிப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். இதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு அந்தச் செய்திகளைக் கொண்டு செல்ல வேண்டும். இடைப்பட்ட பகுதிகளை எல்லாம் தெளிவாகச் சொல்லுகிற, விவாதிக்கிற சூழலை உருவாக்க வேண்டும். அப்போதுதன் படைப்பாளியும், பார்வையாளனும் முழுமையான தொடர்பில் இருப்பார்கள் அல்லது இருக்க முடியும்.

குறிப்பாக அவற்றின் பிரச்சினைகள், வெற்றிகள், அவற்றில்சிறந்து விளங்கிய ஆளுமைகள், அந்தக்கலையின் முக்கியத்துவங்கள் போன்றவை பதிவுசெய்யப்பட வேண்டும். இந்தப் பகுதியை எல்லாம் தொடர்ந்து செய்வதற்குப் பலரை நாம்தான் தயார் செய்யவேண்டும். அதன் மூலமாக ஒரு மிகப்பெரிய முக்கியத்துவத்தை நமது தமிழ்த் திரைப்படத் துறையில் உள்ள அனைத்துக் கலைகளும் அடையாளம் பெறும்!

கட்டுரை

சி. சந்திரகலா



# இரணைதீவில் ஒரு தேசிய இனம்!



1992ஆம் ஆண்டு இரணைதீவிலிருந்து வெளியேறிய மக்கள் கடந்த வாரமளவில் மீண்டும் அங்கு சென்று ஊரைப் பார்த்தபோது வீடுகள் உடைந்திருந்தன. தேவாலயம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. மக்கள் இல்லாததால் பாடசாலை, வைத்தியசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என எல்லாமும் செத்துக்கிடந்தன. தென்னை மரங்கள் சோடைபற்றிப் போயிருந்தன. தீவுக்குள் பாதுகாப்பாக நின்ற ஆயிரக்கணக்கான மாடுகளைக் காணவில்லை. 'இரணைதீவுச் செம்மறி ஆடுகள்' என அங்கு மட்டும் இருந்த ஆட்டு இனம் அடையாளமின்றி அழிக்கப்பட்டுவிட்டது. "ஒரு தனித்தீவிலை புதிதாகக் குடியேறியதுபோல இருக்கு..." என அங்கு சென்ற ஒரு முதியவர் குறிப்பிட்டார். இன்றைக்கு இவர்கள் இந்தப் பூர்வீகத் தீவில் கால்பதிக்கச் செய்த பெருமைகள் அத்தனையும் யாரைச் சாரும்? அந்தத் துணிவை அவர்களுக்கு யார் கொடுத்தது? நிச்சயமாக அரசியல்வாதிகள் அல்ல. இரணைதீவு மக்களும் அவர்கள் தம் மத குருக்களுமே இத்தனைக்கும் உழைத்தவர்கள்.

### இரணைதீவும் இடப்பெயர்வும்

யாழ். குடாநாட்டின் மேற்காக இந்தியக் கண்டத்துக்கு இடைப்பட்ட பகுதியில் பல தீவுகள் உள்ளன. நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, மண்டைதீவு, பாலைதீவு, கச்சதீவு எனப் பல சிறிதும் பெரிதுமான தீவுகள் உள்ளன. இரண்டு தீவுகளை அருகருகாகக் கொண்டதாகவும், ஏ 32 யாழ் மன்னார் வீதியில் நாச்சிக்குடாச் சந்திக்கு மேற்காக 12 கடல் மைல் தொலைவில் ஒன்றுடன் ஒன்று ஒட்டியதாகவும் உள்ள பிரிக்கமுடியாத தீவே இரணைதீவு எனப்படுகிறது. இரணைதீவுக்கு வடக்காக பாலைதீவும். வடமேற்கே நெடுந்தீவும் அதற்குக் கீழாகக் கச்சதீவும் தென்மேற்காக மன்னார்தீவும் உள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் கே.என். 77 என்ற கிராம அலுவலர் பிரிவே இரணைதீவு. சுமார் 8 கிலோமீற்றர்கள் நீளமும், 3 கிலோமீற்றர்கள் அகலமும் ஆயிரத்து 200 ஏக்கர் பரப்பளவும் கொண்ட இந்தத் தீவில் போர்த்துக்கேயர் காலத்திலே கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு ஏற்பட்டது. 1992ஆம் ஆண்டு ஓகஸ்ட் 10ஆம் திகதிய கணிப்பீட்டின்படி 190குடும்பங்கள் வாழ்ந்ததாகப் பதிவுகள் உள்ளன. எந்த வித தலையீடுகளும், பிரச்சினைகளும் இன்றி இரணைதீவில் மக்கள் அமைதியாக வாழ்ந்தனர். மீன்பிடி, மந்தை வளர்ப்பு, விவசாய முயற்சிகள் என வாழ்க்கையைக் கொண்டு நடாத்தக் கூடிய வகையில் இந்த மக்கள் வாழ்ந்தனர்.

1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரணைதீவு கடற்படையினரின் செல்வாக்குக்கு உட்பட்டது. அந்தக் காலப்பகுதியிலேயே மக்கள் அங்கிருந்து வெளியேறி முழங்காவிலுக்கு அருகில் இரணைமாதா நகர் என்ற பகுதியில் குடியேறினர். அவர்கள் வெளியேறுவதற்குக் காரணம், அதற்குச் சற்றுமுன்னர்தான் மண்டைதீவில் கடற்படையினரால் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன. அதுபோன்று தமக்கும் ஏற்படலாம் என்று பயந்தனர்.

1992 ஆம் ஆண்டில் அங்கிருந்து இடம்பெயர்ந்து பல இடங்களிலும் தற்காலிகமாக வாழ்ந்து பல இழப்புக்களைச் சந்தித்து 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சென்றடைந்தனர். பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும் இரணைதீவுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் இரணைமாதா நகரிலேயே மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

### போராட்டங்களும் இராணுவமும்

இந்த மக்கள் தமது பூர்வீக நிலமான இரணைதீவில் குடியேறுவது தொடர்பில் பல்வேறுவிதமான போராட்டங்களை நடத்தியபோதிலும் கடற்படையினர் அவர்களை அங்கு குடியேற அனுமதிக்கவில்லை. 1992 ஆம் ஆண்டின் பின்பான காலப்பகுதியில் இந்தத் தீவின் சூழல் முற்றுமுழுதாக மாற்றப்பட்டிருந்தது.

1. கடற்படையினரின் முக்கிய ராடர் நிலையம் ஒன்று அங்கு அமைக்கப்பட்டு கடற்படையின் கடல் ரோந்துப் பணிகள்இடம் பெற்றன.

2. கடற்படையினர் வேறு பல நிறுவனங்களுடன் இணைந்து இந்தப் பகுதியில் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபடுவதால் அதிக வருமானத்தைப் பெற்று வருகின்றனர். அதேவேளை மூலிகைகள் வளர்ப்பில் ஈடுபடுவதாகவும் கதைகள்.

3. இவற்றுக்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து மன்னார் கடற்பரப்பின் ஊடாகப் போதைப் பொருள் கடத்துபவர்களுக்கான செயற்பாடுகளை கடற்படையினர் கண்டும் காணாது இருப்பதாகவும் கூறப்படுகிறது.

1992 ஆம் ஆண்டில் இரணைதீவு மக்கள் தமது ஊரைவிட்டு வெளியேறும் போது சீமெந்தால் கட்டப்பட்ட 190வீடுகள் இருந்ததாகவும் அவற்றில் தற்போது 45வீடுகளே உள்ளதாகவும் ஊரவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். 15 தொடக்கம் 20 வரையான வீடுகளே தற்போது சிறு செலவுகளுடன் சீர்செய்யக்கூடிய நிலையில் உள்ளன.

இந்த மக்கள் தம்மை இரணைதீவுக்கு மீளக் குடியேற்றுமாறு கடந்துபோன மகிந்த அரசுக்கு அழுத்தம் கொடுத்தபோதிலும் அது சாத்தியப்படாத நிலையில் 'நல்லாட்சி' அரசு தம்மை மீள்குடியேற்றும் என்ற எதிர்பார்ப்பில் காத்திருந்து. அதுவும் நிறைவேறாத பட்சத்தில் 2017ஆம் ஆண்டு மே 1 ஆம் திகதி தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இறங்கினர். அது ஒரு வருட காலத்தை நெருங்கிய நிலையில், காத்திருந்து பயனில்லை என்ற மன உந்துதலால் தமது நிலத்துக்கு எப்படியாவது போயே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தனர். தமது உள்நோக்கம் வெளியில் தெரிந்துவிடாதவாறு தேவாலயத்துக்குச் சென்று அதன் பூசை வழிபாடுகள் முடிந்ததும் அங்கேயே தங்கிவிட்டனர்.

### ஆதரவுக்கு அரசியல்வாதிகளை அழைக்கவில்லை

இந்த முடிவு தமிழ் அரசியல்வாதிகளின் மண்டையை நொருக்கும் ஓர் ஆக்ரோசமான தீர்மானமாக அமைந்தது. யாரையும் நம்பாது அந்த மக்கள் தம்மை மட்டும் நம்பி அந்த முடிவை எடுத்தார்கள். 46 படகுகளில் தாமும் ஏழு கிறிஸ்தவப் பாதிரிமாரும் செல்வது என்ற அந்த வரலாற்று முடிவை எடுத்தார்கள். பின்னர் அங்கு சென்ற அரச தூதுக்குழுவில் பல தமிழ் அதிகாரிகள் இடம்பெற்றிருந்தார்கள். மாவட்டச் செயலர் மற்றும் பூநகரி பிரதேச செயலர் ஆகியோர் இடம்பெற்றிருந்தபோதிலும் தமிழ் அரசியல்வாதிகள் எவரையும் அவர்கள் தம்முடன் இணைத்துக் கொள்ளவில்லை. இது தமது பிரச்சினைகளை அரசு நேரடியாகக் கையாள்வதை அவர்கள் விரும்புவதாகவிருக்கலாம்.

### இரணைதீவுத் தேசியம்

இந்தத் தீவு மக்களை ஏனைய தமிழ் மக்களுடன் ஒப்பிட்டுவிட முடியாது. இவர்களிடம் சாதி வேறுபாடு, மத வேறுபாடு, பிரதேச வேறுபாடு ஏனைய ஏற்றத்தாழ்வுகள் ஒப்பீட்டளவில் குறைவு. அனைவரும் ஒரே நிலத்தவர். உறவுக்காரர் கிறிஸ்தவ மதத்தவர் என எல்லாமே ஓர் இறுக்கமான தேசிய இனம் ஒன்றுக்குரிய கட்டமைப்பை அல்லது உள்ளடக்கத்தை கொண்டிருக்கின்றனர். எல்லாவற்றையும் விட்டுப் பார்த்தால் அவர்களை இரணைதீவுத் தேசிய இனம் எனலாம்.

ஒரு தேசிய இனத்துக்குரிய ஒற்றுமை அவர்களிடம் இருந்தது. அதனால் தான் வாழ்வு அல்லது சாவு என்ற தீர்மானத்துக்கு அனைவரும் ஒத்துழைத்தார்கள். அவர்கள் அங்கு சென்று வாழ்வதற்கான எந்த உத்தரவாதமும் யாராலும் வழங்கப்படவில்லை. அவர்கள் மிக உறுதியாக முடிவெடுத்தார்கள். 'எங்களின் மண்ணில் யார் எம்மைத் தடுப்பது' என்று நினைத்திருக்கலாம். தமது இந்தச் சந்ததி பயந்து காலைப் பின்னுக்கு எடுத்தால் தமது எதிர்காலச் சந்ததி ஒருபோதும் அந்த மண்ணில் கால்பதிக்க முடியாது என்பதைத் திடமாக நம்பினார்கள். இது தமது சமகால கடப்பாடு என உறுதியாக நம்பினார்கள். இத்தகைய அர்ப்பணிப்பை எந்த மக்கள் கூட்டமும் செய்வதற்குத் துணியவில்லை.

### வீண்முயற்சியும் விடா முயற்சியும்

வெளியில் நின்று பார்ப்பவர்கள் பிடல் காஸ்ரோ கூறுவதுபோல 'போராடும் வரை வீண் முயற்சி என்பார்கள் வென்ற பின்பு விடாமுயற்சி என்பார்கள்' அதுவே இரணைதீவு மக்கள் விடயத்திலும் நடந்திருக்கிறது. தமிழ் அரசியல்வாதிகளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்றை கிறிஸ்தவ நிறுவனமும் இரணைதீவு மக்களும் செய்து காட்டியிருக்கிறார்கள்.

மீள்குடியேறிய ஏனைய மக்கள் தமது வாழ்வாதாரத்தை மீள் உருவாக்கம் செய்வதற்குப் பல வருடங்கள் எடுக்கலாம். மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு. விவசாயம் என நீண்டகாலத்திலேயே அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும். ஆனால் இரணைதீவு மக்களைப் பொறுத்தவரை அங்கு சென்ற அன்று மாலையே கடலுக்குள் இறங்கிப் பல இலட்சம் பெறுமதியான உழைப்பைப் பெற்றிருக்கிறார்கள். உண்மையில் அவர்களது போராட்டம் அந்தத் தீவில் குடியேறுவதே. அதன் பின் அவர்கள் தமது வாழ்வாதாரத்துக்காகத் தம்மை உருவாக்கிக் கொள்வார்கள். மக்கள் போராட்டத்துக்கு மிகச் சிறந்த உதாரணமாக இரணைதீவு மக்களின் நிலத்துக்கான போராட்டம் அமைந்திருக்கிறது. சம்பூர், கேப்பாப்பிலவு போராட்டங்களின் பின்பு மக்களுக்குக் கிடைத்த மற்றோர் வெற்றியாகவே இதைக் கொள்ள முடியும்.



கட்டுரை

வினோஜா நாதரூபன்




நாம் வாழும் இந்த அகன்ற அண்டத்தை, அணுக்களை அருகருகே அடுக்கி அடுக்கி ஆண்டவன் ஆக்கினார் எனச் சென்றவாரத்துக்கு முதல்வாரம் பார்த்தோம். ஆனால் இது பாதி உண்மை மாத்திரமே. ஓர் உடலை அடையாளம் காண்பிப்பதற்காக இருவரைப் பிணவறை ஊழியர் பிணவறைக்குள் அழைத்துச் செல்கிறார். பிணவறைக்குள் இருபது பேர் உள்ளனர் எனும்போது அது பிழையான அர்த்தத்தைத் தருகின்றது. ஏனெனில் பிணவறைக்குள் மூன்று உயிர் உள்ளவர்களும் பதினேழு உயிர் அற்றவர்களும் உண்டு. வெறும் உடல்களை மட்டும் நாம் கணக்குப்பார்ப்ப தில்லை. அணுக்களாலான சடப்பொருள்கள் வெறும் பாதி மட்டுமே. அவற்றுள் உயிராக நிரம்பி வழிபவை சக்தி.

**சிவசக்தி**

நீங்கள் இருக்கும் கதிரை, வாசித்துக்கொண்டிருக்கும் பத்திரிகை, உங்கள் உடல், உங்கள் அனுமதியின்றி உங்கள் சுவாசப்பை க்குள் அத்துமீறும் காற்றுமூலக் கூறுகள் என்று கண்ணுக்குப் புலப்படும், புலப்படாத ஆயிரம் ஆயிரம் சடப்பொருள்களைக் கடவுள் இந்த அண்டம் எங்கும் கடைவிரித்து விற்கின்றார். அதே நேரம், நாம் இசையில் சுவைக்கும் ஒலி, காதலியையோ இல்லை கடவுளையோ பார்த்துக் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க" வோ எமது கண்களுக்குள் நீராகப் பாயும் ஒளி, காமத்திலும் பிரார்த்தனைத் தீபத்திலும் படரும் வெப்பம், இவையெல்லாம் சக்திகள் ஆகும். இன்னும் பலவுண்டு. 'விசையுறு பந்தின்' இயக்கத்தை உருவாக்கும் இயக்குவதற்குச் சக்தி, நாம் உண்ட உணவால் எமது உடலில் உறைந்து கிடக்கும் இரசாயன சக்தி. (அப்பந்துபோல் எம் உடல் பயணிக்க வேண்டும் என்றால், இந்த இரசாயன சக்தி இயக்க சக்தியாக மாற வேண்டும்) இவ்வாறு சடமும் சக்தியும் இணைந்து, சிவனும் சக்தியும்போல் இந்தப் பிரபஞ்சத்தை எந்தவித பஞ்சமும் இன்றி உருவாக்கி நிற்கின்றன.

**மர்மமான சக்திகள்**


இவற்றை விடப் பல வகைப்பட்ட அழுத்த சக்திகளும் உண்டு. உதாரணமாகச் சொன்னால் அதே பந்தை மேல்நோக்கி எறியும் போது அதன் வேகம் குறையும். அப்பொழுது அது இழந்த இயக்க சக்தி, தரைக்கு மேல் எங்கும் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத புவியீர்ப்புப் புலத்தில் சேமிக்கப்படும். அவ்வாறு சேமிக்கப்பட்ட சக்தியைப் புவியீர்ப்பு அழுத்த சக்தி என்போம். அதேபோல் மின்புலத்தில் சேமிக்கப்படும் சக்தியை மின்சார சக்தி என்போம். எளிதான ஓர் உதாரணம் சொல்லவேண்டும் என்றால் 'இறப்பர் பான்டை'ச் சொல்லலாம். பாடசாலையில் இயற்பியல் பாட வேளையில் சலிப்படைகிற என்னைப்போல் நீங்கள், ஓர் இறப்பர் பான்ட்டில் கொப்பி ஒற்றையைச் சுருட்டி அம்புபோல் தொடுத்து, வில்லின் நாண்போல் இறப்பர் பான்ட்டை இழுத்து உங்கள் நண்பர்கள் மேல் போர் தொடுத்திருப்பீர்கள். நீங்கள் இழுத்தல் மூலம் ரப்பர் பான்ட்டுக்குக் கொடுத்த சக்தி, ரப்பர் பான்ட்டில் சேமிக்கப்படும். அதை மீள்தன்மை அழுத்த சக்தி என்று கூறுவோம். புவியீர்ப்புப் புலமும் மின்புலமும் கண்ணுக்குத் தெரியாத ஓர் இறப்பர் பான்ட் போல் தான்.

**சக்தியின் அவதாரங்கள்**

சக்தி தனது வடிவங்களை மாற்றி மாற்றிப் பல அவதாரங்கள் எடுக்கும். லக்ஸபானா நீர்வீழ்ச்சியில் மேலிருந்து விழும் நீரின் இயக்க சக்தியை மின்பிறப்பாக்கிகள் மின்சக்தியாக மாற்றும். அந்த மின்சக்தி வீட்டுக்குள் இன்னும் பல சக்தி வடிவங்களாய் மாறும். மின்குமிழுள் ஒளிச் சக்தியாக மாறும். வானொலியினுள் ஒலிச் சக்தியாக மாறும். மின் கேத்தலுள் வெப்ப சக்தியாக மாறும். நீர் இறைக்கும் இயந்திரத்துள் மீண்டும் நீரின் இயக்க சக்தியாக மாறும். கவனிக்கவும் மின்பிறப்பாக்கிகள் இயக்க சக்தியை மின்சக்தியாக மாற்றுபவை. அது நீர்வீழ்ச்சியின் இயக்க சக்தியாக இருக்கலாம், இல்லை எரிபொருள்களை எரிப்பதனூடாகப் பெறப்படும் இயக்க சக்தியாக இருக்கலாம். ஆனால் மின்பிறப்பாக்கிகள் என்பவை மின்சக்தியை இயக்க சக்தியாக மாற்றுபவை. புரிகிறதா?

**ஒரு கேள்வி**

மின்விசிறிகளும், சைக்கிள்களில் பயன்படுத்தும் 'டைனமோக்களும்' மின் பிறப்பாக்கிகள் போன்றனவா? இல்லை மோட்டர்கள் போன்றனவா? என நீங்களே யோசித்துப்பாருங்கள். மறுபடியும் சொல்கிறேன், வாசிப்புப் பழக்கம் நல்லதுதான். அதைவிட யோசிப்புப் பழக்கம் முக்கியமானது. மத நூல்களை வாசிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொண்டவர்களால் தான் மதக்கலவரங்கள் உருவாகின்றன. அவர்கள் வாசித்தவை பற்றி யோசித்திருந்தால், மதநூல்களின் உண்மை புரியாவிட்டாலும் அவற்றின் அழகியலாவது புரிந்திருக்கும். வாழ்க்கையின் நிராகரிக்க முடியாத அங்கம் இறப்பென்று உணர்ந்தவன், விஷ்ணு சிலையிலிருந்து சிவலிங்கத்தை நீக்கியிருக்கமாட்டான். இதயக் கண்ணை யேசு அளித்தார் என்பதைப் புரிந்தவன், அவர் கண் வைத்



தியரின் வேலையையும் செய்தாரா, இல்லையா? என்பது பற்றி அக்கறைப் படமாட்டான். கல்வியின் நோக்கம் பொறியியலாளர் ஆவதோ, வைத்தியர் ஆவதோ இல்லை, யோசிக்கப் பழகுவது.

**சக்தியை ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது**

இயற்பியலில் சக்திக் காப்பு விதி ஒரு முக்கியமான விதியாகும். இந்த விதி சொல்வது என்னவென்றால், ஒரு தனித்த தொகுதியின் முழுவதுமான சக்தி எப்பொழுதும் மாறாது என்பதே. தனித்த தொகுதி எனும் பொழுது, நாம் கருதும் பொருள்களின் கூட்டத்துக்கும் புறத்துக்கும் இடையில் சக்தி எதுவும் பரிமாறப்படவில்லை என்று அர்த்தம். உங்கள் வீட்டில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. நீங்கள் மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தத் தொடங்குகிறீர்கள். ஆரம்பத்தில் மின்சாரம் இல்லை என்பதால் வீட்டின் உபகரணங்களுக்குள் இருந்த சக்தி பூச்சியம். மின்பிறப்பாக்கியை இயக்க ஆரம்பிக்கும்போது, அதன் எரிபொருளில் குறித்த அளவு இரசாயன சக்தி இருக்கும். அதுவே வீட்டில் உள்ள பொருள்கள் மற்றும் மின்பிறப்பாக்கி என்ற தொகுதியின் ஆரம்ப, அனைத்துமான சக்தியாகும். பின்பு மின்மோட்டர் மூலம் நீங்கள் வீட்டில் ஒரு மின்சாரக் கேத்தலில் நீரை சுடவைக்கின்றீர்கள். அப்பொழுது எரிந்த எரிபொருளின் இரசாயன சக்தி மின்சார சக்தியாக மாறி பின்னர் மின்சாரக் கேத்தலில் நீரின் வெப்ப சக்தியாக மாறும். இதற்கு ஓர் ஐந்து நிமிடங்கள் சென்றதென்று வைத்துக்கொண்டால், இப்பொழுது எஞ்சியுள்ள எரிபொருளின் இரசாயன சக்தியையும் நீரின் வெப்ப சக்தியையும் கூட்டினால் ஆரம்பத்திலிருந்த அதேயளவு சக்தியே இருக்கும். இங்கு நாம் மின்குமிழை இயக்குவதாக எடுத்தால், இந்த சக்திக் காப்பு விதியைப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால் மின்குமிழின் ஒளிச் சக்தி நாம் கருதிய வீடு என்ற தொகுதிக்கு வெளியிலும் செல்கின்றது. அப்படியென்றால் இந்தத் தொகுதி ஒரு தனித்த தொகுதி இல்லை. சக்திக்காப்பு விதியைத் தனித்த தொகுதிக்கே பயன்படுத்தலாம்.

இந்தப் பிரபஞ்சத்தை முழுவதுமாகக் கருதும்போது, அது ஒரு தனித்த தொகுதியாகின்றது. எனவே பிரபஞ்சத்தின் சக்தி எப்பொழுதும் மாறாது. இதை இன்னொரு விதமாகச் சொன்னால், சக்தியை ஆக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது. பின்னர் மின்நிலையங்களிலும் பிற இடங்களிலும் சக்தியை உருவாக்கின்றோம் என்று சொல்வதன் அர்த்தம் என்ன?. உண்மையில் சக்தியை ஒரு வடிவத்திலிருந்து எமக்குப் பயன்படும் இன்னொரு வடிவத்துக்கு மாற்றுகிறோம், அவ்வளவு தான்.

**அழுத்த சக்திகள் ஏன் மர்மமானவை?**


ஏன் அழுத்த சக்திகளை மர்மமான சக்திகள் என்று நான் மேலே செல்லமாகச் சொன்னேனென்றால், பிற சக்திகளை நேராக அதே வடிவத்தில் அவதானிக்க முடியும். ஆனால் அழுத்த சக்திகள் இன்னொரு வடிவத்துக்கு மாறும்போதே அவற்றை அவதானிக்கவோ பயன்படுத்தவோ முடியும். லண்டனிலிருந்து வந்த மாமி உங்களுக்கு 100 பவுன்ஸ் தருகிறார். இப்பொழுது உங்களிடம் பணம் உள்ளது. ஆனால் அதை அப்படியே இலங்கையில் செலவு செய்துவிட முடியாது. பவுன்சை நீங்கள் ரூபாய்களாக மாற்ற வேண்டும். இறப்பர் பான்ட்டை நீங்கள் விடும் பொழுது ஓய்விலிருந்த காகிதத்துண்டு இயங்கத் தொடங்குகிறது. அதற்கு இயக்க சக்தி கிடைக்கிறது. உங்கள் கைகளும் இறப்பர் பான்ட்டும் காகிதமும் ஒரு தனித்த தொகுதி. நீங்கள் இறப்பர் பான்ட்டை இழுத்த பொழுது உங்கள் உடலின் இரசாயன சக்தி இறப்பர் பான்ட்டில் மீள்தன்மை அழுத்த சக்தியாகச் சேமிக்கப்படும். ஆனால் அதை நாம் அவதானிக்க முடியாது. பின்னர் காகிதம் இயங்கி இயக்க சக்தியோடு திகழும் போது காகிதத்துக்குச் சக்தி கிடைத்திருக்கிறது என அவதானிக்கிறோம். ஆனால் மேற்கூறியது போன்று சக்தியை உருவாக்க முடியாது. எனவே இந்தச் சக்தியை காகிதம் எங்கிருந்து பெற்றது எனச் சிந்திக்கும் போதே இறப்பர் பான்ட்டின் மீள்தன்மை அழுத்த சக்தியிலிருந்து பெற்றிருக்க வேண்டும் என முடிவெடுக்கிறோம். காகிதம் இயங்குவதால் இயக்கசக்தி உண்டு என்று அறிவதுபோல், அழுத்த சக்தி உண்டென்று நேரடியாக அவதானிக்க முடியாது.

**ஆசிரியரின் ஆணவம்**

அழுத்த சக்திகளின் இந்த மர்ம இயல்புக்கு உவமை சொல்லவேண்டும் என்றால், நீங்கள் பாடவேளையில் இறப்பர் பான்ட்டோடு விளையாடியதற்கு உங்களை அடித்த ஆசிரியரின் ஆணவத்தையும் சொல்லலாம். எம் அனைவருக்கும் ஆணவம் உண்டு. இல்லையென்றால் என்றோ புத்தர் ஆகியிருப்போம். ஆனால் ஆணவம் அனைத்து நேரங்களிலும் வெளிப்படாது. மர்மமாய் மறைந்திருக்கும். ஆனால் பாடம் நடத்தும் போது யாராவது ஒரு மாணவன் என்னை மதிக்காமல் இறப்பர் பான்ட்டோடு விளையாடுகிறான் என்றால், உடனே அந்த ஆணவம் விழித்துக்கொள்ளும். 'பட்டம் முடித்துவிட்டு வந்து படிப்பிக்கிறன், இவன் பொடிப்பயல் பாடத்தை கவனிக்காது என்னை அவமானப்படுத்துகிறானே' எனக் கோபம் வரும்.

அதுவரை அவதானிக்க முடியாத வண்ணம் அழுத்த சக்தியாக இருந்த ஆணவத்தைத் திட்டல் என்ற ஒலிச் சக்தியாகவும் அடித்தல் என்ற இயக்க சக்தியாகவும் மாறும்போதே அவதானிக்க முடிகிறது.

சலிப்படையாமல் பாடம் நடத்துவதே என் வேலை என்ற நியாயமோ, அவன் குறும்புத்தனத்தின் அழகியலோ அந்த நேரம் மண்டைக்கு ஏறுவதில்லை. பின்பு கூட நன்மைக்குத்தான் அவனை அடித்தேன் என எனக்கு நானே பொய்யான சமாதானம் சொல்லிக் கொள்வேன். ஆனால் நானாவது பரவாயில்லை, எனது ஆசிரிய நண்பர்கள் சிலர் தாம் சொல்லும் பொய்களைத் தாமே நம்பியும் கொள்கின்றனர்.



மின்விசிறிகளும், சைக்கிள்களில் பயன்படுத்தும் 'டைன மோக்களும்' மின் பிறப்பாக்கிகள் போன்றனவா? இல்லை மோட்டர்கள் போன்றனவா? என நீங்களே யோசித்துப்பா ருங்கள். மறுபடியும் சொல்கிறேன், வாசிப்புப் பழக்கம் நல்லதுதான். அதைவிட யோசிப்புப் பழக்கம் முக்கியமானது.

தொகுப்பு
அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து




## மலேரியா தினம்!

உலக மலேரியா நோய் தினத்தை முன்னிட்டு, கல்முனைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகமும், பிராந்திய மலேரியா தடை இயக்கமும் இணைந்து கல்முனை மாநகரில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நடத்தியது.
பிராந்தியமலேரியாதடைமருத்துவஅதிகாரிஎம்.எம்.நௌஷாத் தலைமையில் ஊர்வலம் இடம் பெற்றதுடன், ஊடக அமர்வு ஒன்றும் இடம்பெற்றது.

## கதவடைப்பு

TASEU
Teachers' Association of South Eastern University of Sri Lanka
Reg. No: 8504

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஊடகவியலாளர் சந்திப்புஒன்றுக்கு கடந்தவாரம் (13.05.2018இல்) அழைப்பு விடுத்திருந்தது.
பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த ஆசிரிய சங்கத்தின் இந்த ஊடகவியலாளர் சந்திப்புகுச் சென்ற ஊடகவியலாளர்கள் ஒலுவில் வளாக நுழைவாயிலேயே பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.
ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதிக்க வேண்டமென பல்கலைக்கழக உப வேந்தரின் பணிப்பில் பதிவாளர் அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாக அங்கு ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.




வழமை போன்று தமது சங்கம் பல்கலைக்கழக பதிவாளருக்கு அறிவித்து விட்டே இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்புக்கு ஏற்பாடுசெய்ததாகத்தெரிவித்த ஆசிரியர்சங்கத்தலைவர், ஊடகவியலாளர்கள்தடுத்துநிறுத்தப்பட்டமைக்கு கடும் கண்டனத்தையும் தெரிவித்தார். இந்த புறக்கணிப்புத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் சார்பிலும் கண்டனங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

***ஊடகம் என்றால் ஏன்தான் இப்பயப் பிராந்தியோ?***
***பாவம், பாவம், பரிதாபம்!***



## தரிசு நிலம்!

இலங்கையின் நெற் களஞ்சியம் எனப் பேசப்படும் அம்பாறை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படாது தரிசாக விடப்பட்டு காட்சியளிக்கின்றன. இந்த மாவட்டத்தின் நீர்ப்பாசனத்துக்கு முக்கிய மான ஆதரவு வழித்தடமாக விளங்கும் சேனநாயக்க சமுத்திரத்தின்நீர்மட்டம்வெகுவாகக்குறைந்துள்ளதாகக் கூறி, மிகக்குறைந்தளவு காணிகளுக்கே சிறுபோகநெற்செய்கைக்கானஅனுமதிவழங்கப்பட்டமை விவசாயிகளைப்பெரும்கவலையில்ஆழ்த்தியுள்ளது. திட்டமிட்டபுறக்கணிப்புசெயற்பாடே இதுவென்றகருத்துக்களும் விவசாயிகளிடமிருந்து எழாமலில்லை!
**கதிகலங்கி நிற்கும் முஸ்லிம் விவசாயிகள்!!**

## சளைக்கவில்லை அவர்கள்!

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஒலுவில் வளாகத்தில் நடத்தவிருந்த ஊடகவியலாளர் மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் நுழைவாயிலில் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து ஆசிரிய சங்கம் அதிரடி நடவடிக்கையில் இறங்கியது.
ஆசிரிய சங்கத்தினர் என்ன சளைத்தவர்களா? உடனே செயற்பட்டு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்துக்கு அண்மிதமான இட அமைவில் உள்ள ஒலுவில் கிறீன் ஹவுஸ் எனும் தனியார் விருந்தினர் விடுதிக்கு ஊடகவியலாளர்களை அழைத்துச் சென்று தமது ஊடக மாநாட்டைக் கச்சிதமாக நடத்திமுடித்தனர்.

***தம்பக்கம் நியாயம், நீதி இருந்தால் ஏன் ஐயா, இத்துணை அச்சம்? - கேட்கிறார்கள் ஊடகர்கள்!***



## ஊடக சந்திப்பு!

தென்கிழக்குப் பல்கலைக்கழக சமகால நிலவரங்கள், மற்றும் புதிய உப வேந்தர் நியமனம் என்பன தொடர்பாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குத் தெளிவு படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை(மாநாடு)ஆசிரியர்சங்கம்நடத்தியது.
பல்கலைக்கழக ஆசிரிய சங்கத் தலைவரும், சிரேஷ்டவிரிவுரையாளருமானஎம்.அப்துல்ஜப்பார் தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சங்க செயலாளரும், மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எப்.எம்.அஷ்ரப், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம்.ஹிலால் ஆகியோரும் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.
தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தைச் சார்ந்த ஒருவரையே புதிய உபவேந்தராக நியமிக்க வேண்டும், தற்போதைய உபவேந்தரும் புதிய உபவேந்தருக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ளதால் பதில் உபவேந்தராக அவர் நியமிக்கப்படக்கூடாது எனும் சங்கத் தீர்மானங்கள் தொடர்பில் தலைவர் அப்துல் ஜப்பார் விளக்கமளித்தார்.

***நிர்வாகம் தொடர்பிலும் கருத்து விசாலங்களுக்குக் குறைவில்லை.***



## யாழ். பெண்மணிக்கு மதிப்புறுத்தல்!

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைச் சேர்ந்தவரும், சுகாதார அமைச்சின் தாதியர் கல்விக்கான பணிப்பாளருமான றஜிலாதேவி வல்லிபுரநாதன் தாதியர் துறைக்கு ஆற்றிவரும் பங்களிப்புளுக்காக நிந்தவூரில் (கிழக்கு) பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.
நிந்தவூர் ஆதார வைத்தியசாலை தாதியர் கழகம் நடத்தியபன்னாட்டு தாதியர்தின விழாவில் சிறப்பு அதிதியாக இவர் கலந்துகொண்டபோது, தாதியர் கழகம் அவருக்கான இந்த மதிப்புறுத்தலை வழங்கியது.
பிரதி சுகாதார அமைச்சர் எம்.பைஸால் காசிம் விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.
***சேவையின் சிறப்பன்றோ இது!***

கவிதை

மாதவி உமாசுத சர்மா

## காற்று எனும் நண்பன்




மூங்கில் முளைப்பதற்கு
முன்பாகவே பிறந்திருந்தது
நாம் புல்லாங்குழல் செய்வோம்
என்று அறிந்திராத காற்று

நம் சங்கீத ஸ்வரங்களுக்கு
முன்னதாகவே அவை
பாடியிருந்தன பாட்டு

தென்றலாய்ப் புயலாய்ப்
பல்வேறு வடிவங்களில்
பெயர் மாறி ஓரிடத்தில் நில்லாது
அலைந்து திரியும்

ஒரு கைதியைப்போல
அடைந்து கிடக்காத காற்றை
வாடகைக்கு வாங்கிய நாம்
சொந்தமாக வைத்துக்கொள்ள
நினைக்கும் பேராசைக்கு அது
அடிபணியாமல் தன்போக்கில்
தன் சுதந்திரப் பாதையில்
போய்விட முடிவில்
நாம் சாவின் வண்டியில் ஏறி
வேற்றுலகு செல்கிறோம்

மூச்சுக்காக மூச்சு விடாமல்
சண்டையிட்டு மூச்சை
விட்டுவிடும்
மூர்க்கத்தனத்துக்கு மனிதம்
என்று
பெயர் சூட்டிக் கொண்டு வாழ
வந்துவிடும் நாம்,
காற்றும் காற்றும்
சண்டையிட்டுப் பூமியை விட்டு
போய்விட்டால்,

காலமானவர்கள் என்று
காலத்துக்கும்
அழியா பெயர் சூடிக்கொள்வோம்
என்பதை மறந்து விடுகிறோம்!

காடுகளாய்க் கிடந்த பூமியில்
கலங்கமற்றுத் திரிந்த காற்றை
நாம் வளர வளர அழியவிட்ட
காடுகளால்
சாவடையச் செய்ய முயல்வதால்
தன் வெப்பத் தோழனை ஏவி
நம்மைக் கொல்கிறது காற்று

மனிதனின் சாவை
சூறாவளியின்
கைகொண்டு தீர்மானிக்கும்
காற்று தன்
புனிதத்தை மீளும் வரை
தன் இலட்சியத்தைக் கைவிடப்
போவதில்லை,
என்பதால் காற்றின் தோள்களில்
நண்பனாய்க் கைபோட்ட
வண்ணம்
சின்னச் சின்னக் காடுகளைப்
பரிசளிப்போம்

காற்றையும் ஒரு குழந்தையாய்
எண்ணி
அன்பு செய்வோம்... காலத்தால்
வளரும் குழந்தை நமக்குத்
துணையாவதுபோல
காற்றும் நமக்குத்
துணையாகட்டும்

## தள்ளி வைப்பதா தாய் மண்ணை?

தாய் மண்ணை
தவிக்க விட்டு
அந்நிய நிழலுள்
அடைக்கலம் கொண்டாரே
முடிந்தால் ஒரு நிமிடம்
முழுதாய்த் தாருங்கள்

அன்னை காட்டிய நிலவை
அடுக்கு மாடிகள்
அணைத்துவிட
செயற்கைக் கூட்டுள்
சீவியம் நடத்துவோரே...
உங்கள்
இயல்பு வாழ்க்கைக்கு
ஏது அடையாளம்?

ஏர் பிடித்தவனை
ஏளனம் செய்தா
அங்கு எச்சிப் பாத்திரம்
கழுவுகிறீர்?

இல்லை...
வெட்ட வெளியில்
உழுதிட மறுத்தா
ஒட்டகம் மேய்த்துத் திரிகின்றீர்?

கலப்பைக்குள்ளே தன்
கலைகளை ஒடுக்கி
கழனி செய்து
கஞ்சி ஆக்கி
தான் உண்டு
பிறர் தந்து

தனக்கென வாழ்ந்திடா
தமிழர் நாம்
அந்நிய நிலத்துக்கு
விலைபோக
அடிமைச் சரக்கல்ல
புரிந்திடுவீர்...

கவிதை

வேலணையூர் தனு



# துலைஞ்சு போனதுகள்...

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்



எத்தினையைத் துலைச்சம்? ஒண்டே ரண்டே....? கணக்குப் பாக்கவே முடியாதளவுக்கல்லே இருக்கு... நினைச்சாத் தலை விறைக்குது

கண்டியளோ! உதொண்டும் விளங்காத ஆக்களைப்பற்றிக் கதைச்சா துலைவார் அரசியலெண்டு முத்திரை குத்தியல்லே வம்பிலை மாட்டிவிடுகிறாங்கள்.. அண்டைக்கு என்ர ஒரு நெருங்கின 'கொட்டில் கூட்டாளி' (ரியூட்டரியில்லை..) நல்ல சுத்த சுருதியிலை தெருவிலை என்னை மறிச்சு கிழியோ கிழியெண்டு கிழிச்சுப் போட்டுது... தனிப்பட்ட கோவமொண்டுமில்லை... அரசியல் கதைச்சதுதான் பிரச்சினை... நான் கௌரவமா எழுதிப்போட்டனெண்டு கொதிச்சுது மனிசன். அந்தாள் கடைசி வரைக்கும் முள்ளிவாய்க்கா லிலை நிண்டு மனிசியையும் ஒரு பெட்டையையும் செல்லடியிலை பறிகுடுத்தவர்... அதைவிட ஒரு பெடியன் பதினொரு வரியமா என்ன குற்றமெண்டதே தெரியாமல் சிறையிலை.... அந்தாள் கொதிக்காம இருந்தாத்தான் பிரச்சனை.

000

**இல்லையே பாருங்கோ...**

இப்பிடித்தான் முப்பது வருசமா சுமையைத் தூக்கினவை மூண்டுபேர் சேந்து கவலையைப் பகிந்தவையல்லோ? உண்மைதானே?

எவ்வளவு தியாகங்கள்... அர்ப்பணிப்புகள் இதுகளைப் பக்கத்திலையிருந்து பாத்தவைக்குத்



தானே விளங்கும்! இப்பிடித்தான் ஒருத்தர் வெளிநாட்டுக் காசிலை அரசாங்கத்தை வளக்கிறவர். அதுதான் சாராய வரியை ஒவ்வோரு நாளும் தவறவிடாமக் குடுக்கிறவர். கையிலை பேப்பரோட ஓடிவந்து வன்னியிலை நடந்த கடைசிச் சண்டைநேரம் சனத்தின்ர பாட்டைக் கொஞ்சம் சொல்லுங்கோ கதிரேசண்ணை. அதுகளை எழுதினாத்தான் பிறைஸ் கிடைக்கும் எண்டார் பாருங்கோ... எனக்கு வந்துது பாருங்கோ ஒரு கோவம்... குடுத்தன் குடுவை... அப்பிடியொரு குடுவை... அதை அப்பிடியே சொன்னா பேப்பர் எரிஞ்சுபோகுடும். எனக்குத்தெரிஞ்ச கூடாத மொழியப் பாவிச்சுப் பேசியும் ஆத்திரம் அடங்க மாட்டாம நான் பட்ட பாடு உங்களுக்குச் சொல்லி விளங்காது?

000

இதுதான் பாருங்கோ பத்திக்கொண்டு வாறது... தங்கட பிள்ளையளை படிப்பிச்சு வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு "எங்கட பொடியள் விடுவங்களோ?" எண்டு வீரம் பேசினவையும் களத்திலை கிடந்து காஞ்சு சருகான போராளிப் பொடி, பெட்டையளின்ர கதையளைப் பக்கத்திலை நிண்டுபாத்தது மாதிரி எழுதுறவையைக் காணேக்கையும் வாறது பாருங்கோ ஒரு கோவம். அதேமாதிரி ஒட்டிக்கொண்டு திரிஞ்சு போட்டு இப்ப "எனக்கு முதல்லையே தெரியுமெண்டு" சொல்லி வாய்க்கு வந்தபடி கதைக்கிறதும் அதுகளை எழுதி அரசாங்கத்திட்ட நல்ல பேரெடுக்கிறவை இன்னொரு பக்கம் தங்களை விட்டா ஆக்களேயில்லையெண்டு திரியுறவையையும் காணேக்க பிறசர் கூடுதுபாருங்கோ. உப்பில்லாட்டித் தெரியும் உப்பின்ர அருமை... அப்பனில்லாட்டித் தெரியும் அப்பனின்ர அருமை எண்டது சரிதானே பாருங்கோ... இருக்கேக்க விளங்காத கனவிசயம் இப்ப விளங்கி வெறும் வாயைச் சப்பிறவை மற்ற எரிச்சல். நாடு கிடச்சாப் பேந்தேன் பொலிஸ் எண்டு கொதிச்சுக் கொண்டுதிரிஞ்ச மணியத்தார் இப்ப அந்த நீலப்பொலி சிருந்திருந்தா ஆவா, மாவா, கத்தி, பொல்லு, களவு, கொள்ளை, பெட்டைச் சேட்டையெண்டு ஏதாலுமிருக்குமோ? எண்டு புலம்புறார். அவருக்கு என்னத்தைச் சொல்லச் சொல்லுறியள்?

000

உவை அய்யாமார் நேரமொரு கதை இடத்துக்கொரு கதை கதைப்பினமோ? எண்டுமல்லே வெளியாக் கதைக்கத் தொடங்கியாச்சு. காலங் கடந்துதானே ஞான்ம் பிறக்கிறது எங்கட ஆக்களுக்கு. மே18 ஞானம் எண்டுறது இதுதான்பாருங்கோ. நாங்கள் யோசிக்கிறது கனபேருக்குப் பிடிப்பில்லை. குழப்புறதுதான் தொழிலாயே கனபேர் 'நாட்டைக் குழப்புதல் நம் கடன்' எண்ட கோசத்தோடயல்லே திரியினம். அதை விளங்கிறதே கன பேருக்குக் கஸ்ரமாயிருக்குப் பாருங்கோ.

சனம் தெளிய வேணும். அவையிவையை நம்பாமத் தங்களைத் தாங்களே வழிநடத்துற, எடுத்த காரியத்தைச் சரியாச்செய்து முடிக்கிற வல்லமை வந்திருக்கு. அதிலையும் அரசியல் செய்து குழப்பத்தான் திரியினம். நான் சொல்லுறது இரணைதீவுப் பிரச்சனையை விளங்குதே? மக்கள் ஆரிட்டைச் சொல்லியும் பலனில்லாத நிலையிலை தாங்களே எடுத்த முடிவின்ர பெறுமதி விளங்கினாச்சரி. ஆனால் சனத்துக்கு முன்னாலை வழிகாட்டிப் போயிருக்க வேண்டிய ஆக்கள் சனத்துக்குப் பின்னாலைதானே போய் படமெடுத்திருக்கினம்.

000


காணாமலாக்கப்பட்டவையின்ர உறவுகள் நிலமீட்புப் போராட்டக் காரர் கைதிகளின்ர உறவுகள் எண்டு போராடுற சனத்துக்கு ஐயாமார் செய்தது என்ன? செய்யப்போறது என்ன? காலம் மட்டும் தன்ரபாட்டிலை ஆரையும் கேக்காமலேயே போய்க்கொண்டிருக்கு.

அரசியல்ல மட்டுமில்லாம சனம் தங்கட அண்டாட வாழ்க்கையிலை குறுக்கிடுகிற மற்ற மற்றப் பிரச்சனையளையும் தாங்கள் தாங்களே தீர்க்கிற நிலை வலுகெதியிலை வரவேணும். அப்பதான் களவு கொள்ளை வாள்வெட்டு அடிதடி சண்டித்தனம் எல்லாம் கட்டுப்பாட்டிலை வரும். ஏனெண்டால் உதுகளைக் கட்டுப்படுத்துகிற வல்லமை எங்கட ஐயாமாரிட்டையுமில்லை.

அவையை குறைசொல்லுகிற வேலையை மட்டுஞ்செய்யிற தம்பியவையிட்டையும் இல்லை. படையளிட்டையும் இல்லை. சட்டமும் சரியானதாயில்லை. கத்தியோட பிடிபட்டவன் மற்ற நாளே வெளியாலை வாற அளவு ஓட்டையளோடதான் அதுகிடக்கு. ரக்ஸ், இன்சுரன்ஸ், லைசென்ஸ், கெல்மெட் எல்லாத்தோடயும் போனா மறிக்கிற பொலிஸ் ஒரு மோட்டச்சயிக்கிளிலை மூண்டு பேர் ஒண்டுமில்லாமப் போனாலும் மறிக்காம விடுகிற அதிசயம் இஞ்சதானே நடக்குது. அதைவிட எங்கட பொம்பிளையோட சேட்டை விட்டவனை அப்பாவியெண்டு வாதிடக்கூடிய வல்லமையான அப்புக்காத்து(மக்கள் பிரதிநிதி) மாருமல்லே எங்களிட்ட இருக்கினம். சோக்காயல்லோ போகுது...

மே18 எண்டுறதுக்கு உரிமை கொண்டாடினவை, ஆளையாள் பிடிச்சுத் திண்டவை, வந்தவை போனவை, அவையிவை எல்லாரும் ஒண்டை விளங்கிக்கொள்ள வேணும் கண்டியளோ! எதையெதையெல்லாம் துலைச்சமெண்டதையாவது நினைக்க முடிஞ்சால் நினைச்சு கூடி முடிவெடுக்கலாமல்லே? அதுக்கும் ஆரன் வருவினமெண்டிருந்தால் கோவணமும் மிஞ்சாது சரியே?

அறிந்த மிருகம்



# ஒய்யாரமாக நடந்துவரும் ஒட்டகம்...

அறியாத கதை

கட்டுரை
ஏ.ஜே.ஞானேந்திரன்

பார்க்கவே அழகில்லாத இவரின் ஒய்யார நடை எவருக்கு வேண்டிக் கிடக்கிறது என்று சொல்ல வருகின்றீர்களா? இது அப்படியொன்றும் சாதாரண மிருகமல்ல. அரபு இராச்சியத்தில், இதைப் பாலைவனக் கப்பல் என்றுதான் அழைக்கிறார்கள். புதையும் மணலில் கால்களை ஊன்றி, இலாவகமாக நடக்கும், ஒட்டகங்கள்தான் இவர்களது, முக்கிய போக்குவரத்துத் தேவைகளை, பாலைவன வெளிகளில் நிறைவேற்றி வைக்கின்றன. அது மட்டுமா இவர்கள் விரும்பி அருந்தும் பாலையும் இது கொடுக்கின்றது.

**சாதாரண மிருகமல்ல ஒட்டகம்**

திருமண வைபவங்களில் ஒட்டக மாமிசம்தான் விஷேஷம்! அது மட்டுமல்ல முன்னைய நாள்களில், குதிரைப் படை, யானைப் படையைப்போல ஒட்டகப் படைகளும் இருந்திருக்கின்றன. கிட்டத்தட்ட 3ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்பே, ஒட்டகங்கள் வீட்டு மிருகங்களாக வளர்க்கப்படத் தொடங்கிவிட்டன. 25மைல் தூரத்துக்குத் தினமும் சுமைகளைக் கொண்டு சென்று சேர்க்கக்கூடியது இந்த ஒட்டகம். ஒருவரிடம் எத்தனை ஒட்டகங்கள் இருக்கின்றன என்பதை வைத்தே, ஒருவரின் சொத்து மதிப்புகள், பணக்காரனா என்பதெல்லாம் கணிக்கப்பட்டுள்ளன. இதனுடைய ஏரியில், 80இறாத்தல் எடையளவான கொழுப்பைச் சேகரிக்க முடியும். இதன் உதவியுடன், சுட்டெரிக்கும் பாலைவன வெயிலில், கால்கள் மண்ணில் புதைய, தண்ணீரே குடிக்காமல் பாலைவனத்தில் 100 மைல் தூரத்தை நடந்து கடக்கிறது. எனவே இந்த ஒட்டகங்களை சாதாரண மிருகங்களாக எவருமே எடைபோட்டு விடாதீர்கள்...

**ஏரிகள் இரண்டுள்ளவை தொகையில் குறைவு**

ஒட்டகம் தாவரங்களை உண்டு வாழும் பாலூட்டிகள் இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்காகும். ஒட்டகம் என்று பொதுவாக அழைக்கப்படும் இந்த விலங்கை, மேலும் ஆறு சிற்றினங்களாகப் பிரிக்க முடியும். இன்றைய காலகட்டத்தில் மூன்று இனங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன என்று சொல்லப்படுகின்றது. இன்று காணப்படும் ஒட்டகங்களில் 94வீதமானவை ஓர் ஏரி மாத்திரமே உள்ள இனங்கள்தான்! மிகுதி, இரண்டு ஏரிகளைக் கொண்ட இனங்களாக இருக்கின்றன. காட்டு பக்டீரியன் என்றொரு இனம் அரிதாகக் காணப்படுகின்றது.

இது அழிவின் விளிம்பில் நிற்கும் ஓர் இனம் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும். மொங்கோலியாவிலும், தென்மேற்குச் சீனாவிலும் ஆள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் மிக அரிதாக இவற்றைக் காணலாம். ஆசிய, வடக்கு ஆபிரிக்க பாலைவனங்கள்தான் இவற்றின் உறைவிடங்கள்.

**உயிர் வாழ்வும் பயனும்**

இன்றுள்ள ஒட்டகங்கள் எல்லாமே ஏறத்தாழ சாதுவானவை. பொதுவாக 50 ஆண்டுகள் வரை ஒட்டகங்கள் உயிர்வாழ்கின்றன. 5ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஒட்டகங்களின் பயன்கருதி, மனிதர்கள் இவற்றைப் பழக்கியெடுத்து, போக்குவரத்துக்குப் பயன்படுத்தி இருப்பதோடு, பால், இறைச்சி என்பவற்றையும் பெற்று நன்மையடைந்துள்ளார்கள். இதனுடைய தடித்த உரோமம் கொண்டு மேலாடைகளையும் தயாரிக்கிறார்கள். பாலைவனக் குளிரில் அணிவதற்கு இந்த மேலாடைகள் பெரிதும் கைகொடுக்கின்றன.

**உட்கார்ந்த நிலையில் உடலுறவு!**

ஓர் ஒட்டகம் என்பது 40தொடக்கம் 50 ஆண்டுகள் வரை உயிர்வாழ்கின்றது. நன்கு வளர்ந்த ஓர் ஒட்டகம் எழுந்து நிற்கும்போது அதன் தோள் வரையிலான உயரம் 1.85மீற்றர். ஏரி வரையிலான உயரம் 2.15மீ(சுமாராக 7அடி). குறுகிய தூரத்துக்கு மணிக்கு 65கிலோ மீற்றர்கள் வேகத்தில் இதனால் ஓட முடியும். தொடர்ந்து மணிக்கு 25கிலோ மீற்றர்கள் வேகத்தில் நீண்ட தூரம் ஓடமுடியும்.

பக்டீரியன் இன ஒட்டகங்கள் 300 தொடக்கம் ஆயிரம் கிலோ வரையிலான எடையுடன் காணப்படுகின்றன. மற்றைய இனம் பொதுவாக 600 கிலோவுக்கு மேற்பட்ட எடையில் காணப்படுவதில்லை. இதனுடைய பரந்த கால்குளம்புகள், புதையும் மண்ணில் கால்களைத் திடமாக ஊன்றி நடக்க உதவுகின்றன. ஆணும் பெண்ணும் தரையில் உட்கார்ந்து கொண்டே உடலுறவு கொள்கின்றன. குளம்புடைய விலங்கி னங்களில், உட்கார்ந்து உடலுறவு கொள்ளும் ஒரேயோர் இனம் ஒட்டகந்தான்! ஆணுடைய தொண்டையில் பருத்துச் சிறுக்கக் கூடிய ஒரு சிறு பை இருக்கின்றது. இது பெண்ணுடன் சேரும் விருப்புடன் உள்ள காலத்தில், இதன் வாய்க்குளிலிருந்து வீங்கிய நாக்குப்போல இது துருத்திக் கொண்டு நிற்கும். வாய்க்குப் பக்கத்தில் நாக்குத் தொங்கிக் கொண்டிருக்கிறதோ என்று பார்ப்பவர்கள் நினைக்கத் தோன்றும்.

**தண்ணீரைச் சேமிக்கும் கலன்**

திமில் அல்லது ஏரி என்று அழைக்கப்படும் இதன் முதுகில் துருத்திக் கொண்டிருக்கும் உடற்பகுதி, கொழுப்பைச் சேகரித்து வைத்து, அதை நீராக இதன் உடலுக்கு மாற்றிக் கொடுத்து வருகின்றது. பத்து நாளைக்கு ஒரு தடவைதான் இவை நீரை அருந்துகின்றன. 600கிலோ எடையுடைய ஓர் ஒட்டகத்தால் 3 நிமிடங்களில் 200 லீற்றர் நீரை அருந்த முடியும். இது முதுகிலுள்ள ஏரிகளில் சேமித்து வைக்கப்படுகின்றது என்று பலர் தவறாக எண்ணி வருகின்றார்கள். இது கொழுப்பாகவே அதன் ஏரிக்குப் போய்ச் சேர்கிறது. இதன் பின்பு பரவலாக உடலெங்கும் தேவைப்படும் நேரங்களில் போய்ச் சேர்கிறது. இதன் காரணமாகவே நீண்ட காலத்துக்கு, ஒட்டகத்தில் தண்ணீர் அருந்தாது இருக்க முடிகிறது. சில மாதங்கள் நீர் அருந்தாமல் உலர்நிலையில் இருந்து மீண்டும் நீர் அருந்தும்போது, தனது உடலின் மூன்றில் ஒரு பங்கு எடை அளவுடைய நீரைப் பத்து நிமிடத்தில் குடித்து விடும். அப்படிக் குடித்தவுடன் 10 நிமிடங்களில் உடலில் நீர்ச்சத்து ஏறிவிடும். அதன் இரைப் பைகளில் உள்ள நீர் அறைகள், குடிக்கப்படும் நீரை தற்காலிகமாக ஏற்றுக் கொள்கின்றன. அங்கிருந்து நீர் உறிஞ்சப்பட்டு, குருதியின் சிகப்பு அணுக்களில் சேமித்துக் கொள்ளப்படுகின்றது. இந்த நேரத்தில் சிவப்பு அணுக்கள், அவற்றின் உண்மையான அளவை விட 240வீதம் விரிந்து இடமளிக்கின்றன. பிற விலங்குகளால் இது முடியாது. அப்படிச் செய்யும்போது சிவப்பு அணுக்கள் வெடித்து, கொல் லப்படும் அபாயமுண்டு.


**பாலைவன வாழ்க்கைக்கு ஏற்ற உடல்வாகு**

எல்லா வழிகளிலும், ஓர் ஒட்டகத்தின் உடல் அமைப்பு, பாலைவன வாழ்க்கையை இடைஞ்சலின்றிக் கொண்டு செல்ல உதவுகின்றது. இதனுடைய தடித்த மேற்தோல், பாலைவன உக்கிர வெயில், உடலை ஊடுருவ அனுமதிப்பதில்லை. உரோமம் வழிக்கப்பட்ட நிலையில், 50 வீதம் மேலதிகமாக இதன் உடல் வியர்க்கின்றது. கோடை காலத்தில் உரோமம் மெல்லிய மஞ்சளுக்கு மாறுவதோடு, வெயில் உடலில் பட்டு தெறித்து, உடல் வெயிலில் எரிந்துவிடாமல் பாதுகாக்கப்படுகின்றது. இதனுடைய நீண்ட கால்கள், சுமாராக 70பாகை செண்டிகிரேட் வெப்பநிலையிலிருக்கும், பாலைவன மணற் சூட்டை உடலுக்குப் பரவவிடாது தடுக்கின்றன. பாலைவனப் புயல் மிக மோசமானது. மண்ணை வாரிக் கொண்டு வந்து முகத்தில் அடிக்கும். மூடிய அறைக்குள்ளும் மணல் புயல் மூலம் மணல் வந்து சேரும். (வளைகுடா நாடொன்றில் வேலை செய்தமையால் அனுபவரீதியாகக் கண்டுள்ளேன்) பாலைவனத்தில் நடந்து செல்லும் இந்த மணற் காற்றிலிருந்து தப்ப, இதன் உடலமைப்பு நன்றாகவே ஒத்துழைக்கின்றது. அதன் காதுகளின் உள்ளேயும், வெளியேயும் அமைந்திருக்கும் முடி, மணலோ தூசியோ காதுகளுக்குள் சென்றுவிடாமல் தடுத்து விடுகின்றன. அதன் இரண்டடுக்கு கண் இமையில் உள்ள நீண்ட சீப்புப் போன்ற தடித்த நெருக்கமான முடிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து, மணற்புயலிலிருந்து கண்ணுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கின்றன.

---

# நன்றியுள்ள நாய்க்கே...!

கட்டுரை
வேலணையூர் சுரேஷ்



கனவுகள் வளர்த்தேன்
பிள்ளைகள் மீதினில்...
காலால் உதைத்தேன்
நாயின் மேனியில்...

கனவு கண்டு
எழுந்தது போன்று
விழித்துப் பார்த்தேன்

கண்ட கனவும்
அருகில் இல்லை
பெற்ற பிள்ளைகளும்
என்கூட இல்லை

என்னிடம்
உதை வாங்கிய
நாய் மட்டும்
நின்று வாலை ஆட்டியது
உந்தன் காலை
விட்டுப் போகேன்
என்று

எஞ்சியதைத் தின்று வளர்ந்த
என் நாய்க்கு இருக்கும்
நன்றிகூட
நான்
விரும்பியதையெல்லம்
கொடுத்து வளர்த்த
என் பிள்ளைகளுக்கில்லை

நாயாய்ப் பிறந்தது
நாய் செய்த பாவமல்ல
நான் செய்த புண்ணியம்

அடுத்த பிறப்பிலாவது
இறைவா
மனிதரெல்லாம்
நாயாய்ப் பிறக்க வை
நன்றியுடன் வாழப் பழக!





கவிதைகள்

ஞா. கீர்த்தலோஜினி

# அன்பு

என் வாழ்வில்
அரை நொடி ஏக்கம்கூட
விலகா அன்பு வேண்டும என்பதே
நெஞ்சை வருடும் நிஜமான
அன்பை ஒரு முறையாவது
அருளாயோ என் இறைவா!

# பாசம்

பாரினிலே பேசாப்பொருளையும்
பேச வைப்பதும்
பிரிந்த எம் உறவுகளை
இணைய வைப்பதும்
முடிந்த வாழ்வை
தொடர வைப்பதும் பாசமே
வேசம்கூட இன்று
பாசம்போல் வேடம் தரித்தது
எம்மவர் உயிர் பறிக்க
நடந்தது என்ன?
போட்ட வேடம் கலைந்தது
துரத்தி அடிக்கப்பட்டான் உற்றான்
இப்போ துடிக்கிறான் வலியால்
தவிக்கிறான் பாசத்துக்காய்
ஆதரவு நல்கிட எவருமில்லை
ஐயோ! பரிதாபம்...

# வாழ்வின் இறுதியில்...



கவிதை

பா.பொன்நிலவன்

நாளைய நிகழ்வொன்றில்
எனக்கு இறப்பு வரும்
நாலு சனஞ்சேர்ந்து
ஒப்பாரிப் பாடலிசைக்க
ஊர்வலத்தில் மீளாத்துயிலோடு
மௌனித்த சடலமாய்
சுடுகாட்டின் ஓய்வு தேடி
மெது மெதுவாய் புறப்படுவேன்
தீ நாக்கில் படுக்க வைத்து
தீய்ந்து சாம்பலாக்கி
கிரியைக்காய்க் கொஞ்சம்
அள்ளப்படுவேன்...!
சேகரித்த சாம்பலுக்கும்
திவசம் சாந்தியுடன்
நிகழ்வு முடிவடையும் அதன் பின்
என் நினைவும் நிறைவடையும்

# கைவிரல் ஒப்பம்

கவிதை

மானியூர் ரட்ணேஸ்

சிந்தனைப் புலத்தின்
சீர்மிகு வளமாய்
வந்தது இந்த –
இலத்திரனியல் இயந்திரம்!
நேர முகாமையின்
நேர்த்தியைக் காத்திடும்
காத்திரக் கடிகாரம்!
சிவப்புக் கேடுகளின்
திகைப்புகள் இங்கில்லை,,,!
தலைமகளிடம் இல்லாத
தார்மீக மாண்பு – இதற்கு
தாராளம் உண்டு – அது
'தங்யூ' சொல்லும் இங்கிதப்
பண்பு

அரியாசனக் கதிரைகளின்
நெருக்கீடுகள் – கொஞ்சம்
நெகிழ்ச்சியானாலும் – சில
முகாமை
முதலைகளின் பார்வை
எறிகணைகள்
பணியாளர் மனங்களை
தணியாத காயமாக்கும்,

ஐம்பது வயதிலும்
ஜெம்பமாய் ஓட வைக்கும்
தெம்பைத் தருவது –இந்த
நெம்புகோல் நேரம்!
காரியாலயம் செல்வதுதான்
பாரிய வேலைப்பளு!
வாகன ஓட்டங்களில்
அசாத்தியத் துணிவு,,,!
விவேகமற்ற வேகம்,,,

முச்சந்தி முடக்கெல்லாம்
அச்சமற்ற ஓட்டம்
இடக்கு முடக்காய்
கடக்க நினைத்தால்.
'எமேஜன்சி வோர்ட்டில்'
அல்லது
எமலோகக் கூட்டில்,,,!

பள்ளி ஆசான்கள் படும்பாடு
சொல்லில் அடங்காது,,,
'பொல்லாத மிசின்,,, போகுது
நேரம்'
'தள்ளு பிள்ளை நேரம்
போச்சுது,,,'
துள்ளி ஓடும் செயலைப்
பார்த்து
மனம் விட்டு ஒரு முறையாதல்
– மாணவர் சிரிப்பது
அக்கணப் பொழுதின்
அகால அவஸ்தைதான்

நேர நகர்வு நேரானது
கால ஓட்டம் கனமானது
போனால் மீண்டும் வராதது
பொது உடமைத்தனமானது

நேரிய சிந்தை நெறியாளர்
சீரிய பணிசெய் தொழிலாளர்
சீறிச் சினக்கும் கனவான்கள்
வீரியம் பேசும் வித்தகர்கள்
போரியல் போக்கு வெறியர்கள்
யாரையும் நேரம் பாராது,,,



# 9 ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள்

தொகுப்பு

செ.மகேஷ்

1999ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, வெளியிட்டு வைக்கப் பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.

கல்வி நிர்வாகப் பதவிக்கு உரித்துடையோர் ஆசிரியராகக் கல்விச் சேவையிற் சேரும் ஒருவர் தனது அறிவு, அனுபவம், ஆற்றல், அர்ப்பணிப்பு, மனப்பாங்கு போன்றவற்றின் விருத்தியின் அடிப்படையில் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுக் கல்வி நிர்வாகத்தில் அதியுயர் பதவியை அடைவதற்கு இப்போது வாய்ப்புகள் உள்ளன.

பள்ளி மாணவராக, பட்டதாரி மாணவராக, பயிற்சி ஆசிரிய மாணவராக, ஆசிரியராகப் பல்வேறு நிலைகளிலிருந்து கல்வியைக் கற்றும் கற்பித்தும் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நேரடியான பங்கை ஏற்றும் காலத்துக்குக் காலம் எழுகின்ற கல்விப் பிரச்சினைகள் பற்றிச் சிந்தித்தும் அவற்றின் தீர்வுக்கு உதவியும் வருகின்றவர்களே கல்வி நிர்வாகப் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும். கல்வித் திட்டமிடல் மேற்பார்வை வளப்பங்கீடு முதலியவற்றை இவர்களாலேயே சரியான முறையில் உச்சப் பயன்தரும் வகையில் செய்ய முடியும். இந்த வகையில், கல்வி நிர்வாக சேவைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது பொருத்தமானதும் நியாயமானதும் மட்டுமல்லாமல் இன்றியமையாததுமாகும்.



சி.சரவணபவன்

### பதவி உயர்வை நாடாமலிருப்பவர்களின் நிலை...?

கற்பித்தல்என்றஒரேவேலையையே மீண்டும் மீண்டும் செய்து அலுத்துக் களைத்துப் போனவர்கள் சற்று வேறுபட்ட கல்விக் கடமைகளில் ஈடுபட விரும்புவது இயற்கையே பாடசாலை அதிபராகவோ கல்வி அதிகாரியாகவோ பதவி உயர்வு பெறும் வாய்ப்புகள் இத்தகையோருக்கு இருப்பது வரவேற்புக்குரியதே. ஆனால் ஆழ்ந்த அறிவும் 'பழுத்த' அனுபவமும் பன்முகப்பட்ட ஆற்றல்கள் இருந்தும் பதவி உயர்வுகளை நாடாமல் தொடர்ந்தும் ஆசிரியர்களாகவே சேவையாற்ற மனப்பூர்வமாக விரும்புகிறவர்களின் நிலை என்ன?

வருடாந்தச் சம்பள ஏற்றத்தைவிட வேறு ஏதாவது பொருளாதார ஊக்குவிப்போ, உயர் அந்தஸ்தோ இவர்களுக்கு உண்டா?

'இல்லை' என்ற பதில் மனவருத்தத்தைத் தரு[illegible].

இந்த 'இல்லாமைக்கு' முற்றுப்புள்ளி இட[illegible] உடனடித் தேவையாகும். கல்வி நிர்வாகத்தில் அதியுயர் பதவியில் இருந்து ஒருவர் பெறும் சம்பளத்தை ஆசிரியராக இருந்து கொண்டே பெறக்கூடிய வகையில் பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். பல ஆற்றல்களிலும் சிறந்தவர்களை ஆசிரியர் சேவைக்குள் ஈர்ப்பதற்கும் தொடர்ந்து. அதில் அவர்களை நிலைபெறச் செய்வதற்கும் வழிவகுக்கப்பட வேண்டும். அந்த நிலையிலே தான் ஆசிரிய வாண்மை ஓங்கும்.

### உடனடித் தேவை

விளக்கு சஞ்சிகையின் முதலாவது பிரதம ஆசிரியராக இருந்தவர் எழுத்தாளரும் அதிபருமான 'சிற்பி' என்ற புனைபெயரைக் கொண்ட எழுத்தாளர் திரு. சி.சரவணபவன் ஆவார். அவரது கருத்து அன்றைய கல்விக் கழகத் திட்டமிடல்களுக்கும் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையனவாக இருந்தமையை அறியலாம். ஓர் ஆசிரியர் உயர்ந்த பதவியைப் பெறுவதற்குக் கல்வித் தகைமைகளோடு கூடிய ஆற்றலும் அனுபவமும் வேண்டுமென்பதை 'உடனடித்தேவை' என்ற ஆசிரிய தலைப்பின் மூலம் அவரது கருத்துக்கள் வெளிப்படுத்துவதை இந்த விளக்கின் தலையங்கம் சுட்டிக் காட்டுகிறது.

### எழுத்துப் பரீட்சை அதிபர்கள் நியமனம் நியாயமானதா?

இன்றைய நாள்களில் பல பாடசாலைகளில் ஆசிரியருக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு கடமைகளை நிறைவேற்றும் அதிபராகப் பணி புரிந்த பலரை கல்வி நிர்வாகம் திடீரென மீண்டும் ஆசிரிய பதவிக்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கி இருந்தது. இதனால் ஏற்பட்ட பிரச்சனைகளைப் பலரும் ஆராய்ந்தபோது நிர்வாகத்தின் திட்டமிடப்படாத தூரநோக்கற்ற திடீர் மாற்றங்கள் கல்வித்துறையையும் பாடசாலைகளையும் பாதித்தமையையும் அத்துடன் திறமையான முகாமைத்துவ அனுபவத்தோடு இயங்கிய அதிபர்களை உளவியல் ரீதியாகப் பாதிப்படையச் செய்தமையையும் அறியமுடிந்தது. முகாமைத்துவ அனுபவம் பெற்றவர்கள் பாடசாலைகளில் இருக்கும்போது அவர்களைக் கீழிறக்கி விட்டுப் பொதுவான எழுத்துப் பரீட்சையின் மூலம் தெரிவாகியவர்களை அதிபர்களாக நியமித்தல் என்பது பொருத்தமானதா?

அதிபர்கள் இல்லாது இயங்கும் பாடசாலைகளுக்கு எழுத்துப் பரீட்சையின் மூலம் தெரிவாகியவர்களை புதிதாக நியமித்தல் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் கடமை நிறைவேற்றும் அதிபர் ஒருவர் பாடசாலையில் நீண்ட காலங்களாகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் நிலையில் அவரைக் கீழிறக்கிவிட்டு வேறொருவரை நியமித்தல் மூலம் நிர்வாகம் சாதிக்க எண்ணியதென்ன? என்ற கேள்விக்குப் பொருத்தமான விடையை இன்றுவரை காணமுடியவில்லை.


அவ்வாறே கடமை நிறைவேற்றும் அனுபவம் மிக்க கல்வி உதவிப் பணிப்பாளர் விடயத்திலும் கல்வி நிர்வாக சேவையில் எழுத்துப் பரீட்சை மூலம் தெரிவாகிய பலரையும் நியமித்ததால் சிறப்பாகப் பணியாற்றிய கல்வியியலாளர்களை நிர்வாகம் இழந்துள்ளமையை அண்மைக் காலங்களில் அறிய முடிகிறது. கல்வியின் சிறப்பும் மகத்துவமும் அந்தத் துறைசார்ந்த அனுபவசாலிகளால் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும். அது தவிர்ந்து இத்தகைய குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் கல்வித் துறை முன்னெடுக்கும் செயற்பாடுகளைக் கண்டிக்கும் வகையிலும் அன்றைய கல்விக் கழகம் வெளியிட்ட விளக்கு சஞ்சிகை தனது ஆக்கங்களை வெளிக் கொணர்ந்தமையை இங்கே குறிப்பிடலாம்.

(தொடரும்)

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

# எரிபொருள் விலையேற்றமும் ஏழை மக்களும்



சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்ட சில நாள்களிலேயே பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பணவீக்கம், வாழ்க்கைச் செலவு என்பன காரணமாகத் திணறிக் கொண்டிருந்த சாதாரண மக்கள், எரிபொருள் விலையேற்றத்தால் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.

ஒரு சில வருடங்களுக்கு முன்பு சமையல் தேவைகளுக்கு நகரப்புறங்களைச் சேர்ந்த சில வசதி படைத்தவர்கள் மட்டுமே சமையல் எரிவாயுவைப் பயன்படுத்தி வந்தனர். ஏனைய மக்கள் நகரங்களில் கிடைக்கின்ற கொத்து விறகையும், கிராமிய மக்கள் பனை, தென்னை மட்டைகள், கொக்கறை, பன்னாடை, தேங்காய்ப் பொச்சு போன்றவற்றையே சமையல் தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர். இவை சிக்கனமானவை மட்டுமின்றிச் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாதவையாகவும் விளங்கின. விறகுக்கென மரங்கள் வெட்டப்படும் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு மட்டுமே மரங்கள் தறிக்க அனுமதிக்கப்பட்டன. அது மட்டுமின்றி மரங்கள் வெட்டப்பட்ட பகுதிகளில் புதிய மரக் கன்றுகள் நடப்பட்டு நீரூற்றி வளர்க்கப்படவேண்டும் என்பது கட்டயமான நிபந்தனையாகும். அதன் காரணமாக வனவளம் அழிந்துபோகும் நிலை குறைந்திருந்தது.

### அருகிவிட்ட விறகுப் பழக்கம்

இன்று இத்தைகய பழக்கங்கள் கைவிடப்பட்டாயிற்று. மட்டுமின்றி பனை, தென்னை விறகுப் பொருள்கள் கவனிப்பாரற்றுக் கறையான் தின்னும் நிலை ஏற்பட்டுள்ளது. நகரங்கள் மாத்திரமன்றித் தற்சமயம் கிராமங்களில்கூட சமையல் எரிவாயுவையே பயன்படுத்தும் நிலைக்கு மக்கள் பழக்கப்பட்டு விட்டனர். இந்த நிலை இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களின் நலன்களின் அடிப்படையிலேயே மக்களிடம் வலிந்து திணிக்கப்பட்டது. விறகுச் சமையலால் எமது வனவளம் அழிகிறது என ஒரு போலிக் காரணமும் கூறப்படுகிறது. அது மட்டுமல்ல சமையல் எரிவாயு அடுப்புகள் மூலம் மண்சட்டி பானைகளில் சமைக்க முடியாது. அலுமினியப் பாத்திரங்களே பாவிக்கப்பட வேண்டும். இதனால் உடல் நலம் பாதிக்கப்படுவதுடன் மட்பாண்ட உற்பத்தி வீழ்ச்சியடைந்து அவற்றின் உற்பத்தியாளர்கள் தொழிலின்றி அவஸ்தைப்படும் நிலை எழுகிறது. அரசோ அலுமினியப் பாத்திரங்கள் இறக்குமதிக்கும், சமையல் எரிவாயு இறக்குமதிக்கும் பெருமளவு அந்நியச் செலவாணியைச் செலவிட வேண்டியுள்ளது. எரிவாயு உற்பத்தியாளர்களோ அடிக்கடி விலையைக் கூட்டி மக்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### மெல்ல மெல்ல விலையேற்றம்

சமையல் எரிபொருள் விலை உயர்வை அடுத்து இப்போது எரிபொருள் விலை கூட்டப்பட்டுவிட்டது. திருவிளையாடல் புராணத்தில் ஒரு கதை. சிவபெருமான் ஒரு கிழவியிடம் காவிரிக்கு அணைகட்டும் வேலையில் ஈடுபடுவதற்குக் கூலியாகப் பிட்டு வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வேலை செய்யாமல் படுத்துவிட்டார். கூலியை வாங்கிவிட்டு வேலை செய்யாமையால் கோபம் கொண்ட சோழ மன்னன் சிவபெருமானைப் பிரம்பால் அடித்தாராம். அந்த அடி உலகிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் விழுந்து வலித்ததாம். அந்தப் பிரம்படி போன்றதுதான் எரிபொருள் விலையேற்றமும். எரி பொருள்கள் மட்டுமே விலை யேற்றப்பட்டது. அது சிவனின் மேல் விழுந்த பிரம்படி. அது பட்டு வலியேற்படுத்திய இடங்களோ ஏராளம். போக்குவரத்துக் கட்டணம் உயர்த்தப்பட்டது. மீன்பிடிச் செலவினம் அதிகரிப்பு, உழவு இயந்திரக் கூலி அதிகரிப்பு மூலம் உணவு, உடை முதற்கொண்டு சகல பாவனைப் பொருள்களிலும் விலையேற்றம். அதாவது எரிபொருளை மூலமாகக் கொள்ளும அனைத்தும் எகிறத் தொடங்கின. நெருக்கடிமேல் நெருக்கடிகள்இயல்பாகவே ஏற்பட்டது.

### ஜே.வி.பியின் குற்றச்சாட்டு

மீனவர்களுக்கு, மலையக மக்களுக்கு, விவசாயிகளுக்கு மண்ணெண்ணெயை மானிய விலையில் வழங்கப்படுமெனக் கூறப்படுகிறது. அது போதிய அளவில் வழங்கப்படப்போவதில்லை என்பது மட்டுமல்ல, விலை கூடவுள்ள ஏனைய பொருள்களின் விலைகளைக் குறைக்கப்போவதுமில்லை. அதேவேளையில் ஜே.வி.பி.யினர் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு முக்கியமானதாகும். அதாவது உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் என்பவற்றில் கடன்பெறும் நோக்குடனேயே இந்த விலையுயர்வு மேற்கொள்ளப்பட்டதென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதில் உண்மையில்லாமலில்லை.

உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் என்பன கடன் வழங்கும்போது சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வழங்குகின்றன. ஒன்று தனியார் முதலீடு ஊக்குவிக்கப்படவேண்டும். மற்றது அரச செலவினங்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும். மேலோட்டமாகப் பார்க்கும்போது அவை நாட்டுக்கு நன்மை பயக்கும் திட்டங்களாகவே தென்படும். ஆனால் உண்மை அதுவல்ல.

### இதுவே உண்மை...!

அவர்கள் தனியார் முதலீடு எனக் குறிப்பிடுவது உள்ளூரில் மேற்கொள்ளப்படும் சிறு கைத் தொழில்கள் அல்ல. பிரமாண்டமான முதலீட்டுடன் உருவாக்கப்படும் அந்நிய நிறுவனங்கள், அவர்களின் தேவைக்கேற்ற வகையில் அதாவது மின்சாரம், அதி வேக நெடுஞ்சாலைகள், குறைந்த கூலியிலான தொழிலாளர்கள், துறைமுக வசதி என்பவற்றை நிறைவு செய்யும் வகையிலேயே இங்கு ஆரம்பிக்கப்படுகிற அபிவிருத்தித் திட்டங்கள் அமையவேண்டும். இதன்நிமித்தம் இங்குள்ள மூலவளங்களையும், மக்களின் உழைப்பையும் கொள்ளையிட்டுப் பல் தேசிய நிறுவனங்கள் பெரும் இலாபத்தை ஈட்டும்.

அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவது என்றால் அமைச்சர்கள் தொகையைக் குறைப்பது, அரசியல்வாதிகளின் வெளிநாட்டுப் பயணங்களைக் குறைப்பது என்பது அர்த்தமல்ல. இலவசக் கல்வி, மருத்துவம் என்பவற்றுக்குச் செலவிடும் தொகையைக் கட்டுப்படுத்தல், விவசாயிகள், மீனவர்களுக்கான மானியங்களைக் குறைத்தல், சமூக சேவைக்கான செலவினங்களை மட்டுப்படுத்தல் போன்றனவையாகும்.

### எரிபொருள் விலையும் ஏமாற்றங்களும்

உலகம் சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி எரிபொருள் விலை கூட்டப்பட்டது. ஆனால் எரிபொருளுக்கான இறக்குமதி வரி குறைக்கப்படவில்லை. அதன் காரணமாகப் பன்னாட்டுச் சந்தையில் எரிபொருளுக்கு ஏற்பட்ட விலையேற்றம் பொதுமக்கள் தலையிலேயே நேராகச் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் கடந்த காலங்களில் பன்னாட்டுச் சந்தையில் எரிபொருள் விலை இறங்கும்போது உள்நாட்டில் அதன்விலை குறைக்கப்பட்டதாக வரலாறு இல்லை. சாதாரணமாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு போன்றவற்றுக்குக்கூட இயல்பான விலையைவிட மேலதிகமாக வரி அறவிடப்படுகின்றது. உள் நாட்டில் அவற்றின் சந்தைவிலை குறைவடைந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் என்று - கூறப்பட்டே இறக்குமதி செய்யும் உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய் போன்றவற்றின் வரிகள் அதிகரிக்கப்படுகின்றன. இதன் காரணமாக பொதுமக்கள் இந்தப் பொருள்களை கூடுதல் விலைகொடுத்து வாங்கினாலும்கூட அதன் பயனை அரசும் வர்த்தகர்களுமே அனுபவிக்கின்றனர்.

### பொதுமக்களின் தலையில் சுமை

பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றில் கடன் வாங்குவதற்காக அவர்களுடைய நிபந்தனைக்கு ஏற்பட செயற்படும்போது முழுச் சுமையும் பொதுமக்களின் தலையிலேயே சுமத்தப்படுகிறது. இதனால் செல்வந்தர்கள் மேலும்மேலும் செல்வந்தராகவும் ஏழைகள் மேலும் மேலும் வறியவர்களாகவும் மாறும் நிலை உருவாகும். அதன்காரணமாக சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யக் கூடுதலான உழைப்பைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. அல்லது வறுமையிலும் பசியிலும் வாழ வேண்டியுள்ளது.

இது முழுவதுமாக நாட்டின் பெரும்பான்மையான மக்களை பாதித்தபோதும் அந்த மக்களின் வாக்குகளால் அதிகாரத்துக்கு வரும் அரசியல்வாதிகள் உலக நிதிநிறுவனங்களில் நிபந்தனைக்கு ஏற்றவாறே செயற்படுகின்றனர். ஏனெனில் இறக்குமதி மூலமும் பிரமாண்டமான அந்நிய உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாகவும் அவர்களுக்குக் கணிசமான தரகுப் பணம் கிடைக்கிறது. ஆனால் மக்களோ அதிகமாக உழைத்தும் கூடுதலான வறுமையில் தவிக்கவேண்டியுள்ளது.


### தமிழ் மக்களின் நிலை...?

தமிழ் மக்களை பொறுத்தவரையில் போர் காரணமாகவும் இடப்பெயர்வுகள் காரணமாகவும் வாழ்க்கை நிலை படுமோசமாகப் பின் தள்ளப்பட்டுள்ளது. இன்னும் பலர் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் அடைந்திருந்திருக்க வேண்டிய நிலையேயுள்ளது. இந்த நிலையில் இந்தப் பொருள்களின் விலை உயர்வு தமிழ் மக்களைப் பாரதூரமாகப் பாதிக்கிறது. ஆனால் தமிழ்த் தலைமைகளோ அது பற்றிக் கவலைப்படுவதில்லை. யார் அடுத்த முதலமைச்சர் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு யாருடன் கூட்டுச் சேருவது போன்ற விடயங்களில் அக்கறை காட்டுகிறார்களோ தவிர, அநீதியான விலை உயர்வுகளுக்கு எதிரான போராட்டங்களை நடத்தவோ, அதற்கு எதிராகக் குரல் கொடுக்கவோ தயாரில்லை. ஏனெனில் ஆட்சியாளர்களின் நலன்களும் இவர்களின் நலன்களும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவையாக இருக்கலாம்.



# பேதம் வேண்டாமே...!

ரகு பத்து வயது நிரம்பிய சிறுவன். தாய், தந்தை இல்லாது கருணை இல்லத்தில் வளரும் அவன் தினமும் பாடசாலை செல்லும் கெட்டிக்காரச் சிறுவன். பாடசாலை செல்லும்போதும், வீடு திரும்பும்போதும் மாளிகை போன்ற பிரமாண்டமான வீடொன்றைக் கடக்க நேரிடும். அந்த வீட்டை அவன் திரும்பிப் பார்க்காமல் சென்றதேயில்லை. காரணம் அழகிய மூன்று நாய்க்குட்டிகள். இரண்டு குட்டிகள் வேகமாகவும், மற்றையது தன்னால் முயன்றளவு முயற்சி செய்து அந் நாய்க்குட்டிகளின் பின்னே தானும் வந்து வீதியில் செல்பவர்களை ஆவலாகப் பார்த்துக்கொண்டிருக்கும். ரகு செல்வதை அவதானித்த மாத்திரத்தில் நான் முந்தி நீ முந்தி என்று வீட்டின் படலை வரை ஓடி வரும். அதில் இரண்டு நாய்க்குட்டிகள் வெள்ளை நிறத்திலும் மற்றையது கறுப்பு நிறத்திலும் காணப்பட்டது. ரகு அந்தக் கறுப்பு நாய்க்குட்டியில் கொள்ளைப் பிரியமாக இருந்தான். தனக்குப் பிடித்த அந்தக் கறுப்பு குட்டியை ஜிம்மீ என்று கூப்பிட்டு தன் விரல்களால் தடவிச் செல்வது அவனது வழக்கமாகிவிட்டது. சிறிது நாள்களின் பின்னர் அந்த மாளிகை வாசலில் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு என எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தது. ரகுவுக்குத் தலைகால் புரியாத மகிழ்ச்சி.



அந்த வீட்டுக் கதவின் கீழ்ப்பக்கத் துவாரம் வழியே குனிந்து “வீட்டுக்காரர் வீட்டுக்காரர்” என்று மறுபடி மறுபடியும் கூப்பிட்டான். வெள்ளை வேட்டி உடுத்திய முதியவர் வந்து “என்ன தம்பி” என்று ரகுவைக் கேட்டார். ரகுவோ “நாய்க்குட்டிகள் விற்பனைக்கு என்று போட்டிருக்கு என்ன விலை?” என்று ஆவலோடு கேட்டான். நானூறு ரூபாய் எனப் பதில் வந்தது. சரி நாளைக்குப் பணத்தைத் தந்து குட்டியைப் பெற்றுச் செல்கிறேன். எவருக்கும் குடுக்க வேண்டாம் என கூறி கருணையில்லம் நோக்கி விரைந்து சென்றான். தன் பெட்டிக்குள் இருந்த உண்டியலில் சேர்த்த பணத்தை எடுத்து எண்ணி அதில் இருந்த நானூறு ரூபாவைப் பைக்குள் போட்டு கட்டி அடுத்த நாளுக்காகக் காத்திருந்தான்.

விடிந்தும் விடியாததுமாய் தனது பணத்தை எடுத்துக் கொண்டு அந்த வீட்டை நோக்கி ஓடினான் . வீட்டின் கதவைத் தட்டியபோது ரகுவை அடையாளம் கண்டு விட்ட அந்த முதியவர், வா தம்பி இந்த இரண்டு குட்டிகளில் எது உனக்கு வேணும்” என்று கேட்டார். எனக்கு இந்த இரண்டும் வேண்டாம் என்று கூறி, அந்தக் கறுப்பு நிற நாய்க்குட்டியைக் காட்டி “இதைத் தாருங்கள்” என்றான். சம்மதித்து நாய்க்குட்டியைத் தூக்கி அவன் கைகளில் கொடுத்தார் பெரியவர். இன்முகத்தோடு வாங்கிய அவன் தான் கொண்டு வந்த நானூறு ரூபாவை நீட்டினான்.

அந்த வெள்ளை நாய்க்குட்டிகளின் விலை தான் நான் சொன்னேன். இந்த நாய்க்குட்டியைச் சும்மா கொண்டு போ எனக் கூறினார். ரகுவோ எனக்குச் சும்மா வேணாம் நான் மற்றைய குட்டிகளுக்குரிய மதிப்பையே இதற்கும் கொடுக்க விரும்புகிறேன். ஏனெனில் நிறத்தில் எதுவும் இருக்க முடியாது. அத்துடன் மனிதர்களை விட எம்மீது நன்றியும் அன்பும் செலுத்தும் விலங்குகள் மேலானவையே”. என்று கூறி பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த நாய்க்குட்டியையும் கைகளில் தூக்கிக் கொண்டு மகிழ்வோடு கருணை இல்லம் நோக்கி நடந்தான் ரகு.



***சிறுவர்களே!***

***எல்லாமே உயிர்கள் தான். நிறத்தில் எதுவும் இல்லை. ஐந்தறிவு, ஆறறிவு என்று பேதம் கொள்ளாமல் உயிர்களை நேசிப்போம். அன்பால் இணைவோம்***



பி.சலோமி,
தரம் - 3,
யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.



சிவகுகன் பிருத்வி,
தரம் - 3,
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## ஈழத்துப் படைப்பாளர் வரிசையில்...

# கே.டானியல்



பஞ்சமர் படைப்பிலக்கிய முன்னோடி, .எழுத்தாளர், மக்கள் விடுதலைப் போராளி, தலித் இலக்கியப் பிதாமகர் என ஈழத்திலும் தமிழகத்திலும் மதிக்கப்படுபவர் கே. டானியல்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைக் கிராமத்தில் 1927ஆம் ஆண்டு பங்குனி 25ஆம் திகதி டானியல் பிறந்தார். வறுமையின் தாக்கத்தால் பள்ளிப் படிப்பை நிறுத்தியவர், சிறுவயது முதல் உழைக்கத் தொடங்கினார். சலவைத் தொழில், வியாபாரம், கடற்றொழில், பழைய இரும்பு வியாபாரம், கோழி வளர்ப்பு, பெயிண்டிங், நெசவு, வெல்டிங், ரேனிங், சேப்பிங் எனப் பல்வேறு தொழில்கள் புரிந்தார்.

அரசியல், கலை, இலக்கியத் துறைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் முன்னணி செயல்வீரனாகச் செயற்படத் தொடங்கினார். ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, தினகரன் போன்ற இலங்கைப் பத்திரிகைகளிலும், ஜனசக்தி, தாமரை, சரஸ்வதி போன்ற தமிழக இதழ்களிலும் பல சிறுகதைகளை எழுதினார். சுதந்திரன் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது ‘அமரகாவியம்’ என்ற சிறுகதை பரிசில் பெற்றது. சிற்பியின் ‘ஈழத்துச் சிறுகதைகள்’ தொகுதியில் இவரது ‘உப்பிட்டவரை’ என்ற சிறுகதை இடம்பிடித்தது. இலங்கைக் கலைக் கழக ‘சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள்’ என்ற தொகுப்பில் இவரது ‘வள்ளி ‘ என்ற சிறுகதை வெளிவந்துள்ளது. ஆங்கிலம், சிங்களம், ரஷ்ய, சீன மொழிகளிலும் இவரது சில சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள். சமூக அரசியல் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். டானியல் கதைகள்’ என்ற சிறுகதைத் தொகுதி முதலில் வெளியானது. பஞ்சமர் நாவல் (முதல் பாகம்) 1972இல் வெளியானது. இதற்கு 1973ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில் கிடைத்தது. பின்னர் வெளிவந்த ‘உலகங்கள் வெல்லப்படுகின்றன’ சிறுகதைத் தொகுதி 1975ஆம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றது. இதே ஆண்டு வீரகேசரி பதிப்பக வெளியீடாக ‘போராளிகள் காத்திருக்கின்றனர்’ நாவல் வெளிவந்தது. பின்னர் பஞ்சமர் நாவல் இரண்டு பாகங்களும் சேர்த்து 1982ல் தமிழகத்தில் வெளியிடப்பட்டது. அடுத்து கோவிந்தன். அடிமைகள் ஆகிய நாவல்களும் தமிழகத்தில் வெளியிடப்பட்டன. ‘இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக் குரல் என்ற தலைப்பில் டானியல் பேட்டியும் தமிழகத்தில் நூலுருவில் வெளிவந்தது. பின்னர் கண் சிகிச்சை பெறும்பொருட்டும், கானல் நாவல் அச்சாவதைப் பார்வையிடும் பொருட்டும் டானியல் தமிழகம் சென்றார்.

நீரிழிவு நோயின் கடுந்தாக்கத்துக்குள்ளாகியிருந்த டானியல், கண் அறுவைச் செய்துகொண்டபின் கடும்பாதிப்புக்குள்ளாகி 1986ஆம் ஆண்டு பங்குனி 23ம் திகதி காலை தஞ்சாவூர் தங்கசாரதா மருத்துவமனையில் காலமானார்.



## அம்மா (அ–ஔ)


அன்பெனும் பந்தத்தை
ஆயுள் வரை கொடுப்பவளே
இவ்வுலகில் நாம் வாழ
ஈரைந்து மாதங்கள்
உவப்புடன் எம்மையே
ஊக்கமாய் வளர்த்திட
எம்மை சுமந்தவளே
ஏற்றமுடன் நாம் வாழ
ஐந்து கோடித் தியாகங்கள் புரிபவளே
ஒரு நோய் எமக்கு வந்தால்
ஓடி ஓடித் திரிந்து
ஔடதங்கள் தருபவளே
பண்புகளில் சிறந்தது அன்பு
அந்த அன்புகளில் சிறந்தது தாயன்பு


*த.கிஷாந்தினி, தரம் – 5பி,*
*யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்.*

## பொது அறிவு

1. பராக்கிரமபாகு சிலை எங்குள்ளது?
   பொலனறுவையில்
2. இலங்கையின் தேச பிதா யார்?
   டி.எஸ்.சேனாநாயக்க
3. லண்டனில் பூமிக்கடியில் ஓடும் ரயில் எது?
   டியூப்ரயில்
4. வேகமாக பறக்கும் பறவை எது?
   புறா
5. பச்சையம் இல்லாத தாவரம் எது?
   காளான்


## வழிகாட்டுவோம்





நவீன வளர்ச்சி

அழகிய நினைவுகள்






# இன்றைய நாள்

**மேடம்:** உற்சாக மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். லாபம் படிப்படியாக உயரும். கடனில் பெரும்பகுதி அடைபடும்.

**இடபம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். தொழில் வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**மிதுனம்:** திடீர் அவசரப்பணியால் சிரமப்படலாம். தொழில் வியாபா ரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிடும். லாபம் சுமாராக இருக்கும். அரசு வகையில் நன்மை உண்டாகும்.

**கடகம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினிடம் பரிசு, பாராட்டு காண்பர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்க யோகமுண்டாகும்.

**சிங்கம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கன்னி:** சிலர் சுயநல எண்ணத்துடன் நெருங்கிப் பழகுவர். தொழில் வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து ஓரளவு விடுபடுவர். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க கூடாது.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

**தனுசு:** நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மகரம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** யாரிடமும் குடும்பவிஷயத்தைப் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு உண்டாகும்.

**மீனம்:** வாழ்க்கைத்தரம் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

# ஆட்டோ சாரதியாக நடிக்கிறார் சாய் பல்லவி

மலையாள, தெலுங்கு சினிமாவை தொடர்ந்து சாய் பல்லவியின் முதல் தமிழ் படமான 'தியா' போதிய வரவேற்பை பெறவில்லை. இந்த நிலையில், சாய் பல்லவி தற்போது தனுஷின் ஜோடியாக `மாரி2' படத்திலும், சூர்யா ஜோடியாக `என்ஜிகே' படத்திலும் நடித்து வருகிறார்.

இதில் `மாரி2' படத்தில் சாய் பல்லவி ஆட்டோ சாரதி கதாபாத்திரத்தில் நடிப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. அதற்காக சாய் பல்லவி சிறப்பு பயிற்சியும் எடுத்து வருகிறாராம். பாலாஜி மோகன் இயக்கும் இந்த படத்தில் நடிகர் கிருஷ்ணா, வரலட்சுமி முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மலையாள நடிகர் டோவினோ தாமஸ் வில்லனாக நடிக்கிறார்.




மாற்றம் ஒன்றே மாறாதெண்டு சொல்றாங்க




நானும் பிறந்ததில இருந்து பாக்கிறன் காதலர் தினம் பெப்ரவரி 14ல்ல தான் வருது... மாறவே இல்லை

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 8 | | | |
| 4 | | | | | 3 | | 6 | |
| | | | 6 | | 5 | 9 | | |
| 6 | 9 | | 7 | 3 | | | | |
| | 4 | | | | | 6 | 3 | |
| 5 | | | 8 | 6 | | | | 2 |
| | 1 | | | 2 | | | 8 | 6 |
| 3 | | | | | 6 | 2 | 5 | |
| | | 6 | | | 7 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 1 | 4 | 5 | 9 | 7 | 6 | 2 |
| 6 | 4 | 7 | 3 | 2 | 8 | 5 | 9 | 1 |
| 9 | 5 | 2 | 1 | 6 | 7 | 3 | 8 | 4 |
| 8 | 2 | 3 | 9 | 7 | 1 | 4 | 5 | 6 |
| 5 | 7 | 4 | 8 | 3 | 6 | 1 | 2 | 9 |
| 1 | 9 | 6 | 2 | 4 | 5 | 8 | 3 | 7 |
| 4 | 3 | 9 | 7 | 8 | 2 | 6 | 1 | 5 |
| 7 | 1 | 5 | 6 | 9 | 3 | 2 | 4 | 8 |
| 2 | 6 | 8 | 5 | 1 | 4 | 9 | 7 | 3 |

நேற்றைய விடை

# டுவீற்ஸ்

முகிலன்™ @MJ_TWETS

தட்சணை தட்டு முதல், பிணத்தின் நெற்றி வரை சாதி மதம் பார்க்காமல் பழகி விட்டது காசும், பணமும்..!

சிலந்தி™ @NANDHU_TWITTS

கடவுளின் எழுத்து பிழைகள்..

நம் வாழ்வில் தலையெழுத்தாய் அமைகிறது..!!

B.UMA MAHESHWARI @UMA1_B

நூலே இல்லாமல் நம்மை கட்டிப்போடுகிறது நூலகம்

நல்லெண்ணெய்க்கு இங்கிலிஷ் ல என்னனு கேட்டாங்க குட் ஒய்ல் எண்டு சொன்னேன்




ஊரே ஒன்னு கூடி துப்பிட்டு போவுது எனக்கே தப்பா சொல்லிட்டமோன்னு ஒரே சந்தேகமா இருக்கு

தோற்றாலும் புலம்பாதே
'போராடு'
கிண்டலடித்தால் கலங்காதே
'மன்னித்துவிடு'
தள்ளினால் தள்ராதே
'துள்ளியெழு'
நஷ்டப்பட்டால் நடுங்காதே
'நிதானமாய் யோசி'
ஏமாந்துவிட்டால் ஏங்காதே
எதிர்த்து நில்'



# வாழைப்பழம் அதிகம் வேண்டாம்?

வாழைப்பழத்தில் உள்ள அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் உடலியல் மற்றும் உளவியல் பிரச்சினைகளைப் போக்க உதவுகிறது.

வாழைப்பழத்தை உண்பதால் நிறைய நன்மைகள் கிடைக்கப்பெற்றாலும், அவற்றை தொடர்ந்து உண்ணும் போது சிலபக்க விளைவுகளையும் ஏற்படுத்தும்.

வாழைப்பழத்தை தொடர்ந்து சாப்பிடுவதால் உங்கள் எடை அதிகரிக்கும். வாழைப் பழத்தை ஏனைய பங்களுடனும் கலந்து சாப்பிடலாம் உதாரணமாக தோடம்பழம், துண்டுகளாக்கப்பட்ட தர்பூசணி, ஒரு கோப்பை திராட்சை போன்ற பழங்களோடு சேர்த்து வாழைப்பழத்தைச் சாப்பிடலாம்.

வாழைப்பழம் அதிகமாக சாப்பிட்டு வந்தால் ஒற்றைத்தலைவலி, சுவாசப் பிரச்சினைகள், சிறுநீரகப் பிரச்சி னைகள், நரம்புப் பிரச்சினைகள், குருதியில் அதிக அளவு பொட்டாசியம் இருந்தால் வரும் ஹைபர்கலீமியா, பற்சிதைவு, சோம்பல், மலச்சிக்கல், வாயுத் தொல்லை ஆகியவை உண்டாகும்.

ஆஸ்துமா மற்றும் நோயெதிர்ப்பில் குறைபாடு உள்ளவர்களுக்கும், வாழைப் பழம் அதிகம் உட்கொள்பவர்களுக்கும் ஒரே மாதிரியான ஒவ்வாமை அறிகுறிகள் உள்ளது.


சிறுநீரக பிரச்சினை இருந்தால் வாழைப்பழம் உண்பதை குறைக்கவும். ஏனனில் வாழைப்பழத்தில் பொட்டாசியம் உள்ளது. இதனால் உங்கள் சிறுநீரகம் குருதியில் உள்ள கழிவுகளை வெளியேற்ற சிரமப்படும் இது ஆபத்தை விளை விக்கும்.

வாழைப்பழங்கள் அரை வெப்பத்தில் தான் வைக்கப்படுகிறது இதனால் சீக்கிரம் கெட்டுப்போகும் வாய்ப்பு அதிகம், அதனால் தேவைக்கேற்ற நன்றாக பழுத்த வாழைப் பழங்களை வாங்கி சாப்பிடவும்.

நீங்கள் ஒவ்வொரு முறையும் வாழைப்பழம் அல்லது அதற்கு இணையான சத்துக்கள் கொண்ட வேறொரு பழத்தை சாப்பிடும் போது மூச்சுத் திணறுதல் மற்றும் தொண்டை எரிச்சல் ஏற்பட்டால் உங்களுக்கு ஒவ்வாமை உள்ளது என்று அர்த்தம்



# பூண்டுடன் பால் குடித்தால் கிடைக்கும் நன்மைகள்?



சமையலுக்கு பயன்படுத்தப்படும் பூண்டு பல்வேறு நோய்களை விரட்டும் மருந்தாக செயற்படுகிறது. பூண்டு இதய நோயுடன் போராடி குருதி அழுத்தத்தையும் குறைக்கிறது, மேலும் காய்ச்சலையும் குணமாக்க உதவி புரிகிறது.

நோய் தடுப்பு மண்டலத்திற்கு உறுதுணையாய் நிற்கும் பூண்டு புற்று நோயையும் மற்ற நோய்த் தொற்றுகளையும் எதிர்க்க உதவுகிறது.

பூண்டில் விமின்கள் ஏ, பி1, பி2, பி6 ஆகியவைகளும், பொட்டாசியம், புரதச்சத்து, தாமிரசத்து, மக்னீசியம், பொஸ்பரஸ், கல்சியம் உள்ளிட்ட சத்துக்களும் நிரம்பி உள்ளன.

இந்த பூண்டுடன் பால் சேர்த்து குடித்தால் ஏகப்பட்ட நன்மைகள் கிடைக்கின்றன.

**பூண்டுடன் பால்**

- உங்களுக்கு திடீரென சளி மற்றும் காய்ச்சல் வந்தால், அப்போது பூண்டு சேர்த்துப் பாலைக் குடியுங்கள். இதனால் பூண்டில் உள்ள கலவைகள் சளி மற்றும் காய்ச்சலில் இருந்து உடனடி விடுதலையைக் கொடுக்கும்.
- உங்கள் முகத்தில் முகப்பரு அதிகம் இருந்தால், பூண்டு கலந்த பாலை முகத்தில் தடவுவதோடு, அவற்றைக் குடித்து வந்தால் பருக்கள் வருவதை முழுமையாகத் தடுக்கலாம்.
- தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் பூண்டுடன் பாலைக் குடித்து வந்தால், தாய்ப்பாலின் சுரப்பு அதிகரிக்கும். அதிலும் பிரசவம் முடிந்த பின், பூண்டு பாலை குடித்து வந்தால், குழந்தைக்கு தினமும் போதிய அளவு தாய்ப்பால் கிடைக்கும். மேலும் உடலில் உள்ள தேவையில்லாத கொழுப்பையும் கரைக்கும்.
- செரிமானம் பிரச்சினை இருப்பவர்கள் பூண்டுடன் பால் குடிப்பது நல்லது. ஏனெனில் பூண்டு, உணவைச் செரிக்கும் செரிமான திரவத்தை தூண்டி, உணவுகள் எளிதில் செரிமானமாக உதவும்.
- பூண்டு கலந்த பாலைக் குடிப்பதன் மூலம் வயிற்றில் வளரும் புழுக்களை அழிக்கலாம். அதற்கு இந்தப் பாலை காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும்


## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 60 | 60 | 50 | 60 | 60 |
| முள்ளங்கி | – | 60 | 80 | 80 | 30 |
| மரவள்ளி | 50 | 40 | 30 | 40 | 30 |
| பயிற்றை | 120 | 120 | 120 | 180 | 140 |
| பாகல் | 100 | 100 | 120 | 120 | 100 |
| க.கிழங்கு | 60 | 60 | 70 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 100 | 100 | 60 |
| சி.வெங்காயம் | 180 | 120 | 140 | 160 | 140 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 40 |
| தக்காளி | 130 | 160 | 130 | 160 | 100 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 | 60 | 60 |
| கீரை | 40 | 40 | 50 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 30 | 35 | 30 |
| ப.மிளகாய் | 70 | 50 | 50 | 70 | 60 |
| புடோல் | 60 | 100 | 100 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 80 | 70 | 50 |
| வெண்டி | 60 | 60 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 170 | 200 | 180 | 180 | 80 |
| லீக்ஸ் | 180 | 200 | 160 | 200 | 140 |
| தேங்காய் | 70 | 70 | 85 | 80 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 180 | 260 | 200 | 200 | 240 |
| வல்லாரை | 20 | 20 | 35 | 20 | 15 |
| கறிமிளகாய் | 90 | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 120 | 140 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 140 | 200 | 120 | 300 |

## கடலுணவின் நேற்றைய



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 600 | 500 | 400 |
| கணவாய் | 700 | 800 | 800 | – |
| பாரை | 600 | 500 | 700 | 1100 |
| சுறா | 600 | 700 | 1000 | 120 |
| சீலா | 500 | 450 | 500 | – |
| விளை | 600 | 450 | 500 | 800 |
| முரல் | 350 | 400 | 450 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 300 | 400 | 500 | 500 |
| திரளி | 200 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | – |
| சூடை | 100 | 180 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 400 |
| திருக்கை | 300 | 300 | 500 | 400 |
| மதனம் | 200 | 300 | 300 | – |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 200 | 300 | 600 | – |
| வாளை | 150 | 300 | 400 | – |



# தக்காளி ஊறுகாய்

**தேவையான பொருள்கள்**

தக்காளி - கால் கிலோ
பூண்டு - 6 பல்
காய்ந்த மிளகாய் - 6
வெந்தயத் தூள் - ஒரு தேக்கரண்டி
கடுகு -ஒரு தேக்கரண்டி
நல்லெண்ணெய்- தேவையான அளவு
புளி - சிறிதளவு
பெருங்காயம் - ஒரு கரண்டி
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

சட்டியில் ஒரு கரண்டி எண்ணெய் விட்டுக் காய்ந்த மிளகாயை வறுத்துக்கொள்ளுங்கள்.

மிளகாய் ஆறியதும் அதனுடன் உப்பு சேர்த்து நீர் விடாமல் அரைத்து, பூண்டு, புளி, தக்காளியைச் சேர்த்து அரைத்துக் கொள்ளுங்கள்.

சட்டியில் நல்லெண்ணெய் ஊற்றி, கடுகு, பெருங்காயம் தாளித்து, பின்னர் அரைத்த விழுதைச் சேர்த்து வதக்கவும். தக்காளி நன்றாக சுருண்டு வதங்கி ஓரங்களில் எண்ணெய் பிரிந்து வரும் போது வெந்தயத் தூளைத் தூவி இறக்கிவையுங்கள்.

இந்தத் தக்காளி ஊறுகாய் நீண்ட நாள்கள் பழுதுபடமால் இருக்கும்



**இது புதுசு**

பெண்களுக்கான கைப்பை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# அதல பாதாளம்

(27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுகணம் அவனை மல்லாக்காகத் தள்ளிவிட்டு அவள் ஓடிக்கொண்டிருக்கிறாள்.

"என்னை விடுங்கள்!"

"முடியாது நீ என்னிடமிருந்து தப்பவே முடியாது!"

மறுபடியும் அவன் பிடித்துவிட்டான். அவன் கையிலே அவள் துவண்டு கிடக்கிறாள்.

"யாராவது பார்த்திட்ட?"

"பார்த்தா என்னவாம்!"

"உங்களைச் சும்மா விடுவார்களா?"

"என்னை மட்டுமென்ன உங்களைக்கூடத்தான்!"

"என்னை என்ன செய்து விடுவார்களாம்?"

"லாவகமாக எங்களைக் கட்டிப்போட்டு விடுவார்கள். அப்புறம்....."

"அப்புறம் என்னவாம்?"

"கணபதிப் பெருந்தகையின் மருமகன் சோமுதான் என்பது ஊர்ஜிதமாகிவிடும்!"

"இது நடக்கக்கூடியதா?"

"கண்ணம்மா, நீ எந்தக் காலத்தில் இருக்கிறாய்! நான் வேறு ஜாதி, நீ வேறு ஜாதி, என்று பிரித்து வைத்த காலத்திலா?"

கண்ணம்மாவின் வாய் அடைத்துவிட்டது. அவள் அப்படியே அசந்துபோய்க் கிடக்கிறாள்.

கணபதியின் கண்களிலே நீர் மல்குகிறது.

கண்ணம்மாவின் கணவன் சோமு தான் என்பதை அவள் வாயிலாகவே கேட்கும் போது அவன் உள்ளம் விம்முகிறது.

கண்களால் வழிந்தோடும் நீரை அவள் பிறங்கையால் தடவிவிட்டுக்கொள்கிறாள். அது மீண்டும் மீண்டும் பெருக்கெடுக்கிறது. அவனின் மூச்சே திணறிவிடும் போல இருக்கிறது.

"டாங், டாங், டாங், டாங்" இந்த ஓசை காற்றிலே மிதந்து வந்தது. மழை மெதுவாக இரைந்து வந்து அந்தக் குடிசையைத் தெப்பமாக நனைத்துவிட்டு ஓடிச்சென்று விட்டது. ஸ்டேசனின் நான்கு மணி என்ற அறிவிப்பு மழையின் இரைச்சலைக் கிழித்துக்கொண்டு தான் கேட்டது.

"இஞ்சர், இஞ்சர்!"

லட்சுமி கணபதியை சுரண்டி எழுப்புகிறாள். அவன் முனகிவிட்டு மறுபக்கமாகப் புரண்டு படுத்துக் கொண்டான்.

ஓட்டை ஓடிசலாக்கிடந்த லாந்தரை மெதுவாக ஏற்றினாள். வெளிச்சத்தை அவன் கண்ணுக்கு நேரே பிடித்து அவனை எழுப்ப முயற்சித்தாள். அவன் முகம் ஒழுக்கு நீரினால் தெப்பமாக நனைந்து போயிருந்தது.

"இஞ்சர், இஞ்சர், விடியப்போகிறதப்ப! விடிந்துவிட்டால்...."

கணபதி முக்கி முனகிக்கொண்டே கிடந்தான். அவனின் தூக்கம் இன்னும் சரியாகக் கலையவில்லை.

அவள் மறுபடியும் "நேரங்கடந்திட்டுது எழும்பு" என்று அலட்டிக் கொண்டேயிருந்தாள்.

"இனி ஏண்டி எனக்குக் களவு?"

இந்த வார்த்தை கணபதியின் வாயிலிருந்து எழுந்தது. "குட்ஸ்" வண்டியின் ஓசையைப்போல அவன் குரல் இருந்தது. லட்சுமிக்கு கோபம் கோபமாக வந்தது.

சினிமாக் கொட்டகையிலே அகன்று விரிந்த கேசத்தையுடைய நெட்டையனுக்குப் பின்னால் கலரியில் இருக்கும் கட்டையனின் மனநிலையிலே லட்சுமி இருந்தாள். அவன் உள்ளம் நமச்சல் எடுத்தது.

கணபதி மெதுவாகத் தலையைச் சரித்துக் கொண்டான். அவன் தலையோடு மருவிக் கிடந்த ஒரு புத்தகத்தை லட்சுமி கையிலெடுத்து அதை வெளியே விட்டெறிந்தாள். கணபதியின் நித்திரைக்குக் காரணமாயிருந்தது அதுதான் என்ற முடிவுக்கு அவள் வந்துவிட்டாள்.

அன்று சாய்ந்தரம் முற்றவெளியில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவன் கால் ரூபாய் கொடுத்து வாங்கிய அந்தப் புத்தகம் அவள் கையிலிருந்து பாய்ந்தோடி இருட்டோடு கலந்து கொண்டது.

கந்தன் கோயிலின் மணி ஓசை காற்றிலே மிதந்து வந்தது. அத்துடன் போட்டியிட்டு, சேவல்கள் கூச்சலிட்டன. கணபதியின் குடிசைக்கு மேலும் ஒரு சேவல் போட்டியில் கலந்து கொண்டே சிறகடித்துக் கூவியது.

கணபதி கைகளை உயர்த்தி தினவெடுத்துக் கொண்டு கண் விழித்தான். எல்லாம் அவனுக்குச் சூன்யமாகத் தெரிந்தது. மின்னிக்கொண்டிருந்த லாம்பு வெளிச்சமும், லட்சுமியின் நச்சரிப்பும் அவனுக்கு ஒரு கணம் ஆச்சரியத்தையே கொடுத்துவிட்டது.

உன்னதமான ஒரு இன்பலோகத்திலிருந்து ஒரே "செக்கனில்" அதலபாதாளத்திற்கத் தூக்கி வீசப்பட்ட அவன் வெளிப் பிரதேசத்தில் அகப்பட்ட முயலைப்போல பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தான்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 523

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | ■ | |
| 11 | 12 | | ■ | 13 | | 14 | |
| 15 | | ■ | 16 | ■ | 17 | | ■ |
| | ■ | 18 | | 19 | | ■ | 20 |
| ■ | 21 | | | | ■ | 22 | |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1. பழக்க தோசம்
5. கணிதக்குறியொன்று
7. நெருக்கமாக
8. ஒரு வகை ஆட்டம்
9. பழத்துக்கு இது நல்லது
11. சேலை
13. முகவரி
15. நோவு
17. பருவகாலத்தில் குளிர்காலம்
18. ஒரு பிரபந்தம்
21. நண்பகல் வேளை
22. நிணம் / இறைச்சி / சதை
23. வேலிக்கு நல்லது
24. சேனாதிபதி

### மேலிருந்து கீழ்

1. இனங்களுக்கு மத்தியில் இது வேண்டும்
2. மூலமானது
3. பெற்றுக்கொள்ளுதல்
4. மகாபாரதத்தில் இவர்... இராமாயணத்தில் கூனி
5. தீய நினைப்பு
6. செருக்கு
8. கூடிக்குலாவுதல்
10. அந்தரி
12. பீதி
14. கிரகங்களில் ஒன்று
16. பழையது அல்ல
18. விடை
19. மாடி கட்ட இது அவசியம்
20. திருமணம் ஆகாத இளம் பெண்
21. அறிவு
22. ஒரு நிறம்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 521 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)முகப்பரு (5)பாதி (6)துரு (7) கசிதல் (9)கும்பல் (12)புகை (13) புராணம் (15)வரலாறு (17)நுகர்தல் (19)சுடு (20)பதி (21)கத்த (22)விரைவு (23)மலிதல்

**மேலிருந்து கீழ்**

(1)முதுகு (2)கரும்பு (3)பகல் (4)ருசி (5)பால் (8)தகராறு (10)பகைவர் (11)கும்பிடுதல் (13)புலால் (14)அநுபவி (16)ரதம் (18) கதிரை (19)சுத்த (21)கலி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=

பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.523**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (30.05.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 521 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

அ.ஞானசோதி,
தவசிகுளம்,
மிருசுவில்.

**2 ஆம் பரிசு**

B.சாலினி றோச்,
C/O அல்பிரட் கடை,
பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.

**3 ஆம் பரிசு**

சி.பானுராஜா,
சிதம்பராக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**

ஜோ.ஜோஜ்ஜியா,
இல.22, சுவாமியார் வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**

தி.மதிசியா,
இல. 395/13, இறம்பைக்குளம்,
வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

M.தங்கத்துரை,
வாதரவத்தை,
புத்தூர்.

ப.சிவமலர்,
அச்செழு வடக்கு,
நீர்வேலி.

துரைசிங்கம் சித்திராதேவி,
நாவற்குழி தெற்கு,
கைதடி

சொற்சிலம்பம் போட்டி இல.523 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 03.06.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 521 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**20.05.2018 முதல் 26.05.2018 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

குரு, சுக்கிரன், சந்திரன் அனுகூல பலன் தருவர். புதிய வாய்ப்புக்களை பயன்படுத்துவதால் பணவரவு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வர். வாகனப்பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகளின் கவனக்குறைவான செயலால் சிரமம் வரலாம். பணக்கடன் தொந்தரவு குறையும். உடல் ஆரோக்கியத்திற்கு, நேரத்திற்கு உணவு உண்பதும், சீரான ஓய்வும் தேவைப்படும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் குடும்பநலன் சிறக்க உதவுவார். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவது அவசியம். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள் கணவரின் அன்பு பாசத்தில் மனம் மகிழ்வர்.

## இடபம்

சூரியன், ராகு, சுக்கிரன் தாராள நற்பலன் வழங்குவர். உத்வேகமுடன் செயல்படுவீர்கள். முக்கியமான பணிகள் சிறப்பாக நிறைவேறும். சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களை தாமதமாக உணர்ந்து கொள்வர். வீட்டில் ஒற்றுமை நிலைத்திருக்கும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் கடமை உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## மிதுனம்

புதன், குரு, சுக்கிரனால் அளப்பரிய நன்மை கிடைக்கும். பேச்சு வசீகரமாக இருக்கும். பலரும் வியந்திடும் வகையில் செயல்படுவீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு சுப நிகழ்ச்சி நடத்தலாம். தாய்வழி உறவினர்களால் உதவி உண்டு. புதிய வாகனம் விரும்பியபடி வாங்கலாம். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். விவகாரம் அணுகாத மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவீர்கள். மனைவியின் அன்பு பாசம் நெகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். ஆதாய பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகையும் வெகுமதியும் கிடைக்கும். பெண்கள் உறவினர்களை நன்கு உபசரிப்பர். மாணவர்கள் படிப்பில் முன்னேறி புதிய இலக்கை அடைவர்.

## கடகம்

சூரியன், புதன், சுக்கிரன், சனியால் அளப்பரிய நன்மை கிடைக்கும். உறவினர்களின் எதிர்பாராத உதவி ஊக்கம் தரும். சமூக அந்தஸ்து கூடும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாகும். பிள்ளைகள் சில விஷயங்களில் பிடிவாதம் கொள்வர். பூர்வசொத்தில் பணவரவுகளை கவனமாக பெற வேண்டும். நோய் தொந்தரவு குறையும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் பெருந்தன்மை குணம் மகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரத்தில் போட்டியை மாற்று வழியில் சரி செய்யவும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் கூடுதல் பயிற்சியால் சிறப்பாக படிப்பர்.

## சிங்கம்

சூரியன், செவ்வாய், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை விலகும். சமூக நடப்பில் புதிய அனுபவம் பெறுவீர்கள். பேச்சும், செயலும் பரிமளிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை இருக்கும். வாகனத்தின் பயன்பாடு சீராக இருக்கும். பிள்ளைகள் அறிவு, செயல்திறனில் மேம்பட வாய்ப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். பணக்கடன் தொந்தரவு பெருமளவில் குறையும். மனைவியின் செயல்கள் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரம் செழித்து வளர மாற்று வழி நல்ல பலன் தரும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேற இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

## கன்னி

புதன், குரு, சுக்கிரன், ராகு தாராள நற்பலன் வழங்குவர். முன்னேற்றப் பாதையில் நடைபோடுவீர்கள். உங்களை இகழ்ந்து பேசியவரும் அன்பு பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளின் எண்ணங்களை புரிந்து கொண்டு அவர்களின் போக்கில் உதவுங்கள். குடும்பத்திற்கான பணச்செலவுகளில் தாராளம் இருக்கும். நோய் தொந்தரவு குறைய மருத்துவ சிகிச்சை நல்லபலன் தரும். மனைவி வழி சார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழிலில் புதிய உத்தியால் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் தொழில்நுட்ப அறிவு மற்றும் பணித்திறனில் மேம்படுவர். தாராள பணவரவில் பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

## துலாம்

சனி, சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். புதியவர்களின் அன்பு பாசம் கிடைக்கும். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். பணிகளில் முன்னேற்றம் உருவாகும். உடன்பிறந்தவர் அன்பு பாராட்டுவர். வெளியூர் பயணம் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும். பிள்ளைகள் பெற்றோரிடம் அதிக அன்பு கொள்வர். சீரான ஓய்வு உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும். மனைவியின் பேச்சு, செயலில் புதிய பரிமளிப்பு ஏற்படும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைத்து மனநிறைவுடன் பணிபுரிவர். மாணவர்கள் புதுப்புது விஷயங்களை அறிந்து கொள்வர்.

## விருச்சிகம்

செவ்வாய், கேது, புதன் அளப்பரிய நற்பலன் தருவர். மனதில் உத்வேகம் பிறக்கும். செயல்களில் இருந்த தாமதம் விலகும். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். பிள்ளைகளின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நிலுவைப்பணம் வரவாகும். எதிரியால் இருந்த தொல்லை விலகும். மனைவியின் அறிவார்ந்த செயல் குடும்பநலன் சிறக்க உதவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அரசு உதவி பெற புதியவர்களின் உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை அக்கறையுடன் நிறைவேற்றுவர். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர் உதவுவர்.

## தனுசு

சூரியன், குரு, சந்திரனால் ஓரளவு நன்மை உருவாகும். நேர்மை வழியில் செயல்படுவீர்கள். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். வாகன பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் ஆடம்பர செயல்களில் ஆர்வம் கொள்வர். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் மனதில் உங்கள் மீதான நம்பிக்கையை பாதுகாத்திடுங்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கு அதிக பணம் தேவைப்படும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதம் பேச வேண்டாம். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற புதிய உத்திகளை பின்பற்றுவர்.

## மகரம்

புதன், சுக்கிரன், சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். பழகுபவர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். செயல்கள் சிறப்பாக அமையும். தாய் வழி உறவினர்களின் செயலை குறை சொல்ல வேண்டாம். வீடு வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன் சிறக்க தேவையான பணிபுரிவீர்கள். பூர்வ சொத்தால் பணவரவு அதிகரிக்கும். சத்தான உணவு உண்டு உடல் ஆரோக்கியம் பேணுவீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளர அதிக கவனம் கொள்வீர்கள். பணியாளர்கள் பணி இலக்கை ஆர்வமுடன் நிறைவேற்றுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர்.

## கும்பம்

சுக்கிரன், ராகு, குரு, சனீஸ்வரர் அனுகூலமாக உள்ளனர். மனதில் தைரியம் வளரும். சகோதரர் கூடுதல் அன்பு பாராட்டுவர். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகளின் செயல்களில் உருவாகின்ற குளறுபடியை இதமாக சரி செய்வீர்கள். உறவினர் வீட்டு விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பணக்கடன் தொந்தரவு பெருமளவில் குறையும். குடும்பத்தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். மனைவியின் அன்பு நெகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் பிள்ளைகள் நலன்களை பாதுகாத்திடுவர். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி பெறுவர்.

## மீனம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். பணியில் நேர்த்தி உருவாகும். இஷ்டதெய்வ அருளால் புதிய திட்டம் நிறைவேறும். சமூக அந்தஸ்து அதிகரிக்கும். வாகனப்பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகள் திறமை மிகுந்த செயல்புரிந்து பாராட்டு பெறுவர். பூர்வசொத்தில் பணவரவு கூடும். எதிர்ப்பாளர் சொந்த சிரமங்களால் விலகுவர். மனைவியின் நல்ல கருத்து உங்கள் வாழ்வில் புதிய மாற்றம் உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்க அனுகூலம் உண்டு. மாணவர்கள் அக்கறையுடன் படித்து நற்பெயர் பெறுவர்.

UNDER PRESSURE



# அண்டர்பிரசர்

## அழகியலோடு கூறும் அறிவுரை

குறும்படப்பார்வை

சி.ப.வேந்தன்

“சினிமா பார்ப்பது என்பது எத்தனை முறை நடந்து முடிந்தாலும் ஒவ்வொருமுறையும் ஓர் அதிசயமே. அது அலுத்துப்போவதேயில்லை. திரையில் நாம் காண்பது வெறும் பிம்பங்கள் என்று ஒருபோதும் உணரமுடிவதேயில்லை அவை நிஜம். எந்த அளவு நிஜம் என்றால் அரங்கிலிருந்து வீடு வந்து சேர்ந்தபிறகும் நம் கூடவே வரும் நிஜம்” எஸ். ராமகிருஸ்ணன்(எழுத்தாளர்) எழுத்தாளர் ராமகிருஸ்ணன் குறிப்பிடுவதுபோல ஒவ்வொரு பார்வையாளனும் அதை நிஜமென்றே நம்புகின்றான். ஒவ்வொரு பாத்திரத்திலும் தன்னைப் பொருத்திக்கொண்டு அந்த இருட்டு அறைக்குள் இரண்டுமணிநேரம் வாழ்ந்துமுடித்துவிடுகிறான். காதலியோடு கடற்கரையில் பாடுபவனாகவும், வீதியில் காணும் அநீதிக்கு எதிராகப் பொங்கி எழுபவனாகவும்கண்ணையோஒருபவ் கிட்னியையோ, காதலிக்கோ மற்றவருக்கோ விட்டுக்கொடுக்கும் தியாகியாகவும் ஒவ்வொரு பாத்திரத்திலும் கரைந்து தொலைந்துவிடுகிறான். உணர்வைக் கரையச்செய்யும் சக்தியைக்கொண்டதால்தான் இன்றுவரையும் எந்தவிதத்திலும் வீரியம் குன்றாமல் சினிமாக்கலையால் தாக்குப்பிடிக்கமுடிகிறது. அந்த அற்புத சக்தியினால்தான் சினிமாக்கலைஞர்களால் அரசியல் களத்திலும் காலங்காலமாக உச்சியிலே தங்கிவிடவும் முடிகிறது. றீகனிலிருந்து (அமெரிக்க நடிகர், அரச தலைவர்) ரஜனி (இந்திய நடிகர்) வரை நம்பிக்கையோடு களமிறங்க முடிகிறது. இப்படி விரும்பியோ விரும்பாமலோ ஒவ்வொரு மனிதனும் ஏற்றுக்கொள்ளவேண்டிய அனுபவிக்கவேண்டிய ஒன்றாகச் சினிமா மாறிவிட்டிருக்கிறது. அப்படி மாறிவிட்டிருக்கிற சினிமாவை மருந்தடிக்காமலும் சூத்தையில்லாத தாயும் கத்தரிக்காயைத் தேர்ந்தெடுக்கும் லாவகத்தோடு அணுகவேண்டியிருக்கும் ஒரு பொறுப்பு ரசிகனுக்கும், பார்வையாளனுக்கும் அமைந்துவிடுகிறது. அது நிகழாதபோது



நோய்பிடித்த சூத்தையான ஹரஹரமகாதேவகி, இருட்டு அறையில் முரட்டுக் குத்து போன்ற விசங்களையெல்லாம் குடும்பத்தோடு பார்க்கவேண்டிய விபத்து நேர்ந்துவிடும். ஆக இதிலிருந்து விடுபட நல்ல திரைப்படங்கள் பற்றிய தேடலில் முதலில் திரைப்படங்களை உருவாக்கும் படைப்பாளிகள் முனையவேண்டும். திரைப்படம் தொடர்பில் பேசவேண்டும் அப்படியான தேடலில் கிடைக்கும் நல்ல திரைப்படங்களின் அறிமுகம் ஒரு புதிய பாணியிலமைந்த, தனித்துவம்பொருந்திய எமக்கான சினிமாக்களை உருவாக்க உதவும்.

திரையில் நாம் காண்பது வெறும் பிம்பங்கள் என்று ஒருபோதும் உணரமுடிவதேயில்லை அவை நிஜம். எனவே இப்படியாக எம் நடுவே பேசவேண்டிய நல்ல நல்ல கதைகளும் நிஜங்களும் இருக்கின்றன அவைகளை தேடிப்பயணப்படுவதுதான் திரைப்படைப் பாளர்களின் முதல்தேவையாக இருக்கிறது.

### அண்டர்பிரசர்

போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த காலப்பகுதியில் கதை நடைபெறுகிறது. இரண்டு மாடுகள் செக்கிழுத்துக்கொண்டிருக்கின்றன. அருகில் முரளி(12 வயது) தந்தையின் சைக்கிளில் டைனமோவைப் பொருத்தி மின்சாரம் எடுத்து, வானொலிப்பெட்டியைச் சீர்செய்து கொண்டிருக்கின்றான். அயல்வீட்டு பிள்ளைகளுக்கு படிப்பித்துக்கொண்டிருக்கும்(ரியூசன்) தந்தை(ஆசிரியர்) வகுப்பை முடித்துவிட்டு வருகிறார். அறையில் இருந்து ஓவியம் வரைந்துகொண்டிருக்கும் மகளை (16 வயது) பார்த்து எரிச்சலுடன் தலையில் அடித்து “படம் கீறாமல் போய்ப்படியடி” என ஏசிவிட்டு படத்தை கிழித்துப்போட்டுவிட்டு செக்கடிக்கு வருகிறார். தகப்பனைக் கண்ட முரளிதான்செய்துகொண்டிருந்த வேலைகளை அப்படியே வைத்துவிட்டு ஓடிவந்து புத்தகம் படிப்பது போல் பாவனைசெய்துகொண்டு செக்கின் மேல் இருக்கிறான். தந்தை அப்பால் சென்றவுடன் மீண்டும் தனது ஆராய்ச்சியில் இறங்கிவிடுகிறான். அப்போது உலங்குவானூர்தி ஒன்றுவட்டமடிக்க பதுங்கு குழியில் ஓடிச்சென்று பதுங்கிவிட்டு, அது அப்பால் சென்றவுடன் மீண்டும் வந்து தனது வேலையில் ஈடுபடுகின்றான்.

பழைய பொருள்கள் போடும் அறையில் இருக்கும் உடைந்துபோன மின்விசிறியின் இறக்கையை எடுத்து டைனமோவில் பொருத்தி அதனை உயரமாகக் கட்டிச் சுழலவிட்டு அதில் டைனமோவைப் பொருத்தி விளக்கு (லைற்) எரிய வைத்துக்கொண்டிருக்கிறான். அவன் துலாக்கம்பின்மேல் வைத்துவிட்டு வந்த புத்தகம் கீழே விழுந்துவிட அதை மாடு தின்றுகொண்டிருக்கிறது. இதை அவதானித்த தந்தை முரளிக்கு அடிக்கிறார். “படிச்சு இன்சினியர், டொக்ரா வருமெண்டா அது விளயாடிக்கொண்டு திரியுது’ ஏன ஏசுகிறார். மாடு தின்ற புத்தகத்தை தாய் சரிப்படுத்தி கொடுக்கிறார். இரவு முரளியும் அக்காவும் படித்துக்கொண்ருக்கிறார்கள். தந்தை இருவருக்கும் பேசிக்கொண்டிருக்கிறார். அப்போது செல் அடிக்கத்தொடங்குகிறது. எல்லோரும் பதுங்குகுழிக்குள் ஓடுகிறார்கள். முரளிமின்கலங்களையும் வானொலிப்பெட்டியையும் எடுத்துக் கொண்டு போகிறான். அங்கேயும் விளக்கு வெளிச்சத்தில் படிக்குமாறு தந்தை பேசுகிறார். புத்தகத்தை எடுத்துக்கொண்டுவரவில்லை என முரளிக்கு ஏசும் தந்தை போய் அவனைப் புத்தகத்தை எடுத்துவரும்படி அனுப்புகிறார். முரளி புத்தகம் எடுக்கச் செல்கின்றான்.

முற்றத்தில் அவனால் உருவாக்கப்பட்ட காற்றாடி சுழலும்போது விளக்கு(லைற்) எரிகிறது. இதனை அவதானித்த முரளி அதைச் சரியான திசைக்கு சீர்செய்கிறான். அப்போது எறிகணைகள் சரமாரியாக விழுந்தனால் தூக்கிவீசப்பட்ட முரளி தூரமாய் விழுந்து கிடக்கிறான். மாடுகள் இறந்து கிடக்கின்றன. பதற்றத்தோடு ஓடிவரும் மூவரும் முரளியைத் தூக்குகின்றனர். அவனுக்கு ஏதும்நிகழவில்லை என அறிந்து ஆறுதலடையும் அவர்கள் மீண்டும் பதுங்குகுழிக்குச் செல்கின்றனர். அப்போது மண்ணெண்ணை தீர்ந்துவிட்டதால் விளக்கு அணைந்துவிட்டது. அதனால் தன்னால் உருவாக்கப்பட்ட லைற் வெளிச்சத்தை பதுங்கு குழிக்குள் பரவச்செய்கிறான் முரளி. அப்போதும் அவன் செய்திருப்பதைப் பாராட்டாது புத்தகத்தை எடுத்துப்படியடா எனத் தந்தை ஏசுகிறார். இருவரும் புத்தகத்தை படிப்பதோடு படம் நிறைவடைகிறது.

### அழகுணர்வும் அறிவுரையும்

பிள்ளைகளின் கல்வி தொடர்பில் பெற்றவர்கள் கொண்டிருக்கும் பொதுப்பண்பையும் போராட்ட காலத்தில் பிள்ளைகளின் கல்வியில் இருந்த நெருக்கடியையும் மிக அழகாகப் பேசுகிறது படம். தமிழ் திரைப்படத்துறையின் மிக முக்கிய படைப்பாளியான ஞானதாஸ் இந்தப் படத்தை நெறியாள்கை செய்திருக்கிறார். குறுந்திரையில் பேசவேண்டிய கதைகள் பெரிய திரையில் பேசவேண்டிய கதைகள் என்ற இரண்டுக்குமான பாகுபாட்டைத் தெளிவாக புரிந்து சரியான கதையை தெரிந்தெடுத்து குறித்த வட்டத்துள் நின்று பேசியிருப்பதில் இயக்குநர் தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறார். வெறும் பதினைந்து நிமிடக்கதையில் ஒரு பதுங்கு குழியுடனும் சத்தத்தாலும் மட்டுமே ஒரு போராட்ட வாழ்வியல் சூழலைக் காட்சிப்படுத்திய இயக்குநரின் துணிவும் கற்பனையும் பாராட்டத்தக்கது. பாத்திரங்களின் நடிப்பு அவர்களது இயல்பான உரையாடல் சூழல், வண்ணம்(ஒளி) என்பன படத்தின் உயரத்துக்கு உதவி புரிந்திருக்கின்றன.

பாத்திரங்களாக மாடுகளையும் இசையையும்ஒருபவ் ஒளியையும் பயன்படுத்தியிருப்பது அழகு. உரையாடல்களைக் குறைத்து சட்டகங்களைப் பேச வைத்திருப்பதில் மேலும் தனது படைப்பில் மரியாதையை உண்டுபண்ணுகிறார் இயக்குநர். பிள்ளைகளின் கல்வியில் எப்போதுமே பெற்றோர்(ஆகக்கூடுதலான எண்ணிக்கை கொண்ட) கொண்டிருக்கும் இயல்புக்கு மீறிய பொதுப்பண்பை சமூக அக்கறையோடு பேசும் இந்தப்படம் கலையழகியலோடு கருத்தையும் பேசுவதில் கவனமீர்க்கிறது. பிள்ளைகளின் தனித்திறமைகளைக் கண்டு, அவற்றை வளர்த்துவிடுவதில் தவறும் பெற்றோர் படிப்பை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அவர்களை சுரைக்காய்களாக மாற்றும் ஆபத்தையும் சொல்லாமல் சொல்கிறது. படம்.

மேலே குறிப்பிட்டது போல இது நிஜத்தையும் உணர்வையும் பேசுகிறது. அதனால் மிக இயல்பாக பார்வையாளனால் படத்தோடு ஒன்றிவிட முடிகிறது. அதுவும் குறித்த(போராட்ட) காலத்தைக் கடந்து வந்திருக்கும் அனைத்துப் பார்வையாளனையும் பாத்திரத்தோடு பொருத்தும் வல்லமையும் கொண்டிருக்கிறது.

ஆக திரையில் நாம் காண்பது வெறும் பிம்பங்கள் என்று ஒருபோதும் உணரமுடிவதேயில்லை அவை நிஜம். எனவே இப்படியாக எம் நடுவே பேசவேண்டிய நல்ல நல்ல கதைகளும் நிஜங்களும் இருக்கின்றன அவைகளைத் தேடிப்பயணப்படுவதுதான் திரைப்படைப்பாளர்களின் முதல்தேவையாக இருக்கிறது.

அரட்டை

மேரிகிரேஸ் வரதராஜன்



# என்றாவது ஒரு நாள் நீதி கிடைக்கும்...

## சின்னதா ஓர் அரட்டை

எமது நாட்டு அரசே எம்மீது குண்டு போட்டது.
எமது நாட்டு இராணுவமே எம்மைச் சுட்டுக்கொன்றது.
இரண்டு நாள்களில் 40ஆயிரம் மக்களைக் கொன்று
புதைத்துவிட்டு இது பயங்கரவாதத்துக்கு எதிரான போர்
என்றது.
'வடக்கின் வசந்தம்' என்றார்கள்
'கிழக்கின் உதயம்' என்றார்கள்
எந்த உதவிகளும் எமக்கு இன்னும் கிடைக்கவில்லை
முள்ளிவாய்க்கால் கடல் அலையைக் கேட்டுப்பாருங்கள்
அது எமது ஓராயிரம் வலிகளை ஆர்ப்பரித்துச் சொல்லும்
அன்றும் நடந்தோம்
இன்றும் நடக்கிறோம்
இனியும் நடப்போம்
ஆனால் ஒருபோதும் வீழ்ந்து கிடந்து விடமாட்டோம்.
என்றாவது ஒருநாள் எமக்கு நியாயம் கிடைக்கும் என்ற
நம்பிக்கையில் தொடர்ந்து நடந்துகொண்டேயிருப்போம்!
போராடாத இனம் விடுதலை பெற்றதில்லை
போராடிய இனம் விடுதலை பெறாமல் விட்டதில்லை.

ஓ... கனவான்களே!
இந்தச் சிறுவன் ஏன் கொல்லப்பட்டான்?
இந்தச் சிறுவனும் பயங்கரவாதியா?
பிரபாகரனின் மகன் என்பதைத் தவிர வேறு என்ன தவறு செய்தான் இந்தச் சிறுவன்?
முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் என்றால் சரணடைந்த சிறுவனுக்குப் பிஸ்கெட் கொடுத்துக் கொன்றவர்களை என்னவென்று அழைப்பது? மீதியிருக்கும் தமிழர்களையும் என்ன சொல்லிக் கொல்லப் போகின்றீர்கள்? அதையும் ஒரு தடவை கூறிவிடுங்கள் கனவான்களே!
கருணா சொல்லியே கோத்தபாயா ராஜபக்ச இந்தச் சிறுவனைக் கொன்றதாகக் கூறுகிறார்கள் சிலர்.
பிரபாகரன்பயங்கரவாதிஎனவேஅவர்மகனும்பயங்கரவாதி என்று சிறுவனின் கொலையை நியாயப்படுத்துகிறார் சுப்பிரமணியசுவாமி. குழந்தைப் போராளிகள் என்று ஓடிவந்து நடவடிக்கை எடுத்த ஐ.நா வும்கூட இந்தச் சிறுவன் கொலை பற்றி நியாயம் கூற மறுக்கிறது. ஜே.வி.பி. தலைவர் விஜயவீராவைக் கொன்ற இலங்கை அரசு அவரது மனைவியையும் பிள்ளைகளையும் பராமரித்து வந்தது. ஆனால், புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சரணடைந்தும் ஈவு இரக்கமின்றிக் கொன்றுள்ளது. இதில்கூட இனவாதம் காட்டும் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கும் என்று எப்படி நம்புவது?



**பதில் சொல்லுங்கள்**
**பாலகனும் பயங்கரவாதியா?**

## அழுது புலம்புவதற்காக அல்ல மீண்டும் எழுந்து நிற்பதற்காகவே!

நாம் எழுந்து நடந்தால் இமய மலையும் எமக்கு வழி கொடுக்கும். மாறாக நாம் உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மைச் சிறை பிடிக்கும். காலில் மிதிபடும் புழுக்கூட துடித்து எழும். அப்படியிருக்க தமிழ் இனம் மட்டும் அடங்கி அடிமையாக கிடந்து விடுமா என்ன? அழுத பிள்ளையே பால் குடிக்கும். போராடிய இனமே விடுதலை பெறும். இப்போது எம்முன் உள்ள கேள்வி நாம் போராடப் போகிறோமா அல்லது அடிமையாகக் கிடக்கப் போகிறோமா?

தாயகத்தில் உள்ள எம் உறவுகள் தீர்வு கிடைக்கும் வரை போராடப் போவதாக அறிவித்து போராடி வருகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது உறவுகளின் போராட்டத்துக்குத் துணை நிற்கப் போகிறார்களா? அல்லது போராட்டத்தைச் சிதைவுறுத்தப் போகிறார்களா?

தலைமைகள் அரசின் சலுகைகளுக்காகத் துரோகம் புரிந்தாலும் பரந்து பட்ட மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். வருவார்கள். போத்துக்கேயரை எந்த மக்கள் விரட்டினார்களோ, ஒல்லாந்தரை எந்த மக்கள் விரட்டினார்களோ, ஆங்கிலேயரை எந்த மக்கள் எதிர்த்தார்களோ அதே மக்கள்தான் இந்திய இராணுவத்தையும் எதிர்த்தார்கள். இலங்கை அரசையும் எதிர்க்கிறார்கள். எமது மக்கள் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றின் சொந்தக்காரர்கள். அவர்கள் ஒருபோதும் அடிமைத்தனத்துக்கு இடங்கொடுக்க மாட்டார்கள். இலங்கை- இந்திய அரசுகள் மட்டுமல்ல எத்தனை அரசுகள் சேர்ந்து அடக்கினாலும் எம்மக்கள் பயந்து மண்டியிட மாட்டார்கள். அவர்கள் தமது மூச்சுக்காற்றை நிறுத்துவார்களே தவிர ஒருபோதும் போராட்டத்தை விட்டு விடமாட்டார்கள். இதையே கடந்த கால வரலாறு காட்டுகிறது. எதிர்கால வரலாறும் இதையே நிரூபித்துக் காட்டும். எனவே முள்ளிவாய்க்கால் நினைவுகளை இயன்றளவு எந்தவித அமைப்பு வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்று திரண்டு செய்வோம். மீண்டும் எழுந்து நிற்போம். இந்த முறை கடந்த முறையைவிடப் பலமாக எழுந்து நின்றதைப்போல.

## தமிழகப் பொலிசாரின் துப்பாக்கியைவிட சேகரின் செல்வாக்கு வலிமை மிக்கதா?

"தைரியம் இருந்தால் கைது செய்து பாருங்கள்" என்று தமிழகப் பொலிசாருக்கு எஸ்.வி. சேகர் சவால் விட்டுள்ளார். சேகரின் சவாலை பார்க்கும்போது பொலிசாரின் துப்பாக்கியைவிடச் சேகரின் செல்வாக்கு வலிமை மிக்கதா? என்ற கேள்வி எழுகிறது.
இந்தியாவில் இவ்வாறானவர்கள் வலிமை மிக்கதாக இருப்பதற்கு என்ன காரணம்?
எஸ்.வி.சேகர் ப.ஜா.கவைச் சேர்ந்தவர். அதைவிட அவரது அண்ணன் மனைவிதான் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன். அதற்கும் மேலதிகமாக பி.ஜே.பி. எச்.ராஜாவின் செல்லப்பிள்ளை சேகர். இதைவிட என்ன வேண்டும்...?

## போராடாத இனம் வாழ முடியாது

நீங்கள் அனைத்து மலர்களையும் நசுக்கி விடலாம்.
ஆனால் வசந்த காலம் வருவதை உங்களால் தடுத்து
நிறுத்த முடியாது. இவர்கள் பதுங்குகுழியில்
மாண்டுபோய்விட மாட்டார்கள். இவர்கள் மீண்டும்
எழுந்து வருவார்கள்
இவர்கள் தமக்கே உரிய மொழியில் வினா
எழுப்புவார்கள்
இவர்கள் தமக்கே உரிய வழியில் விடையும்
காணுவார்கள்
இவர்கள் உங்களை மறக்கவும் மாட்டார்கள்
மன்னிக்கவும் மாட்டார்கள்
ஓடாத மானும் போராடாத இனமும் வாழ முடியாது
என்பதை
இவர்கள் நன்கு அறிவார்கள்.
வரலாறு எப்போதும் வென்றவனையும் பதிவு செய்யும்.
தோற்றவனையும் பதிவு செய்யும்.
ஆனால் ஒருபோதும்போட்டியிடாதவனைப் பதிவு
செய்யாது.

ஓடுவோம்
இறுதி இலக்கை எட்டும் வரை
ஓட முடியாதபோது
நடப்போம்
நடக்க முடியாதபோது
தவழ்ந்தாவது செல்வோம்
ஆனால்
ஒருபோதும் இயங்குவதை
நிறுத்த மாட்டோம்!
முள்ளிவாய்க்காலில்
நாம் ஒன்று சேருவது
ஒப்பாரி வைத்து
அழுவதற்காக அல்ல
மீண்டும் எழுந்து
நிற்பதற்காகவே!
நாம் பாலியல் வன்புணர்வு
செய்யப்படலாம்
கொலை செய்யப்படலாம்
ஆனால்
ஒருபோதும்
தோற்கடிக்கப்பட முடியாது!
வெற்றி உறுதி எமக்கு!

**முள்ளிவாய்க்கால் எழுச்சி ஆண்டுகள் கடந்தும் அடங்கிவிடவில்லை**





# பயங்கரவாதிகள் வெளியே: படையினர் உள்ளே

## பொருமுகிறார் கோத்தா



கொழும்பு, மே 20

இலங்கையின் 30 ஆண்டு உள்நாட்டுப் போரின்போது படையினர் செய்த தியாகங்களை மறக்கூடாது என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பன்னாட்டு அழுத்தங்கள் காரணமாகவும் தீங்கிழைக்கும் நோக்கத்துடான குற்றச்சாட்டுகள் காரணமாகவும் படையினர் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். போர்வெற்றி வீரர்கள் பெருமளவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டு மக்களை படுகொலை செய்து வாழ்வாதாரத்தை சிதைத்த பயங்கரவாதிகள் சுதந்திரமாக நடமாடும் அதேவேளை நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தங்கள் உயிரை பணயம் வைத்த வீரர்கள் சிறையில் வாடுகின்றனர்.

நாட்டுக்குச் சேவையாற்றிய போர் வீரர்களை எந்தக் காரணத்துக்காகவும் சிறையில் அடைக்கக் கூடாது என்பதே எனது நிலைப்பாடு - என்றார். (5)



# போரில் இறந்த பொதுமக்களும் நினைவு கூரப்பட வேண்டும்

## தலைமை அமைச்சர் ரணில்

கொழும்பு, மே 20

போரில் இறந்த பொதுமக்களும் நினைவு கூரப்படவேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கண்காட்சி ஒன்றை நேற்றுமுன்தினம் திறந்துவைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையர்களுக்கு இன்று முக்கியமான ஒரு நாள். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, அமைதியைக் கொண்டுவந்த நாள் இன்று நினைவு கூரப்படுகிறது.

பாதுகாப்புப் படையினரை இன்று நினைவு கூரும் அதேவேளை, ஆயுதப்போரில் உயிரிழந்த பொதுமக்களையும் நாம் நினைவு கூர வேண்டும் - என்றார். (5)








## எரிபொருள் விலை எகிறல்

கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி

# மற்றொரு 'வரப்புயர்வு'!

குலோத்துங்க சோழ மன்னனின் முடிசூட்டு விழாவுக்கு வருகை தந்திருந்த ஔவையார், மன்னனை வாழ்த்திப் பாடுவதற்காகப் பயன்படுத்திய பதம் நாம் அனைவரும் அறிந்ததே. அங்கே ஔவையார், வெறுமனே 'வரப்புயர' என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார். அங்கிருந்தோர் குழப்பமடைந்தனர். எனினும் பின்னர்ஔவையார், வரப்புயரஎன்றபதத்துக்குப் பின்னால் உள்ள நீட்சியைப் பற்றிப் பாடி மன்னனை வாழ்த்தியிருந்தார்.

*அவர் பாடியது இதுதான்:*
*வரப்புயரநீர் உயரும்*
*நீர் உயர நெல் உயரும்*
*நெல் உயரக் குடி உயரும்*
*குடி உயரக் கோல் உயரும்*
*கோல் உயரக் கோன் உயர்வான்*

வேளாண்மை நிலத்தின் வரப்பை உயர்த்தினால் வயலில் நீர் மட்டம் அதிகரிக்கும். நீர் அதிகரித்தால் நெல் விளைச்சல் அதிகரிக்கும். நெல் விளைச்சல் அதிகமாகும் பொழுது குடி மக்கள் வறுமையின்றிமகிழ்ச்சியாகஇருப்பார்கள்.குடி மக்கள் மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது, அரசு சிறப்பாக விளங்கும். அந்தச் சிறந்த அரசை ஆளும்மன்னனும்உயர்ந்துபோற்றுதற்குரியவனாக விளங்குவான். இதுதான் ஔவையார் பாடிய அந்தப் பாடலின் பொருள்.

எமது நாட்டில் வரப்புயர்வு ஏற்பட்டு நீர் உயர்வு அதிகரிக்கிறதோ இல்லையோ, அண்மையில் எரிபொருள் விலைதான் உயர்ந்திருக்கிறது. பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களுக்குக் கணிசமான விலை அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த எரிபொருள் விலை உயர்வால் ஏற்பட்டிருக்கும் மாற்றம், வரப்புயர்ந்து நீர் உயர்வதால் நிகழக்கூடிய மாற்றத்துக்கு முற்றிலும் மாறானது. நெல் உயர்வோ, குடி உயர்வோ அல்லது கோல் உயர்வோ இங்கே நடைபெற மாட்டாது. ஆனால் நீர் உயர்ந்து நெல் உயர்வதால் ஏற்படக்கூடிய நிகழ்வுத் தொடர்ச்சிக்கு நேர் எதிரான சம்பவங்கள் அண்மை நாள்களாகப் பதிவாகுவதை காணக்கிடைக்கிறது.

### இந்தியன் ஒயில் நிறுவனம் ஏற்படுத்திய அதிகரிப்பு!

உலகசந்தையில்எரிபொருள்விலையில்அதிகரிப்பு ஏற்பட்டதைக் காரணம் காட்டி, முதலில் இலங்கை இந்திய ஒயில் நிறுவனம் தனது பொருள்களுக்கு விலை அதிகரிப்புச் செய்திருந்தது. இது நடந்தது கடந்த மார்ச்சில். அதன்படி, 92ஒக்ரேன் வகை பெற்றோல் லீற்றருக்கு 9 ரூபாவாலும் டீசலின் விலை லீற்றருக்கு 5ரூபாவாலும்அதிகரிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2015ஆம்ஆண்டு ஜனவரியில் எரிபொருளின்விலைகள் உள்நாட்டில்சடுதியான இறக்கத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின் முதன் முறையாக இந்த விலை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறித்த இந்தியன் ஒயில் நிறுவனத்தின் அறிவிப்பின் படி, 2015ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து பெற்றோல் விற்பனை மூலமாகவும் 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் டீசல் விற்பனை மூலமாகவும்நட்டத்தையேஎதிர்கொண்டதாகஅறிவிக்கப்பட்டிருக்கிறது.



எரிபொருள்களின் விலைகள் அதிகரித்ததை அடுத்து பல பொருள்களின் விலைகள் மற்றும் சேவைக்கட்டணங்கள் அதிகரிக்கப்பதற்காக வரிசையில் நீற்க ஆரம்பித்திருக்கின்றன.

கடந்த மார்ச்சில் இந்த நிறுவனம் தனது எரிபொருள் விலைகளை அதிகரித்திருந்தபோதிலும் இலங்கை எரிபொருள் விற்பனை சந்தையில் முன்னிலை வகிக்கும் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் விலைகளை அதிகரித்திருக்கவில்லை. எனினும், அரச நிறுவனமான இலங்கைப் பெற்றோலியகூட்டுத்தாபனமும்நட்டத்துடனேயேஇயங்கி வந்தது.

### அண்மைய அதிகரிப்பு!

கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு முதல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் உள்நாட்டில் எரிபொருளுக்கான விலைகள் உயர்த்தப்பட்டிருந்தன. இதன்படி, 92 ஒக்ரேன் வகைப் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 117 ரூபாவிலிருந்து 137 ரூபாவாகவும், ஒக்ரேன் 95 வகைப் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 128 ரூபாவிலிருந்து 148 ரூபாவாகவும் ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 95 ரூபாவிலிருந்து 109 ரூபாவாகவும் ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 110 ரூபாவிலிருந்து 119 ரூபாவாகவும் அதிகரிப்புச் செய்யப்பட்டது. இதேவேளை ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை சடுதியாக 55 ரூபாவிலிருந்து 101 ரூபாவுக்கும் அதிகரிக்கப்பட்டது. மானிய அடிப்படையில் மண்ணெண்ணையைப் பெறுவோர் தொடர்ந்தும் லீற்றர் 44 ரூபாவுக்கேஅதைப்பெறுவதற்குஏற்பாடுகள்செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் 2014ஆம் ஆண்டளவில் மேற்படி எரிபொருள் வகைகளின் விலைகள் உள்நாட்டில் தற்போதைய பெறுமதியை விட அதிகமாகவே இருந்தன. ஒக்ரேன் 92வகை 150 ரூபாவாகவும், ஒக்ரேன் 95 வகை 158 ரூபாவாகவும், ஓட்டோ டீசலின் விலை 111 ரூபாவாகவும் சுப்பர் டீசலின் விலை 138 ரூபாவாகவும் காணப்பட்டது. மண்ணெண்ணெயின்விலைலீற்றர் ஒன்று 81ரூபாவாகக் காணப்பட்டது.




### அயல்நாடுகளிலும்பார்க்க இலங்கையில் குறைவே!

எரிபொருள்களின் விலைகளில் கணிசமான அளவு அதிகரிப்புஏற்படுத்தப்பட்டிருந்தாலும்பிராந்தியத்தில் உள்ளஏனையநாடுகளின்உள்நாட்டுவிலைகளுடன்ஒப்பிடுமிடத்து, இலங்கையர்குறைவான விலைக்கே தற்போதும் எரிபொருள்களை நுகர்கின்றனர். உதாரணமாக ஒக்ரேன் 92 ரக பெற்றோலை எடுத்துக்கொண்டால், லீற்றர் ஒன்றின் விலை இந்தியாவில் 169 ரூபாவாகவும், பங்களாதேசில் அது 159 ரூபாவாகவும், நேபாளத்தில் அது 149 ரூபாவாகவும் இருக்க, இலங்கையில் அதன் விலை 137 ரூபாவாகவே காணப்படுகிறது.

### ஐ.எம்.எவ். வரவேற்றிருக்கிறதாம்!

அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கும்உள்நாட்டுக்கானபுதியஅதிகரித்தஎரிபொருள் விலைகள் தொடர்பில், பன்னாட்டு நாணய நிதியம், திருப்தி தெரிவித்திருக்கிறதாம். இந்த நகர்வைப் பொரியதொரு முன்னேற்றமாகக்கருதியிருக்கும்ஐ.எம்.எவ்.இது இலங்கையின் நிதி அபாயங்களை குறைக்கும்எனஎதிர்வுகூறியிருப்பதுடன், இலங்கையின் பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கும் எனவும் குறிப்பிட்டிருக்கிறது.

### தொடரும் அதிகரிப்புக்கள்!

எரிபொருள்களின் விலைகள் அதிகரித்ததை அடுத்துபலபொருள்களின்விலைகள்மற்றும் சேவைக்கட்டணங்கள்அதிகரிக்கப்பதற்காக வரிசையில் நிற்க ஆரம்பித்திருக்கின்றன. பேரூந்துக் கட்டணம், முச்சக்கரவண்டிக் கட்டணம், பொருள்;களை ஏற்றி இறக்கும் மற்றும் போக்குவரத்துக் கூலிகள், உணவுப் பொருள்களின் விலைகள், மரக்கறிகளின் விலைகள் என்பன இதில் அடங்கும். இந்தப் பட்டியலில் அண்மையில் அதிகம் சிலாகிக்கப்பட்டி ருப்பது தனியார் பேரூந்துக் கட்டண உயர்வாகும். பேரூந்துக் கட்டண உயர்வுதொடர்பில்அமைச்சரவையில்ஆராயப்பட்டு 6.56சதவீதக் கட்டண அதிகரிப்பை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த சதவீத அதிகரிப்புத் தொடர்பில் திருப்தியடையாத தனியார் பேரூந்துச் சேவைத் தொழிற் சங்கங்கள், பணிநிறுத்தப் போராட்டத்தில் குதிப்பதற்கான அழைப்பை விடுத்திருந்தன. எனினும் பின்னர் நடத்திய பேச்சுக்களைஅடுத்துபணிநிறுத்தற்போராட்டம் கைவிடப்பட்டது. அத்துடன் அவர்கள் கோரிய அளவிலான பேரூந்துக்கட்டண அதிகரிப்புக்கும்இணங்கப்பட்டிருக்கிறது ஆமாம், 6.56வீத அதிகரிப்புக்குப் பதிலாக, 12.5 வீத அதிகரிப்புக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல் ஆகக் குறைந்த கட்டணத்தை அதே 10 ரூபாவிலே வைத்திருக்கவே முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போது அது 12 ரூபாவாக அதிகரிக்கப்பட இருக்கிறது. வயலின் வரப்பை உயர்த்துவதன் மூலம் நிகழக்கூடிய நேர்நிலை தொடர்ச்சிகள் பற்றி ஔவையார் பாடி வைத்திருக்க, எரிபொருளின் விலைஅதிகரிப்பால்எகிறக்கூடிய வாழ்க்கைச் செலவு பற்றிய எண்ண ஓட்டம் அண்மை நாள்களாக இலங்கையர் அனைவரையும் பாடாய்ப் படுத்தி வருகிறது. வெறுமனே ஓரிரு பொருள்கள் சேவைகளில் ஏற்படக்கூடிய கட்டண அதிகரிப்பு கருத்திலெடுக்கப்பட்டாலும், வரும்வாரங்களில்மேலும் பல தவிர்க்க முடியாத விலை அதிகரிப்புகளுக்குத் தலை கொடுக்க வேண்டிவரும்போலவும் இருக்கிறது...!

கட்டுரை

ப.குமுதன்

# சிங்களக் குடியேற்றங்களால்

# சின்னாபின்னமாகும் வவுனியா வடக்கு

வடமாகாணத்தின் வாசலாகவுள்ள வவுனியா மாவட்டம் தற்போதைய சனத்தொகை உள்ளடக்கத்தில் 83வீத தமிழர்களையும் 7வீத முஸ்லிம்களையும் 10வீத சிங்கள மக்களையும் கொண்டமைந்துள்ளது. ஆனால், போருக்குப் பிற்பட்ட காலத்தில் வவுனியாவின் குறித்த குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றச் செயற்பாடுகளை ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசுகளும் செவ்வனே செய்து வருகின்றன. போருக்குப் பின்னரான காலப்பகுதியில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான குடியேற்றங்கள் வவுனியா மாவட்டத்தின் எதிர்காலக் குடிப்பரம்பலைத் தீர்மானிக்கும் நிலைமையைத் தோற்றுவித்தன. அதைத் தொடரும் விதமான செயற்பாடுகளை 'நல்லாட்சி' அரசும் மேற்கொண்டு வருகின்றமை தமிழர்களைப் பொறுத்தவரை ஏமாற்றமே. வவுனியா நகரின் சில பகுதிகளில் 20 வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் கணிசமாக இருக்கும் நிலையில் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பரந்தளவிலான குடியேற்றங்களால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதியாக வவுனியா வடக்கையே முன்னிலைப்படுத்த முடியும்.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான குடியேற்றங்கள் வவுனியா மாவட்டத்தின் எதிர்காலக் குடிப்பரம்பலை தீர்மானிக்கும் நிலைமையைத் தோற்றுவித்தன. அதைத் தொடரும் விதமான செயற்பாடுகளை 'நல்லாட்சி' அரசும் மேற்கொண்டு வருகின்றமை தமிழர்களை பொறுத்தவரை ஏமாற்றமே.

### வவுனியா வடக்கும் குடியேற்றமும்

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வவுனியா வடக்கும் ஒன்று. அதன் மத்திய பிரதேசமாக நெடுங்கேணி நகர்ப் பகுதி அமைந்துள்ளது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த பகுதி போர் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியில் பல பௌதிக, சமூகரீதியான மாற்றங்களைச் சந்தித்த வண்ணம் இருக்கிறது. தமிழர்களின் பூர்விக நிலமான இந்தப் பிரதேசம் இன்று அதன் தனித்துவத்தை இழந்து நிற்கிறது. காரணம் சிங்களக் குடியேற்றங்கள்! வவுனியா வடக்கின், கிழக்குப் பகுதி, முல்லைத்தீவு, திருகோணமலை, அனுராதபுரம் போன்ற பகுதிகளோடு சங்கமிக்கும் அடர்ந்த பெருங்காடுகளைக் கொண்டமைந்துள்ளது. அதனால் அங்கு குடி யேற்றங்களும் மிக இலகுவாக நடைபெற்றுவிடுகிறது.

நெடுங்கேணி நகரிலிருந்து கிழக்குப் புறமாக 20கிலோமீற்றர் தூரத்தில் காணப்படுகின்ற அடர்ந்த வனாந்தரப்பகுதியில் பரவலாகக் குடியேற்றங்கள் செய்யப்பட்டும், செய்யப்படுவதற்குத் தயாராகிக் கொண்டும் இருக்கும் நிலைமையைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. மருதோடை கிராமத்திலிருந்து நீண்டு செல்கின்ற வீதியின் இரண்டு பக்கங்களும் வானளவு உயர்ந்த மரங்களை நிரப்பிய பெருங்காடுகளாக உள்ளன. மனிதர்கள் வசிப்பதற்கு உரிய நிலை அங்கு இரண்டாம் பட்சமாகவே காணப்படுகிறது. ஆனால் அந்தப் பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுச் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். 1983ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட மக்களும் அந்தப் பகுதியில் வசிப்பதுடன், மகாவலி 'எல்' வலயத்துக்குள் வருகின்ற 'நிகவெள, சபுமல்தன்ன போன்ற கிராமங்களில் 2014ஆம் ஆண்டளவில் 200குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. குறித்த கிராமத்தில் இருந்து வெலிஓயா பிரதேசம் 5கிலோமீற்றர் தொலைவில் காணப்படுகிறது. அங்கு குடியேற்றப்பட்ட மக்கள் அனுராதபுரத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள். அவர்கள் இங்கு குடியேற்றப்பட்ட பின்னர் வீடுகள் வழங்கப்பட்டு, வீதிகள் அமைக்கப்பட்டு, யானை வேலி அமைக்கப்பட்டு சிலவசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு பிரச்சினை என்னவென்றால் குறித்த கிராமம் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் வருகின்ற வெலிஓயா, அதை அண்மித்த பகுதியான சம்பத்நுவர போன்ற பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் வவுனியா வடக்கு பிரதேச சபை வாக்காளர்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்முறை தேர்தலிலும் அவர்கள் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கே தமது வாக்கை அளித்துள்ளனர். ஆனால் அவர்களுடைய பிரதேச செயலக பிரிவாக வெலிஓயா காணப்படுகிறது. அது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உரித்தானது. அத்துடன் அவர்களுக்கான வாக்காளர் அட்டை வவுனியா மாவட்டத்துடன் இணைக்கபட்டுள்ளதுடன் மின்சாரத் தேவைகளுக்காக அனுராதபுரம் நோக்கியும் செல்கின்றனர். இது நிர்வாக ரீதியாகப் பல பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது.

### கடந்த உள்ளூராட்சித் தேர்தலில்...

இந்த முறை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில், சிங்கள மக்கள் வசிக்கும் 17கிராமங்கள் இணைக்கப்பட்டு 4 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த 17கிராமங்களில் அதிகமாக வாக்குகளைக் கொண்ட சிங்களக் கிராமமான போகஸ்வெள உடன் தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்களான வெடி வைத்தகல், கோவில் புளியங்குளம், ஊஞ்சல்கட்டி போன்றவை இணைந்து ஒரு வட்டாரமாக உருவாக்கப்பட்டது. போகஸ்வெள கிராமத்தில் 350வாக்காளர்கள் இருப்பதுடன் குறித்த மூன்று தமிழ் கிராமங்களிலும் 175 வாக்காளர்களே இருக்கின்றன. இதனால் இந்த முறை நடைபெற்ற தேர்தலில் இந்த வட்டாரத்தில் சிங்களப் பிரதிநிதி ஒருவரே வெற்றி பெற்றுள்ளார். அவர் முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சவின் கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கிறார். அவர் தமிழ் கிராமங்களுக்குச் சேவை செய்வார் என்பதை எதிர்பார்க்க முடியுமா? அத்துடன் இந்தச் சிங்களக் கிராமத்துக்கும், தமிழ் கிராமத்துக்கும் இடைப்பட்ட பகுதி 10 கிலோமீற்றர்களுக்கும் அதிக நீளத்தில் பெருங் காடுகளைக் கொண்டமைந்திருக்கிறது. இந்த நிலையில் இந்தச் சபை இணைப்பு எவ்வாறு சாத்தியம் என்று எண்ணத் தோன்றுகிறது. போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடைய எல்லைக் கிராமங்கள் அபிவிருத்தியை எதிர்பார்த்து நிற்கையில் அது தொடர்பில் சிந்திக்காமலேயே குறித்த எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுடன், இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட காரியமாகவும் பார்க்கப்படுகிறது.

### அழிந்து வரும் தமிழர் கிராமங்கள்

போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட அழிவு, இடப்பெயர்வு, போருக்குப் பின்னர் முறையாக மேற்கொள்ளப்படாத, மீள் குடியேற்றச் செயற்பாடுகள் காரணமாக வவுனியா வடக்கில் உள்ள எல்லையோரக் கிராமங்கள் மக்கள் இல்லாமல் அழிந்துவரும் நிலையைச் சந்திக்கின்றன. அதிலும் குறிப்பாக வெடிவைத்த கல், கோவில் புளியங்குளம், ஊஞ்சல்கட்டி போன்றவை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்த வெடிவைத்த கல் கிராமத்தில் தற்போது ஒரேயொரு முதியவர் மட்டுமே வாழ்ந்து வருகிறார். அதுபோல கோவில்புளியங்குளம் பகுதியில் 6குடும்பங்கள் வாழ்கின்றன. இந்தப் பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகள் புதர் வளர்ந்து மாணவர்களின் வருகைக்காக ஏங்கி நிற்கின்றன. குளங்களும், வயல் நிலங்களும் அதிகம் காணப்பட்டாலும் அவற்றைப் பயன்படுத்த மக்கள் இல்லை என்பது பெரும் குறையாக உள்ளது. உலகமயமாதல் சூழலில் நகரத்தை நோக்கிய மனிதர்களின் பயணம் கிராமங்களைச் சோபையிழக்கச் செய்திருக்கிறது. ஆனால், மறுபுறம் சிங்கள மக்கள் இதற்கு எதிர்மாறாகச் சகல வசதிகளுடனும் குடியேற்றப்படும் சூழல் நிலவுகிறது. எது எப்படியோ போர்ச் சூழல் காரணமாகச் சோபையிழந்து நிற்கும் கிராமங்களும், மனிதர்கள் நடமாடாத வீதிகளும், பாழடைந்த வீடுகளும் போர் அழிவுகளையும் மக்களின் முன்னைய இருப்பையும் தாங்கி நிற்கின்றன. தமிழ்த் தலைவர்கள் இதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கு இலகுவாக அமைந்து விடுகிறது.



### மகாவலித் திட்டம்

மகாவலித் திட்டத்தின் மூலமே குறித்த சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொரகாகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து மகாவலி நீரை வவுனியா சேம மடுக்குளத்துக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் ஆறாயிரம் சிங்களக் குடும்பங்களை மகாவலித் திட்டத்தின் மூலம் வெலிஓயா, சம்பத்நுவரவை அண்மித்த பகுதிகளில் குடியேற்றுவது என்றும், சம்பத்நுவர பிரதேசத்தை முல்லைத்தீவு போல நகர் சார்ந்த பிரதேசமாக மாற்றி அமைப்பதுடன், நெடுங்கேணிப் பகுதி அதன் மத்தியாக இருக்கும் என்றும் மகாவலி அதிகார சபையின் 'எல்' வலயத்துக்கான திட்ட வரைபடத்தில் காட்டப்படுகிறது. இது தொடர்பாக வவுனியாவைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் பபலதடவைகள் சுட்டிக் காட்டி உள்ளார்கள். வடபகுதிக்கு மகாவலி நீர் வர வேண்டிய தேவை கட்டாயம் இருக்கின்றது. ஆனால் நீர் வந்து சேருவதற்கு முன்னர் சிங்களக் குடியேற்றங்கள் வந்துவிட்டது தான் அதிசயமாகப் பார்க்கப்படுகிறது.

குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படும் பொழுது அந்தந்த மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு அல்லது மாகாணத்தில் உள்ள மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். 13ஆம்திருத்தச் சட்டத்திலும் அது தொடர்பாக தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இங்குள்ள மக்களுக்குக் காணிகள் தேவைப்படும் நிலையில் அதைக் கருத்தில் கொள்ளாது வெளி மாகாணங்களைச் சேர்ந்த மக்களைக் குடியேற்றுவதானது அரசினுடைய பேரினவாத மனோபாவத்தையே வெளிக்காட்டி நிற்கிறது. நிலங்களை அபகரித்து விட்டால் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை நசுக்கி விடலாம் என்ற கபட நோக்கத்தையும் இது கொண்டிருக்கலாம். இதற்கெதிராக மக்களும், மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் குரல்கொடுக்காமல் விட்டால், எதிர்காலத்தில் வடக்குமாகாணத்துக்குள் சிங்கள மாவட்டம் ஒன்று இணைந்து கொள்ளும் நிலைமை தவிர்க்கமுடியாது போகும்.



# VISHNU INTERNATIONAL TRADING

சகல விதமான கால்நடை
தீவனங்கள் மற்றும்
தரமான கோழிக் குஞ்சுகள் போன்றவற்றை



மலிவான விலையில் பெற்றுக்கொள்வதுடன் உங்கள் இருப்பிடங்களிற்கும்
கொண்டு வந்து தரப்படும்.



குஞ்சுமாஸ், வளர்ப்புமாஸ். முட்டைமாஸ். பொய்லர்ஸ்ரட்டர், பொய்லர் பினிஸ்சர், மாட்டுமாஸ்,
மைசூர் கோது போன்றவற்றை தரமானதாகவும்
மலிவான விலையிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு - சாவகச்சேரி 078 656 0030, வவுனியா - 076 301 7154


## ஈர விழிகளுடன்

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 30 . 01 . 1931



விண்ணில் 25 . 05 . 2004

## அமரர் கனகம்மா ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி - சஷ்டி (20.06.2018)


ஆண்டுகள் 14 சென்றபோதும் அம்மா!
ஆறாத துயர் என்றென்றும் மாறாது அம்மா!
அன்பாய் அரவணைத்து ஆரமுதூட்டிய அம்மா!
எமக்கெல்லாம் ஆதரவளித்த எங்கள் அன்பு அம்மாவே!
14 ஆண்டுகளாக ஈடற்ற உங்கள் இழப்பை அம்மா!
ஈடுகட்ட முடியாமல் கண்ணீர் சிந்தி கலங்குகின்றோம் அம்மா!
எம் உயிர் உள்ளவரை அழியாச [illegible]ள் நினைவுகள் அம்மா!
இவ்வுலகில் இருந்து எங்களை காத்ததுபோல அம்மா!
விண்ணுலகிலிருந்தும் எங்களை காத்திடுவீர்கள் அம்மா!

ஜெயபதி தாமோதரம் வீதி,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும் :
ஜெயபதி குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 04 . 1952



இறப்பு 17 . 05 . 2018

## இராமையாப்பிள்ளை ஜெயராசா

(ஜெயம் - தவில் வித்துவான்)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செட்டியார் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமையாப்பிள்ளை ஜெயராசா (ஜெயம் - தவில் வித்துவான்) அகாலமரணம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமையாப்பிள்ளை - நம்புலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசாமி - சாந்தநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் கருணாநிதியின் பாசமிகு கணவரும் மகிந்தன், சர்மிளா, சயந்தன், கஜந்தன், பவித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரியதர்சினி, சாருகேசவன். சிவறஞ்சினி, அபிரா, அனந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் காருண்யன், அக்ஷயா, கிருத்திகன், நர்த்தகி, கபினாஸ், தர்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்திரைச் சந்தி,
செட்டியார் தோட்டம், நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
077 946 0302

# மன்னார் ஆயர் இம்மனுவல் ஆண்டகையை 70ஆவது அகவையில் வாழ்த்துவோம் நாம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை 70ஆவது அகவையில் கால் பதிக்கும் இன்றைய நாளில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அ.விக்ரர் சோசை அடிகளார், மன்னார் கத்தோலிக்க ஒன்றிய தலைவர் சட்டத்தரணி புனிதநாயகம் மடு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.செ.சு. செபஸ்ரியன், மன்னார் நகர சபை முதல்வர் திரு ஞா. டேவிட்சன் (ஜெறாட்) ரீ.சி.என். எல் செய்திச்சேவை மன்னார் மறைமாவட்ட இணைப்பாளர் மாந்தை மாதா ஆலய பங்குத்தந்தை சீமான் மரியதாசன் அடிகளார் ஆகியோரின் வாழ்த்து செய்திகள் இங்கு தரப்படுகின்றன.

**யாழ். ஆயரின் வாழ்த்துச் செய்தி**

மன்னார் ஆயர் கலாநிதி இம்மனுல் பெர்னான்டோ ஆண்டகையின் 70ஆவது பிறந்த தினத்தில் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை மன மகிழ்வோடு எமை பெயராலும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் பணிபுரியும் குருக்கள் துறவிகள் இறைமக்கள் பெயராலும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மன்னார் மறைமாவட்டத்தின் 3ஆவது ஆயராக 45 ஆண்டுகளாக கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் குருவாகப் பணியாற்றிய அனுபவத்துடன் குறிப்பாக கண்டி தேசிய குருமட அதிபர் பணி மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பணி அனுபவங்களுடன் தாங்கள் ஆற்றும் பணி மிகவும் சிறப்பானது. மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் குருதியில் தோய்ந்து விசுவாசத்தில் புடமிடப்பட்ட மறைமாவட்டம். மருதமடு அன்னையின் பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தை தாங்கள் மிகவும் சிறப்பாகவே வழிநடத்துகிறீர்கள். குருக்களுடனும் இறைமக்களுடனும் தாங்கள் நேரமெடுத்து அவசரமின்றி அன்பாகவும் கனிவாகவும் அவரவர் நிலை அறிந்து பேசுவதும் அவர்கள் பேசுவதை உன்னிப்பாக கேட்பதும் எல்லோராலும் பெரிதும் பாரட்டப்படுகிறது. தங்கள் பணி சிறக்க இறையாசீர் வேண்டி நீடுழி வாழ்க என வாழ்த்துகிறோம்.

**மன்னார் குருமுதல்வரின் வாழ்த்து செய்தி**

மன்னார் ஆயர் கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகையின் 70ஆவது அகவையை முன்னிட்டு வாழ்த்துக்களை ம்ன்னார் மறைமாவட்டத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எமது மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக நீங்கள் பொறுப்பெடுத்து இறைவிசுவாசத்தில் எம்மை மேய்ப்பனுக்குரிய பண்புகளோடு வழிநடத்தி வருவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மிகவும் குறுகிய மாதங்களுக்குள் மறைமாவட்டத்தின் பல்வேறு ஆலயங்களை தரிசித்து மக்களின் குறை நிறைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய எடுத்துவரும் முயற்சியைக்கண்டு நாம் பெருமைப்படுகின்றோம். நீண்ட கால போர் வரலாற்றைக்கொண்ட இந்த மக்கள் படும் துயரை நீக்கி அவர்கள் வாழ்வு ஒளிமயமானதாக மிளிர தொடர்ந்தும் உங்கள் மேய்ப்புப்பணி கரிசனை பேருதவியாக அமையும். எமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் சகல குருக்களையும் தனிப்பட்ட ரீதியிலும் குழுமமாகவும் சந்தித்துள்ளீர்கள். இது உங்கள் ஆயத்துவப்பணியின் மேலான கரிசனையை சுட்டிக்காட்டுகின்றது. மேலும் குருக்கள் தங்கள் தேவைகளின் ஆயர் பெருந்தகையின் தந்தைக்குரிய பரிவுகண்டு மகிழ்ச்சி அடைவதும் உங்கள் பண்பின் உயர் தன்மையை சுட்டிக்காட்டுகின்றது. மீண்டும் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்துக் குருக்கள் துறவிகள் பொதுநிலையினர் சார்பாக பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத் தலைவரின் வாழ்த்துக்கள்**

மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்ற இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஆயர் இம்மனுவல் பெர்ணான்டோ ஆண்டகை 70ஆவது அகவையை எட்டுவதையிட்டு மன்னார் கத்தோலிக்க ஒன்றியம் சார்பில் பிறந்ததின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். அறிவும் அதேவேளை அடக்கமும் கொண்ட ஆயர், பண்பும் பாசமும் மிக்கவர். எப்போதும் சாந்தமான முகத்திலே புன்முறுவல் தவழ்ந்தபடி இருக்கும். நாடிச் செல்பவர்களை நேரம் செலவழித்து பொறுமையோடு உரையாடுவார். செவிமடுத்து புரிந்து கொண்டு உரையாடுவது இவருக்கே உரிய சிறப்பான இயல்பு. இத்தகைய உயர் ஆளுமை கொண்ட எமது ஆயர் தமது அனுபவத்திலும் அறிவின் முதிர்ச்சியிலும் மன்னார் மறைமாவட்டத்தை சிறப்புற வழிநடத்துவார் என்பது எமது நம்பிக்கை. எமது விசுவாசத்தை காக்க குருதி சிந்திய வேதசாட்சிகளின் பரிந்துரையும் மடுத்தாயின் விண்ணகக் காவலும் இவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் தூயஆவியின் ஞானத்தையும் நிறைவாக பெற்றுக்கொடுக்க வேண்டுமென இந்த இனிய நாளில் வாழ்த்தி நிற்கிறேன். மீண்டும் மன்னார் கத்தோலிக்க ஒன்றியம் சார்பில் பிறந்ததின வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

**மடு வலயக்கல்விப் பணிப்பாளரின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்திகள்**

மன்னார் மறைமாவட்டத்தின் கத்தோலிக்க மக்களின் வழிகாட்டியாக அருட்பணியை மிக உன்னதமான முறையில் ஆற்றும் எமது மதிப்புக்குரிய ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகையின் 70ஆவது அகவையை மகிழ்வுடன் வரவேற்பதில் மடு வலய கல்வி சமூகம் பெரும் உவகை கொள்கின்றது. நல்ல மேய்ப்பன் தன் மந்தையை சிறப்பாக வழிநடத்துவான் என்ற இறைவனின் கூற்றுக்கமைய எம் மண்ணில் காலடிவைத்த குறுகிய காலப்பகுதியினுள் எம் பிரதேசம் அனைத்திலுமுள்ள மக்களின் வாழ்வியலை அறிந்து சேவையை சிறப்புடன் ஆற்றுகின்ற அதிவந்தனைக்குரிய எம் ஆயர் என்றும் பல ஆண்டுகள் இறை ஆசியுடன் வாழ்ந்திட வேண்டும் என்று இந்தப் பெருநிலப் பரப்பின் மக்கள் சார்பாக வாழ்த்துக்கூறி நிற்கின்றோம். இலங்கையிலேயே மன்னார் மறைமாட்டமானது வேதசாட்சிகளின் பூமியாக அடையாளப்படுத்தப்பட்டு இன்று வரை கத்தோலிக்க மறையின் மீது பற்றுறுதியுடன் பயணிக்கின்ற ஒரு மாவட்டமாகத் திகழ்கின்றது. குருக்கள் துறவிகள் மற்றும் கன்னியர்கள்; ஆகியோரின் அளப்பெரிய கல்விப்பணியும் சமூகப்பணியும் என்றும் எம் மன்னாரின் மனிதத்துவத்தை காத்துநிற்கின்றது என்பது நாம் அறிந்த உண்மை. இந்தக் காலகட்டத்தில் மன்னார் மாவட்டத்தின் ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை உடல் நலத்துடன் இன்னும் நீண்ட காலம் வாழவும் மேலும் எமக்கு இறைவனின் தூதராக சேவையாற்றி கல்வியிலும் ஒழுக்கத்திலும் நாங்கள்பலவளர்ச்சியைகாணஉறுதுணையாகஇருக்கஅவரை இறைவன் வழிநடத்த வேண்டுமென்று இறை ஆசியை வேண்டி நிற்பதில் நாங்கள் பெருமை கொள்கின்றோம்.

**மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி**




கால தேவனின் சுழல் சக்கரத்தின் மாற்றம் மன்னார் மறைமாவட்டத் திருச்சபையை முடக்கிவிட முனைந்த போதிலும் சர்வவியாபகச் சரித்திர வேர்கள் ஆழப்பதிந்திருந்ததால் தங்கள் வருகையினால் இன்று நிமிர்ந்து துளிர்விட்டு வீறு நடை போடுகின்றது. 70 ஆண்டுகள் இறைவிசுவாசத்தில் தங்கள் வாழ்வைக் கட்டியெழுப்பி அன்பிலும் பரித்தியாகத்திலும் எங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் எங்கள் ஆயர் தந்தை அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக் கூறுவதில் மன்னார் வலயக் கல்விச் சமூகம் மகிழ்வுறுகின்றது. நல்ல மரத்துக்கு நடுவைரம் எவ்வளவு முக்கியமோ எவ்வளவு பெறுமதியோ அது போல மாவட்டத்தின் வளர்ச்சிக்கு கல்வி நடு வைரமாகத் திகழ்கின்றது. மன்னாரில் கல்வி நல்ல சமூகத்தை உருவாக்கியிருக்கின்றது. நல்ல விளைவை காலா காலமாகத் தந்திருக்கின்றது நல்ல விழுமியங்களைத் தந்திருக்கின்றது. குறிப்பாக கடந்த வருடங்களில் உயர்தரத்தில் நாங்கள் பெற்றுக்கொண்ட அதியுயர் சிறப்பு பெறுபேறுகளின் மகிழ்வில் தாங்களும் கலந்து கொண்டு தங்கள் முன்னைநாள் அதிபர் பதவியில் அனுபவங்களைப் பகிர்ந்துள்ளீர்கள். நித்திலத்தின் முத்தாக நிமிர்ந்து நிற்கும் ஆயர் தந்தையே உலகை நாளை ஆளப்போகும் மாணவச் செல்வங்களுக்கு உபதேசம் வழங்கும் நாயகனே உம் போதனைகள் எம் வாழ்வில் புதுப் பொலிவை தோற்றுவித்துள்ளது. உம் கனிவான பார்வையினால் எம்மவர்க்கு ஒளி பிறந்துள்ளது. அகவை எழுபதிலும் வாயார நல்வார்த்தைக்கும் தன்னம்பிக்கைக்கும் தளராத முயற்சிக்கும் முன்னுதாரணமாகத் திகழும் தங்களுக்கு கல்விக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் கற்றூண்களாம் அதிபர் ஆசிரியர் சமூகத்தினர் பிறந்த நாள் வாழ்த்துக் கூறி நிற்கின்றோம்.

**மன்னார் நகரசபை முதல்வரின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி**

சேற்றைத் தாண்டி செந்தாமரை மலரும் நூற்குதல் தொல்லைகளால் துவளாது எழுந்து நேற்றைய பொழுதிலும் இன்றைய வரவிலும் உம் அருட்பணியாளர்களுடன் இரண்டறக்கலந்து அவர்தம் சுக துக்கங்களை



உம்முடையதாக்கி நல்வழிப்படுத்தி நலம்பல அடைய வழி சமைத்த உம்பணி சிறக்க வாழ்த்துகின்றோம் பல்லாண்டு வாழ்கவென்று! 70 ஆண்டுகள் வரை உம்மை தம் கரத்திலே ஏந்தி பராமரித்து போசித்து ஆசிரளித்த எமது இறைமகன் தொடர்ந்தும் உம்மோடு இருந்து வலுவும் சுகமும் இறை பராமரிப்பும் மனத்திடமும் நிறைவாக பொழிய வரம் வேண்டி வாழ்த்துகின்றோம்!

**ரீ.சி.என்.எல் செய்திச்சேவை மன்னார் மறைமாவட்ட இணைப்பாளர் சீமான் மரியதாசன் அடிகளாரின் வாழ்த்து**

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகை அன்பு, பரிவு, இரக்கம், புரிந்துணர்வு போன்ற நற்பண்புகள் நிறைந்த ஒருவர். அவரின் சிறந்த நற்பண்புகள் பலவற்றில் அவர் எல்லோரையும் அரவணைத்து அன்பாக உரையாடி அவர்களின் குறைகளையும் நிறைகளையும் கேட்டு புரிந்துணர்வோடு பதில் தரும் பாங்கே பலரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது. மன்னார் மறைமாவட்டம் அவரின் ஆளுமையில் மிக சிறப்பாக வளரும். குருதி சிந்தி பாதுகாத்த விசுவாசத்திற்கு என்றும் சாட்சியாக திகழும். மடுத்தாயின் பாரமரிப்பில் ஆயர் அவர்களின் வழிகாட்டலில் தொடர்ந்து மன்னார் மறைமாவட்டம் வளர ஆயர் அவர்களின் பிறந்த தினத்தில் வாழ்த்தி நிற்கிறேன்.

**நாங்களும் வாழ்த்துவோம்**

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னாண்டோ ஆண்டகைக்கு இறையாசீர் நிறையவே கிடைக்க உதயன் பத்திரிகையின் கிறீஸ்தவ ஞாயிறு பகுதி வாசக அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாரட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

## Vacancy for Draughtsman

- Able to draw plan views, Sections & Structural Detailing
- Minimum 1 or 2 years' experience in relevant field
- Female employees are mostly desirable

**Spiritmax Engineering (Pvt)Ltd**
**No - 03, 2nd Lane, Palaly Road, Jaffna.**
Email: info@spiritmax.lk Contact: 077 3784474, 021 2214142

## இப்பொழுது....

உங்கள் வாகனத்தின் **நடமாட்டத்தை** எளிதாக தொலைபேசி மூலம் அவதானியுங்கள் (சென்றதூரம், பாதை, வேகம், இன்னும் பல...)

**வாகனத்தில் ஏற்றி, இறக்கப்படும் பொருள்கள், சாரதி, உதவியாளரின்** செயற்பாடுகளை எளிதாக தொலை பேசி மூலம் அவதானியுங்கள்.
(இன்னும் பல வசதிகள் உண்டு.

**077 888 7051**

cs.16765) (13,17)

## வேலைவாய்ப்பு
## Wasana Environment Service S.L.L.S

சர்வதேச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்தின்
புதிய சாவகச்சேரிக் கிளைக்கு Office Staff, Field Officer தேவை.
**வயதெல்லை 18 தொடக்கம் 30 வரை.**
**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**
**சம்பளம் - 20,000 - 30,000 வரைபெறலாம்**
**நேர்முகத் தெரிவின்பின் இணைக்கப்படுவீர்கள்.**

**071 425 7977, 077 030 8749**

## SpiritMAX Engineering (Pvt) Ltd

Turning your vision into values

அனைத்து விதமான கட்டட நிர்மாண வேலைகள் மற்றும் கட்டட ஆலோசனைகள்
(All Kinds of Civil Engineering Consultancy and Construction Services)

- Architectural Design
- Geo Technical Investigations
- Structural Design
- MEP Design
- Drafting
- Interior Design
- Cost Estimation
- Supervision
- Construction & Renovation

No. 03,2nd Lane,Palaly Road, Jaffna.
Tel : 021 221 4142, 077 3784474, 077 3989791
e.mail : info@spiritmax.lk


## மரண அறிவித்தல்

### திருமதி சோதிப்பிள்ளை சின்னையா



யாழ்ப்பாணம், சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை சின்னையா 18.05.2018 வெள்ளிக்கிழமை 91 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், மட்டுவில் தெற்கு காலஞ்சென்ற வயிரவப்பிள்ளை சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சின்னத்தம்பி, சின்னத்துரை, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியராணி, தங்கரூபன் (நாதன் - முன்னாள் CTB சாரதி), சற்குணநாதன் (லண்டன்), பாக்கியநிதி, பாக்கியலிங்கம் (தலைமை மேற்பார்வையாளர், போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற பாக்கியமலர் மற்றும் நகுலேந்திரன் (நீர்விநியோகப் பகுதி, யாழ்.போதனா வைத்தியசாலை), இராசயோகம் (சாரதி, பிராந்திய சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், குணபாலசிங்கம் மற்றும் தயாநிதி, புஸ்பலதா, கருணேஷ்வரி, ரேவதி, நிர்மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுபாகரன், கிரிகரன் மற்றும் சுபாங்கனி, புஷ்பாகரன் (NICU போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சுவேதா, சுபைதா (பவானி - லண்டன்), சிறிமயூரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிறீகோகிலன் மற்றும் சிறிடினேஸ்காந்தன் (சிங்கப்பூர்), கஜீபன் (உறுப்பினர் - முரசு மோட்டை பிரதேசசபை), கஜானன், கஜலக்ஷன் (பிரான்ஸ்), கஜீபன், புருசோத்மன், அகீபன், துஷாகினி, அகிசாத், அனுசாத், இராஜலக்ஷன், நிசங்கர், சுபிராஜ், இரத்தினவேல், அருள்ராஜி, சதானந்தன், நாகேஸ்வரன் ஆகியோரின் பேர்த்தியும், டானியல்ராஜ், ருத்காருண்யா, யோசேப் டினோஜன், இவாஞ்சலீன், அக்ஷன், அபினதாப், இசைப்பிரியா, இசைவிழி, இசைநிலா ஜோயிசி, ஜோசி, ஜோஜ், ஜோகனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நேரியதூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/ 16770) (11,17)

**மட்டுவில்தெற்கு,சாவகச்சேரி. தகவல்: குடும்பத்தினர்.**

**077 833 3413, 077 673 8681, 077 844 7797**


## வேலை வாய்ப்பு

### பொருள்களை விநியோகிக்கும் களஞ்சியம்

- ★ களஞ்சியக் காப்பாளர் மற்றும் முகாமைத்துவ வேலைக்கு கல்வித்தகைமை - A/L, கணினி அறிவு
- ★ சாரதி AD வயதெல்லை 40 வயதிற்கு மேற்பட்டவர்
- ★ பொருள்களை வாகனத்தில் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு உதவியாளர்

**தொடர்புகளுக்கு - 071 861 7918**
**காலை 9.00 மணி முதல் மாலை 5.00 வரை**


## மரண அறிவித்தல்கள்



### வல்லிபுரம் வன்னியசிங்கம்

அம்மன் கோயிலடி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வன்னியசிங்கம் கடந்த (17.05.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**VTS லேன்,**
**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**021 223 1737**

### கோபாலபிள்ளை குகன்

*(யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவன், முகாமைத்துவ உதவியாளர் - பிரதி பிரதம செயலாளர் அலுவலகம், நிர்வாகம், வடமாகாணம்.)*



வேலணை மேற்கு 8, ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 42, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கோபாலபிள்ளை குகன் கடந்த (18.05.2018) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கோபாலபிள்ளை - பகீரதி தம்பதியரின் அன்பு மகனும் சியாமளா (ஆசிரியை - யா/ வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்), மஞ்சுளா (ஆசிரியை - யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), காலஞ்சென்ற சுபாஸ்கரன் மற்றும் சுபாஜினி (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜனார்த்தனன் (Union cool ware house - கொழும்பு), ரவிச்சந்திரன் (Abiga Traders - காலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் லினுசங்கரன், தனுசங்கரன், சஜீவன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னப்பிள்ளை, கந்தையா(அவிசினி)-இராசம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற டிக்கோயா வர்த்தகர் கந்தையா மற்றும் அன்னபூரணி, நாவேந்தன், விஜயலட்சுமி (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மருமகனும் சதாசிவம், சாரதாம்பாள், காலஞ்சென்ற வடிவாம்பிகை ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு வேலணை மேற்கு, அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**42, இந்துமகளிர் ஒழுங்கை,**
**கந்தர்மடம்.**
**077 271 8966,**
**077 968 8 264, 077 376 7806**

**தகவல் : குடும்பத்தினர்.**

## தமிழர்களின்...

எதிர்பார்த்த விடயங்கள் நடைபெறுமா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

புளியங்குளத்தில் இன்று நடைபெற்ற மாதிரி வீட்டுத் திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதில் எமக்கும் பெரும் பங்கு இருக்கிறது. அந்த மாற்றம் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வைப் பெற்று தரும் என்று நினைத்திருந்தோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 3 வருடங்கள் கடந்திருக்கின்றன. தேசிய அரசுக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பார்க்கும்போது நாங்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் நடைபெறுமா? என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்னும் 2 வருடங்களே இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்குள் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதுடன், போரால் பாதிக்கப்பட்ட எமது பகுதிக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதுடன் எமது மாகாணத்துக்கு அதிகமான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (4.110)

## புதுக்குடியிருப்பில்...

பிறபகல் 3.30 தொடக்கம் 6 மணிவரை புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, முள்ளியவளை போன்ற பகுதிகளில் கடும் காற்றுடன் மழை பெய்தது. இடையிடை மின்னல்கள் பதிவாகின. பல இடங்களில் மின்னல் தாக்கியுள்ளது. அதனால் பலரது வீட்டில் உள்ள இலத்திரனியல் பொருள்கள் பழுதடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கைவேலிப் பகுதியில் இரண்டு தற்காலிக வீடுகள் சேதமடைந்துள்ளன. பயன்தரு மரங்களும் முறிந்துள்ளன. மருதங்குளம் சுரேஸ் வீட்டுத்திட்ட பகுதியிலும் இரண்டு தற்காலிக வீடுகள் காற்றால் தூக்கிவீசப்பட்டுள்ன. ஐம்பதிற்கு மேற்பட்ட வாழைமரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

மக்களின் வீடுகள் பாதிப்புக் குறித்து கைவேலி கிராம அலுவலர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் திங்கட் கிழமை தறப்பாள்கள் வழங்க ஏற்பாடு செய்து தருவதாகக்கூறி பாதிக்கப்பட்ட விவரங்களை எடுத்துவிட்டு சென்றுள்ளார் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (4,8,ரி3,219)


## வீடு வாடகைக்குண்டு

யாழ் இந்துக்கல்லூரி அருகில் வீட்டின் மேற்பகுதி வாடகைக்கு உண்டு.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

**077 990 6867**

(CS 16775) (14,17)

## Technical Officer / Computer Operators தேவை.

கட்டட நிர்மாணத்துறை, சுன்னாகத்தில் அமைந்துள்ள ஸ்தாபனத்திற்கு Trainees உடன் தேவை. பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருப்போர் விரும்பத்தக்கது. (CS 16786/15/17) **- 0773 444 801**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 இல் பிறந்த கொழும்பில் சொந்த தொழில்புரியும் மண மகனுக்கு அழகிய மணமகளை யாதகம் பார்த்து அல்லது மனப்பொருத்தத்துடன் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு - 075 918 3810, 077 193 4340**

(CS 16780/15/17)

## வேலையாள்கள் தேவை

பிரபல்ய உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் (ஆண்/பெண்), அப்பம் செய்பவர் உடன் தேவை.

**முகாமையாளர் - 077 552 9904, 021 225 6996**
**இடம் - சண்டிலிப்பாய்.**

(CS 16779/15/17)

## சமையல் ஆள்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை செய்ய அனுபவம் மிக்க ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்பு - 076 577 8980**

(CS 16784/15/17)

## விற்பனைக்கு

பொற்பதி வீதி, கோண்டாவிலில் 02 பரப்பு வெறும் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 773 0567**

(CS 16777/15/17)

## போர்க்...

நிகழ்வு பத்தரமுல்ல இராணுவ நினைவுத் தூபிக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முப்படையினரை நாங்கள் மதிக்கின்றோம். அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவை உன்னதமானது.
படையினர் மீது சுமத்தப்படும் விமர்சனங்களை ஏற்க முடியாது. அவர்கள் எந்தவொரு போர்க்குற்றங்களிலும் ஈடுபடவில்லை. கடல் கடந்து வாழும் புலி அடிப்படைவாதிகள் இவ்வாறு சொல்கின்றனர். அவற்றை நான் நிராகரிக்கிறேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழக் கனவு ஒருபோதும் நிறைவேறாது. நாட்டில் 30 ஆண்டுகள் நீடித்த போர் இராணுவத்தினராலேயே முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இராணுவத்தினரை நினைவு கூர்வது பொதுமக்கள் எல்லோரினதும் கடமை.
சில ஊடகங்களும் இனவாத அமைப்புக்களும் தவறாக குறிப்பிடுவதைப் போன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகளிலும் எமது பாதுகாப்பு படையினர் மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்படவில்லை. வெளிநாடுகளில் வசிக்கும், அரசுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் எதிரானதான எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்குச் சார்பானவர்களே இத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

**அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ளவில்லை**

இராணுவத்தினரையும் தீவிரவாதிகளையும் சிலர் சரியாக இனங்கண்டு கொள்ளாமை கவலைக்குரிய விடயம். சில அரசியல்வாதிகளுக்கும் பணத்தை மட்டுமே நோக்காகக் கொண்ட சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும்கூட இன்று இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான வேறுபாட்டை சரிவரப் புரிந்து கொள்ள முடியாதுள்ளது.
எமது சிந்தனைகள், தேசத்தின் அடையாளங்கள், மரபுரிமைகள், பண்பாடு என்பவற்றுடன் நாட்டினதும் மக்களினதும் இராணுவத்தினரதும் கௌரவத்தைப் பேணும் வகையில் சகலரும் செயற்பட வேண்டும்.
தாய் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த வீரம்மிக்க இராணுவத்தினருக்கு எப்போதுமே தேசத்தின் மரியாதை உரித்தானது.
இராணுவத்தினருக்கு வழங்கக்கூடிய உயரிய கௌரவத்தையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலன்புரி தேவைகளையும் நிறைவேற்றவும் அரசு தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படும்.

**ஊடகங்கள் கவனிக்கவில்லையாம்**

சில அரச ஊடகங்களும் இன்று இராணுவத்தினரை கௌரவிக்க மறந்து போயுள்ளன. சில தனியார் ஊடக நிறுவனங்களும் இராணுவத்தினரின் நன்மைக்காக மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள் தொடர்பாக கருத்துக்களை வெளியிடாமை கவலைக்குரியது. உயிர்த்தியாகம் செய்து தாய் நாட்டுக்காக இராணுவத்தினர் செய்த அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து அவர்களுக்கு கௌரவத்தை வழங்க வேண்டியது சகலரதும் பொறுப்பு.

**இராணுவத்தினரே கைப்பொம்மையாகாதீர்**

இராணுவத்தினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகச் செயற்படக்கூடாது. அரசியல்வாதிகள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவோ அதிகாரத்தை பெற்றுள்ள அரசைக் கவிழ்ப்பதற்கோ அல்லது அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கவோ இராணுவத்தினரை உபயோகிக்கக்கூடாது. மிலேச்சத்தனமான தீவிரவாதப் போர் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த எண்ணங்கள் இன்னும் முற்றாக இல்லாதொழிக்கப்படவில்லை. நாட்டுக்கு வெளியே இன்றும் தனியான ஈழ நாடு பற்றிய கனவைக் கொண்டுள்ள இனவாதிகள் காணப்படுகின்றனர். அவர்களது அந்தக் கனவு நிறைவேற ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.
மூன்றரை வருட காலத்தினுள் அரசு தனது நட்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் நாட்டைப் பிளவுபடுத்தும் எண்ணங்களை தோற்கடிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. தொடர்ந்தும் அவ்வாறே செயற்படும் - என்றார். இராணுவ நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்திய அரச தலைவர், தாய் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த சகல இராணுவத்தினருக்கும் மரியாதை செலுத்தினார். (4,5)

## பெற்றோலின்...

சேர்ந்த மாரிமுத்து பாஸ்கரன் (வயது - 52) என்பவரே உயிரிழந்தார்.
கடந்த 14 ஆம் திகதி பெற்றோல் வாங்கி வந்து வீட்டுக்கு வெளியே வைத்துள்ளார். அன்றிரவு பீடி புகைக்க தீக்குச்சி மூலமாக பற்றி வைத்தார். பின்னர் தீக்குச்சியை வீசியபோது அது பெற்றோல் போத்தலுக்கு அருகில் வீழ்ந்து பற்றியுள்ளது. காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4)

## டிப்பர்...

வளை நெடுங்கேணி வீதியில் நேற்றுமுன்தினமிரவு சம்பவம் இடம்பெற்றது. வவுனியா கல்மடு பகுதியைச் சேர்ந்த விவேகானந்தராசா றொபின்சன் (வயது 28) என்பவரே உயிரிழந்தார். முல்லைத்தீவு கூழாமுறிப்பைச் சேர்ந்த செல்வக்குமார் தர்சன் (வயது - 24) என்ற இளைஞன் சிகிச்சை பெற்றுவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.
டிப்பர் முள்ளியவளையிலிருந்து வவுனியா நோக்கி மண் ஏற்றிச் சென்றுகொண்டிருந்தபோது, களிக்காட்டுப்பகுதியில் வீதியின் குறுக்கே நின்ற மாட்டுடன் மோதாமல் விலகிச்செல்ல முற்பட்டபோது வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அதன்போதே சாரதி தூக்கி வீசப்பட அவர் மீது டிப்பரில் இருந்த மண் கொட்டப்பட்டு மூச்சுத்திணறி அவர் உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் கூறப்பட்டது.
முள்ளியவளைப்பொலிஸார்சாரதியின்உடலை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். காயமடைந்த உதவியாளர் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4,ரி3)

## படையினரின்...

கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உலகில் மிகவும் ஆபத்தான பயங்கரவாத அமைப்பிடமிருந்து எமது நாட்டை மீட்டெடுத்து 9 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. 2005ஆம் ஆண்டு நான் பதவி ஏற்ற போது அதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தை முன்னெடுத்திருந்தது. மறுபுறம் எமது உள்நாட்டு பிரச்சினைக்காக பன்னாட்டுத் தலையீடுகளும் மேலோங்கி இருந்தன. எமது கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதியையும் நிலப்பரப்பில் மூன்றில் ஒன்றுமாக பயங்கரவாதிகள் ஆக்கிரமித்திருந்தனர்.
உலகில் மிகவும் ஆபத்தான கடல் மற்றும் வான் பிரிவுகளை உள்ளடக்கிய பயங்கரவாத அமைப்பாகவே விடுதலைப்புலிகள் காணப்பட்டனர். அந்தப் பயங்கரவாத அமைப்புக்கு எதிராக உலகில் வேறு எந்தவொரு நாட்டுக்கும் இல்லாத தைரியத்துடன் போரிட்டோம். இந்த போராட்டத்தில் நாட்டு மக்கள் ஓர் அணியில் திரண்டு போருக்கு வலுச் சேர்த்தனர்.
நாட்டு மக்களின் சுதந்திரம், வாழும் உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரும் உயர்ந்த மானிடர்களாவர். அவ்வாறு அன்று இறுதிக் கட்டப் போரில் நாட்டு மக்களின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட இராணுவத்தினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சாட்டுகின்றனர். இதைவிட மோசமான செயல் யாதெனில் மக்களின் வாக்குகளால் ஆட்சிபீடமேறிய அரசும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளமை மிகவும் மோசமான காட்டிக் கொடுப்பாகும்.
நாட்டுக்கு எதிராக துரோகம் செய்பவர்களும் இராணுவத்தினரை காட்டிக்கொடுப்பவர்களும் ஒரு விடயத்தைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். வடக்கில் எவ்விதமான அச்சமும் இன்றி தமிழ் மக்களுக்கு வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தது எமது இராணுவமே. அதே போன்று தமிழ் இளையோருக்குச் சமாதானம் கிடைத்ததும் எமது இராணுவத்தாலேயே. விடுதலைப்புலிகள் அன்று பலவந்தமாக பிள்ளைகளை இழுத்துச் சென்றனர். அந்த அவலம் வடக்கு தாய்மார்க்கு இன்று இல்லை. இலங்கை இராணுவத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் காட்டிக்கொடுப்புக்கள் மற்றும் பழிவாங்கல்களுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும். அதே போன்று நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்க மீண்டும் நாம் ஒன்றிணைய வேண்டும் - என்றுள்ளது. (5)

## தவில்...

என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவர் இரண்டு நாள்களாகக் காணாமல் போயிருந்தார். யமுனா ஏரிக்கு அண்மையில் தண்ணீர் எடுக்க சென்ற ஒருவர் துர்நாற்றம் வீசியதால் ஏரியைப் பார்த்துள்ளார். அதற்குள் சடலம் இருப்பதை அவதானித்த அந்த நபர் அப்பகுதி கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தியுள்ளார். சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4,8)

## பிரபாகரன்...

கூறியுள்ளார். நல்லூர் கிட்டுப் பூங்காவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தொழிலாளர் தினக் கூட்டத்தில் உரையாற்றிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர், பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சரும் அதேபோன்றதொரு கருத்தை முன்வைத்துள்ளார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அந்த நேர்காணலில் மேலும் தெரிவித்ததாவது,
அவர் (தலைவர் பிரபாகரன்) ஒரு சிறந்த போராளி என்பதை சரத் பொன்சேகா கூட கூறியிருக்கிறார். தீவிரப் போராளி என்றால் ஒரு விடயத்தை தீவிரமாக பற்றிக் கொண்டார். அதாவது தனிநாடு மட்டும் தேவை. வேறு எதுவும் தேவையில்லை என்று கூறியதனால், இலங்கையின் பல அரசுகள் அதை வேறு விதமாக கருத்தில் எடுத்து எமக்கு எதிராக நடந்து கொண்டன. அவரை மாவீரன் என்பதிலோ தீவிர போராளி என்பதிலோ எந்தவிதமான பிழையும் இல்லை. அரசியல் ரீதியாக அவரது இடம் எங்கு இருக்கிறது என்றால், தனிநாடு மட்டும் தான் தேவை. அந்த ஒரு விடயத்தில் அவர் பற்றுறுதியோடு இருந்தார். இதனால் வேறு எதனையும் செய்யக்கூடிய அல்லது வேறு எதனையும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை எங்களுக்கு ஏற்படவில்லை. அதனுடன், அவர் இறந்ததன் பின்னர் அதனைக் கொண்டு நடத்துவதற்கான ஆள்களை அவர் அதற்கேற்ற மாதிரி வைத்திருந்தாரோ அது எனக்கு தெரியவில்லை. ஆனால் அதற்குப் பின்னர், பல ஆண்டுகள் கடந்ததன் பின்னர்தான் ஜனநாயக ரீதியாக நாங்கள் இதற்குள் நுழைந்தோம். அப்பொழுது எங்களுக்கு தரப்பட்ட தேர்தல் அறிக்கையில் எதைக் கூயிருந்தார்களோ, எங்கள் மக்கள், மக்கள் தலைவர்கள் இணைந்து எடுத்திருந்தார்களோ அதற்கமைவாகவே நாங்கள் இதுவரையில் செய்துவருகிறோம். அதற்கு முன்னர் குறிப்பிட்டதற்கும் வித்தியாசம் இருப்பதாகத்தான் அதை ஒரு விதமாக விமர்சித்திருக்கிறேன் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.
'நீங்கள் ஒரு உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்துள்ளீர்கள். இப்பொழுது பேசும் போது அவர் இறந்துவிட்டார் என்று கூறியுள்ளீர்கள். இதனை உறுதிப்படுத்த முடியுமா' என்று கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், இறந்துவிட்டார் என்று நான் சர்வ சாதாரணமாகக் கூறிவிட்டேன். அதை என்னால் உறுதிப்படுத்த முடியாது. ஏனென்றால் நெடுமாறன் இப்பொழுதும் கூறுகிறார், அவர் உயிருடன் இருப்பதாக. பொதுவாக மக்கள் அவர் இறந்துவிட்டார் என்று கூறியதன் அடிப்படையில் அதைப்பற்றி நான் யோசிக்காமல் கூறிவிட்டேன். அவர் இருக்கின்றாரா இல்லையா என்று கேட்டால் எனக்குத் தெரியாது என்பதுதான் என்னுடைய பதில்.
ஒரு போராளி, மக்களுடைய இதயத்தை வென்றவர், உயிருடன் இருக்கிறார் என்பதை சிறப்பாக கருதுவீர்களா? அவர் இறந்துவிட்டார் என்பதை சிறப்பாக கருதுவீர்களா? நீங்களே சொல்லுங்கள் என்றும் கேள்வி எழுப்பினார். (5,114)

## கட்சிச்...

வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
“பயங்கரவாத விசாரணைப்பிரிவின் கொழும்பு தலைமையகத்தில் வாய்மொழி முறைப்பாடு, விசாரணைக்காக வருமாறு கடந்த 9 ஆம் திகதிய கடிதம் மூலமாகக் குறிப்பிடப்பட்டு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் கிளிநொச்சி ஒன்றியம் என்று குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய கிளிநொச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்துக்குச் சென்று திகதியை 14 ஆம் திகதி விசாரணைக்கு வருகை தருவதாக திகதி மாற்றம் செய்து குறித்த திகதியில் கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணைப்பிரிவுக்குச் சென்றிருந்தேன்.
ஜனநாயக போராளிகள் கட்சியின் செயற்பாடுகள், போராளிகள் அரசியல் கட்சியை உருவாக்கியதன் நோக்கம், வடக்கில் தேசிய நிகழ்வுகளைக் கொண்டாடுவதன் நோக்கம், எமது கட்சியில் உள்ள போராளிகளின் போராட்ட கால செயற்பாடுகள், கட்சியின் நிதி செயற்பாடுகள், வெளிநாட்டு தொடர் பாடல்களை வைத்திருத்தல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டனர். இது ஜனநாயக வழியில் இணைந்து செயற்படும் எமது கட்சி முன்னாள் போராளிகளை அச்சுறுத்தும் செயற்பாடாகவே இந்த விசாரணைகள் இடம்பெற்றுள்ளன என்று நாம் கருதுகிறோம்.
இது தொடர்பிலான விசாரணைகள் முடியவில்லை என்றும் மறுபடியும் அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர் என்று கிருபாகரன் மேலும் தெரிவித்தார். (4,ரி3)

## தமிழரின்...

வாகும் என்பதை முள்ளிவாய்க்கால் மண்ணில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'நினைவேந்தல்' நிகழ்வில் பெருந்திரளான தமிழர்கள் ஓரணியில் உணர்வெழுச்சியுடன் பங்கேற்றமை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொடுந்துயர் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழர்களால் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். (5)


## 20 கிலோ...

தெரிவித்தனர். பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சம்பவம் இடம்பெற்றது. புதுக்காடு பகுதிக்கு கஞ்சா கடத்தி வரப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சோரன்பற்று பகுதியில் கஞ்சாவை மீட்டதோடு கடத்திவந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர்நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (4,6)

## அரையிறுதிக்குச் சென்றார் நடால்

இத்தாலி ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்னின் வீரர் ரபேல் நடால். பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலாவது இடத்தில் உள்ள வீரரான ஸ்பெய்ன் வீரர் நடாலை எதிர்த்து இத்தாலியின் வீரர் பபியோ மோதினார்.

முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பபியோ. இதனால் அடுத்த இரண்டு செற்களில் வெற்றிபெற்றால் மட்டுமே தொடரில் இருப்பைத் தக்கவைப்பதுடன் அரையிறுதிக்குத் தகுதிபெறலாம் என்ற வாய்ப்பு நடாலுக்கு ஏற்பட்டது. அந்த செற்களை அவர் 6:1, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



## மூன்றாம் நிலையில் களம் காணும் ரூட்

இங்கிலாந்து அணியின் தலைவரான ஜோ ரூட், மூன்றாம் நிலை வீரராகக் களமிறங்கவுள்ளார் என்று தெரியவருகிறது.

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது. இந்தத் தொடரிலேயே சமீபகால மாற்றமான நான்காம் நிலை என்பதைத் தவிர்த்து முன்னைய மூன்றாம் நிலையில் களமிறங்கவுள்ளாராம் ரூட். (ம)

# பெங்களூர் வெளியே

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தானிடம் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது பெங்களூர்.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக திரிபதி மற்றும் ஆச்சர். பட்லர் இல்லாதமை ராஜஸ்தானுக்கு பெரும் குறையாக அமையும் என்று கருதப்பட்டது. இதன்படியே ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றினார் ஆச்சர். 2 ஓட்டங்களில் முதலாவது இலக்கை இழந்தது ராஜஸ்தான். எனினும், திரிபதி மற்றும் ரகானே இருவரும் இணைந்து அற்புதமான ஆட்டத்தை வழங்கினர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது ராஜஸ்தான். சராசரியும் சரிவரப் பேணப்பட்டது. 38 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் திரிபதி. இணைப்பாட்டமாக 99 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் அதாவது ராஜஸ்தான் அணி 101 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. இந்த 33 ஓட்டங்களுக்கான அவர் 31 பந்துகளை எதிர்கொண்டமையும் கவனிக்கப்பட வேண்டியதே. சாம்சன் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். கலீசன், திரிபதி இணை ஓரளவு தாக்குப் பிடித்தது. 32 ஓட்டங்களைச் சேர்த்தார் கலீசன். முடிவில் 5 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைக் குவித்தது ராஜஸ்தான். திரிபதி 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பெங்களூரின் ஆரம்ப வீரர்களாக கோக்லி மற்றும் பார்திவ் பட்டேல். நான்கே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோக்லி. அதுவும் போல்ட் முறையில். பட்டேலுடன் இணைந்து அணியை கரைசேர்க்கும் முயற்சியில் தீவிரம் காட்டினார் வில்லியர்ஸ். இணைப்பாட்டமாக 55 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பார்திவ் பட்டேல். பட்டேலைத் தொடர்ந்து மொயின் அலி, மன்டீப் சிங் இருவரும் அடுத்தடுத்து கோபாலின் பந்துவீச்சில் வீழ்ந்தனர். அரைச்சதம் கடந்த வில்லியர்ஸ் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பெங்களூர் நிலைகுலைந்தது. இந்தத் தொடரில் பெங்களூரின் கடைசி ஆட்டமாக இது அமைவதற்கு வாய்ப்புக்கள் ஏராளம் இருந்தன. 134 ஓட்டங்களில் பெங்களூர் சுருண்டதை அடுத்து 30 ஓட்டங்களால் வென்றது ராஜஸ்தான். (ம)








## டெஸ்ட் ஆட்டங்கள் வலுவிழந்து வருகின்றன

*கம்பீர் வேதனை*

டெஸ்ட் ஆட்டங்கள் நாளுக்குநாள் வலுவிழந்து வருகின்றன என்று தெரிவித்தார் இந்திய அணியின் வீரர் கம்பீர். அதிலும் குறிப்பாக, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டெஸ்ட் ஆட்டங்களைக் காப்பதற்கு உரிய ஏது நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார் அவர்.

'இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் டெஸ்ட் ஆட்டங்களுக்கான ஆர்வம் குறைந்துள்ளது. ஒருநாள் ஆட்டம், ரி20 ஆட்டம் ஆகியவற்றை விளம்பரப் படுத்துவது போன்று, சந்தைப்படுத்துவது போன்று டெஸ்ட் ஆட்டங்களுக்குச் செய்வதில்லை. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உள்ளிட்ட பெரிய கிரிக்கெட் அமைப்புக்கள் டெஸ்ட் ஆட்டங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டால் காலப்போக்கில் அது அழிந்துவிடும்' என கம்பீர் மேலும் தெரிவித்தார். பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அண்மையில் தனது டெஸ்ட் அங்கத்துவத்தைப் பரவலாக்கியது. இதன்படி அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு புதிதாக அங்கத்துவம் கொடுக்கப்பட்டது. இதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அழுத்தமும் முக்கிய காரணம். இவ்வாறிருக்க கம்பீரின் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள முடியாததொன்று என்கின்றனர் கிரிக்கெட் விமர்சகர்கள். (ம)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் மே 20

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடை ப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பழைய பூங்கா கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்ட்த்தில் ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலைநேர ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது. இதில் மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## கலைவாணி சரஸ்வதி அணிகள் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம். மே 20

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை கலைவாணி, உரும்பிராய் சரஸ்வதி அணிகள் அபார வெற்றிபெற்றன. பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் கலைவாணி அணி வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில், உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுப்பர் றாங் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## சமநிலை!

யாழ்ப்பாணம், மே 20
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் வடமாராட்சி ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம-23)

## ஞானமுருகன் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், மே 20
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணி அபார வெற்றிபெற்றது. கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

### வடமாகாண ரென்னிஸ் தொடரில்

# சென். ஜோன்ஸ் மகுடம் சூடியது




யாழ்ப்பாணம், மே 20
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ரென்னிஸ் தொடரில் 17 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் சார்பில் பிரணவன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சார்பில் பிரதீப் இருவரும் மோதினர். 6:3, 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர் செற் வெற்றிபெற்றார் பிரணவன்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் சஞ்சீவ், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சார்பில் றிக்கி இருவரும் மோதினார். 6:1, 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் வெற்றிபெற்றார் சஞ்சீவ். இதையடுத்து இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி. (ம-23)


## அரையிறுதிக்குள் மரிய செரபோவா

இத்தாலி ரென்னிஸ் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா.

இத்தாலி ரென்னிஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டம் நேற்று நடைபெற்றது. ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவாவை எதிர்த்து பிரெஞ்சுத் தொடரின் நடப்புச் சம்பியனும், லத்விய வீராங்கனையுமான ஒஸ்டபென்கோவ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடி இழந்தார் செரபோவா. இதனால் அடுத்த இரண்டு செற்களிலும் வென்றால் மட்டுமே அரையிறுதிக்குத் தகுதி பெறலாம் என்ற இக்கட்டான நிலை செரபோவாவுக்கு ஏற்பட்டது.

6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது செற்றைக் கைப்பற்றி 1:1 என்று சமநிலைப் படுத்தினார் செரபோவா. அவர் அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி மூன்றாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



# மெஸ்ஸியின் கனவு மெய்ப்படுமா?



2014 உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் ஜெர்மனியிடம் 1:0 என்று தோல்வியைத் தழுவி கிண்ணம் வெல்லும் வாய்ப்பை இழந்தது ஆர்ஜென்ரீனா. 2015 கோப்பா அமெரிக்கா இறுதியில் சிலி அணியிடம் தோல்வியடைந்து கிண்ணம் வெல்லும் வாய்ப்பை நழுவவிட்டமை மட்டுமல்ல 2016 கோப்பா அமெரிக்காவின்போதும் மெஸ்ஸி இறுதி ஆட்டத்தில் சிலி அணியிடம் மீண்டும் தோல்வி கண்டார்.

இதனால்தான் அவர் "நான் அனைத்தையும் செய்து பார்த்து விட்டேன், 4 இறுதி ஆட்டங்களில் விளையாடியும் கிண்ணம் வெல்ல முடியவில்லை, இது எனக்கும் அணிக்கும் கடினமான தருணம். ஆர்ஜென்ரீனாவுக்காக விளையாடுவது என்பது முடிந்துவிட்டது. என்று 2016ஆம் ஆண்டு நடைபெற்ற கோப்பா அமெரிக்கா இறுதியாட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்து பன்னாட்டு அரங்கில் இருந்து விடைபெற்றுச் சென்றார்.

ஆனால் சில மாதகால இடைவெளியில் அவர், தனது முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் பன்னாட்டு ஆட்டங்களில் களம் கண்டார். 30 வயதான மெஸ்ஸிக்கு இது 4ஆவது உலகக்கிண்ணத் தொடர். மெஸ்ஸி விளையாடிய 3 உலகக் கிண்ணத் தொடர்களிலும் அவரது கனவை சிதைத்தது ஜெர்மனி அணிதான்.

பார்சிலோனா அணிக்காக கோல் மழை பொழியும் மெஸ்ஸி, ஆர்ஜென்ரீனா அணிக்காக பெரிய அளவிலான தொடர்களில் அதைத் செய்வதில்லையென்று ரசிகர்கள் பொருத்தமற்ற எதிர்மறை கருத்துக்களை அள்ளித்தெளிப்பதும் உண்டு. ஆனால் உண்மையை கூற வேண்டுமெனில் மெஸ்ஸிக்கு பார்சிலோனாவும், ஆர்ஜென்ரீனாவும் வேறு வேறு இல்லை என்பது அவரைப் பற்றி ஆழமாக தெரிந்து கொண்டவர்களுக்கு புரியும். 'பார்சிலோனா அணி இதயம் என்றால் அதன் ஆத்மா ஆர்ஜென்டீனா' என்ற கோட்பாட்டிலேயே மெஸ்ஸியின் இயக்கம் சுழன்று கொண்டிருப்பதாக கருதப்படுகிறது.

உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்களில் கடைசிக் கட்டங்களில் அர்ஜென்ரீனா அணி சில ஆட்டங்களை சமநிலையில் முடித்திருந்ததால் பெரும் சிக்கலைச் சந்தித்தது. கடைசி ஆட்டத்தில் ஈக்வேடார் அணியை வீழ்த்தினால் மட்டுமே உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற முடியும் என்ற நெருக்கடிக்கு தள்ளப்பட்டது ஆர்ஜென்ரீனா. நம்பமுடியாத வகையிலான அதிசயிக்கத்தக்க ஹட்ரிக் சாதனையுடன் 3:1 என ஆர்ஜென்ரீனா அணியை உலகக் கிண்ணத் தொடருக்குள் அழைத்துச் சென்றார் மெஸ்ஸி.

ஆக, திரில் நிலையில் ஆர்ஜென்ரீனாவை தொடருக்குள் அழைத்து வந்த மெஸ்ஸி அந்த அணியை கிண்ணம் வெல்ல வைப்பாரா என்பதே தற்போதுள்ள பரவலான எதிர்பார்ப்பு. தேசத்துக்கு மகுடம் சூட்ட போராடி வரும் மெஸ்ஸியின் தீராத வேட்டைத் தாகம் தீருமா? என்பதைக் காலம்தான் பதில்சொல்ல வேண்டும் இந்த ரஷ்ய உலகக் கிண்ணத் தொடரின் வாயிலாக.

## நடப்புச் சம்பியன் அசத்தல் ஆட்டம்

இத்தாலி ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் நடப்புச் சம்பியனும் உக்ரைன் வீராங்கனையுமான ஸ்வெட்லினா.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஸ்வெட்லினாவை எதிர்த்து ஜேர்மனிய வீராங்கனை கெர்பர் மோதினார். இருவரும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தக்கூடிளயவர்கள் என்பதால் ஆட்டத்தின் மீது பரவலான எதிர்பார்ப்பு இருந்தது.

எனினும் முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய எலினா, தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றையும் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

இத்தாலி தொடரில் கிண்ணம் வெல்லும் வாய்ப்புள்ள வீராங்கனைகளில் ஒருவராக கெர்பர் அடையாளமிடப்படுத்தப்பட்டிருந்தார். அவர் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டமையானது பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. (ம்)



# ‘பிளே ஆப்’ சுற்றுக்கு கொல்கத்தா

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத்தை வீழ்த்தி பிளே ஆப் சுற்றுக்குத் தகுதி பெற்றது கொல்கத்தா.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் 9 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. தவான் பெற்ற 50 ஓட்டங்கள் அதிகபட்சம்.

பந்துவீச்சில் பிரதீஸ் கிருஸ்ணா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணி முன்வரிசை வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் 3 பந்துகள் மீதமிருக்க 5 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக லின் 55 ஓட்டங்களையும் உத்தப்பா 44 ஓட்டங்களையும் பெற்றனர்.



இன்று நடைபெறுகின்ற மும்பை - டெல்லி, சென்னை - பஞ்சாப் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் பிளே ஆப் சுற்றின் நான்காவது அணியைத் தீர்மானிக்கும் வகையில் அமைந்துள்ளன.

(ம)


## பதவி வெற்றிடம்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமி ருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உதவி மருந்தாளர்கள் (Assistant Pharmacists)**

1. க.பொ.த(சா/த)(O/L) இல் (கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக) சித்தி அடைந்திருக்க வேண்டும்.
2. க.பொ.த(உ/த)(A/L) இல் விஞ்ஞானப்பிரிவில் கற்றிருக்க வேண்டும்.
3. இரண்டு வருட துறை சார் அனுபவம்.
4. வயதெல்லை 20 தொடக்கம் - 35 வரை
5. சம்பளம் மாதாந்தம் 20.000/= இற்கு குறையாமல் இருக்கும்.

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Marketing Officer)**

1. க.பொ.த(சாத)(O/L) மற்றும் க.பொ.த(உ/த)(A/L) பரீட்சைகளில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
2. சந்தைப்படுத்தல் துறையில் Diploma/Degree விரும்பத்தக்கது.
3. 2வருட துறைசார் அனுபவம்.
4. ஆங்கில அறிவு (Speaking & Writing)
5. Motorbike License உடையவராக இருக்க வேண்டும்.
6. சம்பளம் மாதாந்தம் 25.000/= இற்கு குறையாமல் இருக்கும்.

மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு உச்ச எல்லை பேசித் தீர்மானிக்கப்படும்.

இது தொடர்பான விண்ணப்பங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரடியாக நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் அல்லது விண்ணப்பங்களை 26.05.2018 இற்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை**
**இல.342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல : 021 221 9988, 021 721 7324**
**Mobile No : 077 77 32892**
**E-Mail No : northernhrm@gmail.com**

(IN 6805)(14.17)

## விற்பனைக்குண்டு

TATA 407 Full அலுமினிய Body
கன்ரர் NPLH - XXXX
விற்பனைக்குண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(Full A/C Cap)
**076 897 6662** (CS/16698)(11,17)

## வேலையாள்கள் தேவை

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு வேலையாள்கள் தேவை.
துப்புரவுப் பணியாளர் - 01, முகாமைத்துவப் பணியாளர் - 01. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். **தொடர்பு - 077 247 3112**
**(பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஆலயம்)**

## Mobile Phone Repairing Course



**I Phones & Smart Phones**
**Hardware , Software and Unlocking**
**19th Batch start on 26.05.2018**

* சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
* தனிப்பட்ட கவனிப்பு.
* சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

([illegible])

ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

## நாய்க்குட்டி விற்பனை

உயர்தர ROTTWEILER
நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
**077 809 4474** (CS/16646)(11,17)

## கடைத்தொகுதிகள் உடன் வாடகைக்கு

மருதனார்மடம், ஆஞ்சநேயர் கோயிலுக்கு எதிர்ப்பக்கத்தில் அமைந்த RDB (கிராமிய அபிவிருத்தி வங்கி) கட்டடத்தின் 3620 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இரண்டாவது தளமும் கீழ்த்தளத்தில் உள்ள கடைகளும் உடன் வாடகைக்கு உண்டு.

சுன்னாகம் சந்திக்கு அருகில் நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்ட 2100 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நான்கு மாடிக் கட்டடத் தொகுதி உடன் வாடகைக்கு உண்டு. (CS/16752)(11,17)

**தொடர்பு கொள்ள வேண்டிய இல.**
**076 827 3577**

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • [illegible] • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS


## மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 06 . 1961 — இறப்பு 19 . 05 . 2018

### செல்லையா சுந்தரலிங்கம்

பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுந்தரலிங்கம் நேற்று (19.05.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லமுத்து தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பிரகலாவதியின் அன்புக் கணவரும், மல்லிகாதேவி, காலஞ்சென்ற கனகசபை மற்றும் பொன்னம்பலம், கமலாதேவி, காலஞ்சென்ற விமலா மற்றும் ரஞ்சி,தர்மலிங்கம் (இராசன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், யசிந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - பளை), யசிதரன் (உரிமையாளர், முத்துமாரி ஹாட்வெயார், பளை மற்றும் கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சகிலன் (ஆசிரியர், பிரமந்தனாறு மகாவித்தியாலயம்), தனுஷியா ஆகியோரின் மாமனாரும், ரேஷ்ணவி, சேந்தன் மற்றும் சிவமைந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரிக்குருவியந்தாள் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**யசிதரன் (மகன் - முத்துமாரி ஹாட்வெயார் உரிமையாளர்), யசிந்தா (மகள்)**

(IN/6810) (11.17)


## மாற்று மோதிரம்

**Wedding Fair Jaffna 2018**

**June 16 17**
**@ Chelva Palace**

For stall 076 822 8522

திருமண வழங்குனர்களின் கண்காட்சி

(Wedding Cards, Wedding Halls, Studios, Jewellers, Beauticians, Florist, Wedding Cakes, Wedding Car)

வரன் தேடுவோம் வாருங்கள் நிகழ்வு
அழகுக்கலை பயிற்சி கருத்தரங்கு (Bridal Workshop)
மணப்பெண் அலங்கார காட்சி (Bridal Show)

உங்கள் திருமண நிகழ்விற்கான ஏற்பாடுகளை முன்பதிவு செய்து
50% வரையிலான விலைக்கழிவினை பெற்றுக்கொள்ளுங்கள்

Organized By
Arunthathee
Online Matrimony | Wedding Magazine | Wedding Planner

Main Sponsors: SRI VIJAYAS, NAYAGARA Salon & Academy
Co Sponsor: STUDIO 3000
Florist Partner: LassanaFlora
Event Partner: Asia Exhibition & Conventions (Pvt) Ltd.
Media Sponsor: உதயன்
Cosmetic Partner: DERMA COLOR
Venue Partner: Chelva Palace


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.